கலைமகள்

251



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 JAN 1942
MADRAS

விஷு வருஷ | 6 As | புரட்டாசி மீ



"போர்ன் விட்டா போட்ட போடு" என்கிறார்கள் நல்ல தேகக் கட்டுள்ள ஆயிரக் கணக்கானவர். கவியரசர் ரவீந்திரரே 'போர்ன் விட்டா' வைப் பற்றிப் புகழ்ந்துள்ளார் என்றால் அதற்குமேல் என்ன சொல்வது!

தேக உழைப்பிற்கும் மூளை வேலைக்கும் நல்ல 'ஸத்துள்ள' ஆகாரம் வேண்டும். சாதாரணமாக நம் நாட்டு ஆகாரத்தில் அந்த 'ஸத்து' இருப்பதில்லை. அது 'போர்ன் விட்டா' வில் நிறைந்திருக்கிறது.

'போர்ன் விட்டா' வே நல்ல ஆகாரம். வழக்கமாகச் சாப்பிடும் ஆகாரத்திற்கு மேல் 'போர்ன் விட்டா' வையும் தினம் சாப்பிட்டால் கேட்பானேன்! சரீரத்தில் சக்தியும் புஷ்டியும் ஊற்றுப் போல் ஊறும்.

Cadbury's
BOURN-VITA
a food and
drink for all



அன்றாடம் உழைப்புக்குச் சக்தி குன்றாதிருக்க

எல்லா மருந்து ஷாப், ஸ்டோர்களிலும் 1 பவுண்டு ½ பவுண்டு டின்களில் கிடைக்கும். கைபடாமல் தயாரானது.

OFFICE OF THE REGISTRAR
31 JAN 1942
MADRAS
1732

"எச். எம். வி." ரிகார்டுகளில் நாரத கானம்

No. 18132 { சொல்லு குழந்தாய் & மங்களமும்

No. 18133 { தேவியைப் பூஜை & அக்னி யென்று

ஸ்ரீமதி ஸுப்பு லக்ஷ்மி பாடியவை

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

இவை அனைத்தும்

ஒரு அணா

பொறுமான

501

சலவை

சோப்பினால்

மிகவும்

துல்லியமாகவும், சுத்தமாகவும்

துலக்கலாம்.

மிருகக் கொழுப்பற்றது—முற்றிலும் சுதேசி

தயாரிப்பவர்கள்:—

TATA OIL MILLS LTD.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.

ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸாரின்
செப்டம்பர்
4உ
மகத்தான ஆரம்பம்
சாந்தா ஆப்தே
M.S. சுப்புலக்ஷ்மி
நடிக்கும்
சாவித்திரி
டைரக்ஷன்: Y.V. ராவ்
சிந்தாமணி டாக்கீஸ்
— மதுரை
வெல்லிங்டன் டாக்கீஸ்
— திருச்சி
எடிஸன் டாக்கீஸ்
கோயமுத்தூர்
ராயல் டாக்கீ ரிலீஸ்
ஸ்டுடியோ: நியூதியேட்டர்ஸ் லிட்,
— கல்கத்தா —

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லி-ட்.

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம்.

ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

அதிகார மூலதனம்	ரூ. 25,00,000—0—0
வழங்கப்பட்டு வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் (30-6-41)	ரூ. 18,60,304—12—0

சென்னை ஆபீஸ்கள்:

அரண்மனைக்காரத் தெரு, சைனுபஜார், மாம்பலம், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி.

கிளை ஆபீஸ்கள்:

அனகபள்ளி	கும்பகோணம்	திருநெல்வேலி
கள்ளிக்கோட்டை	நாகப்பட்டணம்	திருவாரூர்
சிதம்பரம்	பாலக்காடு	திருச்சினுப்பள்ளி
காஞ்சீவரம்	புதுக்கோட்டை	தூத்துக்குடி
ஈரோடு	சீயாழி	வேலூர்
காரைக்குடி	தாடபள்ளிக்கூடம்	விருதுநகர்
மதுரை	தஞ்சாவூர்	விஜயநகரம்

பிக்ஸட் டேபாசிட்டுகள்: வருஷம் $3\frac{1}{2}\%$ வீதம் பெற்றுக் கொள்ளப்படும்.

ஸேவிங்ஸ் பாங்கு: ரூ. 5000 வரை 3% வீதம் வட்டி கொடுக்கப்படும். ஒரு வாரத்தில் ரூ. 250/-வரை செக் மூலம் வாங்கிக் கொள்ளலாம்.

கரண்டு அகௌண்டுகள்: அன்றாடம் உள்ள பாக்கித் தொகைகளுக்கு 1% வீதம் வட்டி கொடுக்கப்படும்.

சிக்கன வசதிகள்: மாத டெபாஸிட் அகௌண்டுகளும், கியாஷ் சர்டிபிகேட்டும் வழங்கப்படும்.

கடனும் அட்வான்ஸும்: தங்க சொத்துக்கள், வியாபார பண்டங்கள், சர்க்கார் புரோநோட்டுகள் அங்கீகரிக்கப்பட்ட ஷேர்கள், சரக்குகள் இவைகளின் மேல் கொடுக்கப்படும்.

டைரக்டர்கள்:

T. R. வேங்கடராம சாஸ்திரி, C.I.E., (சேர்மேன்).

N. V. ராகவன், Retd. Acct. General. R. விஸ்வநாதய்யர், B.A., B.L.

V. வேங்கட்ராம அய்யர், M.A., B.L. K. சுப்பையர்.

R. S. A. சங்கரய்யர். K. சிவசாமி அய்யர்.

C.V.C.T.V. வேங்கடாசலம் செட்டியார். R. M. அழகப்ப செட்டியார், M.A., (Bar-at-Law).

S. N. N. சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.

எல்லாவித பாங்கு அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்

நிரந்தரமான வெற்றியின்

அறிகுறி

*

சென்ற 33 வருஷங்களில் சொஸைடிக்கு ஏற்பட்டுள்ள விசேஷ அபிவிருத்தியைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன

அமுலிலுள்ள பாலிஸிகள்	ரூ.	17 கோடிக்கதிகம்		
ஆயுள் நிதி —	ரூ.	3 கோடி	10 லக்ஷத்திற்கதிகம்	
மொத்த ஐவேஜுகள்	ரூ.	3 ,,	56 ,,	
சேலுத்தப்பட்ட உரிமைகள் (1907-39)	ரூ.	1 ,,	97 ,,	

நம்பிக்கையான ஊழியத்திற்குப் புகழ்பெற்றது.

*

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லி-ட்.,

தலைமை ஆபீஸ் :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-A, சுரேந்திரநாத் பானர்ஜி ரோட்,
கல்கத்தா.

பிராஞ்சு ஆபீஸ் :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெரு,
மதராஸ்.

கலைமகள்

தொகுதி ௨0] விஷு௵ புரட்டாசி மீ [பகுதி ககள
செப்டம்பர், 1941

பொருளடக்கம்

1. தம்பிரான் இயல்பை மாற்றியது, ஒரு வக்கீலின் நன்னூற் பதிப்பு—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ...217,219
2. ஒரு வேண்டுகோள்—சி. சுப்பிரமணிய பாரதியார்... 224
3. விடுதலை—ரவீந்த்ரநாத் டாகுர் ('ஜோதி' மொழி பெயர்ப்பு) ... 228
4. மறலி— ஷி ... 229
5. ஓரணு—நா. ராமரத்தினம், எம். ஏ. ... 230
6. சாந்திநிகேதனம்—எஸ். ஆர். வேங்கடராமன், பி. ஏ., பி. எல். ... 235
7. உடைந்த உள்ளம்—த. நா. ... 241
8. "தமிழில் எழுத்துக் குறை"—ஸ்வாமி விபுலாநந்தர் ... 249
9. அவன் கடமை—எஸ். ராமன் ... 253
10. குஸுமா—சரத்சந்த்ர சட்டர்ஜி (அ. கி. ஜயராமன் மொழிபெயர்ப்பு) ... 263
11. அற்புதச் செய்தி—கி. சந்திரசேகரன் ... 286
12. பிராயச்சித்தம்—"கார்க்யன்" ... 293
13. பெண்களும் கிராமத்தொழில்களும்—டாக்டர் ஜே. ஸி. குமரப்பா ... 302
14. "விளக்கை அணைத்துவிடு"—குமார் ஸ்ரீ ஜயந்தநாத் ராய் ('வாஸிஷ்டன்' மொழிபெயர்த்தது) ... 308
15. "இடம் இருக்கிறது"—ரவீந்த்ரநாத் டாகுர் (த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்ப்பு) ... 312
16. பட்டத்து ராணி—ரவீந்த்ரநாத் டாகுர் ('ஸேனு' மொழிபெயர்ப்பு) ... 323

அட்டைப் படம்:	'சாபமோசன'ப்	முகப்புப் படம்:
சாந்திநிகேதனத்தில் ஒரு காட்சி	படங்கள் 3. நவராத்திரிப் படங்கள் 4.	'சியாமளி'யின் வாயிலில் கவியரசர்

விஸ்வா & கோ
ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர்
ஸ்டாம்பு மேக்கர்ஸ்
50, வாலாஜா ரோட்,
மவுண்ட் ரோட், மதராஸ்.

சென்னை-600 008

Your EASTERN BUSINESS

is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Promptness & Service are our watchwords.

INDIAN OVERSEAS BANK LTD.

டைரக்டர் போர்டின் தலைவர்:

கனம் தங்கிய ஸ்ரீ எம்.ஸிடி.எம். சிதம்பரம் செட்டியார்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	19,50,000
ரிஸர்வுத் தொகையும் விநியோகிக்கப் படாத லாபமும்	2,07,000

தலைமைக் காரியாலயம் : சென்னை

கிளைகள்:

அலேப்பே	நாகபட்டினம்
கண்ணனூர்	பெனங்கு
கோயம்புத்தூர்	புதுக்கோட்டை
தேவகோட்டை	ரங்கூன்
காரைக்குடி	சிவகங்கை
கோலாலம்பூர்	சிங்கப்பூர்
மேட்டூர் அணை	தெல்லிச்சேரி (ஸப் ஆபீஸ்)

வெளி நாட்டு ஏஜெண்டு:

நியூயார்க்கு நகரத்து, தி சேஸ் நாஷனல் பாங்கு

— லண்டன், நியூயார்க்கு —

உங்கள் நகை நட்டுகளைப் பத்திரமாக எங்கள் ஸேப் டெ'பாஸிட் வால்ட்'டில் வைத்திருங்கள்.

கொள்ளை, குண்டு, நெருப்பு இவை அணுகா.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங் லி-ட்,

எஸ்ப்ளனேட் : : சென்னை

இன்ஷ்யூர் செய்யுங்கள்

ஜூபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களைக் கவனிக்கும்
ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்கார், பஸ்கள்,
டாக்ஸிகள், தொழிலாளர் நஷ்ட ஈடு

சமுத்திரம்
சாதனம் ரெயில்வே சாதனம்
தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
வாக்களிக்கப்பட்ட மூலதனம்

ஒன்றரைக் கோடி ரூபாய்

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்: 99, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.
பிராஞ்சு மானேஜர்: N. வேங்கடராம அய்யர்.

இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிலேயே இன்ஷியூர் செய்து,
நம் நாட்டுப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யுங்கள்.

இந்தியன் இன்ஷியூரன்ஸ் கம்பெனியார் அஸோஸியேஷன்,

இண்டஸ்டிரியல் அஷ்யூரன்ஸ் பில்டிங்,
இரண்டாவது மாடி, சர்ச்கேட் தெரு, போர்ட், பம்பாய்

—அதன் அங்கத்தினர்கள்—

1. The Indian Mercantile Insurance Co., Ltd.
2. The New India Assurance Co., Ltd.
3. The Jupiter General Insurance Co., Ltd.
4. The Vulcan Insurance Co., Ltd.
5. The British India General Insurance Co., Ltd.
6. The Universal Fire and General Insurance Co., Ltd.
7. The Hukumchand Insurance Co., Ltd.
8. The Indian Globe Insurance Co., Ltd.
9. The Concord of India Insurance, Co., Ltd.
10. The Eastern Federal Union Insurance Co., Ltd.
11. The National Fire and General Insurance Co., Ltd.
12. The Ruby General Insurance Co., Ltd.
13. The United India Fire and General Insurance Co., Ltd.
14. The Tropical Insurance Co., Ltd



'சியாமளி'யின் வாயிலில் கவியரசர் ரவீந்திரர்

தம்பிரான் இயல்பை மாற்றியது

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தருமபுரம் ஆதீனத்தில் பண்டார சந்நிதிகளாக இருந்த ஸ்ரீ சச்சிதானந்த தேசிகரிடம் காஷாயமும் தீக்ஷையும் பெற்ற பரமசிவத் தம்பிரானென்பவர் நல்ல தமிழ்ப் பயிற்சியுள்ளவர்; வடமொழியிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றவர். பாடஞ்சொல்வது, உபந்நியாசம் செய்வது முதலியவற்றிலும் சமர்த்தர். ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடத்தும் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களிடத்தும் முக்கியமான சில தமிழ் நூல்களை அவர் பாடம் கேட்டார். அவர் அடிக்கடி திருவாவடுதுறைக்கு வந்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைத் தரிசித்துச் சில மாதங்கள் தங்கி ஸல்லாபம் செய்துவிட்டுச் செல்வார். பிள்ளையவர்கள் காலத்துக்குப் பின் அவர் வரும் சமயங்களில், ஆதீனத்தில் படித்துக்கொண்டிருந்த மாணாக்கர்கள் தமக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது வழக்கம். நானும் அவ்வாறு கேட்டிருக்கிறேன்.

சுப்பிரமணிய தேசிகரிடத்தில் ஈடுபாடுடைய அவர் அப்பெரியார் விஷயமாக ஒரு மும்மணிக்கோவை இயற்றி அரங்கேற்றினார். அந்நூலுக்குச் சிலர் சிறப்புப்பாயிரம் வழங்கினர். எல்லாவற்றையும் சேர்த்து அச்சிட ஏற்பாடாயிற்று. அப்போது சுப்பிரமணிய தேசிகர், "தியாகராச செட்டியாரவர்களுக்கும் இந்தச் செய்யுட்களைப் படித்துக் காட்டிச் சிறப்புப்பாயிரம் பெற்றால் நன்றாக இருக்கும்" என்று சொல்லி, மடத்தில் படித்துக்கொண்டிருந்த என்னை அனுப்பினார். நான் அந்தப் பிரபந்தத்தையும் சிறப்புப் பாயிரங்களையும் எடுத்துக்

கொண்டு கும்பகோணம் சென்று செட்டியாரிடம் படித்துக் காட்டினேன்.

மரியாதைக்கோ ஸம்பிரதாயத்திற்கோ குணமானாலும் குற்றமானாலும், "சரி, சரி" என்று தலையாட்டும் பேர்வழி அல்லர் இவர். ஒவ்வொரு செய்யுளையும் நான் படித்து வரும்போது சுவையுள்ள பகுதிகளைக் கேட்டுப் பாராட்டினார்; குற்றமென்று தோற்றியவற்றைக் கண்டித்தார். சிறப்புப்பாயிரப் பாடல்களையும் படித்துக் காட்டினேன். அவற்றைப்பற்றியும் தம் அபிப் பிராயத்தைத் தெரிவித்தார். திருவாவடுதுறை யாதீனத்தைச் சார்ந்த பழநிக்குமாரத் தம்பிரானென்பவர் இயற்றிய சிறப்புப் பாயிரச் செய்யுட்களில் மிகுதியாகக் குற்றம் கூறினார். 'இன்ன படி இருந்தால் நலமாக இருக்கும்' என்று சில திருத்தங்களைச் சொன்னார். நான் அவற்றைத் தனியே குறித்துக்கொண்டேன்.

ஒரு பாட்டின் முதலடியாகிய,

> "துறவுக்கோர் துறவான பனசையுறை ராமலிங்க
> முனிவன் சொல்லால்"

என்பதில் வழக்கப்படி ஐந்தாவது சீரில் மோனை இல்லை. அதைச் செட்டியார் எடுத்துக்காட்டியபோது நான், "ஆறுஞ் சீரில் 'சொல்லால்' என்பதில் மோனை இருக்கிறதே" என்றேன். "இந்தமாதிரி அறுசீர் விருத்தங்களில் மோனை ஐந்தாம் சீரில் இருந்தால்தானே அழகாக இருக்கும்? நெற்றியில் திலகம் வைத்துக் கொள்ளவேண்டுமென்றால் புருவமத்தியில் வைத்துக் கொள்ளாமல் பொட்டில் வைத்துக்கொண்டு 'இதோ திலகம் வைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று சொன்னால் நன்றாக இருக்குமா? பார்ப்பவர்கள் ஒப்புக்கொள்வார்களா? பழநிக் குமாரத் தம்பிரான் ஐயா அவர்களிடம் படித்தவராதலின் அவர் பாட்டு நன்றாக இருக்கவேண்டுமேயென்று கவலைப்படுகிறேன்" என்றார். எல்லாவற்றையும் படித்துக் காட்டிய பிறகு நான் திருவாவடுதுறைக்குப் போய்த் தேசிகரிடம் செட்டியார் கூறிய வற்றையெல்லாம் சொன்னேன். அவர் சொன்ன திருத்தங் களைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்களில் மாணாக்கர்கள் அமைத்துக் கொண்டார்கள். பழநிக்குமாரத் தம்பிரானுக்கு மாத்திரம் செட்டியார் கூறிய திருத்தங்களெல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள மனம் இல்லை. அதோடு செட்டியார்மீது கோபம் வேறு உண்டாயிற்று.

அப்பால் தம்பிரான் எங்களிடம், "செட்டியாருக்குக் கர்வம் தலைக்கேறியிருக்கிறது. இனிமேல் அவரைக் கண்டால் ஓர் ஆட்டம் ஆட்டிவிடுகிறேன்; அவரைத் தலை கவிழும்படியாகச் செய்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டிருந்தார். இந்தத் தீர்மானத்தின்மேல், செட்டியார் எப்போது மடத்திற்கு வந்தாலும் இவர் எது கூறினாலும் கண்டித்துப் பேசத்தொடங்கினர். இவரை மதித்துப் பேசுகிறதில்லை.

இந்த வேறுபாட்டைச் செட்டியார் கவனித்தாலும் ஆதீனத்தைச் சார்ந்தவரென்ற எண்ணத்தாலும், துறவியென்பதனாலும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு பொறுமையாக இருந்துவந்தார். வேறு யாரேனுமானால் உடனே கண்டித்து விடுவார்.

ஒருநாள், பலர் கூடியிருந்த சபையில் செட்டியார் பேசுங் காலத்தில் இவர் பேசும் விஷயங்களில் ஒவ்வொன்றையும் எதிர்த்துப் பழகிக்குமாரத் தம்பிரான் பேசுவாராயினர். அதுவரையில் கோபத்தை அடக்கிக்கொண்டிருந்த செட்டியார் தம்பிரானுக்குத் தக்கபடி 'சூடு' கொடுக்கவேண்டுமென்று நிச்சயித்தார். "சாமி! நான் எது சொன்னாலும் அங்குத்தி மறுத்துப் பேச வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. நான் என்ன செய்யமுடியும்! ஒரு தந்திரம் செய்யலாமென்று தோற்றுகிறது. இனிமேல் 'அங்குத்தியைப்போல் செய்யுள் செய்கிற சாமர்த்தியம் யாருக்கும் இல்லை' என்று சொல்வேன்; 'எனக்கு அதில் நல்ல பழக்கமில்லை' என்று அங்குத்தி சொல்லும். 'நல்ல குணசாலி' என்று சொல்வேன். 'என்னைப்போன்ற துர்க்குணி இல்லை' என்று அங்குத்தி சொல்லக்கூடும்''—இவ்வாறு செட்டியார் மேலும் மேலும் சொல்லிக்கொண்டேபோனர். கேட்டவர்கள், "தென்னலிராமன் கதையைப்போல அல்லவா ஆரம்பித்துவிட்டார்?'' என்று சொல்லி வியந்தார்கள். தம்பிரானுக்கே நாணம் உண்டாகிவிட்டது. சிரித்துக்கொண்டு, "என்ன? செட்டியாரவர்கள், இப்படி ஆரம்பித்துவிட்டீர்கள்! இனி உங்கள் வழிக்கு வருகிறதில்லை'' என்று சொல்லிவிட்டார்.

ஒரு வக்கீலின் நன்னூற் பதிப்பு

அக்காலத்தில் ஹைகோர்ட்டு வக்கீலாக இருந்த ஒரு கனவான் ஒரு நன்னூற்பதிப்பை வெளியிட்டார். அதில் 200-க்கு

மேற்பட்ட சூத்திரங்களை விலக்கிவிட்டுச் சுருக்கமாகச் சிறிய அளவில் பதிப்பித்தார். நன்னூல் முழுவதும் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு அநாவசியமென்பதும், அவர்களுக்குத் தாம் தொகுத்து வெளியிட்ட சூத்திரங்களே போதுமென்பதும் அவர் அபிப்பிராயம். அவர் தம்முடைய நண்பர்களிடம் தம் கருத்தைச் சொல்லவே தமிழைப்பற்றி ஒன்றும் தெரியாத அவர்கள் அவர்பாலுள்ள மதிப்பினால், "மிகவும் நல்ல காரியம்!" என்று பாராட்டினார்கள்.

புத்தகம் வெளிவந்தவுடன் அந்த வக்கீல் அதைத் தம் நண்பர்களுக்கும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் அனுப்பிப் பாடமாக வைக்க முயற்சி செய்யவேண்டுமென்று எழுதினார். அவருடைய கௌரவத்தை உத்தேசித்துப் பலர் தம் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்தனர். அந்தப் பதிப்பு ஸம்பந்தமாகப் பலர் வக்கீலைப் பாராட்டவும் தொடங்கினர்.

அந்த நன்னூற்பதிப்பாசிரியர் அப்பதிப்பில் ஒரு பிரதியைக் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியருக்கு அனுப்பி, பல பாடசாலைகளில் பாடமாக வைக்கப்பெற்றிருக்கிறதென்றும், அந்தப் பள்ளிக்கூடத்திலும் வைக்கவேண்டுமென்றும் எழுதினார். கும்பகோணத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் தமிழ் சம்பந்தமாக எந்த விஷயம் வந்தாலும் தியாகராச செட்டியார் கவனத்துக்கு வருவது வழக்கம். இவர் அங்கீகாரம் அளித்தால்தான் அந்தக் காரியத்தைச் செய்யத் துணிவார்கள்.

நன்னூற்பதிப்பும் செட்டியார் பார்வைக்கு வந்தது. இவர் அதைப் புரட்டிப் பார்த்தார். ஏதோ சிறிது தமிழறிவை வைத்துக்கொண்டு பதிப்பித்த வெளியீடென்று இவர் கண்டுகொண்டு, "இது பாடமாக வைக்கத் தக்கதன்று" என்று சொல்லிவிட்டார். அதனால் அந்தப் புத்தகம் டவுன் ஹைஸ்கூலில் பாடமாக வைக்கப்படவில்லை. மற்றப் பள்ளிக்கூடங்களிலும் அதனை ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. தியாகராச செட்டியார் அதை அங்கீகரிக்கவில்லை யென்ற செய்தி கும்பகோணத்தைச் சார்ந்த ஊர்களிலும் பரவியது. அங்கங்கே உள்ள பள்ளிக்கூட ஆசிரியர்கள் அதைப் பாடமாக வைக்கத் துணியவில்லை. இப்படி, கும்பகோணத்திலும் அதைச் சார்ந்த இடங்களிலும் அந்தப் பதிப்பு உபயோகமாகாமல் இருப்பதையும்

அதற்குச் செட்டியாரே காரணமென்பதையும் பதிப்பாசிரியராகிய வக்கீல் அறிந்துகொண்டார்.

ஒருசமயம் அந்த வக்கீல் கும்பகோணம் கோர்ட்டுக்கு வர நேர்ந்தது. அப்படியே காலேஜிற்கும் வந்தார். காலேஜில் ஆங்கில ஆசிரியராக இருந்த சுந்தரராவென்பவர் அவரோடு படித்தவர். காலேஜைப் பார்வையிடுபவர்போல் அவ்வக்கீல் சுந்தரராவோடு ஒவ்வொரு வகுப்பாகச் சென்று பார்த்தார்; தமிழ் வகுப்புக்கும் போனர்.

அங்கே தியாகராச செட்டியார் தமிழ்ப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவரை நேரே பார்த்துக் கண்டிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் வக்கீலுக்கு இருந்தது. ஆனல் செட்டியார் சொல்லிக்கொண்டிருந்த பாடத்தைக் கவனித்தபோது, 'இவர் ஆச்சரியமான திறமையுடையவராக இருக்கிறரே! இவரை எப்படி நாம் கேட்பது!' என்று எண்ணிப் பேசாமல் போய் விட்டார்.

பாடம் முடிந்ததும் சுந்தரராவ் ஒவ்வொருநாளும் வீட்டுக்குப் போகும்போது தம் வண்டியில் செட்டியாரையும் அழைத்துக்கொண்டு செல்வது வழக்கம். அன்றும் அப்படியே செட்டியாரையும் தம் நண்பராகிய அந்த வக்கீலையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்.

வண்டி போய்க்கொண்டிருந்தது. சுந்தரராவ் அவ்விருவரையும் ஒருவருக்கொருவர் பழக்கம் செய்துவைத்தார். பிறகு, "இவர்கள் புதிய முறையில் சுருக்கமாக ஒரு நன்னூல் பதிப்பித்திருக்கிறர்கள்" என்று செட்டியாரிடம் சொன்னர். செட்டியார் வீணக அதைப்பற்றிப் பேசுவதேனென்று சும்மா இருந்து விட்டார்.

ஆனல் அந்தக் கனவானுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. தம்முடைய நண்பர் அருகில் இருக்கிறரென்ற எண்ணத்தால் செட்டியாரைப் பார்த்து, "என்ன ஐயா! நான் மிகவும் சிரமப்பட்டு ஆராய்ந்து வெளியிட்ட நன்னூலைப் பாடமாக வைக்கக்கூடாதென்று நீங்கள் சொல்லிவிட்டீர்களாமே! அதில் என்ன குற்றம் கண்டீர்கள்?" என்று சிறிது அதிகாரத்தொனியோடு கேட்டார்.

தூங்குகிற புலியை வாலுருவிவிட்டால் அது சும்மா இருக்குமா? "ஓகோ! அந்த நன்னூலை நீங்களா பதிப்பித்தீர்கள்?

அதில் 200 சூத்திரங்களை விலக்கிவிட்டீர்களே; என்ன காரணம்?'' என்று கேட்டார் செட்டியார்.

வக்கீல்: நன்னூல் முழுவதும் பிள்ளைகளுக்கு எதற்காக வேண்டும்? அவர்கள் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள எவ்வளவு சிரமப்படுகிறார்கள்? அது தெரிந்து அவசியமானவற்றை வைத்துக்கொண்டு மற்றவற்றை நீக்கிப் பதிப்பித்தேன்.

செட்டியார்: பள்ளிக்கூடப் பிள்ளைகள் விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்? எங்கேயாவது பாடம் சொல்லியிருக்கிறீர்களா? கடினமானதென்று நினைத்தால் விளங்கும்படி சொல்லிக்கொடுக்கவேண்டுமே யல்லாமல் விலக்கிவிடலாமா? இலக்கணமே கடினந்தான். அதற்காக அதைத் தள்ளிவிடுவதா? நீங்கள் இருநூறு சூத்திரங்களை அநாவசியமென்று விலக்கினீர்களே; அந்தச் சூத்திரங்களிற் பல மிகவும் அவசியமென்பதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன். உதாரணங்களையெல்லாம் வெட்டிக்குலைத்துப் போட்டிருக்கிறீர்களே! முழு உருவமும் இருந்தால்தானே இன்ன காரணத்தால் உதாரணமென்பது விளங்கும்?

பேச்சு வளர்ந்தது; இருவருக்கும் கோபம் உண்டாயிற்று. செட்டியார், பதிப்பிலுள்ள குற்றங்களை ஒவ்வொன்றாக எடுத்து வீசினார். கனவான் விடை சொல்லமுடியாமல் விழித்தார்.

கனவான்: இதில் இல்லாத விஷயங்களை உபாத்தியாயர் எடுத்துச் சொல்லி விரிக்கமாட்டாரா?

செட்டியார்: உபாத்தியாயரிடம் எல்லாவற்றையுமே விட்டுவிடலாமே; இந்தப் பதிப்பு எதற்கு?

கனவான் திண்டுமுண்டாடினார்; எதையோ நினைத்துக்கொண்டு, "நான் என்ன பண்டிதனா?'' என்று கேட்டார். பண்டிதராயிருந்தால் இழிவென்று அவர் கருதியது அக்கேள்வியிலே தொனித்தது.

அதுவரையில் பதிப்புக்குற்றங்களைமாத்திரம் சொல்லிக் கண்டித்து வந்த செட்டியார் இதைக் கேட்டவுடன் அதிகக் கோபம் கொண்டார்; "உம்மை யாரையா பண்டிதரென்றது? நீர் பண்டிதரல்ல, உமக்கு இந்தப் புஸ்தகத்தைத் தொடக்கூட யோக்கியதை இல்லையென்றுதானே நான் சொல்கிறேன்? தமிழ்ப் பண்டிதனென்றால் கிள்ளுக்கீரையா? நீர் பண்டிதரிடம் ஏன் வருகிறீர்? பண்டிதனல்லவென்று சொல்லிக்கொள்வதில்

கௌரவம் காணும் உமக்கும் தமிழுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கடுமையாகப் பேசலானார்.

கனவானுக்கு மீசை துடித்தது; "என்னை இன்னாரென்று தெரியாமற் பேசுகிறீரே!'' என்று உரத்த குரலில் கூறினார்.

செட்டியாரா பயப்படுகிறவர்! "உம்மை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன். உம் கடிகாரச் சங்கிலிக்கும் சட்டைக்கும் மீசைக்கும் பயப்படுகிறவனல்ல நான். வண்டியை விட்டு இறங்கும். ஓரிடத்தில் இருந்து பேசுவோம். உம்முடைய அறியாமையை இன்னும் தெளிவாக வெளிப்படுத்துகிறேன்'' என்று சீறினார்.

எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த சுந்தரராவ் விஷயம் மிஞ்சிவிட்டதை அறிந்து அந்தக் கனவானைப் பார்த்து, "போதும். இனி இதைப்பற்றி வாதம் செய்வதை நிறுத்தி விடுங்கள். படித்தவர்களோடு நாமெல்லாம் வாய்கொடுக்கலாமா? இவர்களுடைய பெருமையை நீங்கள் இன்னும் அறிந்துகொள்ள வில்லை. இவர்களால் எங்கள் காலேஜுக்கே கௌரவம். நாமெல்லாம் ஒன்றாகப் படித்தவர்களல்லவா? தமிழில் உங்களுக்கு விசேஷ அறிவு எப்படி இருக்கமுடியும்? கிரமமாகப் பாடம் கேட்டுத் தமிழிலேயே ஊறிப்போனவர்களுக்குமுன் நாம் எம்மாத்திரம்? தமிழ்விஷயத்தில் துணிவாக ஒரு காரியத்தைச் செய்யவோ, ஒரு கொள்கையை உண்டாக்கவோ நாம் யார்?'' என்று சொல்லிவிட்டுச் செட்டியாரையும் சமாதானப்படுத்தினார்.

இந்த விவாதத்தைப் பற்றிச் சுந்தரராவ் அடிக்கடி சொல்லிச் செட்டியாரின் தைரியத்தைப் பாராட்டுவார். செட்டியாரும், "தமிழில் இரண்டு புஸ்தகத்தைப் படித்துவிட்டுத் தங்களை ஸ்தோத்திரம் செய்யும் நாலுபேர்களோடு சேர்ந்து ஆரவாரம் செய்து, தமிழுக்கே புகலிடம் தாமே என்று அட்டகாசம் செய்கிற இத்தகைய பிராணிகளை அடக்கத்தான் வேண்டும்'' என்று சொல்லுவார்.

ஒரு வேண்டுகோள்

சி. சுப்பிரமணிய பாரதியார்

["ஆயிர முண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி - ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர் - தம்மிற்
சண்டைசெய் தாலும் சகோதர ரன்றோ?"

என்று மற்றவர்களைக் கண்டு வீறு பேசும் பாரதியார், நமக்குள்ளே உள்ள பிரிவுகளைப் பாராட்டாமல் எல்லோரும் இந்தியரென்ற எண்ணத்தினால் ஒன்றுபட வேண்டுமென்று இக்கட்டுரையில் சொல்லுகிறார். பாரதியார் திருநாள் இந்த ஸெப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி தமிழ் நாட்டில் கொண்டாடப்பெற்றது. அவர் சொல்லும் ஒற்றுமை வழியைப் பின்பற்ற அவருடைய இலக்கியம் நமக்கு வழிகாட்டும். பாரதியாருடைய வசன நடையில் விறுவிறுப்பு நிறைய உண்டு. அவர் 'இந்தியா' பத்திரிகையில் இருந்தபோது சம்பிரதாயத்தோடு ஒட்டிய பல கட்டுரைகள் எழுதினார். அக்காலத்தில் யாவரும் எழுதிவந்த ஒரு வகையான நடையில் அவர் எழுதியவற்றைப் பார்க்கும்போது, "பாரதியாருக்கே சொந்தமான துள்ளிக் குதிக்கும் நடை எங்கே?" என்று யோசிப்போம். இந்தக் கட்டுரை 'இந்தியா'வில் வெளிவந்ததுதான். இதில் முதலில் சிறிது தூரம் வரையில் பாரதியார் நிலப்பரப்பிலேதான் உலவுகிறார்; பழைய கதையை அளக்கிறார்; பிற்பகுதியிலே கோபம், வீரம் எல்லாம் வந்துவிடுகின்றன; வார்த்தைகளில் கனல் கொளுந்துகிறது. அப்பொழுது பாரதியாருடைய கவிதை உள்ளம் தானாகவே வெளி வருகிறது. "இந்தியாதான் என் இளமையின் மேத்தை; என் யௌவனத்தின் நந்தவனம்; என் கிழக்காலத்தின் காசி" என்ற வாக்கியங்களே இதற்குச் சாக்ஷி.

—ப - ர்.]

இவ்வுலகத்தில் இருக்கும் எல்லா இராஜாங்கத்தாரினுடைய சரித்திரத்தையும் நாம் படிப்பின், ஒவ்வோர் இராஜாங்கமும் ஒரு காலத்தில் வெகு உயர்ந்த நிலையையும், மற்றொரு காலத்தில் வெகு தாழ்ந்தநிலையையும் அடைந்திருப்பதாகத் தெரியவருகிறது. முன் ஒரு காலத்தில், இந்தியா, சீனம், ஈரான், கிரீஸ், அஸ்ஸிரியா, பாபிலோன், ரோம் முதலிய தேசங்கள் வெகு உயர்ந்த நாகரிகத்தையும், போர் வல்லமையையும், நிகரில்லாக் கலை முதலிய சாஸ்திரங்களையும் பெற்றிருந்தன. சீன தேசமானது உயர்வடைந்திருந்த காலத்தில் அவ்வூர் அரசனான செங்கிஸ்கான் என்பவன் பால்டிக் சமுத்திரம் முதல் இந்தியாவரையிலும் உள்ள எல்லாத் தேசங்களையும் தன் வசமாக்கிக்கொண்டிருந்தான். அக்காலத்தில் அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஐரோப்பியர்கள் நடுநடுங்கினார்கள். அப்பொழுது ருஷியா

தேசமும் சீன தேசத்திற்குக் கப்பம் கட்டிவந்தது. சென்ற நூற்றாண்டிலும் பிரான்சு தேசத்தில் கலகம் உண்டானபொழுது நெப்போலியன் என்னும் ஒரு மகாவீரன் தோன்றி ஐரோப்பாக்கண்டம் முழுவதும் ஓர் ஆட்டு ஆட்டினான். ஆகையால், சாதாரணமாய் ஒவ்வொரு தேசத்துச் சரித்திரமும் அத்தேசத்தில் பிறக்கும் பெரிய மனிதர்களுடைய சரித்திரமே ஆகும்.

முன் ஒரு காலத்தில் நம்முடைய இந்து தேசமும் உயர்ந்த நாகரிகம் அடைந்து நிகரில்லாததாய் நின்றது. ஆனால் வெகு காலம் அன்னியரோடு போர் செய்தபடியால், தேசமானது களைப்படைந்து, சிறப்பிழந்து அன்னிய அரசாட்சிக்கு அடிமையாய்விட்டது. அன்றியும், கல்வி கலை முதலிய சாஸ்திரங்களை இழந்து, நாளுக்கு நாள் க்ஷீணகதியை அடைந்துவிட்டது. மேலும் ஜனங்களுக்குள்ள வீரியமும், தைரியமும், தர்ம குணமும், பிரும்ம ஞானமும் போய், வயிற்றெரிச்சல், பொறாமை முதலிய அற்பக் குணங்கள் உண்டாகி யாவரும் பார்த்து நகைக்கும்படியான நிலையை அடைந்தது.

இப்படி ஒரு தேசம் இருந்தால் மிகவும் துக்கிக்கத்தக்கதல்லவா? எழுந்திருங்கள். நீங்கள் யாவரும் ஸாக்ஷாத் கடவுளினுடைய புத்திரர்கள். நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? ஒரு ஸிம்மக்குட்டியானது பிறந்தது முதல் ஆட்டுக்குட்டிகளோடே வளர்க்கப்பட்டு வந்தது. அந்த ஸிம்மக் குட்டியானது சிலகாலம் சென்ற பிறகு ஸஹவாஸத்தினால் தானும் ஆட்டுக்குட்டி என்றே எண்ணிக் கொண்டிருந்தது. ஒரு நாள் இந்த ஸிம்மமும் ஆடுகளோடு காட்டில் மேய்ந்துகொண்டிருந்தபொழுது காட்டிலுள்ள மற்றொரு ஸிம்மம் அங்கு வந்தது. அந்தக் காட்டு ஸிம்மத்தை ஆட்டுக்குட்டிகள் கண்டவுடனே ஓடத் தொடங்கின. அப்பொழுது இந்த ஆடுகளோடு வளர்க்கப்பட்டு வந்த ஸிம்மமும் அக்காட்டு ஸிம்மத்தைக் கண்டு ஓடிப்போயிற்று. இதைக் கண்டவுடனே அந்தக் காட்டு ஸிம்மத்திற்கு வெகு ஆச்சரியமுண்டாயிற்று. மற்றொரு நாள் இந்த ஆட்டு ஸிம்மம் தூங்கும் சமயம் பார்த்து, காட்டு ஸிம்மமானது அதை வந்து எழுப்பிற்று. அப்பொழுது இந்த ஆட்டு ஸிம்மம் ஓடப் பார்த்தது. பிறகு அந்தக் காட்டு ஸிம்மம், "நீ ஏன் பயப்படுகிறாய்?" என்று கேட்க, அது, "நான் ஆட்டுக்குட்டி; நீ என்னைக் கொன்று தின்றுவிடுவாய்" என்று மறுமொழி கூறிற்று. அப்பொழுது அந்தக் காட்டு ஸிம்மம் இந்த ஆட்டு ஸிம்மத்தை ஒரு குளத்தண்டை அழைத்துக்கொண்டு போய், "இப்பொழுது உனக்கும் எனக்கும் ஏதாயினும் வித்தியாஸம் உண்டா? பார்" என்று சொல்லித் தண்ணீரில் இருக்கும் பிம்பத்தைக் காண்பித்தது. அப்பொழுது இந்த ஆட்டு ஸிம்மம் தன்னுடைய நிஜ ரூபத்தைக் கண்டவுடனே வீரியமடைந்து, தானும் ஸிம்மமென்கிற ஞானம் உண்டாகி ஸிம்மத்திற்குள்ள குணங்களெல்லாம் தன்னிடத்திலும் பொருந்தியிருக்கக் கண்டது.

அதே மாதிரியாக, ஹே பாரதவாஸிகளே, நீங்களும் பயத்தினால்தான் மயங்கியிருக்கிறீர்கள். நீங்களும் நிஜமான ஸிம்மங்களே. இந்த மயக்கத்

தினின்றும் நீங்கிக் கண் திறந்து பாருங்கள். ஏன் இப்படி அடிமைகளுக்குரிய பேடித்தனத்தை மேற்கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் தேசமானது இப்படி வருத்தப்படுகிற காலத்தில் ஏன் இப்படிப் பிரமை பிடித்து இருக்கிறீர்கள்? உங்களுக்குரிய ஜாதி பேதத்தைச் சற்றுத் தளர்ச்சி செய்யுங்கள். நாம் நம்முடைய தேசத்தில் இருக்கும் தாழ்ந்த ஜாதியார்களைப் பறையரென்றும் நீசரென்றும் சண்டாளரென்றும் சொல்லி மிதித்து வந்தோம். அப்படிச் செய்தபடியால் அவர்கள் கடைசியாக ஒன்றிற்கும் உதவாத அடிமைகளாய் விட்டார்கள். இப்பொழுது அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்வது பிராமணர் கடமையும், மற்ற நல்ல ஸ்திதியில் இருப்பவர் கடமையும் அல்லவா? வைத்திய சாஸ்திர புத்தகத்தில், ஒரு நல்ல நாகப் பாம்பானது ஒருவனைக் கடித்துவிட்டு மீண்டும் வந்து அந்த விஷத்தை உறிஞ்சி விட்டால் அந்த மனிதன் பிழைத்துக் கொள்ளுகிறான் என்று சொல்லி யிருக்கிறது. அதேமாதிரியாக, நாம் தாழ்ந்த ஜாதியாரை எல்லாம் முதலில் மிதித்து வந்தோம். இப்பொழுது அவர்களை நற்கதிக்குக் கொண்டுவரப் பிராமணர்கள்தாம் முன் நின்று செய்யவேண்டும். நம்முடைய ஜாதி பேதங்களைப் பார்ப்பதற்கு இது சமயமல்ல.

நம்முடைய தேசமானது வீரியமிழந்து, பேடித்தனத்திற்கு உட்பட்டிருக்கும் காலத்தில் நாம் இப்படி இருப்பது நல்லதா? "கிராமத்திற்குக் கஷ்டம் வந்தால் குலத்தை விட்டு விடு" என்று சொல்லியிருக்கவில்லையா? இப்பொழுது நம்முடைய தேசத்தில் இருக்கும் தாழ்ந்த ஜாதியார்களை எல்லாம் கிறிஸ்தவர்கள் தங்கள் பக்கம் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். இதுதான் நம்முடைய குடியைக் கெடுக்கக் கோடாலியாய் இருக்கும். நாமே தாழ்ந்த ஸ்திதியில் இருப்போர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும். தாழ்ந்த எரு முதலிய குப்பைகளைத் தள்ளிவிட்டால் நல்ல புஷ்பங்களும், பயிர்களும் விளையுமா? கரியைத் தள்ளிவிட்டால் நெருப்பு உண்டாகுமா? அதே மாதிரியாக இந்தத் தாழ்ந்தவர்களும் நமக்கு வேண்டியவர்கள்தாம். அவர்களை நாமே நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும். ஆகையால் எழுந்திருங்கள். பெரியோர்களே! உங்கள் பிள்ளைகள் யாவரையும் தேசத்திற்கு நன்மை செய்ய அனுப்புங்கள்.

சென்ற ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் ஒரு சிறுவனை, தாய்க்கு வேண்டிய கடமைகளைச் செய்யவில்லை என்று பட்டாளத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை. இதைக் கேட்டவுடனே தாயானவள் தன் தேசத்தின் நன்மையின் பொருட்டுத் தன் பிராணனை இழந்துவிட்டுப் பிள்ளையைப் போர் செய்ய அனுப்பினாள். இப்படி ஒவ்வொரு தேசத்திலும் நன்மை செய்யப் பிள்ளைகளை அனுப்புவதுமன்றிப் பிராணனையும் இழக்கத் தயாராய் இருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பாக நடந்த டிரான்ஸ்வால் யுத்தத்தின் பொழுது ஒரு கிழவன் தன் எட்டுப் பிள்ளைகளோடு, சண்டை செய்ய வீடு வாசல், சொத்து, நிலம் முதலியவைகளை விட்டுவிட்டு வந்து விட்டான். இப்படி ஒவ்வொரு தேசத்திலும் செய்கிறார்கள். இங்கு இந்தி

யாவில் தாழ்ந்த ஜாதியாரையும், திக்கற்ற பரதேசிகளையும் நல்ல கதிக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்யலாகாதா? பெரியோர்களே! உங்கள் பிள்ளைகளையெல்லாம் தேசத்தில் தாழ்ந்த நிலையில் இருப்போருக்கு உதவி செய்ய அனுப்புங்கள்.

நம்முடைய வருணாசிரம தர்மத்தில், பிராமணன் பிச்சை யெடுக்க வேண்டுமென்றும், க்ஷத்திரியன் இராஜ்யத்தை ஆளவேண்டுமென்றும், வைசியன் வர்த்தகம் செய்ய வேண்டுமென்றும் சொல்லி யிருக்கிறது. ஆனால் இப்பொழுது தேசமானது சீர்கேடு அடைந்திருக்கிறபடியால், நம்முடைய தேசத்து ஸனாதன தர்மத்தைக் காப்போர் ஒருவரும் இல்லை. ஆகையால் பிராமணர்கள்தாம் முன்னின்று தேசத்திற்கு நன்மை செய்ய வேண்டும்.

ஹே பாரதவாஸீ! இப்படி வீரியமற்று அடிமைக்குரிய பேடித்தனத்தோடு பராமுக அபேக்ஷை, பிறர் உதவி சார்தல், பிறர் சொல்படி நடத்தல் இப்படிப்பட்ட ஸாமக்ரிகளுடன் நீ சிறந்த நாகரிகத்தின் உச்ச நிலையை அடைவாயா? இந்தப் பேடித்தனத்தோடு வீரருக்குரிய சுதந்திரத்தை அனுபவிப்பாயா? ஹே பாரதவாஸீ! மறவாதே—ஸீதா, ஸாவித்ரி, தமயந்தி இவர்கள்தாம் ஸ்திரீ ஜாதியார்களின் ஆதாரம்; மறவாதே! ஸர்வ த்யாகியான கடவுள் உன்னுடைய தெய்வம். மறவாதே! உன் கல்யாணம், சுகம், கீர்த்தி, சொத்து எல்லாம் உன்னுடைய இந்திரிய சுகத்திற்கல்ல, மறவாதே. தோட்டி, மூடன், தரித்திரன், படியாதவன், பறையன், யாவரும் உன்னுடைய இரத்தம், உன் சகோதரர். ஹே வீரனே! தைரியமாய் இரு. நீ பாரதவாஸி என்று கர்வம் கொண்டிரு. கர்வத்தோடு சொல்லு: "நான் பாரதவாஸி. ஒவ்வொரு பாரதவாஸியும் என் சகோதரர்" என்று சொல்லு. "மூடபாரதவாஸி, தரித்திர பாரதவாஸி, முஸல்மான் பாரதவாஸி, பிராம்மண பாரதவாஸி, சண்டாள பாரதவாஸி யாவரும் என் சகோதரர்கள்." நீ கந்தையை உடுத்துக்கொண்டிருந்தாலும் உன் குரல் எட்டுமளவும், "ஹிந்துஸ்தான்வாஸிகள் என் சகோதரர்; ஹிந்துஸ்தான்வாஸிகள் என் பிராணன்; இந்தியாவில் இருக்கும் தெய்வங்கள் என்னுடைய தெய்வங்கள்" என்று சொல். சகோதரா! சொல்: "இந்தியாதான் என்னுடைய மோட்சம், இந்தியாவின் நன்மைதான் என் நன்மை. இந்தியாதான் என் இளமையின் மெத்தை; என் யௌவனத்தின் நந்தவனம்; என் கிழக்காலத்தின் காசி" என்று இரவும் பகலும் தியானம் செய். "ஹே ஈசுவரா! ஹே ஜகதம்பிகே! எனக்கு ஆண்தன்மை அளிப்பாயாக! ஹே ஜகன்மாதா! என்னுடைய பேடித்தனத்தைத் தூரத் துரத்து. எனக்கு ஆண் தன்மையைக் கொடு."



விடுதலை

ரவீந்த்ரநாத் டாகூர்

['ஜோதி' மொழிபெயர்த்தது]

[கவியரசர் தம் மரணத்தை முன்னரே எதிர்பார்த்திருந்தார். அவர் இறப்ப தற்கு ஒரு மாதத்திற்கு முன் இவ்வரிய கவிதையை இயற்றித் தம் சிராத்த தினத் தன்று இதனைப் பாடுமாறு தெரிவித்திருந்தார். சாந்திநிகேதனவாசிகளும் அவருடைய மனோபீஷ்டத்தைத் தவறாமல் நிறைவேற்றினார்கள்.]

பேரமைதி யெனுங்கடலென் எதிருளதிவ் வோடப்
பிணிப்பறுத்து விட்டுவிடுன் தோழமைநான் பூண்டேன்.
சீர்தருநின் திருவடிக்கீழ்ப் புகலடைந்தேன் ஐயா!
திசைவிளக்கும் வடமீனின் ஒளிஅழைத்தல் காணாய்.
ஆர்தருநன் முத்திநெறி காட்டுபெருந் தகையே!
அடியேன்செய் பிழைபொறுக்கும் நின்னருளென் துணையாம்.
பாரினிலெத் தளையுமிலை; அகிலமெனை அணைக்கும்;
பயமிலைஎன் அகத்தில்உயர் பரம்பொருள்கண் டேனே.



மறலி

ரவீந்த்ரநாத் டாகுர்

['ஜோதி' மொழிபெயர்த்தது]

[ஸ்ரீ ரவீந்த்ரநாதர் ரணசிகித்ஸை பெறுவதற்கு முன் இயற்றிய கவிதை இது. அவர் வாழ்நாளின் கடைசிக் கவிதையும் இதுவே.]

துயரிருட் கங்குல் அடிக்கடி தோன்றிஎன்
வாயில்முன் நின்ற தாயினும், அதன்கைப்
படையின் கூர்மையை ஒருமுறை பார்த்தேன்.
நீள்துய ரால்வரும் நெற்றிச் சுருக்கமும்
மிகுபயத் தால்விளை விகாரமும் அதுவே
இருளினில் வஞ்சமாய் இயற்றும் பீடிகை.
அச்சுறு கவசம் அணிந்துமுன் நிற்கக்
கண்டுநான் நம்பிய காலமெல் லாம்நான்
பயனறு தோல்வித் துயரமே அடைந்தேன்.
வெற்றியும் தோல்வியும் உற்றஇக் கூத்து
வாழ்க்கையில் விளைவெறும் மயக்கமாம். இளமை
தொடங்கியே பன்முறை நடுங்கவரு வனவாம்
இவையெலாம் துயரின் இளிவரும் நகையே.
வகைவகை மாறி வந்துறும் பயமெலாம்
இருள்திரை யினிலே இயமன்
மருள்தர இயற்றும் கைவினைத் திறனே!

ஓரணா

நா. ராமரத்னம், எம். ஏ.

"என்ன, அந்தக் கழுதையை இன்னும் காணும்?" என்றது ஆண்குரல்.

"இருட்டுகிற நேரமாச்சே; மழை வரும்போல் இருக்குதே. மின்னலும் இடியும் பலமாக இருக்குதே" என்றது பெண் குரல்.

ஆண்குரலில் அதிகாரமும் கோபமும் படபடப்பும் முரட்டுத்தனமும் தொனித்தன. பெண் குரலில் கவலையும் அன்பும் மென்மையும் ஒலித்தன.

"கையிலே பணத்தோடே கொளந்தை வருவானே; இந்த இருட்டுகிற நேரத்திலே...." அதோடு நின்றது குரல்.

"கழுதை, சம்பளத்தை வாங்கிக்கிட்டு நேரே வராமே எங்கானும் வேடிக்கை பார்த்துக்கிட்டு நிப்பான்" என்று ஆண்குரல் தாமஸத்துக்குக் காரணத்தை ஆராய்ந்து சொல்லியது.

அவள் மங்கம்மாள், அவன் கறுப்பண்ணன்; அவளுடைய 'கொளந்தை'யும், அவனுடைய 'கழுதை'யும் ஆகிய குப்பனது வரவை அவ்விருவரும் எதிர்பார்த்தனர்.

வெளியிலே பேய்க்காற்று வீசிக்கொண்டிருந்தது. வறட்டுப் புழுதி கண் காது மூக்கெல்லாம் அடைத்துக்கொண்டு கிளம்பியது. சூரியன் அஸ்தமித்தானே இல்லையோ, அந்த நிலையில் ஒன்றும் தெரியவில்லை. மழை வருமென்று இடியும் மின்னலும் அறிவித்தன. மேகமூட்டத்தினால் இருள் கப்பிக்கொண்டு வந்தது.

இந்தப் பிரசண்டமாருதத்தினிடையிலே ஒரு சிறு குடிசையில் ஒன்றுக்கொன்று இசையாத இரண்டு குரல்களிலே அவ்விருவரும் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். சிறு குடிசையில் ஒரே வாசற்படி. அதுவே அதன் தலைவாசல், இடைவாசல், கடைவாசல் எல்லாம். அதன் கதவிற்கு அடுத்தபடி ஒரே கூடம்; அதுவே அந்தத் தரித்திர நாராயணன் மாளிகையின் 'ஹால்'; சமையலறை; படுக்கையறை.

இந்த இடத்தில் உள்ள நாயகன் கறுப்பண்ணன். உடம்பு மெலிந்து மீசைமட்டும் மெலியாமல் நின்றான் அவன். நோயால் தாக்கப்பட்ட தேகத்தில் வலிவில்லை; ஆனால் அதிகாரமும் கோபமும் இருந்தன; அதை வெளிப்படுத்தக் குரல் இருந்தது; மீசையும் அதை முறுக்கக் கையும் இருந்தன.

அவன் மீசையை முறுக்கிக்கொண்டே பேசினான்.

"இந்த எளவு மவன் சீக்கிரம் வந்து தொலைக்கிறதுதானே!"—இந்த வார்த்தை அவளுக்குச் சுருக்கென்று தைத்தது.

"யாரை அப்படிச் சொல்லறே? பாவம்! கொளந்தை வேலை செஞ்சு கொண்டுவந்து போடுது. அதை வச்சுச் சாப்பிடப் போறோம். அதைப் போய்த் திட்டுறியே; உனக்கு மனிசத்தனம் இருக்குதா?"

"ஆமாம்! நூத்துக்கணக்காகத்தான் சம்பாரிச்சுக் குமிக்கப்போறான்!" என்று ஏளனம் செய்தான் அவன்.

"அந்த மூணணாவைத்தான் சொல்லேன். நமக்கு அதைத்தான் ஆர் கொடுக்கறாங்க? நீ கண்டவனோடே சேர்ந்து ஒடம்பைக் கெடுத்துக்கிட்டு உளுந்து கிடந்தயே. யார் கவனிச்சாங்க? நான் கொண்டுவந்து போட்டேன்; கூளு காச்சிக் குடுத்தேனே, நீ பொளச்சியோ? இப்போ ஆணுவம் பேச வந்துட்டே."

"வாயை மூடு நாயே! நான் சம்பாரிச்ச போதெல்லாம் குந்திக்கிட்டுத் தின்னயே; அது மறந்துபோச்சோ?"

"அதெல்லாம் பளைய கதை; நீ என்னிக்கு அந்தக் கள்ளுத்தண்ணியின் சகவாசம் வச்சுக்கிட்டயோ அன்னிக்கே ஒனக்குச் சனியன் பிடிச்சுது."

அவள் அகக்கண்முன் அந்தச் சனியன் செய்த கோலமெல்லாம் வந்தன. அவன் குடித்துத் தன் உடம்பைக் கெடுத்துக்கொண்டதோடு அவளையும் எவ்வளவு கஷ்டப்படுத்திவிட்டான்! எல்லோரோடும் சண்டை; எங்கே போனாலும் சச்சரவு. உடம்பிலும் வலிவில்லை; வாயிலும் நல்ல தனமில்லை. யார் அவனுக்கு வேலை தருவார்கள்?

அவளும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். ஏதோ கூலிவேலை செய்து சம்பாதித்துப் போட்டாள். குடும்ப பாரத்தை அப்படியும் தாங்க முடியவில்லை. வேறு வழியில்லாமல் தன் குழந்தையாகிய எட்டுவயசுக் குப்பனைக் கூலிவேலைக்கு அனுப்பினாள். தினத்துக்கு மூன்றணாக் கூலி.

அந்தக் குழந்தை கூலிவேலை செய்ய ஆரம்பித்து ஒரு வாரமாகப் போகிறது. வாரம் வாரம் கூலிகொடுப்பது வழக்கமாம். அன்றைக்கு முதல்வாரச் சம்பளம் வாங்கப்போகிறானென்ற சந்தோஷம் மங்கம்மாளுக்குப் பொங்கிக்கொண்டிருந்தது. 'என் குழந்தை தன் சின்னஞ்சிறு கையினால் சம்பாதிக்கிற பணம். முதல் சம்பளத்தைச் செலவழிக்கக்கூடாது. இந்தத் தரித்திர வீட்டில் எவ்வளவு வந்தாலும் போதாது! அந்த முதல் சம்பளத்தைத் தனியே வைக்கவேணும். சாமிக்குப் பூசைபோடவேணும். பின்னும் அவன் சம்பளத்திலிருந்து சேர்த்து அவனுக்கு ஒரு வெள்ளிக் காப்புப் பண்ணிப்போடவேணும்' என்றெல்லாம் அவள் மனத்துக்குள் இன்பக்கனவு கண்டுகொண்டிருந்தாள்.

சாயங்காலம் அவன் கைந்நிறையக் கூலிப்பணத்தைக் கொண்டுவருவானென்று எதிர்பார்த்த அந்தத் தாயின் உள்ளம், குழந்தை அவ்வளவு நேரமாகியும் வராததனால் கலங்கியது. பணத்தை யாராவது பிடுங்கிக் கொண்டிருப்பார்களோவென்று பயந்தாள். "சாமீ! என் கொளந்தை சௌக்கியமாகப் பணமும் கையுமாக வந்து சேரவேணும். உனக்குச் சூடம் வாங்கிக் கொளுத்தறேன்" என்று வாய்விட்டு வேண்டிக்கொண்டாள்.

அதற்கு, எதிரே நின்ற கறுப்பண்ணசாமிதான் பதில் கொடுத்தது; "கொளுத்து, கொளுத்து" என்று பரிகாஸம் செய்தது.

அவனை அவள் வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்; "குந்திக்கிட்டுச் சோறு திங்கற ஒனக்கு வெக்கமாயில்லே?" என்றாள்.

"அந்தப் பயல் இன்னும் வரலேயே?" என்று கறுப்பண்ணன் கேட்டான்.

"உனக்கு என்னிக்கும் இல்லாத கவலே இன்னிக்கு எங்கே வந்தது?"

"அவனுக்கு எத்தனை சம்பளம் வரும்?" என்று அவன் கேட்டான்; அவனுக்குத் தெரியும்: 'தினத்துக்கு மூன்றணா. வாரத்துக்கு ஒரு ரூபா அஞ்சணா' என்று கணக்குப் போட்டு வைத்திருந்தான்.

"அந்தக் கணக்கு உனக்கு என்னத்துக்கு? நீ வூட்டுச்செலவைக் கவனிக்கிறியா? பணம் போதாட்டிக் கொண்ணாந்து போடப்போறியா?" என்று குத்திக் காட்டியபடி கேட்டாள் மங்கம்மாள்.

அவள் வார்த்தைகளினூடேயுள்ள குத்தலையும் கோபத்தையும் அவன் கவனித்தவனாகவே தோற்றவில்லே. அவன் கண்கள் வாசற்படியை நோக்கியவண்ணமாகவே இருந்தன.

"நான் வெளியிலே போயிருக்கையிலே காத்தான் வந்தானா?" என்ற கேள்வி அவனிடமிருந்து பிறந்தபோது மங்கம்மாளின் எண்ணங்கள் ஒரு புதிய திக்கிலே திரும்பின; அவள் நெஞ்சம் இருண்டது. காத்தான் என்ற பெயரைக் கேட்டாலே அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வரும். கள்ளுக்கடைப் பழக்கத்தைக் கறுப்பண்ணனுக்கு உண்டாக்கினவன் காத்தான்தான் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இப்போதும் கள்ளுக்குடியைத் தன் புருஷன் விடவில்லேயென்பதும், அதற்குக் காரணம் அடிக்கடி காத்தான் அவனிடம் பழகுவதுதான் என்பதும் அவள் அறிந்த விஷயங்கள். சிலநாள் கறுப்பண்ணன் அவள் எங்காவது வைத்திருக்கும் சில்லறையைத் திருடிக்கொண்டு போவான். சிலநாள் அவனுடைய அடி பொறுக்கமாட்டாமல் ஏதாவது அவள் தொலேக்கவேண்டி வரும்.

இந்த ஞாபகத்தோடு தன் மகன் கொண்டுவரப்போகும் சம்பளப் பணத்தையும் இணைத்துப் பார்த்தாள். அவள் உடம்பு நடுங்கியது; "ஐயோ! படுபாவி!" என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டாள்.

"காத்தானும் வல்லே, கீத்தானும் வல்லே; நீ சோறு குடிச்சுட்டு உளுந்துகிடக்கப்போறியா? வெளியிலே புறப்படறியா?"

"அவன் வரட்டும்."

"யார்? காத்தானு?"

"உன் மவன் தான்."

அவளுக்கிருந்த பயம் மூண்டது.

"இந்தா, சாமிமேல் ஆணையாகச் சொல்கிறேன்; அந்தக் கொளந்தை பணத்திலே கைவச்சயோ எனக்குக் கெட்ட கோவம் வரும்."

"இன்னும் வரக்காணுமே?"

"நான் சொல்றது காதிலே உளறதா? சாமிக்குப் பூசை போடணும். முதல்வாரத்துச் சம்பளம்; உன் தோசிக்கையாலே அதைத் தொட்டு விடாதே. சாக்கிரதை. அப்புறம் சாமி உன்னைச் சும்மா விடாது."

இதற்கு அவன் பதில் அளிக்கவில்லை. என்னவோ உறுமிக்கொண்டிருந்தான். மீசையை முறுக்கினான். அதைக் கடித்துக்கொண்டான். பசியோடிருக்கும் புலி பண்ணும் சேஷ்டையெல்லாம் அவன் பண்ணினான். அவனுடைய பயங்கரமான பார்வையைக் கண்டு அவள் கலங்கினாள். முணுமுணுத்தாள்.

வெளியே காற்றின் பேரிரைச்சல்; மழை குமுறிக்கொண்டு வந்தது. உள்ளே அவனுடைய கர்ஜனை; அவளுடைய முணுமுணுப்பு.

அந்தச் சமயத்தில் குடிசையின் கதவு திறந்தது. கறுப்பண்ணன் எழுந்தான். அதற்குமுன் அவள் எழுந்தாள். உடம்பெல்லாம் நடுநடுங்கிக் கொண்டு அந்தக் குழந்தை உள்ளே புகுந்தான்.

வேகமாக ஓடிவந்திருக்கிறான்; இல்லாவிட்டால் அத்தனை மூச்சு வாங்குமா? காற்றுக்கும் மழைக்கும் பயந்துபோய் ஓடிவரவில்லை. தன்னுடைய முதல்மாசச் சம்பளத்தைத் தன் அருமை அம்மாவுக்குக் காட்டலாமென்ற ஆசையோடு வந்தான். இயற்கைத்தாயின் குமுறலுக்கிடையே அதைக் கவனியாமல் தன் ஏழைத்தாயின் மகிழ்ச்சி நிரம்பிய வார்த்தைகளைக் கேட்கவேண்டுமென்று அவன் ஓடிவந்தான். ஆனால் அவன் அங்கே கண்டது என்ன?

புறத்தே இடிமுழக்கத்தைக் கவனியாமல் வந்த அவன் குடிசைக்குள் இடிமுழக்கம் இருக்குமென்று எதிர்பார்க்கவில்லை. கையில் பணத்தை இறுக மூடிக்கொண்டபடியே அவன் நுழையும்போது எதிரில் அந்த இரண்டு உருவங்களும் ஓடிவந்தன; ஒன்று மின்னல்; ஒன்று இடி.

"டேய், பணத்தை இங்கே கொடு. இல்லாட்டா உன் உசிரை வாங்கிடுவேன்" என்றது இடி.

"கொடுக்காதே; வேண்டாம்" என்றது மின்னல்.

"அவ பேச்சைக் கேட்டுக் கொடுக்காமெப் போனே, இன்னிக்குச் செத்தே."

"இந்தா, அதைத் தொடாதே; வேண்டாம். கொளந்தை பாவத்தைக் கொட்டிக்காதே."

இந்தப் பேரிரைச்சலுக்கிடையே குழந்தை ஸ்தம்பித்து நின்றான். இறுகிய கை நெகிழ்ந்தது. அதற்குள் கறுப்பண்ணன் அதிலிருந்த பணத்தைத் தட்டிவிட்டான். பணம் கீழே விழ அதைப் பொறுக்கலானான். "ஒரு ரூபாய், ஒரு அணா; இதோ இரண்டணா, காலணா..." அவன் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் கண்மழை தாரை தாரையாகக் கொட்டத்தொடங்கியது; "வேண்டாம், கொடுத்துவிடு; அதைத் தொடாதே" என்று சொல்லி அவனை அணுகினாள். அவன் அவளைக் கையால் தள்ளினான். அவள் கீழே விழுந்தாள். கீழே கிடந்த காசைப் பொறுக்கிச் சேர்த்த பணத்தை எண்ணிப் பார்த்தான். ஏதோ குறைந்ததுபோலும்; மறுபடியும் தரையைப் பார்த்தான்.

"ஏண்டா பயலே; எங்கே இன்னும் ஒரு அணா" என்று குடல்கலங்க உறுமினான்.

குழந்தை நடுங்கிக்கொண்டே ஏதோ சொன்னான்.

"கழுதை! எங்கே தொலைச்சே?" என்று கையை ஓங்கிக்கொண்டு சென்றான்.

"பசிச்சுது; பலகாரம் வாங்கித் தின்னேன்." அந்த வாக்கியம் முடியவும் கறுப்பண்ணன் அவன் பக்கத்தில் அணுகவும் சரியாக இருந்தது; "திருட்டுப்பயலே! சம்பளத்தை அப்படியே கொண்டுவராமே பலகாரமா வாங்கினே?" என்று சொல்லி ஓங்கி ஓர் அறை அறைந்தான். இடி விழுந்தே விட்டது. அவள் தடுக்க வந்தாள். அவளையும் ஓர் உதை கொடுத்தான்; திரும்பிப் பாராமல் புறப்பட்டுவிட்டான்.

அந்தக் குழந்தை அறை தாங்காமல் கீழே விழுந்தான். அவனுக்கு அருகில் உதைபட்ட மங்கம்மாள் விழுந்தாள்.

"அட பிசாசே! ஒண்ணேகால் ரூபாயையும் கள்ளுக்கடையிலே கொட்டப் போறயே; இந்த ஒரு அணாக் குறைஞ்சது உனக்குப் பொறுக்கலையா? குளந்தை ஒடம்பு வருந்திச் சம்பாதிச்சதிலே ஓரணாச் செலவழிக்கச் சொந்தம் இல்லையா? இந்த அக்கிரமம் சாமிக்குப் பொறுக்குமா?" என்று புலம்பியபடியே அந்தக் குழந்தையை அணைத்துக்கொண்டாள். குப்பன் தன் வெறுங்கையால் அவள் முகத்தைத் தடவினான்.

சாமிக்குப் பொறுக்குமா?—நீங்கள்தான் பதில் சொல்லுங்கள்.

சாந்திநிகேதனம்

எஸ். ஆர். வேங்கடராமன், பி.ஏ., பி.எல்.

1940-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி காலை 11-மணிக்குப் போல்புர் ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கிச் சாந்திநிகேதனத்துப் பஸ்ஸில் ஏறி ஐந்து அணுக் கொடுத்து ஐந்துமைல் தூரம் பிரயாணம் செய்து சுமார் 11-30 மணிக்குச் சாந்திநிகேதனத்தை அடைந்தேன். வழியில் போல்புர் கிராமத்தைத் தவிரச் சாந்திநிகேதனத்தை அடையும் வரையில் வேறு கிராமங்களே இல்லை. பஸ் ஒரு பெரிய 'கேட்'டின் முன்பாக நின்றது. அதன்மீது இரும்பில் அர்த்தசந்திர வடிவத்தில் 'சாந்தி நிகேதன்' என்று வங்கபாஷையில் எழுதியிருந்தது. அதன் வழியாக உள்ளே சென்று 'சாந்திநிகேதனம்' என்ற விடுதியை அடைந்தேன். இந்தப் பெயரே இப்போது ஓர் ஊரின் பெயராக விளங்குகிறது. சாந்தி நிகேதனம் என்றால் 'அமைதி நிலயம்' என்று சொல்லலாம். குருதேவர் டாகுரின் தந்தையாகிய மகரிஷி தேவேந்திரநாத் டாகுர், இந்த இடத்தில் தான் தம் வாழ்நாட்களைத் தியானத்தில் கழித்தார்.

நான் பஸ்ஸை விட்டு இறங்கியதும் என்னை வரவேற்க ஸ்ரீமான் பானர்ஜீ என்பவர் வெகு சந்தோஷத்துடன், "நீங்கள் நல்ல அதிர்ஷ்டசாலி. இன்று கவியரசரின் 80-ஆம் பிறந்த நாளைச் சாந்திநிகேதனத்தில் உள்ளோர் கொண்டாடப் போகிறார்கள். அதில் கவியரசரும் கலந்து கொள்வார். இந்தச் சந்தர்ப்பம் சாதாரணமாய் எவர்க்கும் கிடைப்பது அரிது" என்று சொல்லி எனக்கு ஜாகை கொடுத்தார். பிறகு குளித்துப் போஜனம் செய்தபின் சாந்திநிகேதனத்தின் பல ஸ்தாபனங்களைப் பார்க்கச் சென்றோம்.

சாந்திநிகேதனம் இந்தியக் கலைவளர்ச்சிக்கும் உலகக் கலைவளர்ச்சிக்கும் இருப்பிடம். இங்குள்ள கல்விஸ்தாபனத்துக்கு விசுவபாரதி என்று பெயர். இதில் வித்யாபவனம் என்பது மதம் தத்துவம் என்பவற்றின் விஷயமாய்ப் புராதன நூல்களைப் போதித்தும் பரிசோதனை செய்தும் புத்தகங்களைப் பிரசுரிக்கும் பாகம். இஸ்லாம்மதம், பௌத்தமதம், ஜைனமதம், ஹிந்துமதம், கிறிஸ்துவமதம், பாரசீகமதம்போன்ற மதங்களைப்பற்றிய புஸ்தகங்கள் அடங்கிய ஓர் ஒப்பற்ற புஸ்தகசாலை மிகவும் சிற்பவேலைப்பாடு அமைந்துள்ள ஒரு கட்டிடத்தில் இருக்கிறது. அதன் சுவரில் தீட்டியிருக்கும் ஓவியங்கள் ஒரு தனிச்சிறப்புப்பெற்று விளங்குகின்றன. நிமிர்ந்த தலை குனியாமல், வலியையும் மறந்து நான் அச்சித்திரங்களைப் பார்த்தவண்ணம் நெடுநேரம் கழித்தேன். இந்த வித்யாபவனத்தின் தலைவர் க்ஷிதிமோகன் ஸேன் என்பவர், ஸம்ஸ்கிருதம், வங்காளி, பாளி ஆகிய பாஷைகளில் அதிக பாண்டித்தியமுள்ளவர். மேற்கூறிய புஸ்தகசாலையில் உலகிற் சிறந்த புஸ்தகங்களெல்லாம் இருக்கின்றன.

சீனபவனம் என்பது மற்றொரு ஸ்தாபனம். சீனபாஷையிலுள்ள பிரசித்திபெற்ற நூல்கள் அடங்கிய ஒரு புஸ்தகசாலை இங்கே இருக்கிறது.

சீன தேசத்து அறிவாளிகளும் நிபுணர்களும் இங்கே பாடம் கற்பித்து வருகின்றனர். நூல்களைப் பரிசீலனை செய்தும் வருகின்றனர்.

கலாபவனத்தில் சிற்பமும் ஓவியமும் கற்பிக்கப்படுகின்றன. இதன் தலைவர் நந்தலால் போஸ் என்ற பெயர்பெற்ற ஓவிய நிபுணர். இதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த பெருமாள் என்பவர் 'க்யூரேடர்' என்ற பதவியை வகித்து வருகிறார். அவரைக் கண்டு பேசினேன். அவர் மதுரையைச் சேர்ந்தவர். சென்ற 7, 8 வருஷங்களாகக் கலாபவனத்தில் ஓவியம் கற்று இங்கே இப்போது இப்பொறுப்பான பதவியை வகித்துவருகிறார். இக் கலாபவனத்தில் வங்காள ஓவியக்காரர்களின் ஓவியங்களும் கலாபவன ஆசிரியர்களும் மாணவர்களும் எழுதியுள்ள ஓவியங்களும் சகலரும் பார்த்து ஆனந்திக்கும்வண்ணம் அழகாகக் குறிப்புகளுடன் மாட்டப்பெற்றிருக்கின்றன.

சங்கீதபவனத்தில் நாட்டியமும் சங்கீதமும் கற்பிக்கப்படுகின்றன. வாய்ப்பாட்டுடன் ஸிதார், எஸ்ராஜ், தபலா வாசிக்கவும், மணிபுர் தென்னிந்தியப் பரதநாட்டியம் ஆடவும் இங்கே மாணவ மாணவிகளுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

சிக்ஷாபவனத்தில் பி.ஏ., எம்.ஏ., பரீக்ஷைகளுக்காக மாணவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. தென்னிந்தியாவிலிருந்தும் சில மாணவர்கள் வந்து இங்கே படிக்கின்றனர். மாதச்செலவு சம்பளம் உட்பட ரூ. 30, 35 பிடிக்குமாம்.

பாடபவனம் என்ற பள்ளிக்கூடத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு மாணவர்கள் படிக்கலாம்.



ஸ்ரீபவனம்

சந்தோஷாலயம் என்பது 5 முதல் 10, 11 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு ஏற்பட்ட பள்ளிக்கூடம். பெயருக்கு ஏற்றவாறு அவர்கள் வசிக்

கும் இடம் சந்தோஷமயமாய் இருந்தது. அவர்களும் சுயேச்சையாய்ச் சந்தோஷமாகவே காலத்தைக் கழித்தனர்.

மேற்கூறிய கல்விஸ்தாபனங்களில் ஆண்களும் பெண்களும் படித்து வருகின்றனர். பெண்களுக்கென்று ஒரு தனி விடுதி இருக்கிறது. அதில் 90 பெண்கள் வசிக்கின்றனர். அவர்கள் விடுதிக்கு ஸ்ரீபவனம் என்று பெயர்.

நான் சாந்திநிகேதனத்தில் உள்ள பல ஸ்தாபனங்களைச் சுற்றி வரும் போது, ஆங்காங்கு உயர்ந்து அடர்ந்த மரங்களின் அடியில், 10, 15 பேருக்கு அதிகப்படாத மாணவர்களும் உபாத்தியாயரும் வெட்ட வெளியில் உட்கார்ந்துகொண்டு இருப்பதைப் பார்த்தேன். ஒரு கரும்பலகையும் மரத்தின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. அரை வட்டமாக மாணவர்கள் மரத்துநிழலில், ஸிமெண்டு ஆசனங்களில் உட்கார்ந்திருந்தனர். பெண்கள் ஒரு பக்கமும், பையன்கள் ஒரு பக்கமும் உட்கார்ந்திருந்தனர். கட்டிடங்களுள் வகுப்பையே நான் பார்க்கவில்லை. உண்மையில் இது ஓர் ஆசிரமமாக விளங்கியது. மற்றைப் பள்ளிக்கூடங்களில் மாணவனை வாழ்க்கையில் ஊக்கமற்றவனாய் நன்றாகச் செதுக்கிய செங்கல்லைப் போலவோ அல்லது அச்சில் வார்த்த வெல்லம் போலவோ செய்வதே தான் நோக்கம். இங்கே அப்படி இல்லை. இங்கே ஒவ்வொரு மாணவனும் மாணவியும் தனிச் சிறப்பும் யூகமும் புத்தியும் சாமர்த்தியமும் உள்ளவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் சுயமாகவே, இயற்கையாகவே சாமர்த்தியம் சக்தி இவற்றுடன் மலர்வதற்கேற்ற ஒரு படிப்பைத்தான் கவி டாகுர் இவ்விடத்தில் கற்றுக் கொடுக்கிறார். இக்காரணத்தைக் கொண்டேதான் ஒவ்வொரு வகுப்பிலும் 10, 15க்கு அதிகமான மாணவர்களையும் மாணவிகளையும் வைத்துக் கொள்வதில்லை.

மேனாட்டுக் கலாசாரத்தில் மூழ்கினும் இந்தியக் கலாசாரத்திலும் நாகரிகத்திலும் பற்று ஒழியாமல், நமது நாட்டின் பழக்க வழக்கங்களில் வெறுப்பு உண்டாகாமல், நமது உடை காட்டுமிராண்டியினுடையது என்று எண்ணாமல் நம் தாய்மொழியைப் புறக்கணிக்காமல் இருப்பதற்கேற்ற திட நம்பிக்கை அறிவு, ஆற்றல் ஆகியவை சாந்திநிகேதனத்தில் உள்ளவர்களிடம் காணலாம். சாந்திநிகேதனத்தில் வந்து படிக்கும் ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும் மற்றவர்களுங்கூட நம் இந்திய நடையுடை பாவனைகளைக் கைக்கொண்டு வாழ்கின்றனர்.

'சாந்திநிகேதனத்தில் படிக்கும் மாணவர்கள் எல்லாரும் அலுங்காமல் குலுங்காமல், வெயிலிலும் காற்றிலும் மழையிலும் வாடி அடிபட்டு நனையாமல், பகல் கனவு கண்டுகொண்டு தூர இருக்கும் அடிவானத்தை நோக்கியவண்ணம் சும்மா உட்கார்ந்துகொண்டு உண்டு களிக்கும் சுகஜீவிகள்; கவைக்கு உதவாதவர்கள்' என்ற ஒரு தப்பெண்ணம் பலரிடம் இருப்பதை நான் அறிவேன். சாந்திநிகேதனத்தைப் பார்த்த பிறகு இவையெல்லாம் தப்பெண்ணம் என்பது எனக்கு நன்கு தெரிந்தது.

இங்குள்ளவர்கள் கடின வேலையை இகழ்வதில்லை. கைத்தொழில் செய்யப் பின்வாங்குவதில்லை. ஆனால் இங்கே கற்பிக்கும் படிப்பு, குமாஸ்தா வேலைக்கும், சர்க்கார் உத்தியோகத்திற்கும் ஏற்றதல்ல. கவியரசரின் நோக்கம் வேறு; அது உயர்ந்தது. ஒவ்வொருவனும் ஒரு தனிச் சிறப்புடையவன்; அந்தச் சிறப்பை வளர்த்துப் பிரகாசிக்கச் செய்வதே சாந்திநிகே

தனத்தின் நோக்கம். அவன் இந்தியக் கலாசாரத்தின் பிரதிநிதியாக இருக்கவேண்டுமென்பதுதான் கவியரசரின் நோக்கம். அம்மாதிரிக் கல்வியைத்தான் இங்கே புகட்டுகிறார்கள்.



ஓர் உபாத்தியாயரின் குடில்

மேற்கூறியவற்றைப் பார்த்துத் திரும்பினேன். வழியில் ஒரு மாந்தோப்பு. அங்கே பலர் கூடி அமைதியாக மாந்தோப்பை அலங்கரித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் நிதானமாய், அமைதியாய், செய்ததையே திருப்பிச் செய்யாமல், பதற்றமில்லாமல், செய்து வந்தனர். அவர்கள் மனம், ஹ்ருதயம், புத்தி, உடம்பு எல்லாம் அவ்வேலையில் லயித்திருந்தன.

இரவில் மாந்தோப்பில் கவியரசரின் 80-ஆம் வருஷப் பிறப்புவிழா நடந்தது. அர்த்த சந்திரன் போன்ற ஒரு திறந்த வெளி. அது நன்கு மெழுகிக் கோலம் போட்டுத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. முதலில் வேதங்களிலிருந்து சில சுலோகங்களை விசுவபாரதியின் பண்டிதர்கள் வாசித்தார்கள். சாமவேதத்திலிருந்து ஒரு ரிக்கைத் தென்னிந்தியாவிலிருந்து வந்து விசுவபாரதியில் வேலை செய்யும் சாஸ்திரியார் ஒருவர் சொன்னார். பிறகு சிறு பெண்கள் கவியரசருக்குத் தாமரை மொட்டு அளித்து, சந்தனம், திலகம் இட்டனர். சங்கீத பவனத்தின் மாணவர்களும் மாணவிகளும் சில பாட்டுக்களைப் பாடி நாட்டியமும் ஆடினர். பிறகு கவியரசர் டாகுர் 'இருட்டறை ராஜா' (King of the Dark Chamber) என்ற நாடகத்தை வாசித்து நடித்துக் காட்டினார். ஒவ்வொரு காட்சிக்கு நடுவிலும் பாட்டும் நாட்டியமும் நடைபெற்றன. கவியரசரும் சேர்ந்து பாடினார். அன்று அவர் எண்பது வயதுள்ளவராகக் காணப்படவில்லை. குரல்

கம்பீரமாயிருந்தது. உத்ஸாகமும் உணர்ச்சியும் இளைஞரைப் பழித்தன. அதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். நாடகத்தைப் படித்து முடித்தார். ஒவ்வொருவரும் கவியரசரின் பாதகமலத்தில் பணிந்து விடைபெற்றுச் சென்றனர். கடைசியாக என்னைக் கவியரசருக்கு 'மாடர்ன் ரிவியூ' ஆசிரியரான ராமானந்த சட்டர்ஜி அறிமுகப்படுத்தினர். கவி என்னைப்பற்றி விசாரித்தார். நான் அங்கு நடக்கும் நடவடிக்கைகளையும் தேசத் தொண்டையும் கிராமப் புனருத்தாரண வேலையையும் கண்டு களிப்பதற்காக வந்தேன் என்று சொன்னேன். பக்கத்திலிருந்த ஒருவரைக் கவியரசர் விளித்து எல்லாவற்றையும் எனக்கு நன்கு காட்டும்படி சொன்னர்.

மறுநாள் ஸ்ரீநிகேதனத்தைப் பார்க்கச் சென்றேன். சாந்திநிகேதனத்திலிருந்து ஒன்றரை மைல் தூரமுள்ளது இது. இங்கே 1922-ஆம் வருஷம் முதல் சுற்றுக் கிராமங்களில் புனருத்தாரண வேலை நடந்து வருகிறது. இங்கே நான் பார்த்தவற்றை எல்லாம் விவரமாக எழுத இது இடமல்ல. சில முக்கிய அம்சங்களை மாத்திரம் விளக்குகிறேன்.

முதல் முதலாகக் கிராமங்களில் உள்ள ஜனங்கள் தங்கள் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ள இப்போது பஞ்சாயத்தையே உபயோகித்துக்கொள்கின்றனர். இதனால் கோர்ட்டு வழக்குகள் குறைந்திருப்பதல்லாமல் மக்களுக்கு வேண்டாத பணச் செலவும் சங்கடமும் ஒழிந்தன. பஞ்சாயத்துக்களும் வெகு எளிதில் வியவகாரங்களைத் தீர்த்து இருதிறத்தாருக்கும் உதவிபுரிந்து வருகின்றனவாம்.

இரண்டாவதாக, கிராமக் கைத்தொழில்களை விருத்தி செய்திருக்கின்றனர். புதிய நெசவுத் தறிகளையும் நூல்களையும் வாங்கியுதவி, படுதாக்கள், மேஜை விரிப்பு, ஜமக்காளம், படுக்கை விரிப்பு முதலியவற்றை அழகாகப் புது மாதிரியில் நெய்யக் கிராமத்தில் வியவசாயிகளுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் அழிந்து மறைந்துபோன நெசவுத் தொழில் மறுபடியும் தலையெடுத்து ஜனங்களுக்கு ஒரு தொழிலும் ஏற்பட்டிருக்கிறது.

அவ்விதமே, பட்டுத் துணிகளில் புது மாதிரியான புஷ்பங்கள் சித்திரங்கள் இவற்றை அச்சடிக்கும் தொழிலையும் கற்றுக் கொடுக்கிறார்கள். கவியரசர் ஜாவா, பலித் தீவுகளுக்குச் சென்றபோது, அங்கே கௌரவம்வாய்ந்த தனவந்தர்கள் வீட்டில் இதைச் செய்வதை அவர் பார்த்தார். அந்தத் தொழிலை நம் நாட்டினரும் கற்றுக்கொள்ள ஜாவாவிலிருந்து அந்தத் தொழிலில் தேர்ச்சி பெற்ற ஒருவரைக் கூட்டிவந்து கிராமஜனங்களுக்கு அத்தொழிலைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அந்த வேலையைப் பெண்களும் வீட்டிலேயே செய்யலாம். இத்துணிகளெல்லாம் கல்கத்தாவுக்கும், வெளியே வேறு ஊர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. நல்ல விலை கிடைக்கிறது.

கவியரசருக்குக் கூட்டுறவு முறையில் தளராத நம்பிக்கை. அதற்காக ஒரு கூட்டுறவுப் பாங்கி, கூட்டுறவுச் சுகாதாரச் சங்கம், கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கம், கூட்டுறவுச் சிக்கனச் சங்கம், கூட்டுறவுத் தானியக் களஞ்சியம், கூட்டுறவுப் பண்டகசாலை போன்றவற்றை ஏற்படுத்தி அவற்றின் வாயிலாக ஏழைமக்களுக்கு வேண்டிய பல நன்மைகளையும் செய்துவருகின்றனர்.

சிறுவர்களுக்கென்று ஒரு தனி இயக்கமும் இருக்கிறது. அதற்கு 'வ்ரதி பாலக்' என்று பெயர். அவர்கள் புதர்களை அழித்துத் துஷ்ட ஜந்துக்

கள், கொசு, மலேரியாஜுரம் இவற்றின் தொந்தரவை ஒழித்துக் கிராம ஜனங்களுக்கு ஆரோக்கியத்தை உண்டாக்கி வருகின்றனர்.

வியவசாய விஷயமாயும் பல அரிய சேவைகளை இங்கே நடத்தி வருகிறார்கள். அதிக மாசூலையும் லாபத்தையும் கொடுக்கக்கூடிய புது மாதிரியான, பயிர்களைப் பயிர் செய்யக் குடியானவர்களுக்கு உதவி வருகின்றனர். கோயம்புத்தூர் கரும்பு அங்கே பயிர் செய்கிறார்களாவென்று கேட்டேன். செய்கிறார்கள் என்று கேட்டுச் சந்தோஷமடைந்தேன். கோயம்புத்தூர் என் சொந்த ஊர் என்றும் அந்தக் கரும்பு ரகத்தை விருத்தி செய்தவர் என் பெயருடையவர் என்றும் சொல்லிக்கொண்டேன். அதற்கு எங்களுடன் இருந்த ராவ்பகதூர் சுகுமார் சட்டர்ஜி, "உங்கள் ஊருக்கும் உங்கள் பேருடையவருக்கும் உங்களுக்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். கரும்பை நினைக்கும்போதெல்லாம் உங்களை நாங்கள் நினைக்க மறவோம். கரும்பு இனிப்பல்லவா?" என்று ஹாஸ்யமாகப் பதில் சொன்னார்.

காற்றினால் பூமியின்மீதுள்ள மண் சத்துப் போவதைத் தடுக்க வருஷந்தோறும் மரங்களைவைத்துச் சுற்றிலுமுள்ள கிராமங்களில் பயிர் செய்கின்றனர். இதைக் கவியரசர் ஒரு விழாவாகக் கொண்டாடுகிறாராம். அதற்கு விருக்ஷாரோபணம் என்று பெயர். அம்மாதிரி இதுவரையில் பல ஆயிரக்கணக்கான மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாகச் சுமார் இருபது வருஷங்களுக்கு முன் பாலைவனமாயிருந்த காடுகளெல்லாம் இப்போது சோலைகளாக விளங்குகின்றன.

கால்நடை அபிவிருத்திக்காகப் பொலி எருதுகளையும் ஆட்டுக் கிடாய்களையும் வைத்துக் கிராமங்களில் கறவைப்பசுக்களையும் ஆடுகளையும் விருத்தி செய்துவருகின்றனர்.

தோலில் வெகு அழகாகக் கைப்பை, பணப்பை, மெத்தை, செருப்பு, ஜோடு முதலியவற்றைத் தைக்கச் சிறுவர்க்குக் கற்றுக்கொடுக்கின்றனர். அவையும் நல்ல விலைக்குப் போகின்றன.

பொதுவில், ஸ்ரீநிகேதனத்தில் கிராம ஜனங்களுடைய வாழ்க்கைகளின் எல்லாத்துறைகளிலும் வேலை செய்துவருகிறார்கள்.

கவியரசர் ஏற்றிய தீபங்களாகும் சாந்திநிகேதனமும் ஸ்ரீநிகேதனமும். அவர் ஞாபகம் நாட்டில் நிலவ நாம் அவர் காட்டிய வழியில் உழைப்பதே மேன்மையான முறை.



டாக்குமெண்டரி பிலிம்ஸ் லிமிடெட், இராயப்பேட்டை
சென்னை.

சோனமில் பில்லைகளைச் சாப்பிட ஆரம்பித்ததும் மலேரியாஜுரம் ஓடியே போய் விடுகிறது. இழந்த தேக பலத்தையும் ஆரோக்கியத்தையும் மீண்டும் பெறுவீர்கள். மலேரியா, இன்ப்ளுயன்ஸா, முதலிய நோய்களை நிச்சயம் குணமாக்கவல்லதென்று சோனமில் பில்லைகள் எல்லா முனிஸிபல் ஆஸ்பத்திரிகளிலும் உபயோகிக்கப்படுகின்றன.

25 பில்லைகள் விலை ரூ. 1—4—0
50 பில்லைகள் விலை ரூ. 2—4—0
வி. பி. பி. சார்ஜ் தனி.

எல்லா முக்கிய கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

சோனமில

நீரிழிவு

வட அமெரிக்காவில் ஒரு புராதன ஜாதியாரை மூத்திர வியாதி அணுகுவதேயில்லை. காரணம், அவர்கள் அந்த உஷ்ணப்பிரதேசத்தில் கிடைக்கும் ஒரு சிறந்த மூலிகையிலிருந்து தயாரித்து அருந்தும் கஷாயந்தான் என்பது இப்பொழுது பரிசோதனைகளால் தெளிவாகிறது. இந்த மூலிகையிலிருந்து தயாரிக்கப்பட்ட தூய பஸ்பந்தான் "கோபால்ட்ரா". மூத்திர வியாதியைக் குணமாக்குவதில் தலைசிறந்த இம் மருந்து பாரிஸ் நகரிலுள்ள நாஷனல் லெபாரடரீஸில் நெ. 1662-1 கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. முழு விவரங்களடங்கிய அச்சுப் பிரசுரம் இனாம்.

கோபால்ட்ரா

ஸோல் ஏஜெண்டுகள்: **COPALTRA & Co., (India) LTD.,**
53, New Bhatwadi Street, Bombay 4
ஏஜெண்டுகள்: அப்பா & கோ., மதராஸ்

New 'Kalaimagal' Sole Agents

1. **S. AMIR ALI,**
   Mountain News Hall,
   Ootacamund.
2. **K. R. D. THANGAVELU CHETTY,**
   Chetty Street,
   Adirampatnam.
3. **S. ARAVAMUDHAN,**
   News Agent,
   45, Sarangapani Sannathi Street, Kumbakonam,
   For Swamimalai, Kapistalam, Melatur & Papanasam.
4. **N. L. IYER,**
   Bookseller & News Agent,
   Railway Road,
   Tanjore.

OFFICE OF THE REGISTRAR
31 JAN 1942
MADRAS

உடைந்த உள்ளம்

த. ரா.

1

தந்தத்தில் கடைந்தெடுத்த மோஹனப் பதுமைபோல் அவள் மெதுவாக நடந்துவந்து என்னை நமஸ்கரித்துவிட்டு, வீணை முன்சென்று உட்கார்ந்தாள். அடுத்த நிமிஷம் வீணையின் தந்திகள் அவளுடைய மிருதுவான கரபல்லவங்களின் ஸம்ஸர்க்கத்தால் கானமிருதவாரி பொழிய ஆரம்பித்தன. யாவும் வெறுத்த துறவியின் கல் மனத்தைக்கூடக் கலங்கச் செய்யும் இனிய கந்தர்வ கானம். நிராசையும் வேதனையும் சேர்ந்து வாட்டிப் பிழிந்து எடுக்கும் மனிதனைக் கணப்பொழுது இவ்வுலக நினைவிலிருந்து விடுபட்டு மெய்ம்மறந்து இருக்கச் செய்யும் வசீகரமான, மதுர கானம். அற்புதமாக, வீணையிலே விளையாடிக்கொண்டிருக்கும் அவளுடைய அழகான விரல்களை நோக்கி வெறிபிடித்தவனைப்போல் நான் அசைவற்று உட்கார்ந்திருந்தேன். வீணையோடு சேர்ந்து அவளுடைய இனிய குரல், சாபம் தீண்டிய நிரபராதியான அப்ஸரஸின் வேதனையும் ஆத்திரமும் கலந்த உணர்ச்சி அலைகளைப்போல் என் காதுகளில் மோதிக்கொண்டிருந்தது.

வீணைத் தந்திகளில் லாகவமாக ஓடி விளையாடிக்கொண்டிருந்த அவளுடைய விரல்களின் வேகம் சற்றுத் தணிகிறது. அதற்குத் தகுந்தாற்போல் அவளுடைய குரலும் படிப்படியாகக் கீழே இறங்கிக்கொண்டு வருகிறது. அடுத்த வினாடி வீணையின் தொனியும் அவளுடைய குரலும் ஒன்றையொன்று திடமாகத் தழுவிக்கொண்டே அந்தரத்தில் லயிக்கின்றன. அவள் மெதுவாகத் தலையைத் தூக்கித் துளிக்கும் வேர்வையைச் சேலைத் தும்பால் துடைத்துக்கொள்ளுகிறாள்.

இன்பக் கனவிலிருந்து விடுபட்ட தூக்கம் தெளியாத இளங்காதலனைப் போல் நான் சுயநினைவுக்கு வந்தேன். என் கண்கள் அலக்ஷியமாகத் தளத்தில் அங்கும் இங்கும் அர்த்தமில்லாமல் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. ஐந்தாறு பெண்கள் தளத்திற்கும் அடிப்படிக்கும் நடுவிலே இருந்த அறை வாசலில் கும்பலாக நின்றுகொண்டிருந்தனர். என் விழிகள் சிறிது நேரம் அங்கே அகப்பட்டுச் சிக்கிக்கொண்டன. அந்தப் பெண்களில், எல்லோருக்கும் முன்னே நிற்பவள்-அவள்-அந்த முகம்-என்னையே கவனித்துக்கொண்டிருக்கும் அந்தக் கண்கள்—அவள் கும்பலில் எங்கோ மறைந்து விட்டாள்.

"ஏன் நிறுத்திவிட்டாய்? பாடு" என்று என் தகப்பனார் சொன்னது ஏதோ அர்த்தம் புரியாத பிதற்றலைப்போல் என் காதுகளில் முழங்கியது.

மறுபடியும் வீணையின் இசை அவள் குரலோடு சேர்ந்து எழுகிறது. எழுந்த வேகத்திலே, அங்குமிங்கும் சிதறிக்கிடந்த என் சிந்தனை அலைகளுக்கு ஒரு தொடர்பையளித்து ஒன்று சேர்க்க ஆரம்பிக்கிறது. துன்பக் கடலிலே மூழ்கி மூச்சுத் திணறும் என் மனம் காலசமுத்திரத்தின் கரைகளைக் கடந்து முன்னும் பின்னுமாகப் பறக்க ஆரம்பிக்கிறது.

மாலை வேளை. ஆதவன் அடிவானில் மறையுந் தருணம் மந்தமாருதத்தின் இளமையிலே எங்கள் வீட்டின் எதிர் வீட்டு வேப்பமரத்தின் உச்சாணிக் கொப்பில் கட்டப்பட்டிருந்த மூவர்ணக் கொடி துள்ளி விளையாடும் மான் கன்றைப்போல் பறந்துகொண்டிருக்கிறது. அந்த வேப்ப மரத்திற்கு வலது பக்கம் ஒரு மாடி வீடு. மாடிவீட்டு ஜன்னல் பக்கம் வந்து நிற்கிறது அழகான ஒரு பெண் உருவம். வான வெளியிலிருந்து வெடித்து வந்த தேவ கன்னியோ என்று சந்தேகிக்கும்படி அவ்வளவு அழகு. எங்கள் கண்கள் ஒன்றோடொன்று தழுவி உறவாடுகின்றன. அவளுடைய இதழ்க்கடை புன்சிரிப்பால் திறக்கிறது. என் மனம் ஆனந்தத்தால் மலர்கிறது. அவ்வளவுதான்; அவள் மறைந்து விடுகிறாள். வீதிவழியே ஸைகிளில் வந்த கார்ப்பரேஷன் வேலையாள் மின்சார தீபத்தின் விசையைத் தட்டி விடுகிறான். வீதி எல்லாம் பளிச்செனப் பிரகாசிக்கிறது. நான் மெதுவாகத் தலைதூக்கி எதிர் வீட்டு மாடியைப் பார்க்கிறேன். அங்கே ஒரே இருள். என் மனம் நிலை தவறி அந்தகாரத்தில் பதிகிறது. இப்படித் தொண்ணூறு இரவு பகல்கள்.

2

என் எதிரில் இருக்கும் மோகனாங்கி பாடிக்கொண்டே போகிறாள். போகிற வேகத்திலே என் உள்ளத்தையும் கூட எங்கே யெல்லாமோ இழுத்துக்கொண்டு செல்கிறாள். கான மாதுரியத்திலே கட்டுண்ட நாகத்தைப் போல் அவள் இழுக்கும் திசையிலெல்லாம் என் மனமும் ஆடி ஆடி நெளிந்து நெளிந்து சென்று கொண்டிருக்கிறது. என்ன அற்புதமாகப் பாடுகிறாள்! அடேயப்பா! என்ன கம்பீரமான பிடிகள்! அவள் பாடத்தானா செய்கிறாள்? இல்லை, இல்லை! ஐயோ! அவள் மகாஜாலக்காரி! வீணை என்ற உணர்ச்சியற்ற மரக்கட்டையை வைத்துக்கொண்டு, துன்பத்தால் வதங்கியிருக்கும் என் இருதயத்தைப் பேயைப்போல் அள்ளி அள்ளி இழுக்கிறாள்.—அடி பாவி! அப்படி என்னையும் இழுத்துக்கொண்டு மேலே தாவித் தாவிச் செல்லாதே! என்ன!...........என்னால் தாங்க முடியவில்லை. அப்படி இழுக்காதே, இந்த உடைந்த உள்ளத்தை. ஏற்கனவே வாழ்க்கையில் சங்கடப்பட்டிருக்கிறேன்.........ஐயோ! என்னைக் கொல்லவும் அஞ்சமாட்டாயா நீ! எந்தக் கொடிய நரகத்திற்காவது இழுத்துச் செல். நான் உன் அடிமை! கண்களை மூடிக்கொண்டு உன்னைப் பின்பற்றத் தயார்..............

நடுவிலே தோழன் சொல்கிறான்:

"கல்யாணம் நிச்சயமாய்விட்டது."

"யாருக்கு?" என்கிறேன் நான் அலக்ஷியமாக.

"உன் எதிர் வீட்டு ஸீதாவுக்கு" என்றான் தோழன்.

என் உள்ளத்திலே வெடிகுண்டு வெடித்தாற்போல இருந்தது. நான் வெகு சிரமப்பட்டு என்னைச் சமாளித்துக் கொண்டேன்.

"என்ன, பேசாமல் நிற்கிறாய்?" என்றான் தோழன் மறுபடியும்.

"உம்......வரன் யார்?" என்று என் நா பிதற்றுகிறது. என் மாறுதலைத் தோழன் கண்டுவிட்டான்.

"உன் உடம்புக்கு என்ன?" என்கிறான் அவன்.

"என் உடம்புக்கா! ஒன்றுமில்லை—வரன் யார்?"

"யாரோ கும்பகோணத்து ஆஸாமி."

"யார் அவன்?"

"யாராயிருந்தால் உனக்கென்ன? நிறையப் பணம் இருக்கிறதாம். ஆனால் ஸீதாவை நினைக்கும்போதுதான் வருத்தமாயிருக்கிறது. பாவம்! கிளிபோல் இருக்கிறாள், இரண்டாந் தாரமாக....."

"இரண்டாந் தாரமா!"

"ஆமாம், அவள் என்ன செய்வாள் பாவம்! பாவிப் பிராமணன், அவள் தகப்பனார் அவளைக் கிணற்றிலே தள்ளப்போகிறார். அவளுக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது விரும்பிய புருஷனை வரிக்க?"

"பாவம்! பாவம்!—சீசீ! இதென்ன சமூகம்! இரக்கமற்ற சமூகம்! பாழாய்ப் போன உலகம்!"

"உனக்கென்ன?"

"எனக்குப் பைத்தியம்...போ...நீ..."

"நீ ஸீதாவை......"

"ஸீதா! ஸீதா!—என்னடா இது! நீ ஏன் நிற்கிறாய்? போகமாட்டாயா?"

"உங்கள் இருவருக்கும்........"

"கல்லெடுப்பு...அட போடா!"

நான் தோழனைப் பிடித்துத் தள்ளுகிறேன். அவன் ஒன்றும் புரியாமல் திகைத்து நிற்கிறான்.

பிச்சைக்காரன் ஒருவன் தெருவழியாகப் பாடிக்கொண்டு செல்கிறான்!

"மாய உலகை நீ மதியாதே
மானிட வாழ்வதை நீ நினையாதே—மகா
................................"

3

அவள் மோஹனம் பாடுகிறாள். குறுகிய கூண்டிலிருந்து விடுபட்ட மாடப்புறாவைப்போல் அவளுடைய குரல் மேலே எழுகிறது. மேலே மேலே, இன்னும் உயர்ந்து உயர்ந்து, தாவித் தாவி, அப்பா! வெறும் வார்த்தைகளுக்குச் சக்தியில்லை அதன் கதியின் வேகத்தை வர்ணிக்க. கண்ணுக்குப் புலப்படாத அவ்வளவு உயரத்திலே, அங்கே என்ன செய்யப் போகிறாய்? போட்டியும் பொறாமையும் நிறைந்த இந்த மனித உலகத்தின்பேரில் அவ்வளவு வெறுப்பு ஏன் உனக்கு? வீண் வெளிக்கு எல்லை கட்டிப் பந்தல் போட்டாற்போல் விளங்கும் நீலமேலாப்பில் பளிச்சிட்டுப் பிரகாசிக்கும் வைரமணிகளைப் பறிக்கவா அப்படி உயரத்தில் பறந்து செல்கிறாய்? அல்லது அந்தப் பந்தலுக்கே தனியழகை அளிக்கும் சந்திரனின் இனிமையோடு கலந்து இன்னும் இனிமை அடையவா? இல்லை இல்லை. அதோ நீ அந்தச் சந்திரபிம்பத்தைவிடப் பிரகாசம் பெற்று உருவமாகத் தோன்றுகிறாய். அடேயப்பா! உனக்குத்தான் என்ன ஜோதி! உன் ஜோதி நாதரூபமாக வானமண்டலம் எங்கும் பரவுகிறதே. என்ன! என்னைப் பார்த்து நகைக்கிறாயா? பரிகசிக்கிறாயா? அங்கே அவ்வளவு உயரத்தில் பறந்து சென்றா? வாய் விட்டுப் பரிகசிக்கவும் துணிந்துவிட்டாயா? அற்ப மனிதா என்றா அழைக்கிறாய்? நல்லது; நான் அற்ப மனிதன்தானே? நான் அற்பனல்லா

விட்டால் இப்படி என்னை இழுத்துச் செல்ல உன்னால் முடியுமா? சொல், தயங்காமல் தெரிவி. உன் ஆத்திரத்தை முழுவதும் கொட்டியளந்து விட்டுப் போ.........

"அற்ப மனிதா! நீ மனிதப் பிறவி. கையில் சிக்கிய சுகத்தைக் கைவிடாதே. காதல் என்பது எல்லாம் கனவு. சோம்பேறிகளான கவிகளின் மூளைக்குழப்பத்தால் ஏற்படும் தடுமாற்றம். அசடே! காதலுக்கும் நீ வாழும் உலகத்துக்கும் சம்பந்தம் இல்லை. நீ என்னவோ அதைப் பிரமாதமாக நினைத்து, ஏமாந்துவிட்டதால் வருந்துகிறாய். உன் வருத்தத்தை நீ உலகத்திலும் காண்கிறாய். ஆனால் உண்மையில் நீ கற்பனை பிடுவது போல் இல்லை இந்த உலகம். வேதனை என்னும் அச்சில் பயங்கரப் பிரலாபத்தோடு உலகம் சுழன்றுகொண்டிருக்கிறதாக நீ நினைக்கிறாய். அது பொய்; முட்டாள்கள் வேதாந்தம். நீ உலகைச் சரிவரத் தெரிந்துகொள்ளவில்லை. இதோ உன்னை நோக்கிச் செல்வமும் ஆனந்தமும் வருகின்றன. அவைகளைக் கைவிடாதே............போதும் போதும்! நிறுத்து உன் வேதாந்தத்தை........."

நாளைக்காலை 9 மணிக்கு முகூர்த்தம். அந்த 9 மணி வரையிலும் என் உள்ளத்தில் லீதாவுக்கு இடமுண்டு. அப்புறம்.......? அவள் யார்? நான் யார்? ஏக்கமும் ஏமாற்றமும் சேர்ந்து என் உள்ளத்தை வதைக்கின்றன. நான் பெண்ணாகப் பிறந்திருந்தால், எங்காவது யாரும் அறியாத ஒரு மூலையில் சென்றிருந்து வாய்விட்டு அழுது இருதயபாரத்தைச் சிறிது தணித்துக்கொண்டிருப்பேன். ஆனால்......?

"லீதா! லீதா!" எதிர்வீட்டு மாடியில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்கிறது. நான் சடக்கென்று தலையைத் தூக்கி மாடியைப் பார்க்கிறேன். வழக்கத்துக்கு மாறாக மாடி கலகலப்பாக இருக்கிறது. அங்கே மின்சாரதீபங்கள் பிரகாசிக்கின்றன. நாளைக் கல்யாண தினமல்லவா? ஜன்னல் ஓரமாகச் சோகத்தால் தீட்டப்பட்ட சிலை போல நிற்கிறாள் லீதா. என்னுடைய லீ.....இல்லை இல்லை; தப்பு; தப்பு. அவள் என்னுடையவளா? ஒரு நாளும் இல்லை. எங்கோ யாரோ, முன்பின் தெரியாத ஓர் அநாமதேயப் பேர்வழி காத்துக்கொண்டிருக்கிறான், அவளை "என் லீதா!" என்று அழைக்க.

"அங்கே என்னடீ பண்றே, அம்மா கூப்பிடறா" என்கிறது முன் கூப்பிட்ட அந்தக் குரல் மறுபடியும். அவள் சரேலென்று மின்வெட்டுப்போல் என்னைப் பார்த்து விட்டுச் செல்கிறாள். அந்தப் பார்வையில்தான் என்ன சோகம்! என்ன ஏமாற்றம்!

எனக்குப் பணமில்லையே; வீடு இல்லையே; வாசல் இல்லையே; படிப்பும் இருபத்தைந்து ரூபாய் சம்பளமும் மட்டும் போதுமா, லீதா, உன் தாய் தகப்பனாரைத் திருப்திசெய்ய? நீ ஏழையாகவாவது பிறக்கக் கூடாதா!

யமதேவன் வருகையை அறிவிப்பது போல் எச்சில்இலை நாய் ஒன்று, "மொ...ய்" என்று இழுத்து இழுத்துத் தெருக்கோடியில் ஊளையிடுகிறது. அதைச் சேர்ந்தாற் போல் அங்குமிங்கும் மூலை முடுக்குகளிலிருந்து நாய்களின் ஊளையிடும் சப்தம் மனித உள்ளத்தைத் தாக்கிவிட்டு வான வெளியிலே கலந்து ஒலிக்கிறது. நாளைக்காலை 9 மணிக்கு லீதாவுக்குக் கல்யாணமல்லவா?

4

அந்த அழகி நூதனமான 'நோட்' ஒன்றை எடுத்து வீணையில் வாசிக்கிறாள். 'கணீர்', 'கணீர்' என்று ஒலிக்கும் வீணையின் நாதம் தளர்ந்துகிடக்கும் என் உள்ளத்துக்குச் சிறிது ஆசுவாசத்தைத் தருகிறது. புண்பட்ட உள்ளத்திலே எழும் துடி

துடிப்புக்குச் சற்றுச் சாந்தி உண்டாகிறது. உடைந்து போன வாழ்க்கையின் பல பாகங்களையும் ஒன்று திரட்டி உருவாக்குவதுபோல் அந்த இசையின் ஒலி என்னையும் அறியாமலே என் கற்பனையைத் தூண்டிவிட்டு ஆங்காங்கே சிதறிக் கிடந்த என் சிந்தனைத்திரளுக்கு ஒரு தொடர்பை அளிக்கிறது.

இயற்கை வனப்பால் செழிப்புற்ற ஒரு ரம்யமான பூந்தோட்டம். அதன் நடுவிலே அழகான பூஞ்செடிகளால் புடை சூழப்பட்ட ஒரு தாமரைப் பொய்கை. அந்தப் பொய்கையில் ஒரு பக்கம் படித்துறை கட்டப்பட்டிருக்கிறது. படித்துறைக்கு எதிர்ப்பக்கம் ஒரு ஸ்படிக மண்டபம். ஸ்படிகமண்டபத்தில் நடனக்கலையைத் திரட்டி எடுத்த ராதாகிருஷ்ணசிலைகள். சூரியோதய ஆரம்பம். மாயை இருளைக் கலைத்துக் கொண்டு ஒளி பரவுவதைப்போல் கீழ்த்திசையிலிருந்து வெள்ளி முளைக்கிறது. தாமரைப் பூக்கள் தடாகத்திலே நர்த்தனமாடுகின்றன. தாமரை இலைகள்மீது அழகான அன்னங்கள் ஆனந்தத்தால் ஆடி விளையாடுகின்றன. தடாக மத்தியில் ஜலமட்டத்தின் மேலே ஒரு வெண்டாமரை மலர்கிறது. அதன்மீது கம்பீரமாக வீற்றிருக்கிறாள் வீணை மடியிலே விளங்கும் ஒரு பெண்மணி. மனோஹர வீணை ஒலிக்கிறது, நொந்துருகும் உள்ளங்களுக்கு அமிருத தாரை வார்ப்பதுபோல். அந்த வீணை ஒலியின் இனிமையிலே மயங்கிய ஆராமதேவதை மலர்களை வீசிப் புன்சிரிப்புச் சிரிக்கிறாள். அதன் இன்பத்திலே மூழ்கிய மந்தமாருதம் சலசலவெனத் தாளம் போடுகிறது.

அவள் பாட்டை நிறுத்தவில்லை. இந்த இன்பக்காட்சியைத் தூண்டிவிட்ட அவளுடைய மோஹனக்குரல் என் சொந்த வாழ்க்கையின் சில பாகங்களில் கொண்டு சென்று விடுகிறது......

* * *

"சீக்கிரம், எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறார்கள்!" என்றான் தோழன்.

"இதோ பார்: இந்த நாடகம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. நான் சொல்வதைப்போலே கேளு. எனக்கு இந்தக் கல்யாணமே தேவையில்லை என்று அவர்கள் கிட்டே போய்ச் சொல்லு" என்றேன் நான்.

"ரொம்ப நன்றாக இருக்கிறதே? அவர்கள் எல்லாம் வண்டியிலே ஏறியாயிற்று. உனக்காகக் காத்திருக்கிறார்கள். உம்! சீக்கிரம் அந்தப் புதுக் கதர் ஜிப்பாவைப் போட்டுக்கொள். விளிம்பிலே ஜரிகைப் பூப்போட்ட அங்கவஸ்திரம் தந்தேனே; அதையும் போட்டுக்கொள்......"

"எனக்கு இவை யொன்றும் வேண்டாம். என்னைத் தொந்தரவு பண்ணாதே. என் மனம் சரியாயில்லை."

"இப்படி எத்தனை நாள் இருக்கப்போகிறாய்?"

"சாகிறவரைக்கும்."

"புறப்படு. அப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும்; வா. பெண்ணை மட்டும் பார்த்துவிட்டு வந்து விடுவோம்...உம்!"—என் தோழன் பேச்சோடு நிற்காமல் என் கரத்தையும்பற்றி இழுக்கிறான்.

"என்னால் பெண்ணைப் பார்க்க முடியுமென்று நினைக்கிறாய்? ஒரு நாளும் முடியாது. நான் பெண்ணைப் பார்த்தாய்விட்டது. இனி இந்த வாழ்க்கையில் வேறு பெண்ணைப் பார்க்க என் மனம் இடம் தராது. உன்னைத் திருப்தி செய்ய வருகிறேன். என் தாய் தகப்பனாரைத் திருப்தி செய்ய வருகிறேன். ஆனால் அங்கே வந்த பிற்பாடு,

அப்புறம்......என்னால் ஒன்றும் சொல்ல முடியாது. நடிக்கிறேன் தெரிந்தமட்டில்; வெறும் நடிப்புத்தான். அதிலே உண்மை இராது. உணர்ச்சியற்று இருக்கும்; ஜீவனற்று இருக்கும். சம்மதந்தானே? வா போகலாம்...''

''இப்படி இந்த வேஷத்திலா!''

''ஆமாம். என் வேஷம் இதுதான். என் நடிப்புக்குத் தகுந்த வேஷம்.''

நான் தடதடவென்று மாடிப்படியைவிட்டுக் கீழே இறங்குகிறேன். தோழனும் கூட வருகிறான். வாசலில் எங்களுக்காகக் காத்திருந்த ஜட்கா வண்டி எங்களையும் ஏற்றிக்கொண்டு செல்கிறது.

5

அந்தப் பெண் பாடுவதை நிறுத்துகிறாள். எங்கெங்கோ எல்லாம் தாவித் தாவிச் சென்றுகொண்டிருந்த என் மனமும் கட்டுக்கு அடங்கி விடுகிறது. நான் மெதுவாகப் பெருமூச்சு விட்டேன். என் எதிரிலே, ''அப்புறம் என்ன?'' என்று கேள்விக்குறி போட்டுக் கேட்பதுபோல் அந்த நவஸரஸ்வதி வீணையும் கையுமாக உட்கார்ந்திருந்தாள், வேர்வை கொட்ட.

"நீ உள்ளே போயிரு" என்றார் பெண்ணின் தகப்பனார், இரண்டு நிமிஷம் கழிந்ததும். அவள் எழுந்து சென்றாள்.

"சித்திகிட்டே காபி கொண்டுவரச் சொல்லு" என்றார் அவர் மறுபடியும், பெண்கள் கூடி நிற்கும் இடத்தை நோக்கி. அடுத்த நிமிஷம் 'சித்தி' என்று அழைக்கப்பட்ட அந்தப் பெண் உருவம் கூஜா நிறையக் காபியை எடுத்துக்கொண்டு வருகிறது. மெதுவாகக் குனிந்து காபியை எங்கள் முன் வைத்துவிட்டு நிமிர்ந்ததும், நான் அவள் முகத்தைப் பார்த்துவிட்டேன். அவள் என்னையும் பார்த்துவிட்டாள். ஸீதா, இரண்டு வருஷங்களுக்கு முன், என் உள்ளத்திலே இன்பத்தைக் கொட்டிவந்த அந்த அற்புத அழகி!—என் மனைவியாகப் போகிறவளின் சிற்றன்னை!—அவளுடைய தாயாக இருக்கவேண்டியவள்—தாலிகட்டிய பிற்பாடு ஸாஷ்டாங்கமாக விழுந்து நான் பிரணமம் செய்யவேண்டியவள், இந்தக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டால்......ஸீதா! பெண்ணின் தகப்பனார் ஏறிட்டு என் முகத்தைக் கவனித்தார். பாவம்! அவர் முகம் நிராசையால் வாடிவிட்டது. இரண்டு வருஷங்களுக்கு முன் நிராசையால் நான் அனுபவித்த உள்ளக் கொதிப்பு, மனவேதனை, அவருக்குத் தெரிந்திருந்தால்?

"என்ன?" என்று கேட்பது போல் அவர் என் தகப்பனாரைப் பார்த்தார். தகப்பனார் தலையைத் திருப்பி என்னை நோக்கினார். இருவரையும் கவனியாததுபோல் எங்கோ நோக்கிக்கொண்டிருந்தேன்.

"சரி" என்று சொல்லிவிட்டு எழுந்தேன் நான். தோழனும் எழுந்தான். என் மாமனாராக விரும்பியவருங்கூட எழுந்திருந்தார்.

"என்ன சொல்கிறாய்?" என்று என்னை நோக்கிக் கேட்டுக்கொண்டே என் தகப்பனாரும் எழுந்தார்.

"இப்போது ஒன்றும் சொல்வதைப்போலே இல்லை" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு நான் வெளியே வந்து வண்டியில் ஏறிக்கொண்டேன். போகிற போக்கிலே, என் பேரிலேயே பதிந்திருந்த இரண்டு கண்களைமட்டும் நான் மறக்கவில்லை. அந்தக் கண்களைக் காண இரண்டு வருஷங்களுக்கு முன் என் உள்ளம் துடித்த துடிப்பு!

தோழன் வந்து வண்டியில் ஏறினதும் வண்டி நகர ஆரம்பித்தது.

"என்னடா, அந்தப் பிராம்மணனை இப்படி வதைக்கிறாய்?" என்றான் தோழன், வண்டி பத்தடி சென்றதும்.

"சித்தி யார் தெரியுமா உனக்கு?" என்று கேட்டேன் நான்.

"எந்தச் சித்தி?"

"காபி கொண்டுவந்து வைத்தாளே."

"நான் கவனிக்கவில்லை—யார்?"

"யார்?—ஸீதா!"

"ஸீதாவா!"

"ஆமாண்டா, ஆமாம்."

"அதனால் என்ன? உனக்குப் பெண்ணைப் பிடித்ததோ இல்லையோ?"

"எந்தப் பெண்ணை?"

"பாடவில்லையா; அவள்தான்."

"நன்றாகப் பாடுகிறாள்."

"நிச்சயம் பண்ணிவிடலாம்."

"நிச்சயமா?"

"வண்டா!"

"நான் நிச்சயம் பண்ணிவிட்டேன்: எனக்கு இந்த ஜன்மத்தில் கல்யாணம் இல்லை என்று. இதை அப்பாவிடம் அழுத்தமாகச் சொல்லி விடு நீ. அந்தப் பிராம்மணர் இருக்கிறாரே, அவர்கிட்டேயும் போய்ச் சொல்லு, வேறு மாப்பிள்ளை பார்க்க" என்று பரபரப்போடு சொல்லிவிட்டு வண்டிக்காரனிடம் குதிரையை வேகமாக விட உத்தரவு போட்டேன்.

"அசடே!" என்று சொன்னான் தோழன் சற்று மெதுவாக.

"நான் அசடுதான்" என்றேன் நான்.

"என்ன அழகு! என்ன அற்புதமாகப் பாடுகிறாள்!"

"அழகு! என் கண்களுக்கு இப்பொழுது அழகைப் பருகி இனிப்புறச் சக்தி இல்லை. பாட்டு! அற்புதமான பாட்டுத்தான். அதனால் என்ன பிரயோஜனம்? அவள் பிடி, வேதனையால் வாடுகிற ஜீவன்களுக்கு ஆறுதலளிக்கட்டும். தந்திகள் அறுபட்டுச் சுருதி கலைந்திருக்கும் என் இருதய வீணையின் தந்திகளை மீட்ட அவளால் முடியாது."

"நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான்."

"ஆமாம். எனக்குத் தெரியும். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; இந்த உடைந்த உள்ளம் மட்டுந்தான்."

அப்புறம் நான் பேசவில்லை. தோழனும் சிந்தனையில் மூழ்கினான். வண்டிக்குள் நீண்ட எல்லையற்ற மௌனம் குடிகொண்டது.

அமாமி என்ன சுருக்காக வேலை செய்கிறது, தெரியுமா? அதுவும், அரைகுறையாக ஒன்றுமல்ல; முற்றும் செம்மையாகவும் சுகமாகவும்! கேசத்தை ஜலம் விட்டு அலசிக் கழுவினால், கோதோ கரடுகளோ நிற்பதுமில்லை. சீயக்காயோ, மற்று மட்டமான தயாரிப்புகளோவானால் என்ன கழுவினாலும் மயிர்களுக்கிடையே கரடுகள் தங்கி மயிர்க்கண்களை யடைத்துத் தலையில் பொடுகு விழச் செய்யும். அமாமி அப்படி யில்லை. அதன் திறனே அலாதி. கேசத்தை வெகு நாசூக்காகச் சுத்தம் செய்வதோடு கூந்தலுக்கு ஒரு தனி மினுமினுப்பும் புதுமைத் தோற்றமுமளிக்கவும் நறுமணமூட்டவும் செய்கிறது.

- அமாமி பற்பல தினுசு ஷாம்பூக்கள் உள்ளன. எண்ணெய்ப் பற்றற்றதோ, பிசுபிசுப்பானதோ, பொடுகு விழுந்ததோவான தலைகளுக்குப் பிரத்தியேக ஷாம்பூக்களும், நீர் ஷாம்பூ விரும்புவோருக்குச் சவர்க்காரமற்ற விக்விட் ஷாம்பூக்களும் இருக்கின்றன.

அமாமி ஷாம்பூ

ĀMĀMĪ

SHAMPOO

எங்கும் விற்பனை செய்யப்படுகிறது !

காமினியா தைலம்
(ரெஜிஸ்டர்ட்)

உங்கள் கூந்தலை வாரிக்கொள்வதில் பெருமை அடைந்து அதே சமயம் தலைக்கு ஒரு விதமான கெடுதலும் நேராதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

'இந்த உலகமே வெளிப்பார்வைக்கு நன்றாக இருப்பதைத்தான் விரும்புகிறது.' இது முற்றும் உண்மையே. பளப்பளப்பான அழகிய கூந்தல் உங்களுடைய முகவசீகரத்தை விருத்திசெய்கிறது. அழகிய அடர்ந்த கூந்தல் இந்தியப்பெண்கள் பெருமை அடையக்கூடிய இயற்கை ஐசுவரியமாகும். அதுவுமன்றி, செழித்து நீண்ட கூந்தல் நல்ல தேகாரோக்கியத்திற்குரிய லக்ஷணமாகும். 'காமினியா தைலம்' மண்டையைச் சுத்தப்படுத்திக் குளிர்விக்கிறது; மயிர்க்கால்களை அடைத்து மயிர் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் பொடுகு முதலியவற்றை நீக்கி விடுகிறது. புதிதாக மயிர் செழித்து வளர்வதற்கு ஏதுவாக இருக்கிறது.

ஒரு புட்டி விலை ரு. 1.

மூன்று புட்டி விலை ரு. 2-10-0. வி. பி. செலவு தனி.
இனாம் ஸாம்பிளுக்கு ½ அணாத் தபால் தலை அனுப்புக.
ஸோல் ஏஜெண்டுகள் :

தி ஆங்கிலோ இந்தியன் டிரக் & கெமிக்கல் கம்பெனி,
பம்பாய்.

ராக்போர்ட் பிராவிடெண்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: திருச்சிராப்பள்ளி
கவர்ன்மெண்ட் செக்யூரிட்டி கட்டப்பட்டது,
மிகுந்த பாதுகாப்பு — நல்ல நிர்வாகம்
குறைந்த பிரீமியம்.

ரூ. 100 முதல் ரூ. 500 வரை இன்ஷூரன்ஸ் செய்யலாம். மாதம் எட்டு அணா முதல் பிரீமியம் உள்ளது. ஜில்லாக்கள்தோறும் ஆர்கனைசர்களும், ஏஜெண்டுகளும் தேவை. சம்பளமும் கமிஷனும் உண்டு.

விவரங்களுக்கு எழுதுக.

தமிழில் எழுத்துக்குறை

ஸ்வாமி விபுலாநந்தர்

5

மெய்களிலே வருக்கவெழுத்துக்களிலேதான் இடர்ப்பாடு அதிகம் உண்டு. நன்னூலார் டகர வருக்க முதலெழுத்தை இரு மொழிக்கும் பொதுவெழுத்தாகக் கூறினரெனினும், உண்மையிலே வருக்கத்து மூன்று மெழுத்தே பொதுவெழுத்தாக உச்சரிக்கப்படுகிறது. வெகுளிச்சுவை (கோபம், ருத்ர ரசம்) தோற்றுகிற இடங்களில் மாத்திரந்தான் தமிழ் டகரம் வடமொழி வருக்கத்து முதலெழுத்துப்போலும் இரண்டாம் எழுத்துப்போலும் பேசும். பின்வரும் உதாரணங்களைக் கோபச்சுவையோடு உரப்பிப் படித்து அறிந்துகொள்க.

வில்லிபாரதத்திலே இடும்பன் வீமனைப் பார்த்துச் சொல்லுகிறான்:

"வார டாவுனக் கியாது தானர்தம்
மகள டுக்குமோ வான மாதர்தோள்
சேர டாமலைந் துயிரை மெய்யினைத்
தின்று தேவரூர் சேரு விப்பன்யான்
போர டாதுனோ டாளி யேறுபுன்
பூனை தன்னுடன் பொரநி னைக்குமோ
பார டாவெனுண் மையைஅரக் கர்கைப்
பட்ட போதில்யார் பாரில் வைகினர்."

போர்க்களத்தை வருணிக்கிற பின்வரும் பாடலிலும் ககர, பகர, தகர வொற்றுக்களின் உரப்பு ஓசையை நோக்குக.

"கரிய ணிக்குளைக் கரிகள் புண்படா
கடவு தேரிலைத் தேர்க லக்குறு
பரிய ணிக்குளைப் பரிது ணிப்புறு
பாகர் தம்மிலைப் பாகர் வீழ்கலார்
நரனும் வெற்றிகூர் வசுவு முற்றபோர்
நவிலு கிற்கினும் நாந டுங்குமால்
இருத ளத்தினு மிருவ ரம்பினும்
எவு ளதைபே ரெந்த மன்னரே."

புறநானூற்றிலிருந்து எடுத்த பின்வரும் பாடல்களிலும் வல்லொற்றுக்களின் ஓசையைக் கருதுக. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் வஞ்சினங் கூறுகிறான்:

மடங்கலிற்சினை இமடங்காவுள்ளத்
தடங்காத்தானை வேந்தருடங்கியைந்
தென்னொடுபொருதுமென்பவவரை
யாரமாலறத்தாக்கித்தேரோ
டவர்ப்புறங்காணேனாயிற்சிறந்த
பேரமருண்கணிவளினும்பிரிக
வறனிலை திரியாவன்பினவையத்துத்
திறனிலொருவனை நாட்டிமுறைதிரிந்து
மெலிகோல்செய்தேனாக." (புறம். 71)

[விரைந்து படிப்பதற்காக இப்பாட்டையும் வரும் பாட்டையும் சந்தி பிரியாதும் சீர் பிரியாதும் தந்திருக்கின்றோம்.]

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினங் கூறுகிறான்:

"நகுதக்கனரே நாடுமீக்கூறுந
ரிளையனிவனெனவுளையக்கூறிப்
படுமணியிரட்டும்பாவடிப்பணைத்தா
ணெடுநல்யானையுந்தேருமாவும்
படையமைமறவருமுடையம்யாமென்
றுறுதுப்பஞ்சாதுடல்சினஞ்செருக்கிச்
சிறுசொற்சொல்லியசினங்கெழுவேந்தரை
யருஞ்சமஞ்சிதையத்தாக்கிமுரசமொ
டொருங்ககப்படேனாயிற்பொருந்திய
வென்னிழல்வாழ்நர்சென்னிழற்காணாது
கொடியனெம்மிறையெனக்கண்ணீர்பரப்பிக்
குடிபழிதூற்றுங்கோலேனாகுக" (புறம். 72)

சகர டகரங்களின் தமிழியற்கையோசையை மேலே குறிப்பிட்டோம். "ஆசாரம்" என்னும் பொதுவெழுத்துச் சொல்லைத் தமிழன் "ஆசை"யிலுள்ள சகரம்போலச் "சோற்றுச்" சகரமாக (இங்கிலீஷ் S) வாசிப்பானேயன்றிப் "பச்சடிச்" சகரமாக வாசிக்கமாட்டான். "அடவீ" என்று பொதுவெழுத்துக்களால் வருகிற சொல்லை வருக்கத்து மூன்றாமெழுத்தோசையோடு (இங்கிலீஷ் adavi) என்று வாசிப்பானேயன்றி வருக்க முதலெழுத்தோசையோடு வாசிக்கமாட்டான். க, த, ப என எஞ்சி நின்ற மூன்றெழுத்துக்களுட் பகரத்தை எடுத்துக்கொள்வோம். "மீகீழிதழுறப் பம்மப் பிறக்கும்" என்றபடி இதழ் ஒருமித்திருப்ப உள்ளிருந்த காற்றுச் சட்டெனப் புறம் போவதனாற் பகரம் பிறக்கிறது. உயிரெழுத்தின் பின்னே இடையெழுத்தின் பின்னே வருகிற உயிர்மெய்ப் பகரமானது இதழ் சிறிது பிரிந்து நிற்பக் காற்று மெல்லெனப் புறஞ்செல்ல வடமொழி உபாத்மாநீய ஒலிபோலப் பிறக்கிறது. மேற் குறித்தபடி நிற்கும் ககரம் வடமொழி ஜிஹ்வாமூலீய ஒலிபோற் பிறக்கும்; ஓரளவிற்கு வடமொழி ஹகரம்போற் பேசும். பின்வரும் பாடலை நோக்குக:

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
த 1868
சென்னை-600 008

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரார்
ஏகீர் நாகீர் என்செய்து மென்று ரொருசாரார்."

"கூ கூ" என்பதிலுள்ள இரண்டாங் ககர வொலியும், "ஏகீர்", "நாகீர்" என்பதிலுள்ள ககரவொலியும் வடமொழி "ஹ" போன்று (இங்கிலீஷ் h) ஒலிக்கக் காண்கிறோம். "மகன்", "மகள்", "காகம்" (இரண்டாமெழுத்து) இவற்றையும் நோக்குக. தகாமும் நலிந்த ஓசையோடு வடமொழி வருக்க முதலெழுத்தின் வேறுபடும். மேற் பாட்டிலுள்ள "செய்து" என்பதை நோக்குக.

"இடையில் நான்கும்" என்னும் நன்னூற் சூத்திரத்திற்கு மயிலைநாதருரையின்படி ஐவருக்கத்தின் இரண்டாம் மூன்றும் நான்காம் எழுத்துக்களின் ஒலி முறையே உரப்பு எடுப்புக் கனைப்பு எனக் கூறப்பட்டது. வருக்க முதலெழுத்தின் ஒலியினை இயற்கையொலி என்னலாம். கனைப்பு ஒலி தமிழில் இல்லை. எடுப்பு ஒலி மேலே கூறியபடி தமிழ் டகரத்திற்கு இயற்கையாக வரும். மற்ற எழுத்துக்களுக்கும் இனமெல்லெழுத்தின் பின் ஒரோவழி வரும். உரப்பு ஒலி வருமிடமும் காட்டினும். இவற்றின் வேறாய நலிவு ஒலியொன்று கசடதப என்னும் தமிழெழுத்துக்களுக்கு இயல்பாக வருமென்பதையும் காட்டினும். வடமொழி யெழுத்துக்களுக்குக் குறியீடு செய்து வழங்கும்போது பொதுவென்று சொல்லப்பட்ட வருக்க முதலெழுத்துக்களைத் தமிழன் தமிழின் நீர்மையாகச் சிற்சில விடங்களிலே நலிவோசையோடு வழங்க நேரிடும். குறியீட்டு வழக்கினாலே ஸம்ஸ்கிருதத்தை ஸம்ஸ்கிருதமாக உச்சரிக்காமல் மேனாட்டார் செய்வதுபோலத் தமிழன் தன் சொந்தமொழி நீர்மையாக உச்சரிப்பான். இதனையுணர்ந்துபோலும் முன்னோர் தமிழ்நாட்டிலே கிரந்த எழுத்துக்களை வழங்கிக்கொண்டார்கள். உரப்பிக் கூறும் வருக்கத்து இரண்டாமெழுத்துக்களுக்கு அப்போஸ்டிறுபி (Apostrophe) அடையாளமிட்டும், எடுத்துக் கூறுபவற்றுக்குக் கையெழுத்திலே கீழ்க்கோடிட்டும் அச்சிலே இற்றலிக்ஸ் (Italics) எழுத்து வழங்கியும் வருக்கத்து நான்காம் எழுத்துக்களுக்கு மேற்கூறிய இருவகை அடையாளங்களைச் செய்தும், இப்பொழுது வழங்குகிற கிரந்த எழுத்துக்களை வைத்துக்கொண்டும், முப்பதாம் மெய்க்குச் சகரத்தோடு ஒரு வியப்புக்குறி சேர்த்தும் மெய்யெழுத்துக்களை எழுதலாம். "ஸ்ரீ" என்னும் கூட்டெழுத்திலே இக்குறியீட்டைப் புகுத்தாது "ஸ்ரீ" என்றே வைத்துக்கொள்ளலாம்.

க க' *க* *க'* ங—ச ச' ஜ ஜ' ஞ
ட ட' *ட* *ட'* ண—த த' *த* *த'* ந
ப ப' *ப* *ப'* ம
ய ர ல வ
ச! ஷ ஸ ஹ ள
க்ஷ

ஆனால் பொதுவெழுத்துக்களின் உச்சரிப்பு வேறுபாடு இருந்தே தீரும். தமிழ் எ ஏகார உயிர்களுக்கு இருவகை ஓசை உண்டு; குற்றியலுகரக் குற்றியலிகர ஐகாரக்குறுக்க ஔகாரக் குறுக்க மகரக்குறுக்க ஆய்தக் குறுக்கங்களுக்கு ஒலி வேறுபாடு உண்டு. ஸம்ஸ்கிருத எழுத்திலே தமிழை எழுதுவதற்கு ற ன ழ எ ஒ என்பவற்றிக்குப் புது ஸம்ஸ்கிருத எழுத்து அமைப்பதோடு நாம் மேலே காட்டிய க ச த ப நலிவோசைகளைக் காட்ட வழி தேடவேண்டும். இரு பக்கமும் நோக்கி ஆலோசனை செய்தாற்றான் விஷயம் தெளிவுபடும். "மாடர்ன் ரிவியூ" (Modern Review) என்னும் வடநாட்டு ஆங்கில மாசிகையிலே யான் எழுதி வெளியிட்ட தமிழ்மொழி ஒலியியல் (The Phonetics of the Tamil Language) என்னும் பொருளுரை இவ்விஷயத்தைச் சற்று விரிவாக விளக்கும் நீர்மையது.



அவன் கடமை

எஸ். ராமன்

தலைவன் திரியம்பகனின் உயிர் சிறிது சிறிதாக உடலை விட்டு நீங்கிக்கொண்டிருந்தது. ஆனால் 'ஸ்ரீசக்தி'க் கப்பல் தீப்பற்றி எரிந்து மூழ்கியதிலிருந்து இந்த ஆறு நாட்களாக, மண்டையைப் பிளக்கும் வெயிலில், திறந்த படகில் உயிர் தரித்திருந்ததே ஆச்சரியமாகும். கப்பலைச் செதில் செதிலாய் அடித்த அந்தப் பயங்கர வெடியானது அவனை எதிர்பாராத விதமாகத் தன் அறையிலிருந்து தண்ணீரில் தூக்கியெறிந்தபொழுதே அவனுடைய இடப்பக்கம் முழுவதும் சிதைந்ததுடன், முகமும் மண்டையும் பொசுங்கி ரத்தம் கசிந்து நின்றது. ஆயினும் இந்நிலையிலும் அவனுடைய திடம்பெற்ற உள்ளத்தில் உணர்ச்சியும் அதிகாரபாவமும் நிலவின. இந்த இயற்கைக் குணத்தால் ஏற்பட்ட கம்பீரத்தோற்றமே, அவனுடன் உயிர் பிழைத்து அப்படகிலிருக்கும் மற்றப் பதினால்வரையும், அவர்களுள் பெரும்பாலோர் முரடர்களாயினும், அவனிடம் ஒரு பயபக்தியுடன் நடக்கச் செய்தது.

மாலை மஞ்சள் வெயில் மறையும் அச்சமயத்தில் உதவித்தலைவர்களுள் உயிர் பிழைத்தவனான இளைஞன் ராகுலன் மிகுந்த மனக்கவலையோடு தலைவனது படுக்கையருகில் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான்.

"மிகவும் களைப்புமேலிட்டிருக்கிறீர்கள். சிறிது தண்ணீராவது பருகுங்கள்."

திரியம்பகன் தலையை அசைத்தான். அவன் முகத்தில் ஒரு சோகப் புன்முறுவல் தோன்றியது.

"ராகுலா, தண்ணீரோ பெரும்பாலும் தீர்ந்துவிட்டது. இப்பொழுது அதை என்பொருட்டு வீணாக்குவானேன்?"

அவன் ஹிருதயத்திலிருந்து வெளிப்பட்ட ஓர் ஆழ்ந்த பெருமூச்சானது படகிலிருந்த ஆட்களின் கவனத்தைக் கவர்ந்தது. நங்கூரச் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பராந்தகன் எழுந்தான். அவனுடைய கறுத்த கட்டுமஸ்தான உடலும் அவ்வுடலினும் கரியதான அவனுடைய நீண்ட மீசையும் புதிதாகப் பார்ப்பவர்களிடையே ஒரு பயங்கரத் தோற்றத்தை உண்டுபண்ணும். அவன் தன் மீசையில் கை வைத்தவண்ணமே தலைவனை நோக்கினான்.

"என்ன, மூச்சு நின்றுவிடும்போல் இருக்கிறதா?"

ராகுலன் மௌனமாக இருந்தான். ஆனால் திரியம்பகன் முகத்தில் மீண்டும் புன்னகை தவழ்ந்தது.

"ஆம், இன்னும் கூடிய சீக்கிரத்தில் நின்றுவிடும்" என்று தன் நிலையை ஒப்புக்கொண்டான்.

பின்பு ராகுலனை நோக்கினான். "ராகுல, நீதான் இனிப் பொறுப்பேற்க வேண்டும். என் உதவி உத்தியோகஸ்தர்களில் நீ ஒருவனே உயிர் தரித்திருக்கிறாய். நாம் இப்பொழுது அரபிக்கடலிலிருந்து வெகுதூரம் தெற்கே கொண்டு வரப்பட்டிருக்கிறோம். ஆயினும் நீ நேர்வடகிழக்கில் பிரயாணம் செய்வாயானல்

எப்படியும் மலையாளக்கரையை அடையலாம். உன்னிடந்தான் குறிப்புப்படமும், திசைகாட்டியும் இருக்கின்றனவே.''

''தலைவ, நான் எவ்விதமாவது சமாளித்துக்கொள்வேன்'' என்று பதிலளித்தான் ராகுலன்.

அவனுக்குப் பத்தொன்பது வயதிற்குமேல் இராது. தன்னைப்பற்றி அவனுக்கே உறுதியில்லை. இதுவே அவன் முதல்முதல் அதிகாரப் பொறுப்பை ஏற்பது. பாதுகாப்பற்ற திறந்த படகு; பழம் பூனைகளாகிய பதின்மூன்று ஆட்கள். ராகுலன் தன் உலர்ந்த உதடுகளை நக்கிக்கொண்டான். அவன் உடல் சிலிர்த்தது.

தலைவன் சோர்ந்த குரலில் சொல்லத் தொடங்கினான்:

''என்னுடைய இடைப்பையில் ஒரு சிறிய தகரப்பெட்டியும், அதனுடன் நம் கப்பலைச் சேர்ந்த பத்திரங்களும் பணமும் இருக்கின்றன. பெட்டியில் சொந்தக்காரர்களுக்குச் சேரவேண்டிய நகைகள் இருக்கின்றன. நான் அவைகளை இளைய கூட்டாளியான குலசேகரரிடம் ஒப்படைப்பதாக வாக்களித்தேன். இது கொஞ்சம் முக்கியமானதாகும். நீ கடலைக் கடப்பாயானால் இதையும் நிறைவேற்றுவாயாக.''

''அது என் கடமையாகும்.''

''மகிழ்ந்தேன்.'' தலைவன் தன் தோழனது தோளைத் தட்டிக்கொடுக்க முயன்றான்.

பராந்தகனுடைய கை மறுபடியும் மீசையிலேறியது. அவன் சுற்றிலுமுள்ள ஆட்களை ஒரு முறை நோக்கினான். ஆனால் ஒன்றும் வாய் திறக்கவில்லை.

திரியம்பகன் தன் பையில் உள்ளவற்றை எடுத்துக்கொள்ளும்படி ராகுலனுக்குச் சைகை செய்தான். பெரிய பாரத்தை இறக்கினவன் பெறும் ஆறுதல் அவன் முகத்தில் தோற்றியது. இருள் வீழ்ந்து சிறிது நேரத்திற்கெல்லாம் இருமுறை இருமினான்; அதோடு அவன் ஹிருதயமும் நின்றது.

ராகுலன் அந்தச் சிறிய நகைப்பெட்டியையும், மெழுகுத் துணியில் சுற்றப்பட்டிருந்த கப்பற் பத்திரங்களையும், தன் தலைவனது நீண்ட உடைவாளையும் கண்ணெடுக்காது பார்த்துக்கொண்டிருந்தான். அவனது அசைவற்ற தன்மையைக் கண்ட பராந்தகன் அவனருகில் வந்து தோளைப்பிடித்து மெதுவாகக் குலுக்கினான். ராகுலன் நிமிர்ந்தான்.

''என்ன, பிணத்தை அப்புறப்படுத்தவேண்டாமா?'' என்றான், அவன் பதிலை எதிர்பார்த்து.

புதிய தலைவனாகிய ராகுலன் தலையை அசைத்தான். அவன் முகம் வெளுத்தது. கண்கள் பீதியடைந்தன.

பராந்தகன் பிணத்திற்கடியில் இரண்டு கைகளையும் கொடுத்துத் தூக்கி விசிறியெறிந்தான். மறு நிமிஷம் திரியம்பகனின் உடல் தண்ணீரில் 'தலக்' என்ற சப்தத்துடன் விழுந்து மறைந்தது. ராகுலன் உடல் நடுங்கியது; கண்களை இறுக மூடிக்கொண்டான்.

பராந்தகன் கைகளைத் துடைத்துக்கொண்டு அவனருகில் உட்கார்ந்தான். ''பெட்டியில் என்ன இருக்கிறது என்றுதான் பார்ப்போமே! பொழுதுதான் போக வேண்டாமா?'' என்றான்.

ராகுலனின் நினைவற்ற கைகளுக்கடியிலிருந்து அவன் பெட்டியை எடுத்தான். ஆட்களில் ஒருவனுக்கு விளக்குக்கொண்டுவரும்படி உத்தரவிட்டான் பராந்தகன். பெட்டியிலிருந்து தொங்கவிடப்பட்டிருந்த சாவியைக்கொண்டு பெட்டியைத் திறந்தான். ஆட்களெல்லாம் சுற்றிலும் வந்து கூடிக்கொண்டனர். உள்ளிருந்த சாமான்களெல்லாம் மெல்லிய காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தன. பராந்தகன் ஒன்றிரண்டைப் பிரித்து அந்த மங்கிய விளக்கொளியில் பார்த்தான். அவற்றினுள்ளிருந்த முத்து மாலைகளும் ஜ்வலிக்கும் பெரிய வைரக்கற்களும், கண்களைப் பறிக்கும் நவரத்தினமாலைகளும் அவர்களைப் பிரமிக்கச் செய்தன. ''திரியம்பகன் இத்தனை நாட்களாக இதை என்னிடமிருந்துங்கூட மறைத்துவிட்டானே!'' என்றான் பராந்தகன். அதைப் பின்பற்றி மற்றவர்களும் ஏதோ முணுமுணுத்தனர்.

இந்தச் சப்தங்கள் ராகுலனை எழுப்பின. தன்னைச்சுற்றி ஆட்கள் கூடி இருப்பதையும் பராந்தகன் பெட்டியை விஷமம் செய்துகொண்டிருப்பதையும் கண்டான்.

''பராந்தகா, போதும்; நிறுத்து உன் விளையாட்டை.''

''இதில் நிரம்பவும் விளையாட்டுப் பொருள்கள் இருக்கின்றன'' என்றான் பராந்தகன் தன்னுடைய சுபாவமான விஷமப் புன்சிரிப்புடன்.

''அதைப்பற்றி உனக்குக் கவலையில்லை. மூடு உன் வாயை! அவை யாவும் கப்பல் சொத்துக்கள்.''

இருவரும் சிறிதுநேரம் வாய்திறவாது ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பராந்தகன் அருவருப்புடன் நகைகளைப் பழையபடியே பெட்டியில் வைத்துப் பூட்டி ராகுலனிடம் திருப்பிக்கொடுத்தான். ஆட்களெல்லாம் திரும்பத் தங்கள் தங்கள் இடத்திற்குச் சென்றனர்; பராந்தகனும் திரும்பினான்.

ராகுலன் மனத்தில் வறட்சியும் திகிலும் ஏற்பட்டன. அவன் குரல் கம்மியது. ஆட்கள் தங்களுக்குள் என்னவோ 'குசுகுசு' என்று பேசிக்கொண்டனர். ஆனால் அவன் ஒன்றையும் கவனிக்கவில்லை; தன்னுடைய எண்ணங்களிலேயே மூழ்கிக் கிடந்தான். இது அவனுக்குச் சோதனைக் காலமேயாகும். இதற்குமுன் காரியங்களை நிர்வகிக்கவும், கோளாறுகளை நிவர்த்திக்கவும் அவனுக்குமேல் பெரியவர்கள் இருந்தனர். ஆனால் இப்பொழுதோ ஒரு வருஷ அனுபவமேயுள்ள அவனே எல்லாவற்றையும் சமாளிக்கவேண்டி இருந்தது. இதுவரையில் தன்னைப்பற்றி மிகவும் பெருமையாக எண்ணிக்கொண்டிருந்தான்; ஆனால் நேரில் கவனிக்கும் பொறுப்பு ஏற்பட்ட பொழுதுதான் அவன் தன்னுடைய அனுபவமின்மையைக் குறித்து வருந்தினான்.

சுக்கானை இறுகப் பிடித்தான். படகை நேர்வடகிழக்கில் செலுத்தினான். படகு கரையை அடையுமோ என்பதே சந்தேகந்தான். காற்று அநுகூலமாயிருந்தாலே நிலத்தை எட்டிப்பார்க்க இன்னும் நான்கு நாட்களாகும்; ஆனால் இந்தக் காற்றைத்தான் நம்பவே முடியாதே. குடி தண்ணீரோ மறுநாளோடு தீர்ந்துவிடும். தன் பொறுப்பை எண்ணி அவன் புழுங்கினான். திரியம்பகனிடமிருந்து தலைமையை ஏற்றுக்கொண்டபொழுதுகூட அது இவ்வளவு பாரமாயிருக்குமென்று அவன் நினைக்கவில்லை. தலைவன் இறந்தது அநியாயம்; அவனுடைய மேலதிகாரிகளான ஜீவகனும், ஜயந்தனும் தீயில் அழிந்தது அதைவிட அநியாயம்; அவர்களெல்லாம் இறக்க, சிறிதும் அருகதை அற்றவனான தான் இப்பொறுப்பை ஏற்க மிஞ்சியது எல்லாவற்றிலும் அநியாயம். ஆனால் இனி இதைத் தவிர்க்க வழியில்லை. ஏற்றுக்கொண்டாயிற்று; நிறைவேற்றித் தீரவேண்டியதுதான்.

இரவின் கரிய அந்தகாரம் நீங்கிக்கொண்டிருந்தது; கீழ்வானம் வெளுக்கத் தொடங்கியது. பயங்கர அலைகளின் கோரக் கருமைநிறம் நீங்கிச் சிறிது வெண்மை தோன்றியது. சிறிது நேரத்திற்கெல்லாம் கீழ்வானத்தில் எழும் சூரியனுடைய மேல் விளிம்பானது குருதியில் தோய்ந்த கொடுவாளெனச் செந்நிறத்துடன் பிரகாசித்தெழுந்தது.

தூக்கத்தில் ஆழ்ந்திருந்த ஆட்கள் ஒவ்வொருவராக எழுந்து உட்காரத்தொடங்கினர். அவர்களுடைய ஆர்வம் நிறைந்த முகங்கள் முந்திய நாளின் நிகழ்ச்சிகளை நினைத்தமாத்திரத்திலேயே சோர்ந்தன. பராந்தகனும் எழுந்தான். நாற்புறமும் நோக்கியவண்ணமே ஒரு பெரிய சோம்பல் முறித்தான். வழக்கம்போல் எச்சில் உமிழ வாயைத் திறந்தான்.

"அங்கேதான் வறண்டிருக்கிறதே" என்று ஒருவன் ஞாபகமூட்டினன்.

"ஆம், நாக்கு வறட்சி தாங்க முடியவில்லை. மத்தியான்னம்வரை காத்திருந்து குடிக்கும் தண்ணீரை இப்பொழுதேதான் குடித்துத் தீர்த்துவிடுவோமே."

ராகுலன் தன்னைப் பார்ப்பதைத் அறிந்தும் அறியாதவன்போல் இருந்துவிட்டான் பராந்தகன். "எல்லோரும் வாருங்கள்" என்று அவன் கூச்சலிட்டான். தண்ணீர்ப்பாத்திரத்தண்டை சென்று குனிந்து மூடியைப் பாதி திறந்தான். மூடியைத் தொட்ட கையில் ஓங்கி ஓர் உதை விழக் கை ஒதுங்கியது. தலை நிமிர்ந்தான். ராகுலன் பக்கத்தில் நின்றான்.

"எட்டச் செல், அற்பனாயே! நாம் எப்பொழுது தண்ணீர் குடிக்கவேண்டுமென்பதைச் சொல்வதற்கு நான் இங்கே இருக்கிறேன்."

திரியம்பகனின் வாள் அவன் கையில் மின்னியது. அதன் கற்கள் இழைத்த பிடியைப் பார்த்தவண்ணமே திகைத்து நின்றான் பராந்தகன். மற்றவர்களும் இக்காட்சியை அசைவற்றுப் பார்த்து நின்றனர்.

பராந்தகன் ராகுலனை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தன் சகாக்களுடன் சேர்ந்துகொண்டான். ராகுலனும் தன் இடத்தில் உட்கார்ந்துகொண்டான். அவன் உடல் உதறியது; மனம் பயத்தால் பதறியது. ஆயினும் தான் செய்ய வேண்டியதைச் செய்ததாக ஒரு திருப்தியும் தைர்யமும் அவனுக்கு ஆறுதல் அளித்தன.

கடைசியாக மிகுந்த தண்ணீரை அன்று பகல் குடித்தார்கள். ராகுலன் ஒவ்வொருவராக அழைத்து அவர்களுடைய பாகத்தைக் கொடுத்துவிட்டு, மிகுந்த ஒன்றிரண்டு துளிகளால் தன் நாக்கையும் நனைத்துக்கொண்டான்.

"யானைப் பசிக்குச் சோளப்பொரியா?" என்று மாலுமிகள் தாகத்தால் தவித்தனர். உதடுகள் ஒட்டி உலர்ந்தன. காற்றும் நின்றுவிட்டது. வெயில்மட்டும் விடாது கொளுத்திக்கொண்டிருந்தது. அவர்களால் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லை. இவ்விதமே பயித்தியங்களைப்போல் இரண்டு நாட்கள் முழுதும் கொந்தளிக்கும் கடலில் தவித்தனர்.

மூன்றும் நாள் பிற்பகல் சோர்ந்து விழுந்துகிடந்த ராகுலன் கண்விழித்தான். அவனுடைய கைகளும் சிறிது அசைந்தன. எங்கிருந்தோ ஒரு குளிர்ந்த புயல் வீசியது. வானத்தில் சேர்ந்திருந்த மேகம் குளிர்ந்து மழை பெய்யத் தொடங்கியது. மாலுமிகள் கூத்தாட ஆரம்பித்தனர். அவர்கள் ஆவென்று வாயைத்

திறந்துகொண்டு மழைத்தண்ணீரைச் சுவைத்துக்கொண்டிருந்தனர். ராகுலன் மட்டும் முன்ஜாக்கிரதையுடன் மெழுகுதுணியால் ஒரு புனல்போல் செய்து கூடியவரை தண்ணீர்ப் பாத்திரத்தை நிரப்புவதில் ஈடுபட்டிருந்தான். மழை பெய்த தில் புதுநீரைக் கண்டுகளிக்க வெளிவந்த மீன்களையும் பிடித்து வைத்துக்கொண் டனர். இனி இரண்டு மூன்று நாட்களுக்கு உணவிற்கும் தண்ணீருக்கும் கஷ்ட மில்லை. ராகுலன் ஆறுதலடைந்தான். அவன் முகம் பிரகாசமுற்றது. மற்ற வர்களும் குதூகலத்துடன் பேசலாயினர்.

ராகுலன் தன் ஆட்களுடன் பேச்சுக் கொடுத்துச் சந்தோஷப்படுத்த எண்ணினன்.

"பராந்தகா, எங்கே சற்று எனக்குப் பதில் சுக்கானைக் கவனித்துக்கொள் பார்ப்போம்."

பராந்தகன் எழுந்து ஒரு கையை மீசையிலும், மற்றொரு கையை இடுப்பிலும் வைத்துக்கொண்டபடியே, "ஏன், நேரில் ஊர்போய்ச் சேரவேண்டுமென்று இருக் கிறதோ?" என்றான்.

"என்ன அப்படிக் கேட்கிறாய்? இவ்வளவு நாட்கள் கஷ்டப்பட்ட பிறகு எல்லோருக்குந்தான் அப்படி இருக்கும். உனக்கு அப்படி இல்லையா?"

"இல்லை, எங்களுக்கு அப்படி இல்லை. இங்கே எங்காவது சமீபத்திலுள்ள கரையில் தங்கிப் பின் மெதுவாக ஊருக்குப் போகலாம்."

பராந்தகனுக்குப் பின்னால் நின்ற இருவரும் 'களுக்' என்று சிரித்தனர்.

ராகுலனுக்கு ஒன்றும் புரியவில்லை. தன் பையினின்றும் சிறிது வெளியில் நீட்டிக்கொண்டிருந்த தகரப்பெட்டியை உள்ளே சரியாய் வைத்துக்கொண்டு பராந்த கனைப் பார்த்தான்.

பராந்தகன் தன்னுடைய விஷமச்சிரிப்புடன் மேலும் பேசலானான்: "அந்தப் பெட்டி நிறைய நகைகள் இருக்கின்றன. அவற்றை நம்முள் பங்குபோட்டுக்கொள் வதைவிட வேறு உசிதமான காரியம் இருக்கமுடியாது. இங்கே அருகிலுள்ள கரையில் இறங்கிப் பின் அவரவர் இஷ்டப்படி ஊர்போய்ச் சேரலாம். கப்பலோடு அவை களும் போய்விட்டன என்று சொந்தக்காரர்களுக்குச் சொல்லிவிட்டால் போகிறது."

"பராந்தகா, என்ன உளறுகிறாய்? நிறுத்து, பேச்சை."

"ஏன், நம்முடைய கப்பல் உடைந்து சேதமாகவில்லையா? நம் பொருளையெல்லாம் நாம் இழக்கவில்லையா?"

முந்திய இரண்டோர் அனுபவங்களிலிருந்து ராகுலன் சிறிது தைரியம் அடைந்திருந்தான். அவன் திடத்துடனும் அதிகாரத்துடனும் பேசலானான்.

"அவை யெல்லாவற்றையும் மறந்துவிடு; உன் மூளை குழம்பி இருக்கவேண்டும். அந்த நகைகள் வெறும் மாதிரிச் சரக்கு, உபயோகமற்றவை என்பது உனக்குத் தெரியாதா?"

பராந்தகன் மறுபடியும் சிரிக்கத் தொடங்கினான். "ஓகோ! எனக்குத் தெரியாது போயிற்று. அதனால்தான் திரியம்பகன் அவைகளைப் பெட்டியில் வைத்துப் பூட்டிப் பத்திரமாக உன்னிடம் ஒப்படைத்தானோ? ராகுலா, நீ சிறுவன், அறியாதவன்; நான் நம் எல்லாருடைய நன்மையையும் உத்தேசித்துச் சொல்கிறேன்."

"பராந்தகா, நான் இப்படகின் தலைவன் (அவன் குரலில் கோபம் தொனித் தது). ஏதாவது தாறுமாறாக உளறாதே. கரையை அடைந்தவுடனேயே உன் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வீடுபோய்ச் சேர்."

பராந்தகன் காறி உமிழ்ந்து, ஓர் ஏளனச்சிரிப்புச் சிரித்தான். "சம்பளமா? இந்தப் பெட்டியில் இருப்பதைவிட வேறு சம்பளம் எங்களுக்கு எதற்கு? நீயும் நாங்களும் ஒரே நிலையில் இருக்கிறோம் என்பதை அறிந்து பேசு."

ராகுலன் கண்களில் பொறி பறந்தது. அவன் கை இடுப்பை எட்டியது. அடுத்த கணம் திரியம்பகனின் வாள் மின்னியது.

"நீ ஓரடியும் முன்னுக்கு வைக்கக்கூடாது. அப்படியே சென்று உன் வேலையைப் பார். இந்நகைப்பெட்டியும், தஸ்தாவேஜுகளும் குலசேகரரிடம் போய்ச் சேரவேண்டும்."

பராந்தகன் பின்னடைந்தான். அவன் குரலும் தாழ்ந்தது.

"என்னைச் சுக்கானில் உட்காரவேண்டுமென்று சொல்லவில்லையா? நீ வேண்டுமானால் சற்று இளைப்பாறு."

"இல்லை, சுக்கானை நானே பார்த்துக்கொள்வேன். நீ உன் வேலையைப் பார்."

"சரி அப்படியே ஆகட்டும். நீயே உன் உயிருக்கு உலை தேடிக்கொள்ளாதே" என்று முணுமுணுத்தவாறே தன் சகாக்களுடன் சேர்ந்துகொண்டான் பராந்தகன்.

ராகுலன் உதட்டைக் கடித்தான். தன் நெற்றியில் தோன்றிய வேர்வையை யாரும் அறியாதபடி துடைத்துக்கொண்டான். தண்ணீரின்றிக் காய்ந்த இரண்டு நாட்களும் சும்மாகிடந்த அவர்கள் இன்று திரும்பவும் வாலாட்ட ஆரம்பித்துவிட்டார்களே! திரியம்பகன் இருந்தால் இவ்விதம் நடக்குமா? அல்லது ஜீவகன், ஜயந்தன் இருந்தால்தான் நடக்குமா? அவர்கள் என்ன செய்வதென்று அறிந்தவர்கள். இனித் தான் செய்வது என்ன? இப்பொழுது அவர்கள் இஷ்டப்படி விட்டுவிட்டுப் பின் ஊர் செல்லவிட்டு மடக்கிக்கொள்ளலாமா? ஆனல் அவர்கள் அப்படி மோசம் போவார்களா? தன் வார்த்தையைத்தான் நம்புவார்களா? இவையெல்லாம் பயனில்லை. தான் பிடித்த பிடியை நிறைவேற்றவேண்டியதுதான். பகல் கடந்து இரவும் வந்தது. ராகுலன் விழித்துக் காவல் புரிவதைத்தவிர வேறு வழியில்லை.

விடியும் சமயம். அயர்வுமிகுதியால் ராகுலன் சற்றுக் கண்ணயர்ந்தான். இதையே எதிர்பார்த்திருந்த பராந்தகனின் கையாட்கள் அவனை மெதுவாக நெருங்கினர். ஆனல் அவர்கள் தங்கள் வேலையை ஆரம்பிக்குமுன்பே அலையில் ஆடிய படகு ராகுலனை விழிக்கச்செய்தது. ஆவேசம் வந்தவன்போல் அவன் எழுந்தான், உருவிய கத்தியுடன். ஒருவனுக்குப் பலத்த அடி கொடுத்தான். மற்றவர்கள் அஞ்சிப் பின்வாங்கினர். அதே சமயத்தில் ராகுலனும் களைப்புமிகுதியால் தடுமாறி விழுந்தான். அப்படியே மூர்ச்சையானன்.

பொழுது சென்றதே தெரியவில்லை. ராகுலன் தன் கனவுலகத்தில் அதிகாரம் நடத்தத் தொடங்கினன். தனக்கு எதிராகக் கிளம்பியவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தினன். இவ்விதம் இன்னும் ஒருநாள் சென்றது.

ராகுலன் நினைவுலகத்திற்குத் திரும்பினன். தலையில் ஒரு வலி தோன்றியது. பராந்தகனுடைய குரல் கேட்டுத் திரும்பினன். சுக்கானில் அவன் உட்கார்ந்திருந்தான். மற்ற வேலைகளையும் அவனுடைய ஆட்கள் நிறைவேற்றிக்கொண்டிருந்தனர்.

"அப்பொழுதே உடன்பட்டிருந்தால் உன் நெற்றியிலும் அந்தக் காயம் பட்டிருக்கவேண்டாம்; எங்களுக்கும் இவ்வளவு சிரமம் கொடுத்திருக்கவேண்டாமல்லவா?" என்றான் பராந்தகன் ஓர் எக்காளத்துடன்.

ராகுலன் தன் உலர்ந்த உதட்டை நக்கிக்கொண்டான். எழுந்து உட்கார முயன்ருன். ஆனல் தலை கீழே இழுத்தது. பராந்தகன் அவனை மெதுவாக உட்காரவைத்தான்.

''பராந்தகா!'' மேலே வார்த்தை வெளிவரவில்லை.

''என்ன, தாகமாயிருக்கிறதா?'' பராந்தகன் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து அவன் வாயில் வைத்தான்.

''அவனுக்குத் தண்ணி ஆவாதையா? அப்படியே காலைப் பிடித்து இழுத்தெறி ஐயா'' என்ருன் மூலையிலிருந்த ஒருவன்.

பராந்தகன் அவனைப் பார்த்து ஓர் உறுமு உறுமினன். ''இக்கூட்டத்திற்கு நான் தலைவன். ஒருவனை வைத்திருப்பதும் தள்ளுவதும் என் இஷ்டம்.''

''பேராசைப் பேய்களே, வஞ்சகத்துரோகிகளே'' என்று கூறிக்கொண்டே அழத்தொடங்கினன் ராகுலன்.

''தம்பி, இனி அதெல்லாம் ஒன்றும் பயன்படாது. பாவம் குழந்தை, நீ திரும்பி உன் வீட்டிற்குச் செல்வதே என் தயையினல். அதோ பார், தூரத்தில் கரை தெரிகிறது. ஆனல் மலையாளக்கரையல்ல, சிங்களக்கரை. நான் சொல்வதற்கு இப்பொழுதாவது உடன்பட்டால் கொஞ்சம் பணமும் சேர்த்துக்கொண்டு போகலாம்'' என்று சாந்தமாகக் கூறினன் பராந்தகன்.

''அப்பெட்டி அப்படியே குலசேகரரிடம்போய்ச் சேரவேண்டியது. அதைத் திறக்கவும் முடியாது.''

''அதைப்பற்றி உனக்குக் கவலை வேண்டாம். நான் கேட்பதெல்லாம், நாங்கள் தர்மத்திற்காக உனக்கொரு பங்கு கொடுத்தால் வாங்கிக்கொள்வாயா என்பது தான்.''

''நானு? இந்தத் திருட்டுச் சொத்திலா? ஒருபோதும் முடியாது.''

''வீண் காலதாமதம். நான் சொல்லியபடி.........'' என்று ஆரம்பித்தான் மூலையிலிருந்த அந்த ஆசாமி.

''சீ! மூடு வாயை; நான் சொன்னது ஏறவில்லையோ?'' என்று சீறினன் பராந்தகன்.

''பின் என்னை என்ன செய்யப்போகிருய்?'' என்ருன் ராகுலன்.

''உன்னையா? அதோ தெரிகிறது பார்: சிங்களக்காடுகள். ஊர்பேர் தெரியாத அக்காட்டில், துஷ்டமிருகங்களுக்கும், காட்டுமனிதர்களுக்கும் இரையாக விட்டுச் செல்லப்போகிறேன்.''

''ஏன்? அதற்கு இப்பொழுதே கொன்றுவிடலாமே.''

''அதற்குள்ளாவது உன் மனம் திருந்தாதா என்றுதான் பார்க்கிறேன்.''

ஆனல் பராந்தகனை உள்ளூற வாட்டியது மற்ருெரு காரணம். ராகுலனை அடிமையாக்கி அவன் தன் எண்ணத்தை நிறைவேற்றியாயிற்று. இப்பொழுது தானே தலைவன். ராகுலன் கதி தனக்கும் நேராமல் இருக்கவேண்டுமானல், நகைகளைப் பங்கிட்டுப் பிரிந்து செல்லும்வரை ராகுலன் உயிரோடு இருக்கவேண்டும்.

பொழுது ஏறிக்கொண்டு வந்தது. மாலுமிகள் எல்லோரும் தூரத்தில் தெரியும் கடற்கரையையும் அங்கே சென்றவுடன் தங்களுக்கு வரப்போகும் செல்வத்தையும் எண்ணிப் பூரித்து நின்றனர். பராந்தகன் கடைசி முறையாக ராகுலனிடம் சென்ருன்.

"ராகுலா, நீயோ சிறுவன்; நீ வீணே மடிவதில் எனக்கு இஷ்டமில்லை."

"இப்பேச்சு வேண்டாம். பெட்டியை என்னிடம் ஒப்படை; இல்லையேல் அதற்குரிய விபரீதங்களை நீ அனுபவித்தே தீருவாய். இவ்வளவு பழகியும் அப் போலி நகைகளை........."

"போதும் நிறுத்து. என்னையும் மூடனுக்காதே. உன் தலைவிதி அவ்வளவு தான்" என்று பராந்தகன் சென்றுவிட்டான்.

அன்று மாலைப்பொழுதில் படகு தென்னை மரங்களும் காடுகளும் சூழ்ந்த ஒரு மணல் மேட்டுக்கருகில் ஒதுக்கப்பட்டது. கரைகண்ட மாலுமிகளின் ஆனந்தம் கரைகடந்தது. அந்த இயற்கைக் குதூகலத்தில் மணலில் ஓடிக் குதித்தனர்; புரண்டு உருண்டனர்; இலைகளையும் கிளைகளையும் ஒடித்துக்கொண்டு கூத்தாடினர்.

ராகுலன்மட்டும் படகில் தனித்திருந்தான். படகைத் தள்ளிக்கொண்டு தனியாகப் போய்விடலாம் என்ற ஓர் எண்ணம் அவனுக்கு உதித்தது. ஆனால் அது அவ்வளவு சுலபமல்ல. மேலும் பெட்டி பராந்தகனிடம் இருக்கத் தான் மட்டும் போய் என்னசெய்வது? கடைசியாக அருவருப்பு, கோபம், கடமையில் தவறிவிட்டோம் என்ற வெட்கம் எல்லாம் சூழ்ந்து வாட்ட, மணலில் தனியாக ஒரு மூலையில்போய் உட்கார்ந்தான்.

மாலுமிகள் ஒரு பெரிய தீயை மூட்டி அதைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு விவாதிக்கத் தொடங்கினர்.

"பெட்டியில் என்ன என்ன இருக்கிறதென்றே தெரியாதே. திறவுங்கள், பார்க்கலாம்" என்றான் ஒருவன்.

"இப்பொழுதாவது, பெட்டியைத் திறக்கவாவது! எல்லாம் ஊர்போய்ச் சேர்ந்த பிறகுதான். இப்பொழுது திறந்து நீங்கள் சண்டை இட்டுக்கொண்டு நிற்கவா?" என்று மறுத்தான் பராந்தகன்.

சிலரிடையே சிறிது அதிருப்தி தோன்றியது. ஆனால் பெரும்பாலோர் தலைவனைச் சார்ந்து நின்றனர். கடைசியில் பெட்டியை ஒருமுறை திறந்து என்ன இருக்கிற தென்று பார்த்துவிட்டு மூடிவிடுவதென்று தீர்மானித்தனர்.

இந்த அமளியில் ராகுலனை அறவே மறந்தனர். அவன் சற்று விலகி உட் கார்ந்தவண்ணம் இவர்கள் பேச்சைக் கவனியாதவன்போல் தூரத்திலுள்ள இருண்ட காட்டை நோக்கிக்கொண்டிருந்தான். இடை இடையே காதில் விழுந்த இவர் களுடைய வார்த்தைகள் அவனுடைய கோபத்தைக் கிளப்பிவிட்டன. அவன் பயம் மறைந்தது. தன் அவமானத்தைப் போக்க ஏதாவது செய்தாகவேண்டும். எழுந்து அடிமேல் அடிவைத்துக் கூட்டத்தை நெருங்கினான்.

வளைந்துபோயிருந்த சாவியைப் பெட்டியினுள் நுழைக்க அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான் பராந்தகன் ராகுலன் தங்களுக்கருகில் இருப்பதை ஒருவரும் அறிய வில்லை. சிலர் நுழைய மறுக்கும் சாவியில் கூர்ந்து ஈடுபட்டிருந்தனர். மற்றவர்கள் குதித் தாடும் சந்தோஷத்தில் தங்களை மறந்திருந்தனர். அப்பொழுது அங்கு என்ன நடந்தது? ஏன்? அதைச் செய்த ராகுலனுக்கே அதைப்பற்றி ஒன்றும் புரியவில்லையே. குபீரென்று பாய்ந்தான் கூட்டத்திடை. பெட்டியையும், காகிதமூட்டையையும் லபக் கென்று சுருட்டிக்கொண்டான். அந்தப் பரவிய இருட்டில் கண்தெரியாக் காட்டில் மறைந்தான்.

என்ன நடந்ததென்று நிர்ணயிப்பதற்கே அவர்களுக்குச் சில நிமிஷங்கள் சென் றன. அந்த இருட்டில் யாரோ தங்கள் பொக்கிஷத்தை அடித்துக்கொண்டு போய்

விட்டனர். அருகிலிருந்த தீயின் ஒளியால் அவர்களுடைய கண்களுக்கு ஆள் ஓடுவது கூடத் தெரியவில்லை.

ராகுலனைப்பற்றிய எண்ணம் பராந்தகனுக்கே முதலில் தோன்றியது. உருவினன் கத்தியை. "ஏமாற்றிவிட்டான் பாவிப்பயல், ராகுலன்!"

"அப்போதே அவனைத் தொலைக்கவேண்டுமென்றேனே, கேட்டாயா?" என்று முணுமுணுத்தான் பழைய ஆசாமி. பராந்தகன் ஒரு குத்து விட்டு அவனைக் கீழே தள்ளினன். இருவரும் கைகலந்தனர். இந்தச் சண்டையில் வேறு அருமையான



சில நிமிஷங்கள் கழிந்தன. பின்பு பலரும் பல திக்குகளிலும் பிரிந்து காட்டையும் மணலையும் தேடலாயினர். ஒன்றும் பயனின்றிப்போகவே திரும்பவும் தீயண்டைக் கூடினர்.

ராகுலனே அந்தக் கண்ணிற்குப் பிடிபடாத இருட்டில் கால் இழுத்துச் சென்றவழியே ஓடினன். இடையில் காலில் இடறிய மரங்களின் வேர்களையும் முகத்தில் இடித்த மரக்கிளைகளையும் சிறிதும் பொருட்படுத்தவில்லை. கடைசியில் கால்கள் அடியெடுத்து வைக்க மறுக்கவே தனது பொக்கிஷத்தை மார்பில் அணைத்தபடியே தரையில் சாய்ந்தான். திரும்பவும் அவன் சுய நினைவிற்கு வந்த

போது காரிருள் சிறிது குறைந்திருந்தது. தூரத்தில் ஆட்களுடைய சப்தமும் மெல்ல ஒலித்தது. அவர்கள் அவனைத் தூரத்திவருபவர்களேயன்றி வேறல்ல. மறுபடியும் எழுந்தான். ஓட்டத்தைத் தொடர்ந்தான். இனிப் பயமில்லை என்று தைரியம் ஏற்பட்டவுடன் சிறிது நின்றான். பெட்டி, பத்திரம் இரண்டையும் சேர்த்து ஒரேமூட்டையாகக் கட்டித் தன் தோளில் தொங்கவிட்டுக்கொண்டான். சூரியனும் கீழ்த்திசையில் தோன்றினான்.

ராகுலனின் தோளில் தொங்கிய மூட்டையும், அவன் சொல்லும் கலகக் காரர்களைப்பற்றிய அதிசயக்கதையும் அந்நாட்டினர்களுக்குப் பெரிய வியப்பாயிருந்தன. விவரமறியாத அச்சிறுவனை அவர்கள் ஊர் அதிகாரியிடம் கொண்டு நிறுத்தினர்.

ராகுலன் தன் கதையை மறுபடியும் அவ்வதிகாரியிடம் விவரித்தான்.

“நீர் ‘ஸ்ரீசக்தி’க் கப்பலின் மூன்றாவது உதவி அதிகாரியா? பத்தொன்பது வயது வாலிபரா இத்தனை கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு வந்திருக்கிறீர்!”

அதிகாரி பிரமித்துப் போனார். பின்பு நசுங்கிக்கிடந்த அவனுடைய பெட்டியைத் திறந்து பரிசோதனை செய்யலானார். அவருக்குத் தம்மையும் மீறிச் சிரிப்பு வந்தது. ஆனால் ஒருவாறு சமாளித்துக்கொண்டார்.

“உம் தலைவன் உம்மிடம் ஒப்படைத்தது ஒரு மெழுகுவர்த்தி அல்லது விளையாட்டுப் பொம்மையாயிருந்தாலும் அப்பொழுதும் இவ்விதமே செய்திருப்பீரா?”

“திரியம்பகர் என் பொறுப்பில் விட்டது எதாயினும் அதை நிறைவேற்றுவதே என் கடமை.”

“சரி, இனி உமது பெட்டியில் இருக்கும் நகைகளெல்லாம் வெறும் போலி நகைகள் என்று தெரிந்தால் நீர் ஆச்சரியப்பட மாட்டீரே?

“ஆச்சரியமா? அதுதான் நான் அறிந்ததாயிற்றே.”

“ஆ!. . . .” அதிகாரிக்குத் தம்மையே நம்பமுடியவில்லை. அவர் வாயினின்றும் வார்த்தை எழவில்லை. ராகுலன் மேலும் சொல்லலானான்:

“ஆனால், எனக்குத் தெரிந்து என்ன பண்ணுவது? நான் எவ்வளவு சொல்லியும் அந்த மூட முரடர்கள் என்னை நம்பவில்லையே.”

“இருந்தும் கப்பலின் சொத்தாதலால்...”

“அதைப் பத்திரமாகக் கொண்டு சேர்ப்பது என் கடமையல்லவா?”

அதிகாரி சிரிப்பதை நிறுத்தினார். அவர் ஹிருதயத்தில் ஒரு பாரம் அழுத்தியது. பத்தொன்பது வயதுப் பாலகன். வயதிற்கு முன்பே நெற்றியில் சுருக்கம் தோன்றிவிட்டது. ஆழ்ந்த தீவிரமான கருவிழிகள். இத்தனை கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் சாவையும் எதிர்க்கத் துணிந்தான்.—எதற்காக? ஒரு லட்சியத்திற்காக, கடமையை நிறைவேற்ற. இப்பொழுது அவர் முகத்தில் ஓர் அன்புப் புன்னகை தோன்றியது.

“ராகுலரே! நீர் உம் தாய்நாட்டிற்கே பேரும் புகழும் தரத்தக்க சிறந்த கப்பல் தலைவராவீர் என்பதில் சந்தேகமில்லை” என்று முடித்தார்.

குஸுமா

சரத்சந்த்ர சட்டர்ஜி

[மொழிபெயர்த்தவர்: அ. கி. ஜயராமன்]

(சென்ற இதழ் 189-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[முன்கதைச் சுருக்கம்: குஸுமா ஓர் ஏழைப்பெண். அவள் சிறு வயதிலேயே பிருந்தாவனன் என்ற பணக்காரச் சிறுவனுக்கு விவாகம் செய்துகொடுக்கப்படுகிறாள். பின்னர் அவள் தாய்க்கு ஏற்பட்ட கெட்ட பெயரினால், பிருந்தாவனன் தந்தை குஸுமாவை விலக்கிவைத்துத் தம் மகனுக்கு வேறு கல்யாணம் செய்துவிடுகிறார். குஸுமாவின் தாயும் கோபங்கொண்டு தன் ஜாதி வழக்கப்படி பெண்ணுக்கு மாங்கல்ய விஸர் ஜனக்கிரியை நடத்திவிடுகிறாள். குஸுமா பெரியவளாகித் தன் அண்ணன் குஞ்சநாதன் சில்லறை வியாபாரம் செய்து பிழைக்க, அவனுக்கு உதவியாக இருக்கிறாள். இதற்குள் பிருந்தாவனனின் தந்தையும், ஒரு மகனை விட்டு அவன் இரண்டாம் மனைவியும் இறந்துவிடுகிறார்கள். மீண்டும் மணந்து கொள் என்று தன் தாய் வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை. அவன் உட் கருத்தை அறிந்து அவள் குஸுமாவை ஏற்றுக்கொள்ள இணங்குகிறாள். அவர்களிருவரும் குஞ்சன் மூலம் குஸுமாவிற்கு இதைச் சொல்லியும் அவள் கேட்கவில்லை. குஞ்சன் ஒருநாள் பிருந்தாவனன் முதலியவர் களை விருந்துக்கு அழைத்துவிட்டுத் தன் தங்கைக்குப் பயந்து எங்கோ தலைமறைவாக இருந்துவிடுகிறான். அன்று குஸுமாவின் சங்கட நிலையைக் கண்டு பிருந்தாவனன் தன் தாய்க்குத் தெரியாமல் அவளுக்கு உதவி புரி கிறான். குஸுமாவிற்கு அன்றுதான் அவன்மீது காதல் ஏற்படுகிறது. அன்று மாலை தான் புறப்படும்போது குஸுமாவின் மாமியார் அவள் கையில் ஒரு ஜோடிப் பொன் வளையல்கள் இட்டு அவளை ஆசீர்வதிக்கிறாள். பிறகு தாயும் மகனும் குஸுமாவை அழைத்துவர ஏற்பாடு செய்கின்றனர். குஞ்ச னுக்கும் விவாகம் நிச்சயம் செய்கிறார்கள். அன்று குஞ்சன் வந்து அவர்கள் வளையல்களைக் குஸுமா கொடுத்தாள் என்று சொல்லித் திருப்பித்தரு கிறான். இந்தச் சம்பவத்தினால் அவர்கள் மனம் முறிந்துவிடுகிறது. குஞ்ச னுக்கு விவாகம் ஆனபின் அவன் தன் தங்கையைச் சட்டை செய்வதே இல்லை. ஒருநாள் பிருந்தாவனன் தன் மகனுடன் குஞ்சனைக் காண வரும் போது வேதனையால் வாடும் குஸுமா மட்டும் அங்கே இருக்கிறாள். குழந்தையைக் கண்டதும் அதன்பால் குஸுமாவுக்கு வாஞ்சை ஏற்பட அதை அணைத்துக்கொள்கிறாள். ஆயினும் பிருந்தாவனன் மனம் மாற வில்லை. அவளை அவன் அழைத்துக்கொள்ளவில்லை.]

அத்தியாயம் 7

துஷ்கிருத்தியங்களைச் செய்தவர்கள் கடைசியில் அகப்பட்டுக் கொண்டபிறகு வேறு வழியின்றித் தம் குற்றங்களை ஒப்புக்கொள்வதைப் போலவே பிருந்தாவனனும் தன் தாயிடம் வந்து, "அம்மா, என்னை

மன்னித்துவிடு; இப்பொழுதே எனக்கு உத்தரவு கொடு. நான் சென்று உனக்கு வேறு ஒரு வேலைக்காரியைத் தேடிக்கொண்டு வருகிறேன். நீ இம் மாதிரி வீட்டு வேலைகளையெல்லாம் செய்து உயிர் விடுவதை நான் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியாது'' என்றான்.

தாய் பூஜையறையில் பூஜைக்கு வேண்டியவற்றைத் தயார் செய்து கொண்டிருந்தாள். தலை நிமிர்ந்து, ''என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டாள்.

''உனக்காக ஒரு வேலைக்காரியைக் கொண்டுவரப்போகிறேன். அவள் சரணைப் பார்த்துக்கொள்வாள். உனக்கும் உபகாரமாக இருப்பாள். அவசியம் நேர்ந்தால் ஸ்வாமிபூஜைக்கு வேண்டியதையும் செய்து விடுவாள். சொல்; எனக்கு உத்தரவு கொடு'' என்று சொல்லி ஆவலும் கவலையும் நிறைந்த பார்வையுடன் தன் தாயின் முகத்தைப் பார்க்கலானான்.

அவர்கள் ஜாதியல்லாத வேறு ஜாதி வேலைக்காரிகள் அந்த வீட்டில் வேலைக்கு இருக்கமுடியாது; மகன் உட்கருத்தைத் தாய் இப்பொழுது அறிந்துகொண்டாள். சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு, ''இதென்ன? நீ உண்மையாகத்தான் சொல்லுகிறாயா?'' என்று கேட்டாள்.

''உண்மையல்லாமல் என்ன? பொய்யா சொல்கிறேன்? எனக்கு விவரம் தெரிந்தபிறகு நான் உன்னிடம் எப்பொழுதாவது பொய் சொல்லியிருக் கிறேனா?''

''சரி; கொஞ்சம் யோசித்துச் சொல்கிறேன்'' என்று சொல்லிப் பிருந்தாவனனின் தாய் சற்றே சிரித்துவிட்டுத் தன் வேலையில் முனைந்தாள்.

பிருந்தாவனன் அவளெதிரில் நகர்ந்து உட்கார்ந்து, ''இல்லை அம்மா, அதெல்லாம் முடியாது. நீ யோசிக்கிறவரைக்கும் காத்திருக்க முடியாது. உன்னிடமிருந்து உத்தரவு வாங்கிக்கொண்டபிறகுதான் இந்த அறையை விட்டுப் போவதென்று எண்ணி வந்திருக்கிறேன். உத்தரவு பெற்றுக் கொண்டுதான் செல்வேன்'' என்றான்.

''ஏன் யோசிக்கும்வரையில் பொறுக்கமாட்டேன் என்கிறாய்?'' என்றாள் தாய்.

''அம்மா, அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நீ யோசித்துத் தீர்மானித்துச் சொல்லும் விஷயம் உன்னுடைய சொந்த விஷயமாகும். அது என் மாதாவின் ஆக்ஞையாகாது. நான் நல்லது கெட்டதைப்பற்றி ஆராய விரும்பவில்லை. வெறும் அனுமதியைத்தான் விரும்புகிறேன்'' என்றான்.

தாய் தலைநிமிர்ந்து சிறிது நேரம்வரையில் அவனைப் பார்த்துவிட்டு, ''பிருந்தாவனா, ஒருநாள் இதற்கு அனுமதிகொடுத்தேன். நீ மறுத்தாய். அப்பொழுது அதைக் கேட்கவே இல்லை!'' என்றாள்.

''அது எனக்குத் தெரியுமே. அந்தப் பாபத்தின் பலன்தான் இந்தச் சமயம் என்னை நாற்புறமும் சூழ்ந்துகொண்டிருக்கிறது'' என்று சொல்லிப் பிருந்தாவனன் தலைகுனிந்துகொண்டான்.

மகனது தீர்மானம் கேவலம் தன்னுடைய சௌகரியத்திற்காகவே தான், வேறொன்றுக்கும் இல்லை; இதைக் காரிய ரூபத்தில் நடத்திவைத்தால் அவனுக்கு எப்படியிருக்கும் என்பதை நன்றாக அறிந்த தாயின் கண்களிலிருந்து நீர் வந்துவிட்டது. அவள் சுருக்கமாக, "இருக்கட்டும்; இரண்டு நாள் கழித்துச் சொல்கிறேன்" என்றாள்.

பிருந்தாவனன் பிடிவாதமாக, "அம்மா, என்ன காரணத்தால் நீ சாக்குப் போக்குச் சொல்கிறாயோ அது இரண்டு தினங்களுக்குப் பிறகும் சரியாகப் போவதில்லை. உன்னை அவமானம் செய்தவர்களை இஷ்டப்பட்டு நீ வேண்டுமானால் மன்னித்துவிடு; ஆனால் அம்மா திரி செய்ய என்னால் முடியாது. அம்மா, இனி என்னால் சகிக்க முடியாது. எனக்கு உத்தரவு கொடு. நான் கவலையை விட்டிருக்கிறேன்" என்றான்.

தாய் மறுபடியும் தலைநிமிர்ந்து பார்த்துவிட்டுச் சிறிது நேரம் யோசித்து ஒரு நீண்ட பெருமூச்சுடன், "சரி; அனுமதி கொடுக்கிறேன்" என்றாள்.

பிருந்தாவனன் அந்தப் பெருமூச்சின் கருத்தை அறிந்துகொண்டான். ஆனால் அவன் வேறொன்றும் சொல்லவில்லை. பேசாமல் தாயை வணங்கி அறையை விட்டு வெளியே வந்து நின்றான்.

இதற்குள் பள்ளிக்கூடச் சிறுவர்களில் ஒருவன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து அவன் கையில் கொடுத்து, "உங்களுக்குக் கடிதம்" என்றான்.

தாய் உள்ளே இருந்தபடியே, "பிருந்தாவனா, யாருடைய கடிதம்?" என்று கேட்டாள்.

"தெரியாது அம்மா; பார்க்கிறேன்" என்று சொல்லிப் பிருந்தாவனன் ஏதோ கவனமாகத் தன் அறைக்குச் சென்று கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். யாரோ ஒரு ஸ்திரீயின் அழகான கையெழுத்து; அதில் அடித்தல் திருத்தலோ எழுத்துப் பிழையோ ஒன்றும் இல்லை. "ஸ்ரீசரண கமலங்களுக்கு" என்று ஆரம்பித்திருந்தது. அடியில் கையெழுத்தில்லை. பிருந்தாவனன் இதற்குமுன் குஸுமாவின் கையெழுத்தைப் பார்த்ததில்லை. ஆயினும் உடனே இது அவளுடையதாகத்தான் இருக்கும் என்று தீர்மானித்தான்.

அதில், "என் சகோதரனை இப்பொழுது நீங்கள் பார்த்தால் அடையாளமே கண்டுகொள்ள முடியாது. ஏன் என்பதைப் பிறரிடம் சொல்ல முடியாது. தங்களிடம் சொல்லக்கூட வெட்கத்தால் என் உடல் குன்றுகிறது. இன்று அவன் மறுபடியும் மாமியார் வீடு சென்றிருக்கிறான். ஒருகால் நாளைக் காலை திரும்புவான். நாளைக்கு வராமலிருந்தாலும் இருப்பான். ஏனென்றால், நான் தனியாக இருந்தால் என்னைப் பிடித்துத் தின்ன இங்கே கரடி, புலி ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டான். அவனுக்கு அந்தச்

சந்தேகம் இல்லையாம்! உங்களுக்குத் தைரியம் இருக்குமானால் என் சரணனை இங்கே கொண்டுவந்து விடுங்கள்......" என்று எழுதியிருந்தது.

காலையில் சகோதரன்மேல் கோபித்துக்கொண்டு குஸுமா எறியும் அடுப்பில் தண்ணீரைக்கொட்டினதுதான்; பிறகு அதை மூட்டவே இல்லை. அன்று முழுவதும் பட்டினியாகவே இருந்தாள். பயத்தாலும் கவலையாலும் உள்ளுக்கும் வாசலுக்குமாக ஆயிரந்தடவை நடந்தாள். சாயங்காலமாகவே யாராவது வருவார்கள் என்ற ஆசையும் போய்விட்டது. அந்த நிர்ஜனமான சந்தடியற்ற வீட்டில் இரவு முழுவதும் தனியாகக் கழிக்க வேண்டுமே என்று எண்ணியபோது உடம்பு நடுங்கியது. இந்தவிதமான மனோநிலைமையில் சுழன்றுகொண்டிருக்கும்போது வெளியே இருந்து சரணன் உரக்க, "அம்மா! அம்மா!" என்று அழைப்பது காதில் விழுந்தது. ஆழம் காணாமல் தத்தளிக்கும் அவள் மனத்திற்கு ஒரு கரை தட்டுப்பட்டது. அவள் எழுந்து வாசலுக்கு ஓடிவந்து சரணனை இடுப்பில் எடுத்துக்கொண்டு அவன் முகத்துடன் தன் முகத்தை வைத்துத் தான் தனியாக இல்லை என்ற கருத்தால் உள்ளம் பூரித்தாள்.

சரணன் வேலைக்காரனுடன் வந்திருந்தான். இரவு சாப்பாடு முடிந்ததும் குஞ்சனின் புதுக்கடையில் அவனுக்குத் தூங்க ஏற்பாடு செய்தாள். குஸுமாவும் அவன் அருகில் படுத்து அவனைத் தன்னுடன் அணைத்துக் கொண்டு அவனைப் பல கேள்விகள் கேட்கலானாள். கடைசியில் அவள் மெதுவாக, "ஏண்டா சரணு, உங்கள் அப்பா என்ன செய்கிறார்?" என்று கேட்டாள்.

சரணன் சட்டென்று எழுந்து சென்று தன் சட்டைப்பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துவந்து குஸுமாவின் கையில் கொடுத்து, "அம்மா, நான் மறந்துவிட்டேன். அப்பா இதை உன்னிடம் கொடுக்கச் சொல்லிக் கொடுத்தார்" என்றான்.

குஸுமா அதைக் கையில் வாங்கியவுடனேயே அதில் ரூபாய் இருக்கிறதென்பதை அறிந்துகொண்டாள்.

"இவ்வளவுதான். இதைக் கொடுத்துவிட்டு அப்பா போய்விட்டார்" என்றான் சரணன்.

குஸுமா ஆர்வத்துடன், "எங்கிருந்தடா போய்விட்டார்?" என்று கேட்டாள்.

சரணன் கையைத் தூக்கிக் காட்டி, "இங்கே, அந்த இடத்திலிருந்து" என்றான்.

"நதியின் இந்தக் கரைவரையில் வந்திருந்தாரா?"

சரணன் தலையசைத்து, "ஆமாம். வந்திருந்தார்" என்றான்.

குஸுமா வேறொன்றும் கேட்கவில்லை. வெட்கத்தாலும் துக்கத்தாலும் அவள் உள்ளம் குன்றியது. அன்று ஒருநாள் மத்தியான்னம் பிருந்தாவனன் ஒன்றும் சாப்பிடாமல் சரணனை அழைத்துக்கொண்டு

திரும்பிப் போகும்போது, அவளும் கோபத்தால் இரண்டாம்முறை அவனை வற்புறுத்தவில்லை. தவிர மேலுக்குச் சில கடினமான வார்த்தைகளையும் பேசிவிட்டாள். அன்றையிலிருந்து அவன் ஒருநாள்கூடக் கண்ணில் படவில்லை. இதற்குமுன் இந்தப் பக்கம் வர அவனுக்கு ஆயிரம் வேலைகள் இருந்தன. ஆனால் இப்பொழுதோ இங்கே வர அவனுக்கு ஒரு வேலையும் அகப்படவில்லை. அவன் வராமல் இருக்கட்டும்; ஆனால் அவள் நாளுக்கு நாள் காலைமுதல் மாலைவரை வாசலில் வந்து வழிபார்த்துக்கொண்டிருப்பாள். தெருவில் போகும் ஏதாவது மாட்டுவண்டியின் சத்தம் கேட்டதும் அவள் நரம்புகளில் ரத்தம் ஜிவ்வென்று பாய்ந்து ஓடும். அவள் எவ்வளவு நம்பிக்கையுடன் வந்து கதவின் மறைவில் நின்றுகொண்டு பார்க்கிறாள் என்பதைக் கடவுளே அறிவார். அவள் சகோதரனின் கல்யாணத்தன்றும் அவன் வரவில்லை. அன்றும் வாசல்வரைக்கும் வந்தவன் வீட்டுக்குள் வராமல் திரும்பிப் போய்விட்டான். இதன் பிறகு அவளுக்கு அன்றைத் தினத்தின் ஞாபகம் வந்தது. தான் குஞ்சனிடம் வளையல்களைத் திருப்பிக் கொடுத்தனுப்பியது, பதிலுக்குத் தன் கணவன், 'கடவுள் நம் பொருளை நம்மிடமே திருப்பித் தந்துவிட்டார்' என்று சொன்னது ஆகிய சம்பவங்கள் அவள் நினைவுக்கு வந்தன.

'உண்மையிலேயே அவருடைய மனோபாவம் இப்படியே இருந்தால்—?' என்று யோசிக்கலானாள். அவர்களுக்கு வருத்தம் விளைவிக்கத் தான் சற்றும் பின்வாங்கவில்லை. பதிலுக்குப் பதில் எதிர்த்திருக்கிறாள். மாமியை அவமதிக்க அவள் சற்றும் தயங்கவில்லை. ஏன் அன்று தனக்கு அம் மாதிரியான கெட்ட புத்தி தோன்றியதென்பது அவளுக்குச் சிறிதும் விளங்கவில்லை. இவ்வளவு நாட்கள் மனப்பூர்வமாக அந்தச் சம்பந்தத்தை எதிர்த்து வந்ததற்கு மாறாக இன்று அவளுடைய மனமும் உடலும் பழைய பிடிவாதத்தைத் தாக்கின.

அவள் மிக்க கோபத்துடன் தனக்குள் விவாதிக்கலானாள்; 'நான் இல்லை என்று சொல்லுவதால் விலகிவிட, இதென்ன நானகச் செய்து கொண்டதா? அப்படி அது விலகிவிடுவதானால், உண்மையாக அவர் கணவராக இல்லாவிட்டால், என் ஹிருதயத்திலுள்ள பக்தி ஆசை இவைகளெல்லாம் ஏன் அவரை நோக்கி ஒன்று திரளுகின்றன? ஒரு நாளைக் குடும்பப் பேச்சுவார்த்தைகளினாலேயே, ஒரு வேளை செய்த மிகச் சிறிய சேவையினாலேயே அவர்பால் என் உள்ளத்தில் இவ்வளவு அன்பு எங்கிருந்து வந்தது?' அவள் திரும்பத் திரும்ப உறுதியாக இதையே சொல்லலானாள்: 'நான் எவ்வளவு சப்தமிட்டுச் சொன்னபோதிலும் அது ஒருபோதும் உண்மையல்ல; எனக்கு உள்ள கெட்ட பெயர் நியாயமானதன்று. என் தாய் அவமானம் சகிக்காமல் கோபம் பொங்க இந்தச் சம்பந்தத்தை அறுத்து அழிக்கமுடியாத இந்தக் களங்கத்தை என் தலைமீது சுமத்திப்போய்விட்டாள்.'

சிறிதுநேரம் பேசாமல் இருந்து பிறகு மனத்திற்குள், 'அம்மாவோ இறந்துவிட்டாள். எது உண்மை எது பொய் என்று நிரூபிக்க ஒரு வழியும் இல்லை. ஆயினும் நான் என்ன சொன்னபோதிலும் சரி; நான் அவருடைய தர்மபத்தினி என்பதை அவர் தமக்குள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். பின் ஏன் அவர் என்னுடைய இந்த அனுசிதமான செய்கையைப் பொறுத்துக்கொண்டிருந்தார்? ஏன் அவர் உரிமையுடன் இங்கே வரக்கூடாது? ஏன் அவர் என்னுடைய அகங்காரத்தையெல்லாம் அடக்கி அவருக்கு இஷ்டமான இடத்திற்கு என்னை இழுத்துக்கொண்டு போகக்கூடாது? அதை மறுக்கவோ அதற்கு எதிராகச் சொல்லவோ நான் யார்? என்னுடைய நிராகரிப்பை ஏற்றுக்கொள்ளக்கூட அவருக்கு நியாயம் ஏது?' என்று எண்ணமிட்டாள்.

அவளுடைய சரீரம் திடீரென்று ஒரு முறை நடுங்கியது. அதனால் அவள் கையால் அணைத்த சரணனின் தூக்கம் கலைந்தது. "என்ன அம்மா?" என்று கேட்டான் அவன்.

குஸுமா அவனைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு, "கண்ணே, சரண், சொல்லு: நீ யாரை அதிகமாக விரும்புகிறாய்? அப்பாவையா? என்னையா?" என்று கேட்டாள்.

சரணன் சட்டென்று, "உன்னைத்தான்" என்று பதிலளித்தான்.

"சரண், நீ பெரியவனானபிறகு உன் அம்மாவிற்குச் சாதம் போடுவாயா?

"உம்! போடுவேன்."

"உன் அப்பா என்னை வெளியே விரட்டினால் நீ உன் அம்மாவைக் காப்பாற்றுவாயா?"

"ஓ, கட்டாயம் காப்பாற்றுவேன்."

சரணனுக்கு எந்தச் சமயத்தில் தாய்க்கு என்ன கொடுக்கவேண்டும் என்பது தெரியாது. ஆனால் எந்த நிலைமையிலும் தன் புதுத் தாய்க்குக் கொடுக்கக்கூடாதது ஒன்றும் இராது என்பது மாத்திரம் தெரியும்.

குஸுமாவின் கண்களில் நீர்த்துளிகள் பெருகி வழிந்தன. சரணன் தூங்கியவுடன் அவள் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு அவன் பக்கம் பார்த்துத் தன் மனத்திற்குள் 'எனக்கென்ன பயம் இருக்கிறது? என் மகன் இருக்கிறான். யார் காப்பாற்றினாலும் காப்பாற்றாவிட்டாலும் இவன் காப்பாற்றிவிடுவான்' என்று சொல்லிக்கொண்டாள்.

மறுநாள் சூரியோதயமான சிறிது நேரத்திற்குப் பிறகு தாயும் மகனும் நதியில் ஸ்நானம் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவந்தபோது வீட்டின் முற்றத்தில் ஒரு நடுத்தர வயதுள்ள ஸ்திரீ நின்றுகொண்டு ஏதேதோ கேள்விகளை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். குஞ்சநாதன் வினயத்துடன் தக்க பதில் சொல்லிக்கொண்டிருந்தான். அவள் குஞ்சநாதனின் மாமியார். அவள் சும்மா சந்தோஷத்தின்பேரில் தன் மருமகனின் வீடு வாசல்களைப் பார்க்க வரவில்லை. தன்னுடைய ஒரே பெண்ணை என்றாவது

ஒருநாள் இங்கே அனுப்புவதற்கு இந்த இடம் பயமற்றுச் சௌகரியமாக இருக்கிறதா இல்லையா என்பதைத் தன் கண்ணாலே பார்த்து நிர்ணயித்துக் கொண்டு போகத்தான் வந்திருந்தாள்.

திடீரென்று குஸுமா வந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்து அவளையே பார்க்கலானாள். அவளுடைய யௌவனத்தின் சோபையை அவள்



அணிந்திருந்த ஈரத்துணி மறைக்கவில்லை. அவளுடைய பொன் போன்ற மேனி ஈரப்புடைவையை ஊடுருவிக்கொண்டு வெளியே பிரகாசித்தது. நனைந்திருந்த அவள் தலைமயிர் முதுகுமுழுதும் புரண்டு முழங்காலைத் தொட்டுப் பறந்துகொண்டிருந்தது. இடது புறத்து இடுப்பில் தண்ணீர்க் குடத்தையும் வலது கையில் சரணனையும் அவள் பிடித்துக்கொண்டிருந் தாள். சரணன் கையிலும் தண்ணீர் நிறைந்த ஒரு சிறு செம்பு இருந்

தது. உலகில் இம்மாதிரியான தாய் உருவங்கள் சில சமயம் தென்படும். அப்படித் தென்படும்பொழுது ஆச்சரியமடைந்து அவர்களையே பார்த்துக் கொண்டிருக்கத்தான் தோன்றும். குஞ்சநாதனும் கண்கொட்டாமல் அவள் பக்கம் பார்த்தான். இதைக் கண்டு குஸுமாவுக்கு வெட்கமாகப் போய் விட்டது. அவள் அங்கிருந்து வேகமாக உள்ளே செல்ல ஆரம்பித்ததும் குஞ்சனின் மாமியார் சட்டென்று, "இவள்தான் குஸுமாவா?" என்று கேட்டாள்.

குஞ்சன் சந்தோஷத்துடன், "ஆமாம் அம்மா; இவள்தான் என் தங்கை" என்றான்.

வீடெல்லாம் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. குஸுமா குடத்தை இறக்கி அங்கேயே வைத்துவிட்டு அவளுக்கு நமஸ்காரம் செய்தாள். தாய் செய்ததைப் பார்த்துச் சரணனும் நமஸ்காரம் செய்தான்.

குஞ்சனின் மாமியார், "இந்தப் பையனை முன்பு எங்கேயோ பார்த்த தாக ஞாபகம் வருகிறதே" என்றாள்.

சரணன் சட்டென்று, "நான்தான் சரணன்" என்று தன்னை அறி முகப்படுத்திக்கொண்டு, "நானும் பாட்டியும் உங்கள் வீட்டிற்கு மாமாவுக் குப் பெண் பார்க்க வந்திருந்தோம்" என்றான்.

குஸுமா வாஞ்சையுடன் மெல்லச் சிரித்துக்கொண்டே சரணனைத் தன்னிடம் இழுத்து, "இல்லையடா! அந்தமாதிரி சொல்லக்கூடாது. மாமி யைப் பார்க்கவந்தோமென்று சொல்லவேண்டும்" என்றாள்.

"சரிதான், பிருந்தாவனன் பிள்ளையா? உம்...இந்த வெட்டுணிக்கு இருக்கிற பேச்சைப் பார்" என்றாள் குஞ்சன் மாமியார்.

சட்டென்று ஏற்பட்ட அதிக பிரமிப்பினால் குஸுமா தன் சகோ தரன் முகத்தை ஒருதரம் பார்த்துவிட்டுப் பிறகு அதிசயமோ, கல்வியோ, வாஞ்சையோ கடுகளவும் தோற்றாத அந்த ஸ்திரீயின் முகத்தை ஒரு முறை பார்த்துக் குடத்தை எடுத்துக்கொண்டு சரணனைக் கையில் பிடித்த படியே சமையலறைக்குள் சென்றாள். திடீரென்று போக அங்கே என்ன நடந்துவிட்டது!

குஞ்சன் அறியாதவன்தான். ஆயினும் தன் மாமி சொன்ன வார்த்தை அவனுக்கும் சுருக்கென்று பட்டது. ஏனென்றால் தன் தங்கையின் குணங்கள் அவனுக்கு நன்றாகத் தெரியும். அவளுடைய முகபாவத்தைக் கண்டதும் இந்தச் சமயம் அவளுடைய மனநிலைமை எப்படி இருக்கிறது என்பதை ஊகித்துக்கொண்டு மனத்திற்குள் வருந்தினான். இனிமேல் தன் மாமியாரைப் பார்க்கக்கூடமாட்டாள் என்று எண்ணினான். அவன் மாமி யாரும் மனத்திற்குள் வெட்கமடைந்தாள். அவளும் இந்தமாதிரி சொல்ல வேண்டுமென்று விரும்பவில்லை. ஏதோ படிப்பும் அப்பியாசமும் இல் லாத தோஷத்தால் அவள் வாயிலிருந்து இந்த வார்த்தை வெளிப்பட்டு விட்டது.

சமையலறையிலிருந்து குஸுமா குஞ்சனின் மாமியாரை நன்ருகப் பார்த்தாள். இன்னும் நாற்பது வயசு பூர்த்தியாகவில்லை. கரையில்லாத சாதாரணப் புடைவை, கழுத்தில் தங்கச் சங்கிலி, காதில் தோடு, கையில் கடகம் வங்கி முதலியவை அணிந்திருந்தாள். தன் மாமியாருடன் அவளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது குஸுமாவுக்கு அவளிடம் வெறுப்பு ஏற்பட்டது.

அவள் குஞ்சனிடம் பேசிக்கொண்டிருந்தாள். பேசிக்கொண்டிருப்பது சரியாகக் கேட்காவிட்டாலும் தன் சம்பந்தமாகத்தான் பேசுகிருர்கள் என்பதைக் குஸுமா நன்கு அறிந்துகொண்டாள்.

குஞ்சனின் மாமியார் நிறைய வெற்றிலை போட்டுக்கொள்வாள். இது காலையில் ஆரம்பமாகி நாள் முழுவதும் ஓயாமல் நடக்கும். ஸ்நானம் செய்துவிட்டு அனுஷ்டானங்களைப் பூர்த்தி செய்துகொண்டாள். அதற்கு வேண்டிய சகல சாமான்களையும் முகம்பார்க்கும் சிறு கண்ணுடிவரையில் அவள் தானே கொண்டுவந்திருந்தாள்.

குஸுமா நித்தியப்படி பூஜையைச் செய்துவிட்டுச் சமையலறையில் வந்து உட்கார்ந்ததும் அவளும் வந்து அருகில் உட்கார்ந்து சற்றுக் கீழும் மேலும் பார்த்துவிட்டு, "ஏண்டியம்மா! என்ன, உன் கழுத்தில் மாலையையும் காணேம். நீ திலகம் இட்டுக்கொள்ளவுமில்லை. நீ என்ன வைஷ்ணவப் பெண்ணடி அம்மா!" என்ருள்.

குஸுமா சுருக்கமாக, "நான் இதெல்லாம் செய்துகொள்வதில்லை" என்று பதில் சொன்னுள்.

"இல்லை என்று சொல்லிவிட்டால் ஆகிவிடுமா? அப்படியானுல் உன்னிடம் ஒரு பஞ்சபாத்திரம் தண்ணீர்கூட யாரும் வாங்கிக் குடிக்க மாட்டார்களே."

குஸுமா அவள் பக்கம் திரும்பி, "அப்படியானுல் உங்களுக்குச் சமையலுக்குத் தனியாக ஏற்பாடு செய்யட்டுமா?" என்று கேட்டாள்.

"நான்தான் வீட்டுமனுஷியாயிற்றே; உன் கையால் சாப்பிட்டுவிடுவேன். ஆனுல் வேறு யாரும் சாப்பிடமாட்டார்கள்."

குஸுமா ஒரு பதிலும் சொல்லவில்லை. இதற்குள் குஞ்சன் உள்ளே வந்து, "சரணன் எப்பொழுது வந்தான்?" என்று கேட்டான்.

"நேற்றுச் சாயங்காலம் வந்தான்" என்ருள் குஸுமா.

அப்போது குஞ்சனின் மாமியார் அவனைப் பார்த்து, "இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன்: பிருந்தாவனன் இனி இவளை அழைத்துக்கொள்ளப்போவதில்லையாமே! ஆனுல் பையனை என்னவோ வேலைக்காரனுடன் அனுப்பியிருக்கிருனே!" என்ருள்.

குஞ்சன் ஆச்சரியத்துடன், "நீங்கள் இதை எங்கே மாமி கேள்விப்பட்டீர்கள்?" என்று கேட்டான்.

மாமியார் சற்றுப் பெருமையாக, "எனக்கு இன்னும் நான்கு காதுகளும் நான்கு கண்களும் இருக்கின்றன. நான் எதைக் கேட்கிறேனோ அதைச் சரியாகக் கேட்பேன். அவர்கள் எவ்வளவோ சொன்னார்கள்; கேட்டார்கள்; வற்புறுத்தினார்கள்; வெயிலில் வந்து போனார்கள். ஆயினும் உன் தங்கை ஒப்புக்கொள்ளவில்லை. ஜனங்கள் நாலுபேர் நாலுவிதமாகச் சொல்வார்கள். தெருவில் வயசுப்பிள்ளைகளும் இருக்கின்றனர். உன் தங்கைக்கும் இது பருவகாலம். நல்ல பொன்போன்ற அழகு. மனமும் குரங்கும் ஒன்று என்று சொல்வார்கள். வழுக்கிவிழ வெகு நேரமாய் விடாது" என்றாள்.

குஞ்சன் ஆமோதித்துக்கொண்டே, "ஆமாம், சரியாகத்தான் சொல்லுகிறீர்கள்!" என்றான்.

குஸுமா சட்டென்று தலை நிமிர்ந்து கண்களை உருட்டி விழித்து, "அண்ணா, நீ இங்கே உட்கார்ந்துகொண்டு என்ன செய்கிறாய்? எழுந்து போ, இதைவிட்டு" என்றாள்.

குஞ்சன் மென்று விழுங்கிக்கொண்டே அதைவிட்டு எழுந்தான். ஆனால் அவனுடைய மாமியார் சற்று உரக்க, "இந்தமாதிரி அண்ணன் வாயை மூடிவிடுவதால் ஊர் வாயை மூடிவிடமுடியுமா? இப்பொழுது நீ நதியில் ஸ்நானம் செய்து தலையை அவிழ்த்துவிட்டுக்கொண்டு ஈரப் புடைவையுடன் வந்திருக்கிறாய். இப்பொழுது இந்த நிலையில் உன்னைப் பார்க்கிற தபஸிகள்கூட மனம் கலங்குவார்களா மாட்டார்களா? உன் அண்ணனே மார்பிலே கைவைத்துச் சொல்லட்டும்" என்றாள்.

குஸுமா இரைந்து, "உன் கால்களைப் பிடித்துக்கொள்கிறேன் அண்ணா; இங்கே நின்று கேட்டுக்கொண்டிராதே; இதைவிட்டுப் போயேன்" என்றாள்.

அவளுடைய கூச்சல், முகம், கண் இவைகளைப் பார்த்துக் குஞ்சன் பயந்து ஓடிவிட்டான். அடுப்பில் கறி தாளித்துக்கொண்டிருந்த வாணலியைக் கீழே இறக்கி எறிந்துவிட்டுக் குஸுமா சமையலறையிலிருந்து சட்டென்று வெளியே போய்விட்டாள்.

குஞ்சனின் மாமியார் முகம் சுண்டிவிட்டது. அவள் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். கலகம் செய்வதில் தன்னைவிடச் சாமர்த்தியசாலி இந்த உலகில் யாருமில்லை என்று அவள் நினைத்தாள். இந்தச் சகாயமற்ற ஏழைப்பெண் தன்னை இம்மாதிரி பிரமிக்கச் செய்துவிட்டுப் போவாள் என்று அவள் கனவிலும் எண்ணவில்லை.

அத்தியாயம் 8

குஸுமாவினால் மற்ற விஷயங்களை அறிய முடிந்தாலும் முடியாவிட்டாலும் தன் தமையனுடைய மாமியார் அன்று சண்டைபோடத்தான் கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறாளென்பதை அறிந்தாள்.

இதைத்தவிரக் குஞ்சனின் மாமியார் சொன்னதில், பிருந்தாவனன் அழைத்துக்கொண்டு போகிறேன் என்று பிரியப்பட்டபோதிலும், குஸுமா ஏதோ விசேஷமான ரகசியக் காரணங்களால் செல்லவில்லை என்ற கருத்தும் தொனித்தது. அந்த ரகசியமான காரணம் என்னவென்பது அவளுக்குத் தெரியாமல் இல்லை; தெரியும். பிருந்தாவனனும் இதை உணர்ந்தே அவளை ஏற்றுக்கொள்ளும் தீர்மானத்தை நழுவ விட்டுவிட்டான். இந்தச் சங்கேதந் தான் குஸுமாவுக்குப் பெரிதும் கோபத்தை உண்டாக்கிவிட்டது. இதோடு தான் சமையலறையிலிருந்து அம்மாதிரி எழுந்து வந்தது தவறென்பதையும் அவள் உணர்ந்தாள்.

குஞ்சன் மாமியார் அன்று முழுவதும் ஒன்றும் சாப்பிடவில்லை. கடைசியில் மிகவும் வேண்டிக்கொண்டதன்மேல் இரவு கொஞ்சம் சாப்பிட்டாள். தன்னுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்காகக் குஞ்சன் நாள் முழுவதும் தன் தங்கையை என்ன என்னவோ சொல்லிக்கொண்டிருந்தான். கோபம், மானம், அவமானம் எல்லாம் சாந்தம் அடைந்தபிறகும் அவன் தன் தங்கையைச் சாப்பிடும்படி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

மறுநாள் குஞ்சனுடைய மாமியார் தன் வீட்டிற்குப் புறப்படலானாள். அப்பொழுது குஸுமா வந்து அவளுக்கு நமஸ்காரம் செய்து அவள் பாததூளியைச் சிரமேல் தரித்து அவள் எதிரில் பேசாமல் நின்றாள். ஆனால் குஞ்சனின் மாமியார் அவளிடம் ஒன்றும் பேசவில்லை. தன் மருமகனைப் பார்த்து, "உனக்கு வீடுவாசல் நிலபுலன்களைப் பார்க்கவேண்டிய வேலை இருக்கிறது. இங்கே தங்கையுடன் உட்கார்ந்திருந்தால் ஒன்றும் நடக்காது" என்றாள்.

இதற்குப் பதில் சொல்லும் ஆற்றல் குஸுமாவுக்கு இல்லை. ஆகையால் பேசாமல் தலைகுனிந்து இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். வாஸ்தவந் தானே? ஒருவன் இங்கும் அங்கும் இரண்டிடத்துக் காரியங்களையும் எப்படிப் பார்க்கமுடியும்?

இது நடந்து இரண்டு மாதங்கள் கழிந்தன. இதன் மத்தியில் குஞ்சனை அவன் மாமியார் முற்றும் மாற்றி ஒரு புது மனிதனாகவே ஆக்கிவிட்டாள். அவன் அநேகமாக இப்பொழுது இங்கே இருப்பதே இல்லை. எப்பொழுதாவது தங்கினாலும் குஸுமாவிடம் சரியாக முகம் கொடுத்துப் பேசுவதில்லை.

'எப்படி இருந்தவன் எப்படி ஆய்விட்டான்?' என்று எண்ணிக் குஸுமா ஆச்சரியப்பட்டாள். 'உலகில் அந்தமாதிரி இருப்பவர்களே இம்மாதிரி மாறுகிறார்கள். அதுவும் குஞ்சனைப்போன்ற சிறுமைப் புத்தியுடையவர்கள் இம்மாதிரி மாறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை' என்பதை அவள் அறிந்திருந்தால் துக்கமோ ஆச்சரியமோ அடைந்தே இருக்கமாட்டாள்.

அண்ணன் தங்கைக்குள் முன்போன்ற அன்பு இல்லை. இப்பொழுது சண்டை சச்சரவுகளும் நேருவதில்லை. சண்டைபோடக் குஸுமாவுக்கு மனமும் இல்லை; தைரியமும் இல்லை; அன்று ஒருநாள் வீட்டில் தனியாக இருப்பதற்குப் பயந்து வியாகுலம் அடைந்தாள். இப்பொழுதோ எத்தனையோ இரவு தனியாகக் கழிக்கவேண்டி இருக்கிறது. துக்கத்தினால் அவளுடைய பயங்கூட அழிந்துவிட்டது.

இந்தத் துக்கத்தைக்கூட அவள் பெரிதாகப் பாராட்டவில்லை. ஆனால் தன் சகோதரனுக்கு நாம் ஒரு சுமையாக இருக்கிறோம் என்ற துக்கம் மாத்திரம் உட்காரும்போதும் எழுந்திருக்கும்போதும் அவள் மனத்தை முள்ளைப் போல் குத்திக்கொண்டிருந்தது. இன்று திடீரென்று தான் இறந்துவிட்டால் தன் சகோதரன் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வராதென்றும் அவள் மனம் எண்ணியது. பின்னாலே அவன் அப்படி இருக்கும் பிழையைத் தன் கண்ணீர் வெள்ளத்தால் மாற்றிவிடுவதற்கு எண்ணியவள்போல் தன் வீட்டின் கதவைத் தாழிட்டுக்கொண்டாள். அன்று முழுவதும் கதவைத் திறக்கவே இல்லை.

தன் மனோநிலைமை மிகவும் தாங்கமுடியாத சமயத்தில் சரணனின் வார்த்தைகளை நினைத்துக்கொண்டாள். அவன், "அம்மா! அம்மா!" என்று ஓடிவருவான்; கொஞ்சத்தில் அவளை விட்டுப் போகமாட்டான்.

ஒருநாள் தன் ஸங்கோசத்தை எல்லாம் விட்டுப் பிருந்தாவனனுக்கு ஒரு கடிதம் எழுதி அதைச் சரணனிடமே கொடுத்தனுப்பினாள். அதில் இருந்த சங்கேதங்கள் பிருந்தாவனனிடம் பயனற்றுப்போயின. காரணம், குஸுமா என்ன எதிர்பார்த்தாளோ, எதற்கு ஆசைப்பட்டாளோ, அது கிடைக்கவில்லை. ஆசைக்கு இரண்டு அன்பு வார்த்தைகள் எழுதிய கடிதங்கூட வரவில்லை. பதிலாக வந்தவை கொஞ்சம் ரூபாய்களே. ஏமாற்றமடைந்து, அவற்றையும் வாங்கிக்கொள்ளவேண்டிய நிலையில் இருந்தாள். அன்று இரவு குஞ்சன் வீட்டிற்கு வந்தான். மறுநாள் பொழுதுவிடிந்ததும் புறப்படத் தயாராகி வெளியே வந்ததும், குஸுமா அவனருகில் வந்து நின்றாள். இப்பொழுதெல்லாம் சகோதரனிடம் எந்த விஷயத்தைப்பற்றியும் வற்புறுத்துவதும் இல்லை; அவனை எந்த விஷயத்திலும் தடுப்பதும் இல்லை. இன்று என்னவோ தெரியவில்லை, அவள் தன் இனிய குரலால், "அண்ணா, என்ன இவ்வளவு சீக்கிரமாகவே போகப்போகிறாயா? சமையல் சீக்கிரம் ஆகிவிடும்! ஒருவாய் சாப்பிட்டுவிட்டுப் போகக்கூடாதா?" என்றாள்.

குஞ்சன் தன் முகத்தைத் திருப்பிக் கொஞ்சம் சிடுசிடுப்புடன், "என்ன நினைத்தேனோ அதே ஆயிற்று. போகும் சமயத்தில் தடங்கல் செய்கிறாயா?" என்றான்.

கஷ்டப்பட்டுப் பட்டுக் குஸுமா மிகவும் சகிக்கும் குணமுடையவளாகி இருந்தாள். ஆயினும் அகாரணமாக அவன் இந்தமாதிரி முகத்தைச் சுளிப்பதைக் கண்டு அவள் மனம் ஆத்திரத்தால் பொங்கியது. பதிலுக்கு

அவளும் அந்தமாதிரி முகத்தைத் தூக்கிக்கொள்ளவில்லை. ஆனால் கடுமை யான குரலில், "பயப்படாதே அண்ணு; நான் தடுப்பதனால் நீ செத்துப் போய்விடமாட்டாய்! இன்றுவரை உன்னை எத்தனையோ தடவைகள் போகும்போது கூப்பிட்டிருக்கிறேன். அவ்வளவையும் தாண்டி நீ பெரிய மனிதனாகிவிட்டாய்! இறந்து விடவில்லை" என்றாள்.

"நான் மனிதன் அல்ல!"

"இல்லை! நாய் பூனைகூட அல்ல—அவைகூட உன்னைவிட மேலா னவை; இந்தமாதிரி நன்றிகெட்டவை அல்ல" என்று சொல்லி அவள் சட்டெனத் தன்னறைக்குள் சென்று படாரென்று கதவைச் சார்த்திக் கொண்டாள். குஞ்சன் சிறிதுநேரம் ஊமைபோல் நின்றுவிட்டுப் பிறகு மெள்ள மெள்ளச் செல்லலானான்.

வெளிக்கதவு திறந்தபடியே கிடந்தது. சில மணி நேரத்திற்குப் பிறகு பிருந்தாவனன் வந்தான். உள்ளே வந்து பார்த்ததும் ஆச்சரியமடைந் தான். குஞ்சனின் அறை வெளியே தாழிடப்பட்டிருந்தது; குஸுமா வின் அறை உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. சமையலறையோ திறந் திருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தபொழுது நாய் ஒன்று சோற்றைத் தின்றுவிட்டு உர் உர் என்று வேகமாக வெளியேறியது.

சமையல் சிறிது ஆனதும் ஆகாததுமாக இருந்தது. அடுப்பு அணைந்து கிடந்தது. சரணனும் வேலையாளுடன் கால்நடையாக வந்திருந்தான். ஆகையால் சற்றுப் பின்னால் வந்தான். பத்து நிமிஷம் கழித்து அவன் உரக்க, "அம்மா! அம்மா!" என்று கத்தித் தன் வரவை அக்கம் பக்கத்து வீட்டாருக்கும் கேட்கும்படி அறிவித்துக்கொண்டே உள்ளே வந்தான்.

சட்டென்று சரணனின் குரலைக் கேட்டுக் குஸுமா கதவைத் திறந்து வெளியே வந்ததும், நீர் நிறைந்த அவள் கண்களின் கலங்கிய பார்வையை முதலில் பிருந்தாவனன் கண்டான்; ஆச்சரியமும் ஆவலும் கொண்டான்.

இந்தமாதிரி திடீரென்று அவன் வருவானென்று அவள் நம்பவில்லை; எண்ணவும் இல்லை. ஓர் அடி பின்னால் நகர்ந்து தலைப்பால் தலையை மறைத் துக்கொண்டு உள்ளே சென்று ஓர் ஆசனத்தைக் கொண்டுவந்து போட் டாள். இதற்குள் சரணன் ஓடிவந்து அவள் கால்களைக் கட்டிக்கொண் டான். குஸுமா அவனை இடுப்பில் எடுத்துக்கொண்டு முத்தமிட்டுச் சற்று நகர்ந்து ஒரு தூண் மறைவில் வந்து நின்றாள்.

தாயின் முகத்தைக் கண்டு சரணன் அழுகை பொங்கிய குரலில், "அப்பா, அம்மா அழுதுகொண்டிருக்கிறாள்" என்றான்.

பிருந்தாவனனுக்கு இது தெரியும். அவன், "என்ன விஷயம்? ஏன் கூப்பிட்டனுப்பினாய்?" என்று கேட்டான்.

குஸுமா அப்பொழுதுங்கூடச் சமாளித்துக்கொள்ள முடியாத நிலை மையில் இருந்தாள். ஆகையால் அவளால் பதில் சொல்ல முடியவில்லை,

பிருந்தாவனன் மறுபடியும், "இங்கே வந்து அண்ணாவைச் சந்திக்க வேண்டும் என்று கடிதம் எழுதியிருந்தாயே; எங்கே அவன்?" என்று கேட்டான்.

குஸுமா அழுகை தொண்டையை அடைக்க, "செத்துப்போய்விட்டான்" என்றாள்.

"அடேடே! இறந்துவிட்டானா? என்ன ஆயிற்று?"

அவனுடைய குரலில் மறைந்திருந்த பரிகாசம் இந்த வருத்தமான சமயத்தில் குஸுமாவைப் பின்னும் உறுத்தியது. அவள் தன்னுடைய நிலைமையை மறந்து கோபத்துடன், "பாருங்கள்! இந்தக் கேலியெல்லாம் செய்யவேண்டாம்! வயிறு எரிந்துகொண்டிருக்கிறது. இந்தச் சமயம் இதெல்லாம் நன்றாயிராது. உங்களைக் கூப்பிட்டனுப்பியதற்குப் பதிலாக இந்தமாதிரி பழி தீர்த்துக்கொள்கிறீர்களா?" என்று சொல்லி மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய அழுகையொலியைப் பிருந்தாவனன் நன்றாகக் கேட்டான். ஆயினும் அவன் மனம் சற்றேனும் உருகவில்லை. சிறிதுநேரம் பொறுத்து அவன், "என்னை எதற்காகக் கூப்பிட்டனுப்பினாய்?" என்று கேட்டான்.

குஸுமா கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அடைபட்ட குரலுடன், "வராவிட்டால் நான் யாரிடம் சொல்லிக்கொள்வது? முன்பெல்லாம் உங்கள் வேலைநிமித்தமாக இந்தப் பக்கம் வருவீர்கள். இப்பொழுதோ ஞாபகமறதியாய்க்கூட இந்தப் பக்கம் காலெடுத்து வைப்பதில்லை" என்றாள்.

"மறக்கவில்லை. அதனால் வராமல் இருக்கவும் இல்லை. மறக்கும்போல் இருந்தால் வந்திருப்பேன். அதிருக்கட்டும். அதையெல்லாம் விட்டுவிடு. விஷயம் என்ன? சொல்" என்றான்.

"இந்தமாதிரி பரிகாசமாகப் பேசினால் எப்படிச் சொல்லமுடியும்?" என்றாள்.

பிருந்தாவனன் சிரித்தான். பிறகு, "பரிகாசம் செய்யவில்லை. இயல்பாகவே அறிய விரும்புகிறேன். எப்படிச் சொன்னால் சௌக்கியமாக இருக்குமோ அப்படிச் சொல்" என்றான்.

"நான் வெகு நாட்களாகத் தங்களிடம் ஒரு விஷயம் கேட்கவேண்டுமென்ற ஆவலோடு இருக்கிறேன். நான் தலையை விரித்துப் போட்டுக்கொண்டு சாலையில் என் அழகைக் காட்டிக்கொண்டு திரிகிறேன் என்ற வதந்தியை யார் கிளப்பிவிட்டது?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வியைக் கேட்டுப் பிருந்தாவனன் பிரமித்துச் சிறிது நேரம் இருந்தான். பிறகு, "நான்தான். அப்புறம்?" என்றான்.

"நீங்கள் இந்த வதந்தியைக் கிளப்பிவிட்டீர்கள் என்று நான் சொல்லவில்லை, அம்மாதிரி நான் நினைக்கவும் இல்லை. ஆனால்—"

வார்த்தைகள் முடியுமுன்பே பிருந்தாவனன் இடைமறித்துப் பேசலானன். "அன்றைத் தினம் நான் பெரிய மனிதனென்று சொன்னுய். உன்னைக் கொடுமை செய்ய என் தாயையும் சகோதரரையும் அழைத்துக்கொண்டு உன் வீட்டிற்குச் சாப்பிட வந்தேன் என்ருய். அன்றைத் தினம் செய்ததை இன்று செய்ய முடியாதா? அந்த அபராதத்திற்காக என் தாய்க்குத் தண்டனை அளிப்பதில் நீயும் சளைக்கவில்லையே" என்ருன்.

குஸுமா மிக்க வேதனையும் துக்கமும் கொண்டவளாய் மெள்ள மெள்ள, "நான் பெரிய அபராதம் செய்துவிட்டேனென்பது வாஸ்தவம். அந்தச் சமயம் என்னுல் உங்களை அறிந்துகொள்ளமுடியவில்லை" என்ருள்.

"இப்பொழுது அறிந்து கொண்டாயா?"

குஸுமா மௌனமானுள். பிருந்தாவனனும் சிறிது நேரம் சும்மா இருந்து பிறகு சட்டென்று, "அதிருக்கட்டும்; ஒரு நாய் வந்து சமையலறையில் புகுந்து எல்லாவற்றையும் உருட்டிற்று. அதைப் போய்ப் பார்" என்ருன்.

குஸுமா பதற்றமோ சஞ்சலமோ அடையாமல் மிகுந்த சாந்தத்துடன், "உருட்டிவிட்டுப் போகட்டும்! நான் சாப்பிடப் போவதில்லை. முதலிலேயே தெரிந்திருந்தால் சமையலே செய்திருக்க மாட்டேன்" என்ருள்.

"ஒருகால் இன்று ஏகாதசி விரதமோ?"

குஸுமா தலை குனிந்துகொண்டே, "தெரியாது. ஆனுல் நான் அதொன்றும் செய்வதில்லை" என்ருள்.

"ஏகாதசி விரதம் இருப்பதில்லையா?"

குஸுமா முன்போலவே பதில் சொல்லாமல் தலை குனிந்து நின்றிருந்தாள்.

பிருந்தாவனன் சற்றுச் சந்தேகத்தொனியில், "முன்பெல்லாம் செய்து கொண்டிருந்தாயே; இப்போது ஏன் திடீரென்று விட்டு விட்டாய்?" என்று கேட்டான்.

திரும்பத் திரும்பத் தன்னைக் குத்திக்காட்டினதில் குஸுமா கலங்கிப் போனுள். மெதுவாக, ஆனுல் சற்று அழுத்தத்துடன், "செய்யவில்லை. அண்ணுவின் வியவகாரம் சகிக்கவே முடியவில்லை. உண்மையாகச் சொல்கிறேன்: நீங்கள் பண்ணும் காரியங்களால் பேசாமல் கழுத்தில் கயிற்றை மாட்டிக்கொண்டு செத்துப்போகலாம் என்று எண்ணுகிறேன்" என்ருள்.

"இல்லை. அப்படிச் செய்யவேண்டாம். என் வியவகாரத்தைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம். யோசிக்காமலிருந்தாலும் அதைப்பற்றி ஒரு ஹானியும் இல்லை. ஆனுல் உன் அண்ணுவின் வியவகாரம் ஏன் சகிக்க முடியவில்லை?" என்று கேட்டான்.

குஸுமா மிகக் கலக்கமடைந்தாள்; "அது பெரிய ராமாயணம். அதைச் சொல்ல எனக்குத் தைரியம் இல்லை. அதன் கருத்து இதுதான்: அவன்

தன்னுடைய வீடு வாசலை விட்டுவிட்டு என்னைப்பற்றிக் கவலை கொள்ள முடியாது. அவன் மாமியார் அவனுக்கு உத்தரவு கொடுக்கவில்லை. எனக்குச் சோறு துணிக்குக் கொடுத்துக்கொண்டிருந்ததையும் நிறுத்தி விட்டான். சரணன் தன் தாயின் பாரத்தை ஏற்றுக்கொண்டிராவிட்டால் முன்பே பசியால் வாடி இறந்திருப்பேன். இந்தச் சமயம் நான்.........'' சட்டென்று அவள் நிறுத்திவிட்டு மேற்கொண்டு சொல்வது உசிதமா அல்லவா என்று யோசிக்கலானாள். பிறகு அவனைப் பார்த்து, ''இப்பொழுது நான் உங்களுக்கு ஒரு பெரிய பாரமாகிவிட்டேன். ஆகையால் இங்கே ஒரு நாள், ஒரு நிமிஷங்கூட நான் இருக்க விரும்பவில்லை'' என்றாள்.

பிருந்தாவனன் சிரித்துக்கொண்டே, ''இதனால்தான் இருக்க விரும்ப வில்லையா?'' என்று கேட்டான்.

குஸுமா ஒரு முறை நிமிர்ந்து பார்த்துத் தலை குனிந்துகொண்டாள். இந்தச் சகஜமான ஹாஸ்யக் கேள்வியில் புகுந்திருந்த உள் அர்த்தம் அவள் மனத்தில் ஊசிபோல் குத்தியது.

''சரணன் தன் தாயைக் காப்பாற்றும் பொறுப்பைக் கட்டாயம் ஏற்றுக்கொள்வான். நீ எங்கே இருக்க விரும்புகிறாய்?'' என்று கேட்டான் பிருந்தாவனன்.

குஸுமா முன்போல் தலை குனிந்துகொண்டே, ''எனக்கு எப்படித் தெரியும்? அவர்களுக்குத்தான் தெரியும்'' என்றாள்.

''அவர்கள் யார்? நானா?''

குஸுமா மௌனமாகவே, ''ஊம்'' என்று உரைத்தாள்.

''அது நடக்காத விஷயம். நான் உன்னைப் பற்றிய எந்த விஷயத்திலும் தலையிட முடியாது. அம்மாதான் ஏதாவது செய்யமுடியும். நீ அவளிடம் இதுவரை எந்தமாதிரி நடந்துகொண்டிருந்தாலும் சரி; இனிமேலாவது சரணனை அழைத்துக்கொண்டு அவளிடம் செல். அவள் ஏதாவது உபாயம் கட்டாயம் செய்வாள். ஆனால் உன் அண்ணன்—?'' என்றான் பிருந்தாவனன்.

குஸுமாவின் கண்களிலிருந்து நீர் சொரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டே, ''நான்தான் சொன்னேனே, அண்ணா இறந்து போய்விட்டா னென்று. அதிருக்கட்டும். இதைச் சொல்லுங்கள்: நான் எப்படி இந்தப் பகலில் பிச்சைக்காரிபோல் கால் நடையாக நடந்து உங்கள் கிராமம்வரை வந்து சேர்வது?'' என்று கேட்டாள்.

''அது எனக்குத் தெரியாது. வர முடியுமானால் நல்லது. இதைத் தவிர நேரான வழி எனக்கொன்றும் தோன்றவில்லை'' என்றான் பிருந்தா வனன்.

குஸுமா சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு, ''நான் வர வில்லை'' என்றாள்.

''உன் இஷ்டம்!''

மிக்க சாதாரணமானதும் சுருக்கமானதுமான பதில் இது. இதில் மறைவான அர்த்தமோ சிக்கலோ ஒன்றும் இல்லை. ஆனால் குஸுமா உண்மையிலேயே இப்பொழுது பயந்துவிட்டாள்.

தன் கணவன் இன்னும் ஏதாவது சொல்லுகிறானா என்று தலைநிமிர்ந்து சிறிது நேரம்வரை அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அதன்பின் மிக்க வணக்கமும் சஞ்சலமும் கொண்டவளாய், "இனி இங்கேயும் எனக்கு நிற்க இடமில்லை. நான் அண்ணாவின்பேரிலும் குற்றம் சொல்லப் பிரியப்படவில்லை. ஏனென்றால் தனக்குக் கெடுதல் செய்துகொண்டு பிறருக்கு நன்மை செய்ய யாரும் விரும்பமாட்டார்கள். என்னவோ, என்னை இந்தமாதிரி சுலபமாக விலக்கி விட்டுவிட முடியாது!" என்றாள்.

பிருந்தாவனன் ஒரு பதிலும் சொல்லாமல் எழுந்து நின்று, "சரி. இப்பொழுது நேரமாகிவிட்டது. சரண், நீ இங்கே இருக்கப்போகிறாயா? வருகிறாயா?—இருக்கிறாயா? நல்லது. குஸுமா, உனக்கு இஷ்டமானால் வா. நீ சரணைக் கையில் பிடித்துக்கொண்டு அம்மாவின்முன் போய் நின்றால் அதனால் ஓர் அவமானமும் இல்லை என்று எண்ணுகிறேன். இருக்கட்டும். நான் செல்கிறேன்" என்று சொல்லிப் பிருந்தாவனன் கிளம்ப ஆரம்பித்ததும், குஸுமா தன் இடுப்பிலிருந்த சரணைக் கீழே இறக்கிவிட்டு எதிரே நின்றுகொண்டு, "இன்று எல்லாவற்றையும் அறிந்துகொண்டேன். இவ்வளவு துக்கத்தையும் வாய்விட்டுச் சொன்னபிறகும், 'நேரம் ஆகிறது; போகிறேன்' என்று சொல்லுகிறீர்கள். நான் ஆதரவற்ற நிலைமையில் இருப்பதை அறிந்தும் நீங்கள் எனக்குப் பாதுகாப்பு அளிக்க விரும்பவில்லை. இனி, உங்களிடம் எனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை; நம்பிக்கையும் இல்லை. ஆயினும் ஒரு வார்த்தை கேட்கிறேன்: சொல்லுங்கள்; விவரமாகச் சொல்வீர்களா?" என்று கேட்டாள்.

பிருந்தாவனன் வருத்தமும் ஆச்சரியமும் அடைந்தவனாய்த் தலைநிமிர்ந்து, "சொல்கிறேன். நான் பாதுகாக்க மறுக்கவில்லை. நீதான் பாதுகாப்பை ஏற்றுக்கொள்ள ஒவ்வொரு தடவையும் மறுக்கிறாய்" என்றான்.

குஸுமா உறுதியான குரலில், "பொய்! அந்தச் சமயம் அம்மாவுக்கு அவமானம் இழைத்து மனவருத்தத்தை உண்டாக்கிவிட்டேன். அந்தத் துக்கம் எனக்குச் சாகுமளவும் மறக்காதென்பதை அந்த அந்தர்யாமிதான் அறிவான். அதனால்தான் இன்று எனக்கு, கணவர், மகன், மாமியார், வீடுவாசல் எல்லாம் இருந்தும் நான் பிறருக்குப் பாரமாய் இருக்கிறேன்; அனாதையாகவும் இருக்கிறேன். இன்று வரையில் புக்ககத்தை எட்டிக்கூடப் பார்க்கமுடியவில்லை. என்னுடைய குற்றம் எவ்வளவுதான் பெரியதாக இருந்தாலும் நான் அந்த வீட்டின் நாட்டுப்பெண்தானே? நான் பிச்சைக்காரியைப்போல் பகலில் நாலுபேர் முன் கால்நடையாக அங்கே செல்லவேண்டுமென்று எப்படித்தான் சொல்கிறீர்களோ? உங்களுக்கு வேறு நேர்மையான வழியொன்றும் தோன்றவில்லை. என்

தோன்றவில்லை தெரியுமா? நாங்கள் ஏழைகள். எங்கள் தாய் எங்களைப் பிச்சை எடுத்துக் காப்பாற்றி வளர்த்துப் பெரியவர்களாக ஆக்கினாள். என் அண்ணா உஞ்சவிருத்தி செய்து காலத்தைக் கழித்து வந்தான். ஆகையால் பிச்சைக்காரியின் பெண் இந்தவிதமாகப் பிச்சைக்காரியைப்போல் போனால், இதில் என்ன பெரிய குறை இருக்கப்போகிறதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்! இது உங்களுடைய பெரும் குற்றம்மாத்திரமா? சகிக்க முடியாத அகங்காரமும் ஆகும். நான் இங்கிருந்தே பசியாலே மடிகிறேன். உங்கள்முன் கையேந்தி உங்களுடைய கேலி, பரிகாசங்களுக்கு நான் பாத்திரமாக இருக்கமாட்டேன்'' என்றாள்.

பிருந்தாவனன் திக்பிரமையடைந்தபடியே கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, "நான் போகிறேன். எனக்கு இனிப் பேசுவதற்கு ஒன்றுமில்லை'' என்றான்.

குஸுமாவும் அதேமாதிரி, "செல்லுங்கள். ஆனால் கொஞ்சம் இருங்கள். இன்னும் ஒரு வார்த்தை இருக்கிறது. தயைசெய்து பொய் சொல்லவேண்டாம்: என் சம்பந்தமாக உங்களுக்கு ஏதாவது சந்தேகம் உண்டா என்று கேட்கிறேன். அப்படி இருந்தால் நான் உங்கள்முன் நின்று சத்தியம் செய்கிறேன்.........'' என்றாள்.

பிருந்தாவனன் இரண்டடி முன்னே வைத்தவன் தடைப்பட்டு நின்றுவிட்டான். பிறகு ஆச்சரியத்தின் மிகுதியால் அவளை இடைமறித்து, "இதென்ன? ஏன் வீணாகச் சத்தியம் செய்துகொண்டிருக்கிறாய்? நான் உன்னைப்பற்றி ஒன்றும் கேள்விப்படவில்லை'' என்று கூறிப் பிறகு அவளுடைய பாதிதிறந்திருந்த முகத்தைப் பார்த்து மிருதுவான குரலில் திடத்துடன், "தவிர, பிறருடைய நடவடிக்கைகளிலும் போக்குவரத்துகளிலும் கவனம் வைப்பது என் சுபாவம் அல்ல; அது உசிதமும் அன்று. உன்னுடைய ஸ்வபாவம், நடவடிக்கை இவற்றைப்பற்றி அறிய எனக்குச் சிறிதுகூட ஆவல் இல்லை. நான் அவற்றைப்பற்றி யோசிக்கவும் விரும்பவில்லை. நான் எல்லோரையும் நல்லவர்களாகவே எண்ணுகிறேன். உன்னையும் அப்படியே எண்ணுகிறேன்'' என்று சொல்லிப் பிருந்தாவனன் மெள்ள மெள்ளச் செல்லலானான்.

குஸுமா இடியோசை கேட்ட ஸர்ப்பம்போல் கலங்கிப்போய் நின்றுவிட்டாள்.

"குளிக்கப்போகவில்லையா, அம்மா?'' என்று கேட்டான் சரணன்.

குஸுமா ஒரு பதிலும் சொல்லாமல் அவனைத் தூக்கிக்கொண்டு தன் அறைக்குச் சென்று கட்டிலில் படுத்து அவனைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள்.

அத்தியாயம் 9

நாட்கள் பல கழிந்தன. மாசிமாதம் போய்ப் பங்குனியும் வந்தது. சரணன் அப்பொழுது சென்றவன் பிறகு திரும்பியே வரவில்லை. அவன்

இங்கே வருவதை வேண்டுமென்று தடுத்திருக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்கியது. அவர்கள் எந்தவிதமான ஸம்பந்தமும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. அங்கிருந்து எந்தத் தகவலும் வருவதில்லை. அவளும் இங்கிருந்து கடிதம் எழுதித் தனக்கு அவமானம் தேடிக்கொள்ள விரும்பவில்லை. சகோதரன் முன்மாதிரியே இருந்தான். பலவகையிலும் குஸுமாவுக்குக் கஷ்டமாகவே இருந்துவந்தது. இதன் மத்தியில் அவள் சகஜமாக வெளியே வருவதையும் போவதையும் நிறுத்திவிட்டாள். விடிய நாலு நாழிகை இருக்கும்போதே நதிக்குச் சென்று ஸ்நானம் செய்து தண்ணீர் கொண்டுவந்துவிடுவாள். வீட்டிற்கு வேண்டிய சாமான்களைக் கோபாலன் என்பவன் தாய் சந்தை கூடும் தினங்களில் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்துவிடுவாள். இந்தமாதிரி வெளி உலகத்திலிருந்து தனக்குத் தானே விலக்கு ஏற்படுத்திக்கொண்டாள் குஸுமா. அந்த நாட்கள் அவளுக்கு மிகப் பாரமாகவும் துக்கமாகவுந்தான் இருந்தன.

குஸுமா நன்றாகத் தையல்வேலை செய்வாள். அவளுடைய உழைப்பிற்கு யாராவது ஏதாவது கொடுத்தால் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வாள். யாரேனும் மறந்துவிட்டால் அவளும் மறந்துவிடுவாள். இம்மாதிரி நல்ல குணங்களினால் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களின் கைக் குட்டை, ரவிக்கை, தலையணை உறை முதலியவைகளை அவளே தைத்துக் கொடுத்து வந்தாள்.

மத்தியான்னம் மூன்றுமணி இருக்கும். வீட்டுத் தாழ்வாரத்தில் ஒரு பாயில் உட்கார்ந்து முதல்நாள் குறையாக விட்டிருந்த ரவிக்கையைத் தைக்க ஆரம்பித்தாள். கை ஓடவில்லை. சென்ற நாட்களின் சம்பவங்கள் அவள் மனத்தில் தோன்றி உலாவலாயின.

பிருந்தாவனன் தன் சகோதரனின் அழைப்பை ஏற்றுக்கொண்டு தன்னுடைய தாய் உறவினர் எல்லோருடனும் வந்தது, தான் ஒன்றும் புரியாமல் தவித்துக் கடைசியில் வெட்கத்தை விட்டு முதல் முதல் தன் கணவனுடன் பேசவேண்டி ஏற்பட்டது முதலிய அன்றைத்தினத்திய நிகழ்ச்சிகள் யாவும் அவள் நினைவிற்கு வந்தன.

அவளுக்குத் துக்கம் சகிக்கமுடியாமற் போகும்போதெல்லாம் அவள் தன் வேலைகளை விட்டுவிட்டு இந்த ஞாபகத்தை வருவித்துக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருப்பது வழக்கம்.

தாய் எப்படித் தன் ஒரே குழந்தையை அன்பாகச் சீராட்டிப் பாராட்டிக் கொஞ்சுவாளோ அதேபோலக் குஸுமாவும் தன்னுடைய இந்த நினைவுகளை வர்ணிக்கமுடியாத வாஞ்சையுடன் பற்பலவிதமாக, பற்பல நோக்கங்களோடு எல்லையற்ற திருப்தியுடன் அனுபவிப்பாள். அந்தச் சமயம் அவள் துக்கம் மறைந்துவிடும்.

அன்றைத்தினம் அவர்களுடைய வாதப்பிரதிவாதம், கூடவந்தவர்களுக்குத் தெரியாமல் அவர்களுக்குச் சாப்பாட்டிற்குச் செய்த ஏற்பாடு,

பிறகு சமயத்தில் செய்து கணவன் மைத்துனன்மார் இவர்களுக்குப் பரிமாறியது, மாமியாருக்குச் செய்த சேவை, கடைசியில் சாயங்காலம் மிருந்திருந்த ஆறிப்போன போஜனத்தைத் தான் உண்டது, இன்னும் இவை போன்றவை அவள் அகக் கண்முன் வந்து நின்றன.

குஸுமாவின் கண்களில் நீர் துளிக்கலாயிற்று. தான் ஸ்திரீயாகப் பிறந்து இதைவிட அதிகமான சுகத்தைப்பற்றி அவள் நினைக்கவும் இல்லை; ஆசைப்படவும் இல்லை. இந்தமாதிரி தினம் செய்யும் ஸ்திரீக்கு இந்த உலகில் வேறொன்றுமே தேவையில்லை என்றும் நினைத்தாள்.

இதன்பின், பிருந்தாவனன் தன் உறவுகளையெல்லாம் அறுத்து எறிந்துவிட்டுச் சென்ற அந்தக் கடைசித்தினத்தின் ஞாபகம் அவளுக்கு வந்தது. அவளும் அவனை அன்று தடுக்கவில்லை. உறவுகளைத் தவிர்க்கச் சகாயமே செய்தாள். அந்தச் சமயம் அவள் சரணனைப்பற்றியும் நினைக்கவில்லை. ஆழ்ந்த துக்கத்தினால் அவள் மனத்தில் அப்போது, தந்தையுடன் அவனும் தன்னை விட்டுப் போய்விடுவான் என்ற விஷயம் தோன்றவில்லை. எங்கே சரணன் இங்கே வராமலே இருந்துவிடப்போகிறானோ என்ற பயத்தால் அவள் உள்ளம் துடித்து வறட்சிகொண்டது. உண்மையிலேயே அவன் இங்கு வராவிட்டால் அவள் எப்படி உயிர் வாழமுடியும்? இந்தத் துன்பத்தின்போதெல்லாம் அவளை இன்னும் வருத்திக்கொண்டு அவள் மனத்திலிருந்த பழைய சந்தேகம் இப்பொழுது இல்லை. எல்லாம் மறைந்துவிட்டன.

அவள் உள்ளத்தில் உறங்கிக்கிடந்த நம்பிக்கை விழிப்புற்று இரவு பகல் அவள் காதில், "பொய்! பொய்!" என்று கூவிற்று. அவளுடைய பால்ய காலத்துக் களங்கம், கெட்ட பெயர் யாவும் பொய்! அவள் ஹிந்துப் பெண் ஆகையால் பாவம், அநீதி இவை எந்த ரூபத்திலும் அவள் மனத்தில் பிரவேசிக்க முடியாது. தெரிந்துதான் ஆகட்டும், தெரியாமல்தான் ஆகட்டும், எந்த ஹிந்துப் பெண்ணும் தன் கணவனைத் தவிர வேறு யார்மீதும் அன்புவைக்க முடியாது. பிறருக்குச் சேவை சுச்ருஷை செய்ய அவள் மனம் இவ்வளவு பித்தடையவும் முடியாது. அவன் கணவனாக இல்லாவிட்டால் கடவுள் அவளுக்கு நிச்சயம் வேறு நல்ல வழி காட்டியிருப்பார்; அவள் உள்ளத்தின் சிறு மூலையில் சிறிதளவு லஜ்ஜையாவது தலை காட்டியிருக்கும்.

அன்று சந்தை கூடும் நாள். கோபாலனின் தாய் சந்தைக்குப் போய் வெகு நேரமாகிவிட்டது. சீக்கிரம் வந்துவிடுவாள் என்று கதவு திறந்தே வைக்கப்பட்டிருந்தது. இதற்குள் குஞ்சநாதன் வேலைக்காரனுடன் சீமைச் செருப்புப் போட்டுக்கொண்டு கிர் கிர் என்ற சத்தத்துடன் அக்கம் பக்கத்து ஜனங்களுக்கு ஆச்சரியத்தையும் பொறாமையையும் உண்டு பண்ணிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். அவன் வந்ததைக் குஸுமா அறிந்துகொண்டாள். ஆயினும் வெட்கத்தால் கண்ணீர் நிறைந்த தன் முகத்தைத் தூக்கிப்பார்க்க அவளால் முடியவில்லை.

குஞ்சநாதன் நேரே தன் தங்கையிடம் வந்து, "உன் பிருந்தாவனன் மறுபடியும் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறான்!" என்றான்.

குஸுமாவின் ஹ்ருதயமே நின்றுவிட்டது. அவள் கற்சிலைபோல் தலை குனிந்தபடியே உட்கார்ந்திருந்தாள்.

குஞ்சன் தன் குரலை உயர்த்திக்கொண்டு, "பார்க்கிறேன்! நந்த வைஷ்ணவனுக்கு அவ்வளவு தைரியமா? என் ஜமீனில் இருந்துகொண்டே எனக்கு அவமானம் செய்ய அவன் என்ன அப்பேர்ப்பட்ட சூரனா?" என்றான்.

குஸுமாவினால் இதன் கருத்தை அறிய முடியவில்லை. அவள் மிக்க கஷ்டத்துடன், "நந்தவைஷ்ணவன் யார்?" என்று கேட்டாள்.

"என் ஜமீனில் ஒரு குடியானவன். குளக்கரையில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறான். இதோ சென்று அந்த வீட்டையே கொளுத்திவிடு கிறேன். அந்தப் பயல் மகள், அவளைத்தான் இந்தப் பங்குனியில் கல் யாணம் செய்து கொடுப்பதாக எல்லாம் முடிவாகிவிட்டது.—டேய்! பூதா! கொஞ்சம் புகையிலை அடைத்துக்கொண்டு வாடா" என்றான்.

குஸுமாவினால் கண்ணெடுத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. ஆகை யால் வேலைக்காரன் வந்ததை அவள் பார்க்கவில்லை. ஸங்கோசத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

"ஏண்டா பூதா, நந்தனின் பெண் பார்ப்பதற்கு எப்படி இருக் கிறாள்?" என்று கேட்டான் குஞ்சன்.

பூதன் சிறிது யோசித்துவிட்டு, "நன்றாகத்தான் இருக்கிறாள்" என்றான்.

குஞ்சன் திடுக்கிட்டு, "நன்றாக இருக்கிறாளா? பார்ப்பதற்கு என் தங்கையைப்போலவா இருக்கிறாள்? ச்சீ! நீ எப்பொழுதாவது இந்த மாதிரி அழகைப் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

பூதன் பதில் சொல்லுமுன்பே குஸுமா எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

சிறிதுநேரம் பொறுத்துக் குஞ்சன் புகை பிடித்துக்கொண்டே குஸுமாவின் அறைக்கு எதிரில் வந்து நின்று, "என்ன குஸுமா? பிருந் தாவனன் நன்றி கெட்டவன், அயோக்கியப்பயல் என்று நான் முன்பே சொல்லவில்லையா? ஏன், என் வார்த்தை சரியாகிவிட்டதல்லவா? மாமிகூட, 'வேதம் பொய்யானாலும் ஆகும்; என் குஞ்சன் வார்த்தை பொய்யாகாது' என்று சொல்லுவாள். என்ன பூதா, அம்மா சொன்னாளல்லவா?" என்றான்.

அப்போது அறைக்குள்ளிருந்து ஒரு பதிலும் வராமல் ஏதோ விளக்க மற்ற சத்தம் மாத்திரம் கேட்டது.

குஞ்சன் என்ன நினைத்துக்கொண்டானோ, ஹுக்காவை வைத்து விட்டு அறைக்குள் வந்து நின்றான். குஸுமா படுக்கையில் விழுந்து

கிடந்தாள். குஞ்சநாதன் சிறிது நேரம்வரையில் அந்தப் பக்கம் பார்த்துக் கொண்டு நின்றான். வெகு தினங்களுக்குப் பிறகு இன்று அவன் கண்களில் நீர்த் துளிகள் பெருகின. கையால் துடைத்துக்கொண்டு மெள்ளப் படுக்கையருகில் வந்து அதன் ஒரு மூலையில் உட்கார்ந்து தன் தங்கையின் தலையில் கையைவைத்து அன்புடன், “குஸுமா, நீ எதற்கும் பயப்படாதே. என்ன நடந்தாலும் சரிதான்; நான் இந்தக் கல்யாணம் நடக்கும்படி விட்டுவிட மாட்டேன். உன் அண்ணா எது சொன்னானோ அதைச் செய்கிறானா இல்லையா என்பதை நீயே கண்கூடாகப் பார்ப்பாய். ஆனால் குஸுமா, நீயுந்தான் புக்ககம் போகவேமாட்டேன் என்கிறாயே! நாங்கள் எவ்வளவு முயற்சி செய்தோம்? உன்னிடம் எவ்வளவு சொன்னோம், வற்புறுத்தினோம்? நீ யார் வார்த்தையையும் சட்டை செய்யவில்லையே” என்றான். கடைசி வார்த்தையைச் சொல்லும்போது குஞ்சனுடைய குரல் தழுதழுத்தது. குஸுமாவால் பொறுக்க முடியவில்லை. தேம்பித்தேம்பி அழலானாள். தன்மேல் தன் அண்ணனுக்குச் சிறிதுகூட அன்பில்லை என்று வெகுநாட்களாக எண்ணிக்கொண்டிருந்தாள்.

குஞ்சன் கண்களிலிருந்தும் நீர் பெருகியது. அவன் பேசாமல் தன் தங்கையின் தலையை வருடிக்கொண்டே அவளுக்குத் தேறுதல் சொல்லலானான்.

சாயங்காலமாயிற்று. குஞ்சன் தன் சட்டைத்தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, “குஸுமா, நீ பயப்படாதே. நான் இந்த விவாகத்தை நடக்கவிடமாட்டேன்! சொல்லிவைக்கிறேன்” என்றான்.

இப்பொழுது குஸுமா அழுதுகொண்டே பேசலானாள்: “இல்லை; அண்ணா, நீ இதில் தலையிடாதே” என்றாள்.

குஞ்சன் திடுக்கிட்டுப் போய், “என்ன சொன்னாய்? நான் தலையிட வேண்டாமா? நம் கண் எதிரில் கல்யாணம் நடப்பது, நாம் கையைக் கட்டிக்கொண்டு சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதா? இதென்ன சொல்கிறாய்?” என்று கேட்டான்.

“இல்லை; அண்ணா, நீ இதில் தடைசெய்யாதே” என்றாள் குஸுமா.

குஞ்சன் ஆத்திரமடைந்து, “தடுக்கவேண்டாமா? கட்டாயம் தடுத்தே தீருவேன். இதில் உனக்கு அவமானம் வராவிட்டாலும் எனக்கு வரும். என்னால் இதைப் பொறுக்கமுடியாது. அவன் என்கீழ்க் குடி. நீ என்ன சொல்கிறாய்? ஜனங்கள் கேட்டால் காறி உமிழமாட்டார்களா?” என்றான்.

குஸுமா தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தலையை மாறி மாறி அசைத்துக்கொண்டே, “அண்ணா, நான் உன்னைத் தடைசெய்கிறேன். நீ இதைத் தடுக்காதே. அவர்களுக்கும் நமக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. சண்டை சச்சரவிட்டுக் களங்கத்தை அதிகப்படுத்தாதே. கல்யாணம் ஆனால் ஆகட்டும்” என்றாள்.

குஞ்சன் மிக்க கோபத்துடன், "முடியாது" என்றான்.

"ஏன் முடியாது? நான் இருக்கும்போது முன்பே ஒரு கல்யாணம் செய்துகொள்ளவில்லையா? இப்பொழுது இன்னும் ஒன்று செய்துகொள்ளட்டும். நமக்கு இரண்டும் ஒன்றுதான், அண்ணா; நான் உன் காலில் விழுகிறேன். வீணாகத் தடைசெய்து சண்டையை உண்டாக்கி என் பெயரைக் கெடுத்துவிடாதே. அவருக்கு எதனால் சுகம் ஏற்படுகிறதோ, அதுவே சரி" என்றாள்.

குஞ்சன் சிறிதுநேரம் "உம்" என்று கேட்டுக்கொண்டிருந்தான். பிறகு, "உன்னை எப்பொழுதுமே எனக்குத் தெரியும். நீ ஒருதடவை மாட்டேனென்றால் அதை யாராலும் மாற்றமுடியாது. நீ யார் பேச்சையும் கேட்கமாட்டாய். எல்லோரும் உன் பேச்சையே கேட்கவேண்டும்" என்றான்.

குஸுமா பேசாமல் இருந்தாள்.

குஞ்சநாதன் மறுபடியும் பேசலானான். "அப்படியானால் இந்த வார்த்தை பொய்யல்ல. நீ எந்தவிதத்திலும் கணவன்வீடு போகாவிட்டால் அவன் வாழ்க்கை நடப்பதுதான் எப்படி? இப்பொழுதுதான் பிருந்தாவனனுக்குத் தாய் இருக்கிறாள். அவள் எப்பொழுதும் இப்படியே இருக்க முடியாது" என்றான்.

இதற்கும் குஸுமா பதில் சொல்லவில்லை. சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டுக் குஞ்சநாதன் சட்டென்று, "அதிருக்கட்டும், குஸுமா; அவன் கல்யாணம் செய்துகொள்ளட்டும், கொள்ளாமல் போகட்டும்; நீ ஏன் இப்படி அழுகிறாய்?" என்று கேட்டான்.

குஸுமாவிடம் இதற்கு பதில் என்ன சொல்வாள்? இருளாக இருந்ததால் அவள் கண்ணீர் முதலில் குறைந்துபோனதைக் குஞ்சநாதன் கவனிக்கவில்லை. ஆனால் இந்தக் கேள்வியினால் அது மீண்டும் வேகமாகப் பெருகலாயிற்று.

குஞ்சன் சென்ற பிறகு அன்று நடந்த விஷயங்களை எண்ணி வெட்கமும் இரக்கமுங்கொண்டு குஸுமா மனத்திற்குள் குன்றலானாள். "சீச்சீ! இறந்த பிறகுங்கூட இந்த வெட்கக்கேட்டிலிருந்து விடுதலை கிடைக்காது. ஆகையால்தான் எனக்கு ஆசிரயம் அளிக்க அவரால் முடியவில்லை. அங்கே புது விவாகத்திற்கு ஏற்பாடு நடக்கும்போது இங்கே நான் கர்வத்துடன் 'நான்தான் அவர்கள் வீட்டு நாட்டுப்பெண்' என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தேன். ஒரு துளிக்கூட அன்பில்லாத இடத்தில் நான் மலைபோன்ற அன்பை வைத்து மகிழ்ந்தேன். கடவுளே! சகிக்கமுடியாத துக்கத்தின்மேல் மீட்டும் நீ என் தலையில் எப்படிப்பட்ட நெஞ்சு சுடும் அவமானச் சுமையை ஏற்றிவிட்டாய்?"—அவளுடைய ஹ்ருதயத்தைப் பிளந்துகொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. "ஓஹோ! இதனால்தான் என் சுபாவம், நடவடிக்கை இவைகளைப்பற்றிப் பெயருக்குக்கூடச் சிரத்தை இல்லை என்றார். நான்தான் அதற்காக வெட்கத்தை விட்டுச் சத்தியம் செய்யப் புறப்பட்டேன்" என்று தன்னுள்ளே சொல்லிக் கொண்டாள்.

(தொடரும்)

அற்புதச் செய்தி

 கி. சந்திரசேகரன்

ஏழு வருஷங்களுக்கு முன் சென்னையில் 'சாபமோசனம்' என்ற ஒரு நாடகத்தைச் சாந்திநிகேதனத்தைச் சார்ந்த மாணவர்களும் மாணவிகளும் நடித்துக் காட்டினார்கள். கவி ரவீந்திரநாதர் எழுதிய அரிய நாடகங்களில் ஒன்று அது. கதை புராதனமானதுதான். ஆனால் அதில் அடங்கிய விஷயம் கவியின் தனிச் சிறப்புடைய சிருஷ்டி என்பதில் சந்தேகமே இல்லை. அன்று நடைபெற்றது பேச்சு நாடகமல்ல. பேச்சே இல்லாமல் சங்கீதமும் அபிநயமும் கலந்து நாடகத்தின் உட்கருத்தை விளக்கின. கதையின் சுருக்கம் அச்சிடப்பட்டு நாடகம் பார்க்க வந்தவர்களின் கைகளில் நாடகம் ஆரம்பமாகும் முன்பே கிடைத்துவிட்டது. அந்த ஒரு விஷயத்தில்தான் வசனத்தின் துணை ஏற்பட்டது. நாடகம் நடைபெறும்பொழுது அங்கங்கே பேச்சின் சகாயம் இல்லாமல் இருப்பினும், கலைஞர்களுடைய உள்ளங்களுக்கு விருந்தாக அமையும்படியே சிறுவர்கள் நடித்துக் காட்டினார்கள். அந்தச் சமயத்தில் கவிஞர் பட்டணத்துக்குத் தம் சிஷ்யர்களுடன் விஜயம் செய்திருந்தார். அன்று அவர் மேடையின்மேல் ஒரு பக்கமாக ஆசனமொன்றில் அமர்ந்திருந்தார். மனத்தைக் கவரும் அவருடைய கம்பீரமான தோற்றம், மேடையின்மேல் காணப்பட்ட நாடக பாத்திரங்களின் ஆடை அலங்காரங்களின் வர்ணச்சேர்க்கையோடு கலந்து அமைந்ததும் ஒரு விதத்தில் நாடகமேடையை அழகு செய்வதாகக் கண்ணுள்ளவர்களுக்குத் தென்பட்டது.

எல்லாம் வெகு விமரிசையாய் அமைந்திருந்தன; பாட்டும் நடனமும் கண்ணையும் செவியையும் இன்புறச் செய்தன. ஆனால் ஒரே ஒரு குறைமாத்திரம் இருந்தது. பார்க்கவந்தவர்களில் பாதிப்பேர்கள், பட்டணத்து ஜனங்களான காரணத்தினாலோ என்னவோ, கலை அம்சத்தில் தம் மனத்தை ஈடுபடுத்தாமல், வேறு விஷயங்களில் விநோதமுற்று நடுவே கையைத் தட்டிச் சிரித்துவிட்டார்கள். டாகுருக்கு இச்செய்கையில் மிகுந்த மனவருத்தம் உண்டாயிற்று. நடனமும் சங்கீதமும் எங்கே மனத்திற்கு விருந்தை அளிக்காமல் ஜனங்களுக்குச் சலிப்பைக் கொடுக்குமோ என்றுதான் முன் ஜாக்கிரதையாக, அச்சிடப்பட்ட கதைச்சுருக்கத்தின் முகவுரையில் அவர் பின்வரும் விண்ணப்பம் ஒன்றை அமைத்திருந்தார்; "கதையை ஒன்றும் நீங்கள் கவனிக்கவேண்டாம். பொருளைத் தேடிப் பாஷையாகிற அன்னிய உலகிற்குச் செல்லாமல், கண்ணெதிரே தென்படும் யாவற்றையும் மனத்தில் வாங்கிக்கொண்டு, கலையின் உயிர்நிலையான அபிநயத்தின் தாளக்கட்டு, வார்த்தைகளில் அகப்படாத இசை இன்பம், வர்ணப்பொலிவு, அங்க எழில் முதலியவைகளை மட்டும் கவனியுங்கள்" என்று அதில் கேட்டுக்கொண்டிருந்தார். பட்டணத்துப் பிரமுகர்களுக்கு இவற்றிலெல்லாம் ஈடுபாடே இல்லையென்பதை இவ்வளவு தெளிவாக இதற்குமுன் அவர் அறிந்திருக்கமுடியாது. ஆனாலும் அன்று நடைபெற்ற நாடகத்தின் உட்கருத்து, கலைஞர்கள் உள்ளங்களில் மாத்திரம் ஆழ்ந்ததோர் உண்மையை உயிர்பெறச் செய்தது.

கதையைச் சற்றுக் கவனித்தால் 'எவ்வளவு சாமான்யமான சம்பவங்கள்!' என்றுதான் தோன்றும். இந்திரன் சபையில் தேவமாதர்களின் ஆடல் நடைபெறுகிறது. சூரஸேனன் என்ற ஒரு கந்தர்வன் வீணையுடன் பின்பாட்டுப் பாடும்பொழுது சற்றுப் பிசகிவிடுகிறான். இந்திரன் அதனால் கோபமடைந்து கந்தர்வனைச் சபிக்கிறான். கந்தர்வன் பூலோகத்தில் ஒரு தேசத்து அரசகுமாரனாகப் பிறந்து வளர்ந்தாலும் சாபத்தின் விளைவால் முகவிகாரத்துடன் விளங்குகிறான். ஆனால் அவன் தனக்கு இயல்பாக அமைந்த வீணைத் தேர்ச்சியைமாத்திரம் விடாமல் பெற்றிருக்கிறான். அவனை மணந்த ராஜகுமாரி அவனை இருட்டிலேயே சந்திக்கவும், அணைந்து குலாவவும் நேரிடுகிறது. ஒரு நாளாவது அவனை வெளிச்சத்தில் பார்க்கவிடாமல் அவன் அவளை ஏமாற்றி வருகிறான். அடிக்கடி அவன் காதலி அவனை வேண்டிக்கொள்ள, "வேண்டாம்; எதற்காக என் முகத்தைப் பார்க்கவேண்டும்?" என்று அவன் தடுத்து விடுகிறான். அவன் எவ்வளவு சொல்லியும் கேளாமல், தோழர்களுடன் நந்தவனத்தில் அவன் ஆடிப்பாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு நாள் மறைந்திருந்து அவள் கவனிக்கிறாள். ஆனால், அந்தக் கூட்டத்தில் குரூபமானவன்தான் தன் நாயகனென்பதை அறிந்துகொள்ளாமல், அவனைத் தனியே சந்தித்துக் கேட்கிறாள்.

"இன்று நந்தவனத்தில் நர்த்தனம் செய்தது வெகு நன்றாகவே இருந்தது. ஆனால் நடுவில் ஒருவருடைய முகத்தில் காணப்பட்ட விகாரம் மாத்திரம் இல்லாதிருந்தால் இன்னுங்கூட நடனம் சோபித்திருக்கும்" என்கிறாள் அவள்.

அதற்கு அவன், "ஹே சுந்தரி, கார்மேகங்களைத் தன் கனிந்த பார்வையால் அழகுபடுத்தி, தன் பிரசாதமாக வானவில்லையும் அவைகளுக்கு அளிக்கும் கதிரவனுடைய அநுக்கிரகத்தைப்போல் உன் இதயத்திலும் நீ கனிவை வகிக்கவில்லையா?" என்கிறான்.

"ஐயோ, வேண்டாம், வேண்டாம். இவ்வளவு குரூபத்தை நான் சகியேன்" என்று மறுக்கிறாள் அவன் காதலி.

மிருதுவாக அரசிளங்குமாரன் அவள் காதில் சொல்லுகிறான்:

"ஒரு நாள் நீ உன் உள்ளத்தில் இவ்விதமான அநுக்கிரக சிந்தையைத் தாங்குவாய். ஏனென்றால், ஸௌந்தரியம் அழகற்றதை அநுக்கிரகித்து மீட்பதில்தான் நிறைவடைகிறது."

பிறகு ராஜகுமாரி இதிலெல்லாம் திருப்தி பெறாமல் அவனை ஒரு சமயம் வெளிச்சத்தில் பார்த்துப் பயந்து ஓடிவிடுகிறாள். வெகுகாலம் மனவமைதியற்றுத் திரிந்து, கடைசியில் அவனது வீணையின் இனிய நாதத்தைக் கேட்டு அவனைப்பற்றிய பழைய ஞாபகங்கள் அவள் மனத்தில் எழவே, அவள் அவனை மறுபடியும் அடைய ஆசைப்படுகிறாள். அவர்கள் திரும்பவும் சந்திக்கின்றார்கள்.

இக்கதையில் பொதிந்துள்ள தொனி விசேஷம் நினைக்க நினைக்க இலக்கியச் சுவையை விருத்தி செய்யும்வண்ணம் அமைந்திருக்கிறது. அழகு தன்னை நினைத்துச் செருக்குற்றிராமலும், தன்னைக் கடைத்தேறவைத்துக் கொள்ளும்பொருட்டு விஷய சுகங்களை ஊட்டும் வெளித்தோற்றங்களில் ஈடுபடாமலும் இருந்தால், உள்ளுணர்ந்து பரமானந்தம் அடையும் கருவியாக மாறிவிடும். இல்லாவிட்டால் ராஜகுமாரியின் கதிதான் அதற்கும் நேரும்; நிலைத்த அன்பைப் பெறாமல் அழிவுள்ள சிற்றின்பங்களைத்தான் அடையும். நிஜமான அழகு ஒன்று உண்டேயானால் அது நிலையான ஆனந்தத்தைத்தான் தேடும்.

எல்லோருக்குமே கவிஹிருதயத்தின் மர்மம் புரிந்துவிட்டால், ரவீந்திரரின் எதிரே அன்று காட்டிக்கொண்ட அறிவின்மை இருக்க முடியுமா? சாதாரணமாக டாகுர்மேல் ஒரு குறை சிலர் கூறுவதுண்டு. அவர் எழுதுவதில் சட்டென்று விஷயம் தெளிவுபடுவதில்லை; வார்த்தைகளின் போக்கிலேயே விஷயம் தெரிவதில்லை என்பர் ஆங்கிலமோகம்கொண்டவர். கவனமாயும் கல்மஷமில்லாமலும் வாசித்து அநுபவிக்கின்றவர்களுக்கு அவரைப் போல் ஸதா ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய கவிகள் சிலரே இருக்கிறார்கள் என்று புலப்படும். அந்தச் சிலரும் பண்டைக்காலத்து மனுஷ்யர்களாகவேதான் இருக்கமுடியும். ரவீந்திரர் நம்மைத் தம்முடன் ஒன்றுபடும்படியாக விஷயங்களை எடுத்துரைக்கின்றார். அவருடைய அசாதாரணமான அன்பும் கனிவுந்தான் காரணம், இவ்வாறு அவர் நம்மிடமே தம்மை அர்ப்பணம் செய்துகொள்வதற்கும். பின் ஏன் அன்றுமாத்திரம் கை தட்டிச்சிரித்தவுடன் ஜனங்களிடம் கோபம் அவருக்கு ஏற்பட்டது? இந்தக் கேள்விக்குரிய பதிலை உலக இயல்பை அறிந்தவர்கள் நன்கு உணர்வார்கள். "எங்கே புண்ணை ஆறவைக்க முடியுமோ அங்கேதான் காயப்படுத்தவும் நமக்குத் தோன்றும். எங்கே அன்பை அள்ளிவிடமுடியுமோ அங்கேதான் சிக்ஷிக்கவும் தோன்றும்" என்னும் உலக சுபாவமே அதற்குக் காரணம். அநுபவசாலிகளுக்கு இதில் ஒருகாலும் சந்தேகம் ஏற்படாது.

கவி ரவீந்திரர் அப்படி என்ன நமக்கு நன்மை செய்துவிட்டார் என்ற கேள்வியைச் சுலபமாக யாரும் கேட்டுவிடலாம். எந்தக் கவிதான் அப்படி உலகத்தில் செய்துவிட்டான் என்ற மேல் கேள்வியும் தானாக ஏற்படுமல்லவா? "ராமனைச் சிருஷ்டித்த வால்மீகியைவிடக் கவிகளுள் பெரியவருண்டா?" என்று இலக்கியச் சுவையுணரும் யாவரும் தீர்மானமாகச் சொல்லுவார்கள். உலகில் ராமனுக்குப் பின்னால் அரசர்களும் சாதாரண ஆன்மாக்களும் எத்தனையோ பேர் உண்டாகியும், வால்மீகி விரும்பியவிதம் ஒருவரும் குணத்தில் ராமனுக்குச் சமீபம் வருபவராக இல்லை. அதனால் வால்மீகியை, "என்ன பிரமாதம் செய்துவிட்டார் பிரத்தியக்ஷமான உலகிற்கு?" என்று கேட்பது போன்றதுதான் ரவீந்திரரைப் பற்றிய இக்கேள்வியும். கவிகளுக்கென்ன, வானத்தில் சுடர்கள்போல் உலகெங்குந்தான் உதிக்கின்றார்கள். நாம்தாம் ஜாக்கிரதையாகக் கண் கொட்டாமல் அவர்களைப் பார்த்துக்கொண்டு அநுபவிக்கவேண்டும். அவர்கள் அரிய கருத்துக்களை வாரி இறைத்தும், மூடிய கண் திறவாத சாபத்தினால் நாம் குருடர்களாக இப்படியே இருக்கின்றோம். கவி ரவீந்திரரை அனுபவியாதவன் வால்மீகியையும், கம்பரையும், காளிதாஸரையும் அநுபவித்ததாகச் சொன்னால் நம்மால் நம்பமுடியாது. நம் புராதன தேசத்தின் பிரத்தியேகப் பண்பாட்டையும், சம்பிரதாயங்களையும் சிறிதும் கைவிடாதவர் ரவீந்திரர். அதுவும் மேல்நாட்டு வெள்ளம் பெருகி வரும்பொழுது, வெள்ளத்தின் மத்தியில் பெரும் பாறையொன்று நிற்பதுபோல் தோன்றி, வெள்ளத்தின் வேகத்தைச் சிதறஅடிக்கும் ஆண்மகிகளில் அவரும் ஒருவர். அவர் உபயோகிக்கும் கருவி வங்காள பாஷையில் எழுதிய கவிதையே. அரைகுறையாக மொழிபெயர்க்கப்பட்ட அவருடைய ஆங்கில நூல்களை வாசித்த அளவில் கூட அவருடைய விலைமதிக்க முடியாத உபகாரத்தை நாம் அறிய முடிகிறது. அப்படியாவது எல்லோருமே அநுபவிக்கின்றார்களா? சாபமல்லவா வந்து நம்மை வாட்டுகிறது! உலக இயல்பிலே உதிக்கும் மனோ விகாரங்களை விலக்கி நம்மையும் மீட்பதற்கு நாழியும் நேரமும் அழகுக்குக் கைகூட வேண்டாமா?

டாகுர் நம்மத்தியில் வந்து அவதரித்ததைப் பெரும் பாக்கியமாக நாம் கொண்டாடுகிறேமோ இல்லையோ, அவர் மாத்திரம் இந்தியாவில் பிறக்கும் பேறு தமக்குக் கிடைத்ததைப்பற்றி என்னவெல்லாமோ சொல்லுகிறுர். இதோ ஒரு பாட்டு:

''இந்நாட்டில் பிறக்க என்ன பாக்கியம் செய்தேனே, என் தாயே; உன்பால் அன்பு பூண நான் என்ன புண்ணியம் செய்தேனே!

''அரசியாக விளங்க உன்னிடம் பொன்னும் பொருளும் இருப்பதை யானறியேன். உன் தாள்நிழலில் தங்கும்பொழுதுதான் உடலெல்லாம் குளிர்ந்ததோர் உணர்ச்சி பெறுகிறேன்.

''எந்தப் பூஞ்சோலையிலே மணம் கமழ் மலர்கள் மனத்தை இவ்விதம் மயக்குமோ, நானறியேன். எங்கேதான் மதியும் புன்முறுவல்களுடன் இவ்விதம் இன்புறச் செய்கிருனே நான் அறியேன்.

''என் கண்கள் உன் ஒளியில்தான் ஒளிபெற்றன. அவ்வொளியிலேயே என் விழிகள் மூட யான் வேண்டுகிறேன்.'' (1917 மாடர்ன் ரேவியு, பிப்ரவரி இதழ்.)

இதுவும் ஓர் ஆச்சரியம்: நம் சுதந்திரம் சீர்குலைந்து, சம்பிரதாயமும் ஆசாரமும் வேறுபட்டு வரும் இந்நாளில், எங்கிருந்தோ ஒரு துளிக்கூடப் பிறதேசத்துக் கலப்பில்லாத மார்க்கங்களிலே ரவீந்திரரின் திருஷ்டியும் கற்பனைச் சிருஷ்டியும் செல்லுகின்றன! அவரைவிட மேல்நாட்டு வாசனையை அதிகமாக அடைந்தவர்கள் மிகச் சிலரே. அவர் அடிக்கடி அங்கே சென்றவர்; சிறு பிராயத்திலே அநேக வருஷங்கள் அங்கேயே வளர்ந்தவர். மேல்நாட்டுச் செல்வத்தையும் சுகபோகங்களையும் நேராகக் கண்டவர். மேல்நாட்டினர் கௌரவித்துக் கொடுத்த நோபெல் பரிசைப் பெற்றதனுலேயே உலகெங்கும் பெரும் புகழ் பூண்டவர். சரியான இதய பரிபாகம் இல்லாதிருந்தால் நம்நாட்டுச் சாகித்தியம், சங்கீதம், சமயம் இவைகளை விட்டு வேறு வழிகளில் சிறிதளவது சென்றிருப்பாரல்லவா? அவருக்கு வாக்தேவி அருளிய வரன் எவ்விதத்திலும் சாமான்யமானதல்ல. அவ்விதம் இருந்தும் அதை நமக்கே அள்ளி வழங்கி, சொந்தப் பாஷையை வளப்படுத்தி, நமக்குச் சொந்தமான பண்பாடுகளைக் கண்ணுங் கருத்துமாய்ப் பிறருக்கும் அறிவிப்பதில் ஆற்றல் பெறுவது எளிதன்று. இவை எல்லாவற்றையும் கண்டபிற்பாடும் நம்மில் சிலர் அவருடைய கவிதையைச் சந்தேகிப்பது மதியீனம் என்பதில் தவறில்லை.

இது போகட்டும். இன்னும் அவருடைய பழக்கங்களையும் ஆசாரங்களையும் அறிவோமானுல் இதைவிட மிக்க ஆச்சரியம் உண்டாகும். எல்லாம் கட்டுக் கதையைப்போலவேதான் தோன்றும். சாந்திநிகேதனத்தில் சூரியோதயம் முதல் துயிலும் வரையில் ஏற்படுத்தியிருக்கும் தினசரித் திட்டங்களும், பாடம் கற்பிக்கும் முறைகளும் மற்ற வித்தியா ஸ்தாபனங்களில் இருப்பவைபோலல்லாமல் வேறு தனி முறையில் அமைந்திருப்பது ஒரு விசித்திரம். மேலும் ஒவ்வொரு காரியாம்சத்தையும் கவனித்தால், ஆயிரமாண்டுகளுக்குமுன் நம் தேசத்துக் குருகுலங்களில் அமைந்த ஆசிரம வாழ்க்கையின் நற்பயன்களை நினைப்பு மூட்டுவனவாகவே எல்லாம் காணப்படும். தனக்குத் தெய்வம் கொடுத்த திருஷ்டியையும், ஆற்றலையும் தன்னிடமே மூடிவைத்துப் பூஜிக்காமல், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்ததவும் மனந்தான் எவ்வளவு உயர்ந்தது! அவரோ கவி. அவருடைய ஞாபகங்களோ ஸதா வெகு தூரத்திற்கு அப்பால் எதையோ நாடுகின்றன. இவ்விதம் இருந்தும், ரவீந்திரர் ஆயுள் முழுவதும் தம் ஆர்வங்கள் சாத்தியமானவையே என்று காட்டவே சாந்திநிகே

தனத்தை வளர்க்கப் பெருவிரதம் பூண்டார். எல்லாம் ஓர் உலகம், எல்லோரும் ஓர் இனம் என்னும் உணர்ச்சி அங்கே நிலைக்கும்பொருட்டுப் பலவிதத்திலும் பாடு பட்டவர். மலரும் செடியும், தருவும் தடாகமும், மானும் மயிலும், பனித் துளியும் இளம்பிறையும் அவருக்கிடும் நல்விருந்தைத் தமக்கென்றே வைத்துக்கொள்ளாமல், அங்குள்ள சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் இட்டு உண்டவர். நம்மிடம் குறை யாத செல்வம் ஒன்றிருப்பதை அவர் நினைவூட்டுகிறார். அவ்வஸ்துவுக்கு அழிவேது? ஆம். 'இறைவன் சீக்கிரம் சலித்துப்போவது பேரரசுகளினிடந்தான். ஆனால் சிறிதும் அவர் சலிப்படையாதவை சிறிய புஷ்பங்களே' என்பது அவருடைய பொன்மொழி. இதனைச் சிறுவர்களின் வாழ்க்கையில் ஓர் அநுபவமாக ஆக்க வழி தேடிவிட்டார். எங்கும் இயற்கையின் வளமும் வனப்பும் கமழ்வதைச் சாந்தி நிகேதனம் சென்றவர்கள் சொல்லுவார்கள்.

நமக்குச் சொந்தமானவைகளில் செல்லும் மனத்தைத் திருப்பி ஏதோ புதிய மோகங்களில் நம்மைத் தூண்டியிருக்கும் மேல்நாட்டாரின்பேரில் அவருக்குத் துவேஷமே இல்லை. தவறியவர்களைச் சுட்டிக் காட்டியும் குத்திக் காட்டியும் பேசுவது அவர் இயல்பன்று. தம்மோடு ஒன்றுபட்டவர்களாயின் யாவராயினும் சேர்த்துக்கொள்வார். கீதாஞ்சலியில் ஒரு பாட்டில் இத்தகைய கருத்தை எடுத்துரைக் கின்றார்.

"உம்மை என் கடவுளாக அறிந்தும் ஒதுங்கியே நிற்கிறேன்; என்னைச் சேர்ந்த வராக உம்மைப் பாவியாது, நெருங்கவுமில்லை. என் அன்னையாக உம்மை அறிந்து உம் பாதங்களை மாத்திரம் நமஸ்கரிக்கின்றேன்; ஆனால் என் ஆருயிர் அன்பனுடைய கரங்களைப் பற்றுவதுபோல உம் கைகளைத் தொடேன்.

"நீர் வருமிடத்தே நான் நிற்பதில்லை. என்னுடையவராக உம்மை மதிக்கவும் இல்லை. என் மார்போடு உம்மை அணைத்து என் உயிர்த் தோழராகக் கருதவும் இல்லை.

"நீரோ என் சகோதரர்களில் ஒரு சகோதரராவீர். இது தெரிந்தும் அவர்களை நான் கவனிப்பதில்லை. நான் தேடிவந்த பொருளை அவர்களிடம் பங்கிட்டுக் கொடுக்க உம்முடன் என் சர்வத்தையும் பகிர்ந்து அனுபவிக்கவில்லை.

"சுகதுக்கங்களிலெல்லாம், மனிதவர்க்கத்தின் பக்கத்தில் நின்று நான் உம்மைச் சேவிக்கவில்லை. என் உயிரைக் கொடுக்கப் பயந்து, நான் வாழ்க்கையாகிய பெரிய அலைகடலில் புகவும் இல்லை." (கீதாஞ்சலிப் பாட்டு, 77.)

இவை தம்மைக் குறைகூறிக்கொள்ளும் பாஷையேயாயினும் பிறரிடம் அன் பையே காட்டுகின்றன. இன்னும் அவருடைய பெரும் சாந்தம், அத்வைதநிலை முதலியவைகளைக் கவனித்தால், ஜீவலோகத்தையும் தம்மையும் எவ்விதம் ஒன்று படுத்திச் சேர்த்துப் பார்க்கின்றார் என்பது புலப்படும்.

"என் ஜீவநாடிகளில் சதா ஓடும் உயிரூற்றுத்தான் உலகெல்லாம் பாய்ந்து ஒரு தனி லயத்துடன் ஓடுகிறது.

"அதுவேதான், சந்தோஷப் பெருக்கினால் பூமியைப் பிளந்துகொண்டு மேலே கிளம்பி, எண்ணற்ற புற்களாகவும், பசுமைவாய்ந்த இலைகளாகவும், மலர்களாகவும் உற்பத்தியாகிக் கொந்தளித்து எழும் அலைகளின் கூட்டம்போல் எங்கும் வியாபித் திருக்கிறது.

"பெருங்கடல்போன்ற பிறப்பும் இறப்புமாகிய தொட்டிலில் வைத்து ஆட்டி எங்கும் நிறைவையும் குறைவையும் மாறி மாறிக் கிளப்புவதும் அதுவே.

"என் அங்கங்களெல்லாம் ஜீவலோகத்தின் ஸ்பர்சத்தினால் காந்தி அடைகின்றன. இப்பொழுது என் ரத்தத்தில் துள்ளும் ஆவியே நெடுங்காலமாக ஓடிவந்து என்னை அடைந்து என் பெருமைக்கு இடமாகிறது." (கீதாஞ்சலிப் பாட்டு, 69.)

டாகுரின் இம்மாதிரி அழகிய உபதேசங்களை எவ்வளவோ எடுத்துக் கூறலாம். மொழிபெயர்ப்புச் செய்யும்பொழுது எங்கிருந்தோ நம்முடைய விகாரம் அபிப்பிராயங்களில் கலந்துவிடுகிறது. அது நாம் டாகுருக்குச் செய்யும் அபசாரமாகும். அவர் கவிதையின் அழகுதான் இவ்விகாரத்தினின்றும் தன்னை மீட்டுக்கொள்ள வேண்டும்.

இந்திய மக்கள் வழி தெரியாமல் சந்தியில் நிற்கும்பொழுது, அவர் உயர்ந்து நிமிர்ந்து நின்று நல்வழிகாட்டியாக நமக்கு உதவி செய்வார். மேலும் கவி என்ற பெயருக்கு மிகவும் பொருத்தமாகத் தீர்க்கதரிசனம் படைத்திருக்கிறார். பண்டைக் காலத்து ரிஷிகள் சென்றவழியேதான் அவர் மனமும் செல்லுகிறது. இக்காலத்தில் உலகில் நடக்கும் அநியாயங்களைக் கண்டு சகியாமல் மனமுடைபவர்கள் பலர். எத்தனையோ பெரிய ராஜ்யங்கள் கேடுற்றுச் சீர்குலைவதையும் காண்கிறோம். எல்லாம் எக்காரணத்தினால் என்று பார்க்கும்பொழுது, மனிதனுக்குள்ள பேராசையே உலகின் துன்பங்களுக்குக் காரணமென்பது தெரிய வரும். பேராசையென்னும் விருக்ஷத்தின் அடிப்பாகத்திலும் கிளைகளிலும் சுற்றி வளரும் கொடிதான் வேற்றுமைப் புத்தி. அண்டரண்ட கோடியெல்லாம் ஒன்றாய்ச் சமைந்திருக்கும் தத்துவத்தை இத்தேசத்தில்தான் முனிவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். வேற்றுமைப் புத்தி அஞ்ஞான இருட்டிலே ஏற்படுவது. வேற்றுமையை ஒழிப்பவர்களில் நம்மத்தியில் குன்றிலிட்ட விளக்குப்போலத் தோன்றுகிறவர் காந்தி அடிகள். பெரியதொரு ஸ்வானுபவம் அவருக்கு அஹிம்ஸாதர்மத்தைப் புகட்டிவிட்டது. அன்பிற்கு எல்லை என்பதே இல்லை என்றுதான் அவரும் சதா பாடுபடுகிறார். டாகுரும் அதையேதான் தம் கவிதையில் சொல்லுகிறார். அழகின் முக்கிய நோக்கமும் அதுதான் என்று கவி காட்டுகிறார்.

"இருளில் வஸ்துக்களின்மேல் இடறி விழுந்து அவற்றின் தனித்த நிலையை நுணுக்கமாக அறிகிறோம்; ஆனால் பகலிலோ எல்லாவற்றையும் அணைந்து நிற்கும் அகண்டமான ஒற்றுமை வெளிப்படுகின்றது. உள்ளொளியினால் ஒளிரும் அகக் கண்ணை உடையவன் எல்லா ஜாதி வேற்றுமைகளுக்கும் அப்பால் நின்று ஆட்சிபுரியும் ஒற்றுமைத் தத்துவத்தை உணர்கிறான்; அவன் மனம் உலகத்தில் தனி நிலையிலுள்ள பிரிவுகளை முடிவாகக்கொண்டு தடுமாறுவதில்லை. உள்ளத்தின் இசைவு உண்மையில் ஒளிர்கிறதென்றும், அந்த இசைவிலேதான் அமைதி உள்ளதென்றும், புற விஷயங்கள் ஒன்றோடொன்று உறவாடுவதால் உண்டாவதன்றென்றும் அவன் அறிகிறான். இயற்கைக்கும் நமக்குமுள்ள உறவை மேம்படுத்தி நித்தியமாக ஆக்குவது அழகே என்றும் அன்பைப் பெறுவதில்தான் அவ்வழகு பூரணமடைகின்றதென்றும் தெளிகிறான்." (கலைஞன் மதம், பாகம் 1.)

'உபதேசித்து விடலாம், நடத்திக்காட்டவேண்டாமா?' என்ற கேள்வி எப்பொழுதும் நம் மனத்தில் உதிக்கும். ஆனால் பேச்சும் செயலும் ஒன்றை ஒன்று மணந்து மாலையிட்டு மங்களமாக வாழ்வது சிரமமன்று என்பதைத் தெளிவாகக் காட்ட

வந்தவர்களில் ரவீந்திரரும் ஒருவர். அவர் உணர்ந்தவைகளை அவர் உணர்ந்தவாறே நாமும் உணர்ந்தால் அதுவே நாம் அவரிடமிருந்து பெறும் அற்புதச் செய்தியாகத் தோன்றும்.

நமக்குச் சுவர்க்கம் வேறு இடத்தில் இருப்பதாக நினைப்பு. தம்மைச் சுற்றி உள்ளவைகளை மறந்து வாழும் மானிடவர்க்கத்திற்கு இதோ ஓர் எச்சரிக்கை; ஊன்றிக் கவனித்தால் அது பெரிய அநுபவமுமாகும்:

"என் நம்பிக்கை யாதெனில், சுவர்க்கத்தின் திவ்யக்காட்சியைச் சூரிய ஒளியிலும், பூமியின்மேல் படர்ந்திருக்கும் பசுமையிலும், மனுஷ்ய வதனத்திலும், இவ்வுலகின் கண் காணப்படும் எல்லா ஜீவராசிகளின் செல்வத்திலும், இன்னும் சாமான்யமென்று மதிக்கப்படும் ஒவ்வொன்றிலுமே காணலாம் என்பதுதான். இவ்வுலகில் எங்கே பார்க்கினும் சுவர்க்கத்தின் களை சொட்டுகிறது. அதன் இனிய நாதமும் சதா கேட்கின்றது; நம் செவிக்குள்ளேயும் புகுந்து நமக்குத் தெரியாமல் இன்பமூட்டுகிறது. வாழ்க்கை வீணையின் தந்திகளைச் சுருதி கூட்டி அறிவுக்கும் அப்பாலிருக்கும் பொருளைத் தேடும் பாட்டிலும், தோத்திரத்திலும் சமய வழிபாட்டிலும் மாத்திரமல்லாமல் இன்னும் தீயின் ஜ்வாலைபோல் கல்லில் எழும் தேவாலயத்திலும், சொப்பனமோ வென்று பிரமிக்கத் தோன்றும் அழிவற்ற ஓவியப் பெருக்கிலும் இப்பெருஞ் சலனத்தின் மத்தியில் யோகமே வடிவாய் வந்ததுபோல் அசைவற்று நின்று மெய்ம்மறக்கச் செய்யும் ஆனந்தக் கூத்திலும் நாம் பெறுவது சுவர்க்கத்தின் சுகமே யன்றோ!" (கலைஞன்மதம், பாகம், 2)

பிராயச்சித்தம்

"கார்க்யன்"

ஸர் ஜான் ஸ்மித் இந்தியன் ஸிவில் ஸர்விஸில் உத்தியோகம் வகித்துப் பென்ஷன் வாங்கியவர். விச்ராந்தியாய் ஒரு ஸோபாவில் அமர்ந்திருந்தார். என்ன ஆச்சரியத்தைக் கண்டாரோ, திடீரென உரக்கக் கொக்கரித்தார். அவர்முன் ஒரு சிறு அழகிய மேஜையின்மேல் வைக்கப் பட்டிருக்கும் ஒரு விநோத விக்கிரஹத்தின்மேல் அவர் பார்வை அழுந்தப் பதிந்தது. ஆறு முகங்களும் பன்னிரு கரங்களும் கூடிய அத்திருவுருவம் புண்ணிய பூமியாகிய பாரதநாட்டை யாருக்குத்தான் ஞாபக மூட்டாது! ஆம், அது இந்திய நாட்டைச் சேர்ந்ததுதான்; அது அவர் கைக்கு எப்படி எட்டியது என்ற விவரம் அவர் மனப் பிரதேசத்தில் பளிச்சென்று மின்னவே, அவர் முகம் மலர்ந்தது; ஒரு புன்சிரிப்பும் தாண்டவமாடியது.

* * *

அநேக ஆண்டுகளுக்குமுன் அவர் இந்தியாவில் ஒரு ஜில்லா கலெக்டராக இருந்த சமயம். ஸப்த மேகங்களும் ஒருங்கே சேர்ந்து பொழிந்தால் எப்படியோ அவ்விதம் ஒரு நாள் அந்தி வேளையில் கல்லும் கரையும் படியான அவ்வளவு கனமான மழை. தம் உத்தியோகவர்க்கத்தினரோடு கூடிக் குலாவும்பொருட்டுக் 'கிளப்'பிற்குப் போகத் துரைக்கு அன்று மனமில்லை. ஆகவே, தம் பங்களாவை விட்டு வெளிக்கிளம்பாமல் யாராவது வரமாட்டார்களா என்று எதிர்பார்த்து ஆவலுடன் எதிரிலுள்ள ரஸ்தாவை நோக்கிக்கொண்டிருந்தார். வாசற்கதவின் சமீபத்தில் ஒருவன் தென்பட்டான். அவன் கையில் ஒரு மூட்டை இருந்தது. அவன் கொஞ்சம் மனக் குழப்பத்துடனும், பரபரப்புடனும் பங்களாவையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். ஸ்மித் துரை மாடி அறையில் இருந்தபடியால் ஜன்னலின் வழியாய், வந்தவனை நன்றாய்க் கவனிக்கமுடியவில்லை. இருந்தாலும் கவனிக்காமலில்லை. வந்தவன் பங்களாவினுள் பிரவேசிப்பதென்று தீர்மானித்தான். நாலடிகள்கூட முன்வைத்தான். பிற்பாடு அவன் மனத்தில் என்ன தோன்றிற்றோ, பின் வாங்கினான்; உடனே திரும்பிச் செல்லலானான். துரை பார்த்தார்; வந்தவன் யாரென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவா அவருக்கு. உடனே பட்லரைக் கூப்பிட்டு அந்த மனிதனை அழைத்து வரச்சொன்னார்.

சாதாரண மனிதர்களைப் போலுள்ளவன்தான் அப் புது மனிதன். அவனுடைய சம்பாஷணையிலிருந்து அவன் நல்ல நாகரிகமுள்ள படிப்பாளி

என்று தெரிந்தது. ஆனால், அவனிடத்தில் ஏன் ஒரு மனக்குழப்பம்? அது தான் விளங்கவில்லை. துரையினிடம் அவன் ஒன்றும் அதிகமாய்ப் பேச வில்லை. ஆனால், தன்னிடம் ஓர் அதிவிசித்திரமான விக்கிரஹம் இருப்பதாகவும், அதன் பூர்வோத்தரத்தை ஒருவரும் அறியாரென்றும் சொல்லி மூட்டையை அவிழ்த்துத் துரையின்முன் அதை வைத்தான்.

கேட்கவேண்டுமா துரையின் ஆச்சரியத்திற்கு! புராதன காலத்துக் கலை, சரித்திரம், சிற்பம் இவைகளில் துரையின் சிரத்தையையும் ஆசையையும் சொல்லிமுடியாது. தம்முன் வைக்கப்பட்டிருக்கும் வஸ்துவின் உண்மையான பெறுமானத்தை உணர்ந்தவர் அவர். ஸோமநாத் வீழ்ச்சிக்கப்புறம், முகம்மது கஜினி தன்னுடன் எடுத்துக்கொண்டுபோன விக்கிரஹமே அது! அதன் கதை சரித்திரத்தில் வெகு விசித்திரமானது. அதை மாத்திரம் அவன் உடைக்கவில்லை. அவ்விக்கிரஹத்தில் ஏதோ ஒரு வசீகரம், காம்பீர்யம், விக்கிரஹகாதகனான கஜினியின் மனத்தில் என்ன உணர்ச்சியை எழுப்பியதோ யார் கண்டார்கள்! ஆகவே அது இன்றுவரை இருப்பதாக ஒரு வதந்தி உலவியது. அப்பேர்ப்பட்ட விக்கிரஹத்தைத் தம் முன் கண்டபோது ஸ்மித் துரையின் மனத்தில் ஆச்சரியமும் ஆனந்தமும் உண்டாயினவென்றால் என்ன அதிசயம்? தம் குதூகலத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டு, அதன் பூர்வவிருத்தாந்தங்களைப் பற்றி ஏதாவது தெரிந்தவரை சொல்லும்படி அவனைக் கேட்டார்.

"சிற்பக்கலையின் அழகை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டும் இந்த இணையற்ற விக்கிரஹத்தைப்பற்றி என்ன என்ன அறிந்துகொள்ள வேண்டுமோ அவையனைத்தையும் நான் அறிவேன். பிரசித்திபெற்ற ஸோமநாத் தேவாலயத்திலிருந்து கஜினியினால் இது ஆதியில் கொண்டுபோகப் பட்டது. அப்பகிரங்க விக்கிரஹ விரோதி இவ்விக்கிரஹத்தை மாத்திரம் உடைக்காமல் இருந்துவிட்டான். ஏனென்று சரித்திரம் ஒன்றும் கூற வில்லை. என் முப்பாட்டனார் காலம்முதல் எங்கள் பரம்பரையில் இது இருந்துவருகிறது. என் முப்பாட்டனார், சரித்திரம், கலை, சிற்பம் முதலியவைகளில் விருப்பமுள்ளவர். இந்த விக்கிரஹம் போன்ற அரிய வஸ்துக்களைச் சேகரிப்பதில் ஊக்கமுள்ளவர். இதை யாரிடமிருந்து வாங்கினார், எவ்வளவு விலைக்கு வாங்கினார் என்பவைகளைப்பற்றி யாதொருவிதக் குறிப்பும் இல்லை. நான் தத்துவ சாஸ்திரத்தில் எம். ஏ., பரீக்ஷையில் தேறியிருக்கிறேன். எங்களுக்கு இப்பொழுது மிகவும் கஷ்டகாலம். என் பத்தினியையும் இரு குழந்தைகளையும் பராமரிக்க முடியவில்லை. இம்மாதிரி நூதனப் பொருள்களில் தங்களுக்கு வெகுப் பிரியம் என்று கேள்விப்பட்டேன். இதற்குத் தகுந்த கிரயம் தங்களிடமிருந்து பெறலாமென்று எண்ணம். கண்ட பேரிடம் கொடுத்து இதன் மதிப்பைக் குறைப்பதற்கு மனம் வர வில்லை. சிற்ப நுணுக்கங்களை அறிந்துபாராட்டும் ஆற்றல் உள்ள தங்களைப் போன்ற கனவான்களே இதன் அருமை பெருமைகளை அறிவார்கள். அதனால்

தான் தங்களைத் தேடிக்கொண்டு இதைக் கொணர்ந்தேன். இதை விற்பதில் என் மனைவிக்குக் கொஞ்சம் அச்சம்; விற்றுவிட்டால் ஏதாவது எதிர் பாராத கஷ்டம் நேரிடுமோ என்று அவள் எண்ணுகிறாள். ஆனால் ஒருவன் பட்டினி கிடக்கும்போது இம்மாதிரியான மூடபக்திக்கும் நம்பிக்கைக்கும் இடம் கொடுக்க முடியுமா? வயிற்றுக்கு மிஞ்சித்தானே தெய்வம்?'' என்றான் அவன்.

ஸ்மித் துரை அவனை ஒருதரமும், அப்பதுமையை ஒருதரமும் உற்று நோக்கினார். அமெரிக்காவில் சிலர் இம்மாதிரியான பொருள்களுக்குத் தங்கள் சொத்து சுதந்திரம் முதலிய எல்லாவற்றையுமே கொடுத்து வாங்கி விடுவார்களென்று அவருக்குத் தெரியும். இங்கிலாந்திற்குத் திரும்பிப் போனால், இப்பொக்கிஷத்தை, புராதன இந்தியாவின் ஞாபகச் சின்னத்தை, வைத்துக்கொண்டிருப்பதில் எவ்வளவு பெருமை! ஒரு நாள் ஒரு விருந்தோ தேக்கச்சேரியோ நடத்தும்போது இதைப் பற்றிய சரித்திரத்தைக் கூறினால் வந்திருப்போர்கள் எவ்வளவு ஆச்சரியம், ஆனந்தம் அடைய மாட்டார்கள்!

இவ்வித மனோ விமானத்தில் ஸஞ்சரித்தார் ஸ்மித் துரை. அவர் எதிர்பார்த்தபடியே பிற்காலத்தில் காரியங்கள் சம்பவித்தன. அதனால் திருப்தியுள்ளவராகவேயானார். அவர் மணமாகாதவர். இருந்தாலென்ன? உண்மையில் வயோதிகப் பிரம்மசாரி காதல் விஷயங்களிலும் கதைகட்டும் விஷயங்களிலும் இளைஞனைக் காட்டிலும் கைதேர்ந்தவனாகவே இருக்கிறான்.

* * * *

ஸ்மித் துரைக்கு இப்பொழுது தம் விக்கிரஹத்தின் பெருமையே பெருமை. அவர் அதைப்பற்றிப் பிரமாதமாய்ச் சிலாகித்துக் கொண்டார். அதைக் கண்டோரும் வியப்புற்றனர். அவ்விக்கிரஹத்தினிடம் பொது ஜனங்களுக்கு அவ்வளவு கவர்ச்சி உண்டாகுமென்று அவர் நினைக்கவில்லை. தாம் சங்கற்பித்தபடி, ஒரு நாள் தேக்கச்சேரி வெகு விமரிசையாக நடத்தினார். ஆனால் இந்த விமரிசைக்கெல்லாம் விமரிசையாயிருந்தது மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த அந்தப் பதுமைதான். அதைப்பற்றி எத்தனை கேள்விகள்! எத்தனை ஸ்தோத்திரங்கள்! அவர் சிநேகிதர்கள், முக்கியமாய்ச் சிநேகிதிகள், அவரை ஒரு புகழ்க் கடலில் ஆழ்த்தி மூச்சுத்திணற அடித்து விட்டார்கள். "அதை எனக்குக் கொடுத்துவிடுங்கள்'' என்று ஒருவருக்கொருவர் போட்டியிட்டனர். ஸ்மித் துரை அத்தியந்த ஆனந்த ஆத்மா அல்லவா இப்பொழுது?

அங்கே கூடியிருந்த ஆண்களும் பெண்களும் ஆளுக்கு ஒரு யோசனை வேறு சொல்ல ஆரம்பித்தார்கள். பெருமைக்கு ஆசைப்படும் ஒரு பிரபுவினிடம் அப்பதுமையை விற்று அதனால் கோடீசுவரனாக ஆகும்படி சிலர் உபதேசித்தனர். பணத்திற்கு அவ்வளவு கௌரவம் கொடுப்பதா என்று எண்ணும் சிலர் அவ்வுபதேசத்தை நிராகரித்தனர். ஒரு நாட்டுக்கே

பொதுச்செல்வமாய் வைத்துப் பரிபாலிக்க வேண்டிய வஸ்துவானதால் அப்பதுமையைத் தேசியப்பொருட்காட்சிச் சாலைக்கு வெகுமதியாய்க் கொடுத்துவிடவேண்டியது என்று மற்றும் சிலர் அபிப்பிராயப்பட்டனர்.

"இப்பதுமையே இந்தியா! இது புராதன இந்தியாவின் நடமாடும் சின்னம்! இந்தியா! விநோத இந்தியா! நதிகள், முதலைகள், பாம்புகள், மாந்திரிகம், பில்லிசூன்யம், பால்யவிதவைகள் நிரம்பிய இந்தியா!"— இந்தியாவைப்பற்றி இவ்வித மனோபாவம் படைத்தவர்கள் அங்கே கூடியிருந்தவர்கள். ஆனந்தத்திற்கும் ஆரவாரத்திற்கும் கேட்பானேன்!



இந்த அட்டஹாஸத்தின் மத்தியில் ஒருவர் மாத்திரம் திகைப்புற்றவராய் மனம் கலங்கியவராய் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தார். அவர் தாம் டாக்டர் பான்; இந்தியாவில் வைத்திய இலாகாவில் வேலை பார்த்துப் பென்ஷன் வாங்கியவர். இங்கிலாந்தில் அமைதியாய்க் காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பவர்; அவர் மனைவியும் தேநீர் விருந்துக்கு அவருடன் வந்திருந்தாள். அவர்களுக்குச் சந்ததியில்லை. இந்தியாவில் இருக்கும்போதே அவர்களுக்கும் ஸ்மித் துரைக்கும் ஸ்நேகமுண்டு. சீமைக்குத் திரும்பிய பிறகு ஒருவரையொருவர் சந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆகவே இந்த விருந்தில் ஆவலுடன் ஒருவரையொருவர் பார்த்துப் பேசிக்கொண்டனர்.

கூட்டத்தின் குதூகலம் அதன் உச்சஸ்தாயிக்குச் சென்றது. பான் தம் பார்யையைத் தனியே அழைத்துச் சென்று, கூட்டத்தின் ஆர்ப்பாட்டத்தைப்பற்றி அவளுடைய அபிப்பிராயத்தை வினவினர். அவள் கொஞ்சம்

விஷமத்துடன் அவரைப் பார்த்துப் புன்னகை புரிந்து சும்மா இருந்தாள். எப்பொழுது கூட்டம் கலையும் என்று எதிர்பார்த்தவண்ணம் துரை இருந்தார்.

இரவில் அவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது பான் தம் மனத்தைக் கொஞ்சம் வெளிவிட்டுப் பேசினர்: "ஸ்மித் துரை ஏதோ ஒரு மலிவான போலிப் பதுமையை வைத்துக்கொண்டு இவ்வளவு அசட்டுத்தனமாய் ஏன் நடந்துகொள்ள வேண்டும்?" என்று தம் மனைவியைக் கேட்டார். ஒரே சரித்திரத்தையுடைய இரு பதுமைகள் எவ்விதம் இருக்கக்கூடும்? ஒன்று தான் அசல்; மற்றொன்று போலியாகத்தான் இருக்கமுடியும். தன்னுடையதுதான் அசல் என்று டாக்டர் எண்ணியிருக்கிறார். டாக்டரின் மனைவி முன்போலவே கிருத்திரிமமாய்ப் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்தாள். அவர்கள் வீடு அடையும்வரை மேலே ஒன்றும் பேசவில்லை; தங்கள் தங்கள் யோசனைகளில் ஆழ்ந்திருந்தனர்.

டாக்டருக்கு நாட்கள் ஆக ஆகக் கவலை அதிகரித்துக்கொண்டே வந்தது. ஸ்மித் துரை அவ்விக்கிரஹத்தை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறாரோ என்பதுதான் அவர் விசாரம். அதை அவர் தேசீயப் பொருட்காட்சிச் சாலைக்குக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது? ஒரு மலிவான போலிப் பதுமையையா தேசீயப் பொருட்காட்சிச்சாலையில் வைப்பது? அவமானம்! உலகமெல்லாம் பரிகசிக்காதா? வெறும் வாயை மெல்லுகின்ற பத்திரிகை நிருபர்களுக்குக் கொஞ்சம் அவல் அகப்பட்டு விட்டால் அவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்! 'அவ்வளவு கேவலமான ஸ்திதிக்குப் போகும்படியாய் விட்டுவிடக்கூடாது; எப்படியாவது இவ்விஷயத்தில் தலையிட்டு உண்மையைச் சொல்லி நம் பழைய நண்பரை வீண் அபவாதத்திலிருந்து காக்கவேண்டியது கடமை' என்று நினைத்தார். உடனே, தம் மனைவிக்குக்கூடத் தெரிவிக்காமல், ஒரு கடிதம் எழுதி அதில் அவரைத் தம் வீட்டிற்கு வரும்படி அழைத்தார். சிற்றுண்டிகள், டீ முதலியவை முடிந்தபிறகு அவரைத் தம் புத்தகாலயத்திற்கு அழைத்துச் சென்று அங்கே தாம் வாங்கிவைத்திருக்கும் பதுமையைக் காண்பித்து, அதைப் பற்றி எல்லாவற்றையும் அவருக்குத் தெளிவாய்ச் சொல்லவேண்டுமென்பது டாக்டரின் உத்தேசம். தாம் செய்யப் போகும் காரியம் மிகவும் அனுசிதமாகவும் நண்பருக்குப் பெரிய ஏமாற்றந் தருவதாகவும் முடியுமே என்று தோன்றியபோதிலும் செய்தே தீரவேண்டுமென நிச்சயித்தார். இல்லாவிட்டால் அநியாயமாகக் கலைக்கல்லவா அவமதிப்பு ஏற்பட்டுவிடும்?

ஸ்மித் அவ்விதக் கடிதத்தை எதிர்பார்க்கவேயில்லை. ஆகவே அதைப் பார்த்தபோது அவருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. போவதெனத் தீர்மானித்தார். மேலும், கடிதத்தின் கடைசியில் எழுதியிருந்தது அவருடைய ஆவலை அதிகமாகத் தூண்டியது: "டீ ஆனவுடன், ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஆகவே தவருமல் வந்து சேரவேண்டும்" என்பதே அது.

"'மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தான்' என்ற மாதிரி யல்லவோ இருக்கிறது? 'ஒரு முக்கியமான விஷய'மாம்! என்ன முக்கிய மான விஷயம்? சரி, இதென்னவென்று அவசியம் அறிந்துகொள்ளவேண்டும். அவரிடம் சென்று தைரியமாய் நானே கேட்கிறேன்."

ஒருவருடைய மனத்தை மற்றவர் அறிய வேண்டுமென்ற தீவிர சங்கற்பத்தோடு மும்மூர்த்திகளும் முனைந்திருக்கும்போது 'டீ பார்ட்டி'யில் என்ன ஸ்வாரஸ்யம் இருக்கப்போகிறது! அலுப்புடனேயே அம்மூவரும் டீ அருந்தினார்கள். பிறகு டாக்டரே ஸ்மித்தைத் தம் புத்தக அறைக்கு அழைத்தார். இருவரும் ஆழ்ந்த யோசனையில் தங்கள் சமீபம் ஒரு ஸ்திரீ இருப்பதைக்கூட மறந்தார்கள். புத்தக அறையில் நுழைந்ததுமே டாக்டர் ஒரு பெருமூச்சு விட்டு, "அப்பாடா" என்று பக்கத்திலுள்ள ஸோபாவில் சாய்ந்தார். கொஞ்சம் தடுமாற்றத்துடன் மெதுவான குரலில் தம் கதையை ஆரம்பித்தார். இந்தியாவில், தாம் உத்தியோகத்தில் இருந்தபோது, நாகரிகத்தோற்றமுள்ளவனும், தத்துவசாஸ்திரத்தில் எம்.ஏ., பரீக்ஷை கொடுத்தவனுமுள்ள ஒரு நல்ல படிப்பாளியிடமிருந்து அவ்வசல் பது மையை வாங்கியதாகவும், தன் குடும்பத்தைச் சம்ரக்ஷணை செய்யச் சக்தி யற்றவனா யிருந்ததால் அதை அவன் விற்கும்படி நேரிட்டதாகவும் சொன் னார். கேட்ட ஸ்மித் துரைக்குத் தூக்கிவாரிப் போட்டதுபோல் இருந்தது. ஏன், அவர் கதையும் அதுதானே! ஸ்மித் இந்தியாவிலிருந்தபோது அதே மனிதனிடமிருந்துதான் அந்தப் பதுமையை 100 ரூபாய் கொடுத்து வெகு மலிவாக வாங்கினார்!

இருவரும் ஒரு மோசடியான சூழ்ச்சிக்கு உள்ளானதைப்பற்றி அப் பொழுதுதான் உணர்ந்தார்கள். டாக்டர் வசமிருந்த பதுமையை ஸ்மித் பார்த்தபோது அவருடைய சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாகிவிட்டன. இரு பதுமைகளுக்குள், யாதொரு வித்தியாசமும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, எந்தப் பதுமை அசல், எது போலி என்று விசாரிக்க இடமில் லாமற் போய்விட்டது. அச்சமயம் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள். ஏமாந்துபோன இருவரும் அவரவர் பதுமையைப் பரி சோதித்துக் கொண்டிருக்கும்போதே டாக்டரின் மனைவி அவர்களுக்குத் தெரியாமல் பூனைபோல் உள்ளே நுழைந்துவிட்டாள்.

முதல்முதலில் அவள்தான் பேச ஆரம்பித்தாள்.

"விக்கிரஹத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்போலும்!"

"ஆம். பெரிய வஞ்சகன் ஒருவன் எங்களை ஏமாற்றி விட்டான். ஒரே சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்ட இரு பதுமைகள் ஒரு நாளும் இருக்க முடியாது. நல்ல சாமர்த்தியசாலியான ஒருவன் வெகு கெட்டிக் காரத்தனமாய்ச் செய்த போலிப் பதுமைகளே இவை" என்றார் டாக்டர்.

“இதைப்பற்றி என்ன செய்யப் போகிறீர்கள்?” என்று டாக்டர் மனைவி கேட்டாள்.

“இந்தியாவில் போலீஸ் இலாகாவில் பிரசித்திபெற்று விளங்கும் ஸ்காட் துரைக்கு இதைப்பற்றி எழுதி, மோசகாரனைக் கண்டுபிடித்துத் தக்கபடி தண்டிக்குமாறு ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறேன்” என்றார் ஸ்மித் துரை.

“அதனையெல்லாம் ஒன்றும் பிரயோஜனப்படப்போகிறதில்லை. என்னையும் ஓர் உடந்தையாகச் சேர்த்துக் குற்றம் சாட்டச்சொல்லுங்கள். என்னை விட்டுப் போலீஸார் இவ்விஷயத்தில் பதுமை விற்றவனை ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில், அப்பதுமையை வாங்கும்போதே அது ஒரு போலிப் பதுமைதான் என்பது எனக்குத் தெரியும்” என்று அலக்ஷியமாய் டாக்டர் மனைவி கூறினாள்.

அவளைப் பார்த்து அவ்விருவரும் வியப்பினால் திகைத்து நின்றனர். டாக்டர் மனைவி மறுபடியும் ஆரம்பித்தாள்:

“ஸோமநாத் வீழ்ச்சிக்குப் பிறகு கஜினி முகம்மது தன்னுடனேயே கொண்டுவந்த விக்கிரஹத்தைப்பற்றிய விஷயங்களை நான் நன்றாய்ப் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறேன். கீர்த்திவாய்ந்த சரித்திர ஆசிரியர் மிஸ்டர் டௌட் அந்தப் பதுமையைப் பற்றி எழுதும்போது, அதற்குப் பன்னிரண்டாம் கையில் கட்டைவிரல் இல்லை என்று எழுதியிருக்கிறார். ஆதலால் இப்பதுமையை அப்பொழுதே நான் கவனித்தேன். இதற்குக் கட்டைவிரல்கள் பொருத்தமாயிருந்தபோது எனக்குப் பெரிய சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. உடனே அப்பதுமை வியாபாரிக்குச் சொல்லியனுப்பி அவனைப் பயமுறுத்திக் கேட்டேன். அவன் உண்மையை ஒப்புக்கொண்டான். தான் ஓர் ஏழை ஸம்ஸாரி என்றும், பிழைப்பிற்கு மிகக் கஷ்டப்பட்டவனென்றும், பால்யத்திலிருந்தே இந்த ஸோமநாத் விக்கிரஹத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்ததனால் அதே மாதிரி அநேக போலிப் பதுமைகளை ஒரு தேர்ச்சிபெற்ற சிற்பிமூலம் செய்வித்து அவைகளை விற்றதாயும் சொன்னான். அன்னிய நாடுகளிலிருந்து இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வருவோர்களுக்கு இந்திய நாட்டின் பெருமையைப்பற்றியும், மேன்மையான பூர்வ சரித்திரத்தைப்பற்றியும் முற்றும் ஒன்றும் தெரியாவிட்டாலும், எப்பொழுதும் இம்மாதிரியான வேடிக்கை விநோத வஸ்துக்களில் ஓர் அபூர்வமான பிரியம் இருக்கும். ஆகவே அப்பதுமைக்காரன் நன்றாய்ப் பணம் சம்பாதித்து அநேக அநாதைகளையும் ஏழைகளையும் ஆதரித்து வந்தான்” என்று சொல்லிக்கொண்டு வரும்போது சற்று மனம் சலித்தவளாய்ச் சோர்வுற்றாள்.

டாக்டர் தம் மனைவிக்கு அப்போதுள்ள மனப்போக்கைக் கொஞ்சமும் கவனியாதவராய், “அன்னதானம் கின்னதானம் முதலான மூட விஷயங்களில் உனக்கு நல்ல நம்பிக்கைபோலும்!” என்றார். டாக்டரின்

மனைவி சற்றுச் சமாளித்துக்கொண்டு மேலும் தொடங்கினாள்: "அவன் இவ்வளவுதான் சொன்னானென்று நினைக்கிறீர்களோ? இன்னும் வெகு விசேஷங்கள் சொன்னான்: 'உங்கள் நாட்டிலிருந்து இந்தியாவிற்குப் பிரயாணிகளாயும் அதிகாரிகளாயும் வருவோர் இந்தியாவின் புராதன நாகரிகத்தையும் மதத்தையும் எவ்வளவு தூரம் அலக்ஷியப்படுத்தி அவமதித்திருக்கின்றனர்! இந்திய தேசத்தின் பெருமைகளையும் இதன் அரிய பழக்க வழக்கங்களையும் ஆத்மார்த்த விஷயங்களில் இந்நாடு உன்னத ஸ்திதியை அடைந்திருப்பதையும் உங்களுடைய நாட்டினர் அறிந்துகொள்ள முயல்வதே இல்லை. ஆனால், இந்தியாவை விட்டுத் திரும்பி ஊர் போய்ச் சேர்ந்தவுடனே வெகு ஆதுரமாய், இந்தியாவானது பாம்புகள், பதுமைகள், பால்ய விதவைகள் முதலியவை நிறைந்த நாடு என்று ஏளனம் செய்து ஆபாஸமான புத்தகங்கள் எழுதிவிடுகின்றனர். எங்கள் நாட்டை இவ்வளவு அலக்ஷியமும் பரிஹாஸமும் செய்கிறவர்களை ஏமாற்றுவதனால் என்ன பாபம்? என்ன நியாய விரோதம்?' என்றான். அவன் சொன்னது சரியென்றே எனக்குத் தோன்றியது. நானும் இந்தியாவை அதுவரையில் அவ்வளவு கௌரவமாக எண்ணியதில்லை. நீங்கள் அப்போலிப் பதுமைகளுக்குப் பணம் கொடுத்தது நம்முடைய அறியாமைக்கும் அவமதிப்பிற்கும் போதுமான பிராயச்சித்தமாக ஆகாதென்றே நினைக்கின்றேன்."

டாக்டரின் உள்ளம் இன்னும் பரிசுத்தமடையாமலே இருந்தது; அவர் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

* * * *

குளிர் காலம். லண்டன் நகரில் பனி சரீரத்தின் ஒவ்வோர் அங்கத்தையும் வெட்டுவது போல் இருந்தது. டாக்டர் தம்பதிகளால் வீட்டை விட்டு வெளிக்கிளம்ப முடியவில்லை; காலத்தை எப்படிக் கழிப்பதென்று ஒன்றும் தோன்றாமல் அலுத்துக் கொண்டிருந்தனர். எப்படியாவது பொழுதுபோக்கவேண்டுமே; டாக்டரின் மனைவி பின்னல் வேலையில் முனைந்திருந்தாள். டாக்டர் ஒரு புகைச்சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த கணப்பைப் பார்த்துக்கொண்டு ஒரு ஸோபாவில் சாய்ந்திருந்தார்.

அறையின் கதவு திறக்கப்பட்டது. வெகு நேர்த்தியாய்ப் 'பைண்டு' செய்யப்பட்ட இரண்டு புத்தகங்களோடு பட்லர் உள்ளே நுழைந்து டாக்டரிடம் அவைகளைக் கொடுத்தான். டாக்டர் அவைகளைப் பிரித்துப் பார்த்து ஒரே புத்தகத்தின் இரு பிரதிகள் என்று தெரிந்து கொண்டார்.

"இந்திய மக்களினிடையே இருபத்தைந்து வருடங்கள்
ஆசிரியர்:
ஸர் ஜான் ஸ்மித்"

புத்தகத்தின் பெயரையும் ஆசிரியரின் பெயரையும் கண்டவுடன் அவருக்கு ஆனந்தமும் அதிசயமும் உண்டாயின. அப்புத்தகம் தம் மனைவிக்கே

'அன்புடன் அர்ப்பணம்' செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தவுடன் அவருக்கு ஆச்சரியம் அதிகரித்தது. இவ்விஷயத்தைத் தம் மனைவியிடம் தெரிவித்துவிட்டு உடனே முகவுரையை உரக்க வாசிக்க ஆரம்பித்தார். ஏதோ ஒன்று அவர் வாசிப்பைத் திடீரென நிறுத்தியது; புன்முறுவலுற்றார்.

"துரதிருஷ்டவசமாய் மிகச் சிறுபான்மையோருக்கே புண்ணிய இந்திய நாட்டின் புராதன சரித்திரத்தையும் நாகரிகத்தையும் சரிவர ஆராய்ந்து அறிய ஆவல் இருக்கின்றது. அதன் பயனாய் நம்மிடையே இந்தியாவைப்பற்றி அநேக மலிவான ஆபாஸப் புத்தகங்கள் பிரசுரிக்கப் படுகின்றன. அப்புத்தகங்களில் 100க்கு 99 கௌரவமான இந்தியாவின் அழகையும் மேன்மையையும் இழிவுபடுத்திக் கூறுவது மிகவும் வருந்தத்தக்க விஷயம்" என்று வாசித்துவிட்டுத் தம் மனைவியை நோக்கினார்.

பின்னல் வேலையில் லயித்திருந்த அவள் புருவங்கள் நிமிர்ந்து அவரை நோக்கின.

"பிரியே, இது உன்னாலல்லவோ ஏற்பட்டது? ஸ்மித்தின் மனோபாவத்தில் எவ்வளவு மாறுதலை உண்டு பண்ணிவிட்டாய்!" என்றார்.

டாக்டரின் மனைவி கொஞ்சம் மௌனமாயிருந்துவிட்டு மறுபடியும் சொல்லலானாள்:

"இந்தியாவை அவர், மோசகாரர்களும் வஞ்சகர்களும் நிறைந்த நாடு என்று எண்ணாமல் இப்படி நினைப்பதற்கேற்ற நற்புத்தியைப் பெற்றது அவரது பாக்கியம். இது கழுதை இது குதிரை, இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியும் புத்தியே உங்களை விட்டு அகன்று விட்டதே! பாபம், பாபம்!!"

டாக்டர் இப்பொழுது மௌனம் சாதித்தார். இவ்வளவு நடந்தும் டாக்டரின் மனம் கொஞ்சமும் நிதானப்படவில்லை. அவர் மனம் மீட்டும் இந்தியாவினிடையே பிரயாணம் செய்துகொண்டிருந்ததுபோலும்!

பெண்களும் கிராமத்தொழில்களும்

டாக்டர் ஜே. ஸி. குமரப்பா

மனித சமூகத்தினர் கூடியவரையில் அஹிம்ஸா தர்மத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் காந்தி அடிகள் "கிராம இயக்கம்" என்பதை ஏற் படுத்தியுள்ளார். சர்க்கா சங்கம், கிராமத் தொழில் சங்கம், ஹரிஜன சேவக சங்கம், கல்விச் சங்கம் ஆகியவை இக்கிராம இயக்கத்தின் முக்கிய அங்கங்கள். முதற் கூறிய இரண்டு சங்கங்களும் நமது நாட்டின் பொருளுற்பத்தியில் எவ்விதம் சம்பந்தப் பட்டிருக்கின்றன என்பதையும், நகரத்திலுள்ள படித்த பெண்கள் அவைகளில் எவ் விதமான பங்கை மேற்கொள்ளக்கூடும் என்பதையும் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

அஹிம்ஸா முறையில் சமூகம் அமைய வேண்டுமென்றால் ஆண்களைவிடப் பெண்களே அதிக உதவி புரிய வேண்டும் என்பதைக் காந்தியடிகள் மீண்டும் மீண்டும் கூறியுள்ளார். இது கிராமப் பெண்கள் நகரப் பெண்கள் இருதிறத்தாரையும் சேர்ந்ததாகும். இவ்விருதிறத்தார் மேற்கொள்ளும் பங்கும் வெவ்வேறு வகைப் பட்டதாக இருக்கும். இக்கட்டுரையை வாசிக்கும் பெண்கள் அநேகமாய் நகரத்தில் வசிக்கும் பெண்களாக இருப்பார்களாகையால் அவர்கள் செய்யக்கூடிய உதவியையே இங்கே விவரிப்போம்.

ஓர் உயர்ந்த சமூகத்தின் அறிகுறி அதைச் சேர்ந்தவர்கள் தம் உரிமைகளைப் பற்றி வாதிக்காமல் தமது கடமையைச் செய்ய முன்வருவதேயாகும்; அவரவர்கள் தம்தம் தர்மத்தை அநுசரிப்பதாகும். பொருளியலில், நாம் செல்வம் திரட்டினால் அவ்விதம் செய்யும் சமயம் பிறருக்கும் நலன் ஏற்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். ஒருவனது லாபம் மற்றொருவனுக்கு நஷ்டத்தை உண்டாக்குவதாக இருக்கக்கூடாது. மேலும் ஒருவனுக்கு க்ஷேமம் பணத்தினால் மாத்திரம் ஏற்படுவ தல்ல. தேகசௌக்கியம், ஆத்ம முன்னேற்றம், மனச்சந்துஷ்டி ஆகிய எல்லாம் ஏற்பட்டால்தான் மனிதனின் க்ஷேமம் பூர்ணமானதாகும். இவை எல்லாவற்றையும் மனத்தில் வைத்துக்கொண்டு படித்த பெண்கள் எந்த விதத்தில் நமது தினசரி வாழ்க் கையில் பொருளைத் தர்ம முறையில் அநுபவிக்க உதவி செய்யக்கூடும் என்பதை ஆராய்வோம்.

செல்வத்தை நேரான முறையில் திரட்டுவது எவ்வளவு நுட்பமான விஷயமோ அதைவிட நுட்பமானது செல்வத்தை நேரான முறையில் அநுபவிப்பதும். முதலிற் கூறியது புருஷர்களைச் சார்ந்தது. இரண்டாவதோ பெண்களுக்கு உரியது. உற்பத்தி செய்வதும் அநுபவிப்பதும் சேர்ந்து ஒரு பூரணத்துவம் ஏற்படுவதுபோல் பொருளியலில் புருஷர் கடமைகளும் பெண்களின் கடமைகளும் சேர்ந்து ஒரு பூரணமாகும். தற்காலம் புருஷர்களுக்குப் பொருளுற்பத்தி செய்யும் விஷயங்கள் போதிக்கப்படுகின்றன. ஆனால் பெண்களுக்குப் போதிக்கப்படும் கல்வியோவெனில் கேவலம் புருஷர்களின் கல்வியையே தவறாகப் பின்பற்றுவதாக இருக்கிறது. அவர்களுக்கு உரியதான அநுபவிக்கும் தர்மத்தைப் போதிப்பதாக இல்லை. அதைப் போதிப்பதெனில் தற்காலம் இருக்கும் பெண்களின் கல்வி முறையை மாற்றி

அமைத்தாக வேண்டும். அதை விஸ்தரிக்க இச்சிறிய சட்டுரையில் இயலாது. ஆனல் பெண்கள் தம் தர்மத்தை எவ்விதம் பின்பற்றித் தமது தினசரி வாழ்க்கையில் ஏற்படும் சந்தேகங்களைச் சரிவரத் தீர்த்துத் தமக்கும் தமது சமூகத்திற்கும் க்ஷேமத்தை உண்டாக்கலாம் என்பதைச் சுருக்கமாக இங்கே கூறுவோம். பெண்களின் கல்வியானது அவர்கள் தம் கடமையாகிய பொருள்களை உபயோகிப்பதென்பதைத் தர்மமுறையில் செய்யப் போதிப்பதேயாகும்.

பண்டங்களை வாங்குகிறவர்கள் சாதாரணமாய்த் தமக்குத் தேவையானதைக் கூடியவரை மலிவாக வாங்குவதுடன் திருப்தி அடைந்து விடுகிறார்கள். இவ்விதம் செய்வது நமது கடமையைப் புறக்கணிப்பதாகும். நேர்மையாகப் பொருள் வாங்க முயலுபவரின் கடமைதான் என்ன? ஒரு பண்டத்தை வாங்கும் சமயம் அவ்விதச் செய்கையினல் ஏற்படும் பலனை நாம் நன்கு உணர வேண்டும்.

1. நாம் வாங்கும் பண்டம் எங்கிருந்து வருகிறது? விளைபொருளென்றால் யார் பயிர் செய்வது?

2. அது உபயோகத்திற்கு ஏற்றதாக எங்கே எவரால் செய்யப்படுகிறது? அதை அவ்விதம் செய்பவர்களின் நிலைமை என்ன? அப்பண்டத்தின் விலையில் எவ்வளவு பகுதி அவர்களுக்குக் கூலியாகக் கிடைக்கிறது?

3. மிகுந்த பகுதி எவ்விதம் செலவழிக்கப்படுகிறது?

4. ஒரு தேசத்தின் பொருள் முயற்சியில் அந்தப் பண்டம் எவ்வித இடம் பெற்றிருக்கிறது? பிற தேசத்துடன் அந்தத் தேசம் கொண்டிருக்கும் உறவில் இந்தப் பண்டம் எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது?

மேற்கூறிய கேள்விகளுக்கெல்லாம் விடை அறிய முயலவேண்டும். ஒரு திருட்டுச் சொத்தை நாம் வாங்கினேமென்றால் மேன்மேலும் திருடுவதற்கு இடம் கொடுப்பவராகிறோம்; அந்தப் பாவம் நம்மைச் சேர்ந்ததாகும். அவ்வாறே பிறரைத் துன்புறுத்தி உண்டாக்கப்பட்ட பொருளை, பிற தேசத்தினரை அடிமைப்படுத்திப் பெறப்பட்ட பொருளை நாம் வாங்கினேமென்றால் அவ்வித ஹிம்சைக்கு நாமும் உடந்தையாகிறோம். ஆகையால் பொருள் நன்றாக இருக்கிறதா என்பதையும் அதன் விலையையும் மாத்திரம் கவனித்துவிட்டு வாங்கும் பெண்மணி தனது கடமையைச் சரிவரச் செய்தவளாகமாட்டாள். பொருளின் முழு விவரத்தையும் அறிந்த பின்பே அதை நாம் வாங்குவது தர்ம முறை என்றால், வெகு தூரத்திலிருந்து வரும் பொருள்களை வாங்குவது உசிதமல்ல என்பது ஏற்படுகிறது. "அவ்வளவு தூரத்தில் என்ன நடக்கிறதென்பது எனக்கு எவ்விதம் தெரியும்?" என்று சொல்வதனல் மாத்திரம் நாம் நமது பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொண்டுவிட இயலாது. அவ்வளவு தூரத்திலிருந்து வரும் பொருள்களின் விவரம் தெரியாவிட்டால் அவைகளை வாங்காமல் இருப்பதுதான் உசிதம். மேற்கு ஆப்பிரிகாவிலுள்ள தோட்டங்களில் அந்நாட்டுமக்களை நிர்ப்பந்தமாக உழைக்கச் செய்து பயிர் செய்யப்பட்ட கோகோ விதை, பலாத்காரத்தினல் பெறப்பட்ட சமுத்திரப் பாதைகளின் வழியாக இங்கிலாந்திற்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே தொழிலாளிகளின் ஜீவனைக் கசக்கும் முறையில் ஆலைகளில் தயாரிக்கப்பட்டு, இந்தியாவில் பிரிட்டிஷ்காரர் பெற்றிருக்கும் அரசாங்க அதிகாரத்தின் மூலம் குறைந்த சுங்கம் கொடுத்து இங்கே கொண்டுவந்து விற்கப்பட்டதென்றால், இதன் பொறுப்பெல்லாம் ஒவ்வொரு டின் கோகோவிலும் இருக்கும். ஒவ்வொரு டின் கோகோ வாங்கும் பெண்மணியும் ஆப்பிரிகா தேசத்

தோட்டத்துமக்களின் துன்பத்திற்குக் காரணமாகிறாள்; கடற்சண்டைகளினால் ஏற்படும் பாபங்களைப் பகிர்ந்து கொள்கிறாள்; இங்கிலாந்திலுள்ள தொழிலாளிகளின் தாழ்ந்த நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்பவளாகிறாள்; இந்தியாவின் அடிமைத்தனத்தினால் பயனடைகிறாள். இவ்வளவு பொறுப்பையும் வகித்து நமது நாக்கின் ருசியை நாம் வளர்த்துக் கொள்வது நலமா அல்லது நமது வீட்டில் நன்கு வளர்க்கப் பட்டிருக்கும் பசுவின் பாலைக் குடித்துத் திருப்தியடைவது நலமா? இவ் விதம் யோசிப்பதெல்லாம் பொருத்தமற்றதென்று பெண்கள் புறக்கணிக்கக்கூடாது. வாழ்க்கையில் தனது கடமையைச் செய்ய முயலும் எந்தப் பெண்மணியும் தனது செய்கையினால் ஏற்படும் பலன்களை முழுதும் உணர முயல வேண்டும்.

ஒரு பண்டத்தைப் பற்றின முழு விவரமும் நமக்குத் தெரியாவிட்டால் அகில பாரத சர்க்கா சங்கம் அல்லது அகில பாரத கிராமத் தொழில் சங்கம் இவைகளின் உதவியை நாடுவது உசிதம். இக்காரணத்தினால்தான் கதர் வாங்கும்போதுகூட அத் தாட்சி பெற்ற கடைகளில் கதர் வாங்க வேண்டும்.

சுதேசி ஏன்?

வெகு தூரத்திலிருந்து வரும் பண்டங்களின் முழு விவரமும் நமக்குத் தெரிவது கஷ்டம். ஆகையால் கூடியவரையில் உள்ளூருக்குள் கிடைக்கும் சரக்குகளை நாம் வாங்கினால் நம் செய்கைகளினால் ஏற்படும் பலாபலன்களை அறியக்கூடும். அவைகளை நல்ல வழியில் திருப்ப நமக்கு அதிகாரம் கிடைக்கும். இதுதான் 'சுதேசி' என்பதற்கு அடிப்படையான கொள்கை. சுதேசி என்று சொல்வது வெறும் அரசியல் பேச்சுமாத்திரம் அல்ல. நமது சக்திக்கு ஏற்றதாக நமது செய்கை இருக்க வேண்டும் என்ற கொள்கையாலேயே சுதேசியத்தைத் தலைவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

தர்ம முறையில் வாங்குவதனால் புண்ணியம்

மேற்கூறிய விஷயங்களையெல்லாம் ஆலோசிக்கப் புகுந்தால் நாம் வாங்கும் பண்டங்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். நம்முடைய பலவிதத் தேவைகளை நாம் திருப்தி செய்துகொள்ள இயலாமல் போய்விடும். கடைக்குப் புடைவை வாங்கச் சென்றால், பெல்ஜியத்திலிருந்தும் பாரிஸிலிருந்தும் மற்றும் பல தேசங்களிலிருந்தும் வந்திருக்கும் பல அழகிய பட்டுக்களை, மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடி யவைகளைக் கடைக்காரன் உங்களுக்குக் காண்பிக்கலாம். இருந்தும் உங்களுடைய தர்மமானது மிக மோட்டாவான நாட்டுக் கதரையே வாங்கும்படி உங்களைத் தூண்டும். ஏனெனில் அதற்கென்று நீங்கள் கொடுக்கும் ரூபாய் உங்கள் ஊர் ஏழைக்குப் போகிறதென்று உங்களுக்குத் தெரியும். இந்தக் கதர் உடுத்துவதற்குக் கனமானது, விலை அதிகமானது, பார்க்க அதிக அழகில்லாதது; இருந்தும் அந்நிய நாட்டின் அழகிய பட்டைவிட இக்கதரை வாங்குவதே உங்களது கடமையாகும். இதனால் தியாகம் செய்யவேண்டிவரும்.

இவ்விதம் நமது ஆசையைக் கட்டுப்படுத்தித் தியாகம் செய்வதே தவம். ஆணிப் பலகையில் உட்காருவதுதான் தவமென்பதல்ல, கன்னத்தில் ஊசி குத்திக்கொள் வதுதான் தவம் என்பதல்ல. நமது தினசரி வாழ்க்கையில் ஓர் ஆசையைக் கட்டுப் படுத்தியோ, ஒரு தேவையைக் குறைத்துக்கொண்டோ, நமது கொள்கைக்கு விரோதமாக நடப்பதில்லை என்ற பிடிவாதத்துடன் நாம் இருந்தோமென்றால் நாம் செய்யும் அந்தத் தவம் முன்னாட்களில் ரிஷிகள் காட்டிற்குச் சென்று செய்த

சென்னை அரசாங்கத்துக்

கல்வி மந்திரி

ஆக இருந்த

புரொபஸர் ஸி. ஜே. வர்க்கீ, எம்.ஏ., கே.எஸ்.ஜி.

இந்தியாவிற் சிறந்த
பௌண்டிங்க்கைப் பற்றிச்

சொல்லுவதைக் கேளுங்கள்.

"ஜப்கோ பௌண்டிங்க்கை உற்பத்தி செய்ததற்காக ஜயபாரதம் கம்பெனியார் இந்திய மக்களின் மனப்பூர்வமான நன்றிக் குரியவர்களாகிறார்கள். அது சிறந்த மைகளுள் ஒன்று. வெளிநாட்டுச் சரக்குக்கு எதிர் நின்று திருப்தி யளிக்கக் கூடியது. ஏற்கனவே அதற்குள்ள பரந்த புகழே அதன் வருங்காலச் சிறப்புக்கு அறிகுறியாம். இந்நாட்டின் பழைய கைத் தொழில்களை உயிர்ப்பிப்பதும் புதிய நவீனக் கைத்தொழில்களை ஸ்தாபிப்பதும் சாத்தியமென்பது அதன் வெற்றியால் புலப்படுகின்றன."

தேசாபிமானம் — சிக்கனம்

இரண்டுக்கும் வழி

ஜப்கோ பௌண்டிங்க்

சிறந்ததை வாங்குங்கள்

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர். நெ. 1506

அசோகா சுகந்த பாக்குத்தூள்

ALL MODERN BOOKS

Can be Obtained from

ROCHOUSE & Sons, Ltd.,

The Esplanade,

MADRAS.

மானவை. நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவும் நமது நாட்டுத் தொழிலை ஆக்கவோ அழிக்கவோ உதவி புரியும். கிருகலக்ஷ்மிகளாகிய பெண்களே தொழில் விருத்திக்கு அதிபதிகள். அந்த அதிகாரத்தை வகிக்க அவர்கள் சரிவரக் கற்கிறார்களோ? ஜப்பான், ரஷ்யா, ஜர்மனி, இத்தாலி முதலிய தேசத்தினர் தம் நாட்டுப் பெண்களை மேன்மேலும் மக்களைப் பெறுமாறு தூண்டுதல் செய்து, பெண்மையின் தெய்வத்தன்மையைக் கேவலம் ஒரு பீரங்கிக்குப் பலிகளைச் சிருஷ்டிக்கும் இயந்திரத்துக்குச் சமமாய்ச் செய்து, தம் மக்களைப் பலிகொடுத்துத் தம் நாட்டின் ஆலைத் தொழில்களை விருத்தி செய்கிறார்கள். நாமோ, நமக்கு இருக்கும் சொற்பத்தையும் அழித்துக்கொள்கிறோம்.

புண்ணிய யாத்திரை

நமக்கு வேண்டிய சுதேசிப் பொருள் கிடைப்பதற்காக நாம் தேடி அலைய வேண்டி நேரிடும். இந்தியாவில் செய்த பட்டுக்கயிறு வேண்டுமென்று நீங்கள் பல கடைகளில் தேடியும் அது அகப்படாமல் இருக்கலாம். நூல் கயிற்றைக்கொண்டு நீங்கள் திருப்தி அடைய வேண்டியிருக்கும். நமக்கு மாத்திரம் மனத்தில் உறுதியிருப்பின் இவ்விதம் தேடி அலைவது வீணாகாது. அதை ஒரு புண்ணிய யாத்திரையாகக் கருதலாம். காசியிலிருந்து கன்யாகுமரிவரை அங்கப் பிரதக்ஷிணம் செய்து புண்ணியம் சம்பாதிக்க முயலுபவர்கள் இருக்கிறார்கள். நாம் இந்தக் கஷ்டத்திற்குப் பின் வாங்குவதா?

நம் நாட்டுத் தொழில்களின் விருத்தியைப்பற்றி ஒரு தீராத்தாபம் நமது மனத்தில் எப்போதும் இருக்கவேண்டும். நம்மைச் சார்ந்தவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை நாம் எப்போதும் மறக்காமல் செய்வோமா?

சுதந்திரத்திற்கு வழி

இந்த நிலைமையைப் பெற நாம் பல தியாகங்கள் செய்து, நமது சிலுவையைத் தரித்து, நம் கொள்கையைச் சிறிதேனும் விட்டுக் கொடுப்பதில்லை என்ற உறுதியுடன் இருக்கவேண்டும். நம் உரிமைகளைக் கேட்காமல், நமது நாட்டாருக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும் இவ்விதம் நமது தவத்தினாலும் தியாகத்தினாலும் லக்ஷக்கணக்கானவர்களுக்கு ஜீவனோபாயம் அளிப்பதுடன் நமது விடுதலையையும் நாம் பெறுவோம். நம் நாட்டுச் சகோதரிகள் இதன் அவசியத்தை அறிந்தால் உடனேயே அதைச் செய்வதற்குரிய சக்தியையும் பெறுவார்கள்.

இதைப் படிப்பவர்கள் சலபமானதும் நாட்டிற்கு அழிவை அளிப்பதுமான பாதையில் செல்லாமல் இனியாகிலும் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டு, முட்கள் நிறைந்ததென்றாலும் இறுதியில் நாட்டிற்கு விடுதலையையும் க்ஷேமத்தையும் அளிப்பதான வழியைப் பின்பற்றுவார்களோ?

"விளக்கை அணைத்துவிடு"

குமார் ஸ்ரீ ஜயந்தநாத் ராய்

[வங்காளியிலிருந்து 'வாஸிஷ்டன்' மொழிபெயர்த்தது.]

மனிதனுடைய ஜீவியதசையில், 'இனி எத்தனை நாட்கள் உயிர் வைத்துக்கொண்டிருக்கவேண்டுமோ? இந்த வாழ்க்கை முடிவுறும் நாள் என்நாளோ?' என்றெல்லாம் வெறுப்புக்கொள்ளும் காலம் வருகிறது. முதுமை நிரம்பிய ரவீந்திரர் மனத்துள் இத்தகைய கேள்வி கொஞ்ச நாளாகவே எழும்பியிருந்தது. சென்ற சில வருஷங்களாக அவரது கவிதைப் போக்கிலும், பேச்சுவார்த்தைகளிலும் இந்த மனோபாவமே தொனித்தது.

இரண்டு வருஷங்களுக்குமுன் ஒருநாள் அந்திப்பொழுது பேல்கரியாவில் இருந்தபோது அவர் சொன்னது என் நினைவிற்கு வருகிறது.

"சாவு என்றால் உங்களுக்குப் பயமா?" என்று நான் வினவியதற்கு அவர், "அமைதியான மரணத்திற்கு எள்ளளவும் பயப்படவில்லை; ஆனால் நான் பயப்படுவதெல்லாம் துர்மரணந்தான். இன்முகத்துடன் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொள்ளும் நிலைமையில் மரணத்தைத் தழுவிக்கொள்ள எனக்கு யாதோர் அச்சமும் இல்லை" என்றார்.

இதைச் சொன்ன அன்று அவர் கனவிலாவது நினைத்திருப்பாரா, உலகைவிட்டுத் தம் உயிர் களிப்புடன் நீங்காதென்று?

மற்றொரு தினம். ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னே அவரது ஜோடா ஸாங்கோ பவனத்தில் ஒரு சாயங்காலம் கவியரசர் மங்பூ யாத்திரையிலிருந்து திரும்பிக் கல்கத்தாவில் இரண்டு நாட்கள் தங்கியிருந்த சமயம். அவரைப் பார்க்க ஸ்ரீ பிரமத் சௌதுரி, ஸ்ரீமதி இந்திரா தேவி நான் ஆகிய மூவரும் சென்றிருந்தோம். அப்போது கண்களில் ஏதோ உபாதையினால் கவியரசர் வருந்திக்கொண்டிருந்தார். வெளிச்சமே கூடாதென்று வைத்தியர்கள் கூறியிருந்தனர். கவியின் காரியதரிசியான ஸ்ரீ ஸுதாகாந்த பாபு அறையில் எரியும் விளக்கை அணைத்துவிட அவருடைய உத்தரவிற்காகக் காத்திருந்தார். ஒளியை அவிப்பது கவியரசருக்கு எரிச்சலைத் தந்தது போலும். ஆனால் தம்மை அடக்கிக்கொண்டு மெதுவாகச் சிரித்தவண்ணம், "வெளிச்சம் கூடாதா? சரி. விளக்கை அணைத்துவிடு" என்றார்.

"விளக்கை அணைத்துவிடு" என்று அவர் சொன்னவிதம் துர்நிமித்தம் போல் என் மனத்துள் ஒலித்தது. இந்த ஒப்பற்ற கதிரவனது ஒளியும் சீக்கிரத்தில் மறைந்துவிடுமோ என்று என் மனம் எண்ணியது. டாகுர் குடும்பத்தின் மணிவிளக்கு மட்டுமல்ல, வங்காளத்தின் சுடரொளி மட்டு

தவத்தைவிட எவ்விதத்திலும் குறைந்ததாகாது. இந்தக் கொள்கையை எல்லா மதத்திலும் காணலாம். "உனது சிலுவையைத் தரித்து என்னைப் பின்பற்று" என்பது பைபிளில் கண்டிருப்பது. நாம் ஒரு கொள்கையைப் பின்பற்றினால் பின்னோடு ஒரு கஷ்டமும் அனுபவிக்க வேண்டும். ஒரு சிலுவையைத் தரித்தாகவேண்டும். அவ்விதம் தரிக்கும் சிலுவை ரத்தினங்கள் இழைத்துச் செய்த நமது கழுத்தில் அலங்காரமாக அணிந்துகொள்ளும் தங்கச் சிலுவை அல்ல. மிகப் பாரமானதும் பல பலசாலிகளின் முதுகை முறித்திருப்பதுமான வலுவான சிலுவை. ஆனால் அதை நமது முதுகில் தாங்கினால் நமக்குப் புண்ணியம் ஏற்படும் என்பது நிச்சயம்.

இந்தத் தவம், இந்தத் தியாகம், இந்தச் சிலுவை தரிப்பதென்பது நாம் சுதேசியைப் பின்பற்றும்போது பலவிதத்திலும் நம்மைப் பாதிக்கும். உப்பு வாங்கச் சென்றால் அழகான புட்டிகளில், மிகச் சுலபமாகத் தெளிக்கக்கூடிய முறையில் வைத்திருக்கும் அந்நிய நாட்டு வெள்ளை உப்பை வாங்கவே விருப்பமுண்டாகும். சாக்குகளில் அழுக்கடைந்து கறுப்புக் கற்கள்போல் இருக்கும் நாட்டு உப்பை வாங்குவது அருசியை உண்டாக்கலாம். மிகத் திட மனம் இருந்தால்தான் இந்த நாட்டு உப்பையே வாங்கி நமது வீட்டில் சுத்தம் செய்துகொள்ளத் தோன்றும். ஆனால் அவ்விதம் சுத்தம் செய்தால் அந்நிய நாட்டு உப்பைவிட மேலானதாக இதைச் செய்தவிடலாம். எனக்குத் தெரிந்த ஓர் அமெரிக்க டாக்டர் அம்மாள் கடையிலிருந்து வெல்லத்தை வாங்கிக் காய்ச்சிச் சுத்தம் செய்து புட்டிகளில் ஊற்றி வைத்துக் கொண்டு நம் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார். அவர் சர்க்கரையைவிட வெல்லம் உடலுக்கு நலம் என்றே அவ்விதம் செய்கிறார்; நம் நாட்டுத் தொழில்களின் விருத்தியை உத்தேசித்து அல்ல. அந்த அமெரிக்கச் சகோதரியைவிட நமக்கு நம் நாட்டுப் பண்டங்களையே உபயோகிக்க அதிகக் காரணங்கள் இருக்கின்றன. ஆனால் அதற்கு வேண்டிய திடசித்தம் இருக்கிறதோ?

மேலும், பண்டங்கள் கடனாகக் கொடுப்பது, ஈரொட்டாகக் கொடுப்பது, மாதிரிக்குக் கொடுப்பது, நாம் உத்தரவிட்டதும் உடனே அனுப்புவது முதலிய வியாபார லாகவங்கள் கையாளப்படாதபோது நமக்குச் சலிப்பு ஏற்படுவது சகஜம். இவ்வித லாகவங்கள் முதலாளித்தனத்தினாலும் மும்முரப்போட்டியினாலும் ஏற்பட்டவை. இருந்தும் நமது தர்ம உணர்ச்சியைப் பின்பற்றினால் இச்சமயங்களிலும் திடமாக இருக்கலாம். எப்போதும் இந்தக் கஷ்டங்கள் இரா. நுட்பமான இயந்திரங்களினாலும் செய்ய இயலாத வஸ்துக்களைச் செய்துவந்த நம் நாட்டுத் தொழிலாளிகள் அநியாய முறையில் ஏற்பட்ட போட்டியினாலும் வாங்குபவர்கள் அவர்களை ரக்ஷிக்காததனாலும் தாழ்வை அடைந்துவிட்டனர். முன்பு நாம் கைவிட்ட அவர்களை இப்பொழுது காப்பாற்றுவது நமது கடமையல்லவா? அவர்கள் நல்ல நிலையை அடைந்துவிட்டால் இப்பொழுது முதலாளிமுறையில் நமக்குக் கிடைக்கும் வசதிகளெல்லாம் அப்போதும் கிடைக்கும் என்று நிச்சயமாக நம்பலாம்.

தொழில்களின் அழிவிற்குக் காரணம்

மேலே நமது நாட்டுத் தொழிலாளிகளை நாம் கைவிட்டோம் என்ற பெரிய குறையைக் கூறியுள்ளேன். அந்நிய நாட்டுத் தொழில்களை ஆதரிப்பதனால் நம் நாட்டின் தொழில்கள் அழிந்து தேசத்தில் நாளடைவில் ஏழைமையும் தாழ்வும் ஏற்படுவதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சம்பவம் கூறுகிறேன். ஒரு சமயம் நான் திருவாங்கூரில் யாத்திரை செய்துகொண்டிருக்கையில் கோரைப்பாய்கள் முடையும் தொழிலைக் கவனிக்க

லானேன். இத்தொழில் முன்பு மிக விருத்திபெற்று இருந்தது. இப்பொழுது அடியோடு நசித்துவிடும்போல் இருக்கிறது. அப்பாய்களைப் பின்னும் வகை மிக நேர்த்தியாக இருக்க, அவற்றிற்கு வேண்டிய கோரைப்புல் அந்நாட்டில் ஏராளமாகக் கிடைக்க, அத்தொழில் இவ்விதம் க்ஷீணமடைவதற்குக் காரணம் இன்னதென்பது எனக்கு விளங்கவில்லை. திருவாங்கூரில் குடிசைகளைச் சுற்றிலும் வேலியாக இந்தக் கோரைப் புல்லை வளர்க்கிறார்கள். வீட்டில் ஆண், பெண், பாலர் ஆகிய யாவரும் இந்த வேலையில் கலந்து கொள்ளுகிறார்கள். இந்தப் பாய்களைத் துணிபோல் மடிக்க இயலும். மிக நயமானவை. படுக்கச் சுகமானவை. தண்ணீர் விட்டுக் கழுவினால் சுத்தமாகி விடுபவை. அங்கிருக்கும் பாய் முடைபவர்களில் மிகப் பெரியவன் என்னையும் நண்பர் இருவரையும் அழைத்துச் சென்று பாய் முடையும் வகைகளைக் காண்பித்து, இத்தொழிலை எவ்விதம் மறுபடி முன்னுக்குக் கொண்டுவருவதென்று என்னைக் கேட்டான். அதற்கு விடை அச்சமயம் எனக்குத் தெரியவில்லை. பிறகு அவன் தனது சொற்ப ஆகாரத்தைப் பகிர்ந்துகொள்ளுமாறு எங்களை அழைத்தான். நாங்கள் கைகால் கழுவுகையில் நாங்கள் உட்காருவதற்கென்று தனது வீட்டுத் தாழ்வாரத்தில் அவன் ஆஸனங்களை விரித்தான். நாங்கள் அங்கே சென்றதும் இரண்டு பக்கமும் விரித்திருக்கும் கோரைப்பாய்களில் என் நண்பர்களை உட்காரச்சொல்லி நடுவிலிருக்கும் ஆஸனத்தை எனக்குக் காண்பித்தான். அதைக் கண்டதும் நான் பிரமித்து, அவனை நோக்கி, "உனது தொழிலின் அழிவிற்குக் காரணம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. அதற்குக் காரணம் உனது மனப்பான்மையே" என்றேன். நான் சொன்னதன் கருத்து அவனுக்கு விளங்கவில்லை. என் நண்பர்களுக்கு விரித்திருக்கும் பாய்களைக் காண்பித்து, "இவை ஏது?" என்று கேட்டேன். அவன் தனது தோட்டத்தின் புல்லைக்கொண்டு தானே முடைந்தது என்றான். அவை இரண்டிற்கும் நடுவில் விரித்திருக்கும் புலியுருவம் அச்சடித்த பாயைக் காண்பித்து, "இது ஏது?" என்றேன். "கடையில் வாங்கினது" என்று அவன் சொன்னான். அந்த விகாரமான ஜப்பான் பாயை விரிப்பதனால் எனக்கு அதிக கௌரவம் அளிப்பதாக அவன் எண்ணினான். "இவ்விதம் உன்னுடைய பாயைவிட இந்தப் பாய் உயர்ந்ததென்று நீயே எண்ணினால் மற்றவர்களும் அவ்விதமே நினைத்து உன்னுடைய பாயை வாங்காமல் அவைகளை வாங்குவதில் தவறு என்ன? உன் தொழில் ஏன் அழியாமல் இருக்கும்? உன்னுடைய தொழிலிற்கு நீ மதிப்புக் கொடுத்து அந்நிய நாட்டுப் பாயை வாங்காமல் இருந்தால்தான், பிறரும் உன்னுடைய பாயை வாங்கி உன்னுடைய தொழிலை ஆதரிப்பார்கள்" என்றேன். நமது நாடு க்ஷீணமடைந்திருப்பதன் காரணத்தை இச்சம்பவம் விளக்கும்.

தொழில் விருத்தி

அந்நிய நாட்டுச் சரக்கை வாங்கும் ஒவ்வொரு சகோதரியும் நமது நாட்டுத் தொழிலாளிக்கு வேலையில்லா நிலைமையை உண்டாக்கி அவனுடைய ஜீவனோபாயத்தைக் கெடுக்கிறாள். இதை நாம் நன்கு உணரவேண்டும். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது தமிழின் அழகிய வசனங்களில் ஒன்று. ஆனால் நாமோ நம் தொழில்களைப் புறக்கணித்து அந்நிய நாட்டு ஆலைத்தொழில்களுக்குத் தாய் தகப்பன் மார்களாகிவிட்டோம். உங்கள் வீட்டிலிருக்கும் பண்டங்களில் எத்தனை பண்டங்கள் பிறநாட்டிலிருந்து வந்தவை என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். அவைகளுக்காக நீங்கள் கொடுத்த விலை உங்களுடைய நாட்டுத் தொழிலாளிகளுக்கு உங்களால் நஷ்ட

கொண்டிருந்த சிறு நம்பிக்கையும் க்ஷணநேரத்தில் கரைந்துவிட்டது. சந்தடி ஓய்ந்த முழுமதி ஒளிரும் இரவு. வெண்ணிலா எங்கும் பெருகி ஓடியது. சற்றைக்கொருதரம் பாட்டையில் செல்லும் ஏதாவது வண்டியின் அரவம் கேட்கும். ஆகாயத்தை வெறித்துப் பார்த்தவண்ணம் வராந்தாவில் நின்றிருந்தேன். அடுத்த அறையிலிருந்து விடுதலைபெற ஒரு புருஷஸிம்ஹம் விடும் கடைசி சுவாஸத்வனி என் செவியில் பாய்ந்து கொண்டிருந்தது. பொழுது புலர்ந்துவிட்டது. இன்னும் பிராணன் பிரியவில்லை. ஒன்பது மணியிருக்கும். ஸ்ரீ ராமானந்த பாபு கவியின் படுக்கைக்கு அருகில் இருந்தபடி கடவுளுக்கு உபாஸனை செய்தார். 12-அடித்து 10 நிமிஷத்திற்கெல்லாம் எண்பத்தொரு வருஷகாலம் பல இன்பதுன்பங்களைக் கண்ட ஒரு மஹாப்ராணனின் வாழ்க்கைக்கூத்து முடிவடைந்து திரை விழுந்தது.

ரவீந்திரரைப்பற்றிப் புதிதாகச் சொல்ல ஒன்றமில்லை. நாம் சொல்ல இருந்ததை அவர் ஒருவராகவே கூறிவிட்டுச் சென்றார். கங்காதேவியை கங்கையின் நீரைக்கொண்டு பூஜிக்கும் வழக்கம் நம்நாட்டில் இருப்பது போல், நானும் உலககவியின் மொழியிலேயே என் அர்க்கியத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

"ஏனேசிலே ஸங்க கரே
ம்ருத்யு ஹீன ப்ராண
மரணே தாஹாஇ துமி
கரே கேலே தான."[1]

1. அழிவில்லாத உயிரை நீயுன்னுடன்கொணர்ந்து வந்தாய்
அதனைக் காலன் றனக்கே தானமாக வழங்கிச் சென்றாய்.

"இடம் இருக்கிறது"

ரவீந்த்ரநாத் டாகுர்

[வங்காளியிலிருந்து த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., மொழிபெயர்த்தது]

எனக்கு வயது இருபத்தேழுதான். வருஷக்கணக்கிலாவது அபார குணத்திலாவது எனது வாழ்க்கை உயர்வானதன்று. ஆனாலும் அதற்குச் சற்று மதிப்பு உண்டு. மலர்போல் மெல்லிய ஓர் உள்ளத்தை நோக்கி வண்டு பறந்து வர, அது கால் வைத்த விளைவு அம்மலர் அகாலத்தில் பக்குவமான கனியாக மாறியது.

அந்தக் கதையின் விஷயம் மிகவும் சிறிது. அதைச் சுருக்கமாகவே எழுதுவேன். சிறிதாகையால் ஸாதாரணமானதென்று தவறான எண்ணம் கொள்ளாதவர்களே அதன் சுவையை உணர்வார்கள்.

கல்லூரியில் படித்துத் தேறவேண்டிய பரீக்ஷைகள் யாவற்றிலும் தேறிவிட்டேன். சிறு பிள்ளையாக இருக்கும்பொழுது என் அழகிய முகத்தைச் சிமூல புஷ்பத்தோடும், களாப்பழத்தோடும் ஒப்பிட்டு எங்கள் உபாத்தியாயர் வேடிக்கையாகக் கூறுவார். அது எனக்கு அதிக லஜ்ஜையாய் இருக்கும். வயது ஆக ஆக இவ்வாறு நான் சில சமயம் நினைத்துக்கொள்வேன்: 'மறுபிறப்பிலும் (அப்படி ஒன்று இருக்கும்பக்ஷத்தில்) என் அழகான முகமும், வாத்தியார் அதைக் கேலியாக வர்ணிப்பதும் திரும்பவும் வருமா?' என்றுதான்.

என் தந்தை ஒரு சமயம் பரம ஏழை. வக்கீல் தொழிலில் ஏராளமான பணம் சம்பாதித்தார். ஆனால் அதை அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை. உயிர் விடும் போதுதான் அவருக்கு ஒழிவு ஏற்பட்டது.

எனக்கு அச்சமயம் வயது மிகவும் குறைவு. அம்மாவின் கையில் வளர்ந்து மனுஷ்யனானேன். தான் எளிய குடும்பத்துப் பெண், நாங்கள் பணக்காரர் என்பதை அவள் மறக்கவில்லை; நானும் அதை மறக்காமல் இருக்கும்படி செய்தாள். குழந்தைப்பருவம் தொட்டு என்னைத் தரையில் விடாமலே எடுத்து வளர்த்தார்கள். அதனாலேயே கடைசிவரை நான் அரைகுறையாக நிற்கிறேன். என்னை இன்றைத்தேதிக்குப் பார்த்தால்கூடப் பார்வதியின் மடியில் வீற்றிருக்கும் செல்வப் பிள்ளையாகத் தோன்றும் உங்களுக்கு.

எனக்கு முக்கிய வாரிசுதார் என் மாமாதான். அவர் என்னைவிட ஆறேழு வருஷம் பெரியவராக இருப்பார். ஆனால் புதை மணலைப்போல் எங்களுடைய குடும்பத்தைத் தம்முள்ளே இழுத்துக்கொண்டுவிட்டார். அவர் அறியாமல் எதுவுமே நடக்காது. இக்காரணத்தால், எதன்பேரிலும் எனக்கு அக்கறையென்பதே விழவில்லை.

பெண்ணைப் பெற்றவர்கள் மட்டும் நான் நல்ல பிள்ளையென்பதை அறிவார்கள். கெட்டபழக்கம் எதுவுமே என்னை அண்டவில்லை. பெரிய மனுஷ்யனாக வேஷம் போடும் பிரமேயமும் இல்லை. உண்மையில், பெருந்தன்மை என்னிடத்தில் இருந்தது. தாயின் கட்டளைப்படி நடக்க எனக்கு ஆற்றல் உண்டு. அந்தப்புரத்

மல்ல, பாரதநாட்டைச் சோபிக்கச்செய்த மங்களஜோதியே மறைந்து விட்டது! விளக்கை அணைத்துவிட்டு ஸ்ரீ ஸுதாகாந்த பாபு வெளியே போனார். ஸ்ரீ பிரமத் சௌதுரியும் ஏதோ காரியமாகச் சற்றுநேரம் அறைக்கு வெளியே சென்றிருந்தார். அவ்விருட்டறையில் அவரும் நானுமே இருந்தோம். அப்போது நிகழ்ந்த ஒரு விஷயத்தை உயிர் உள்ள அளவும் என்னால் மறக்கவேமுடியாது. உட்புறம் ஒரே இருட்டு; வெளியிலும் கறேலென்றிருந்தது இரவின் தோற்றம். கவிவேந்தர் தமக்குத் தாமே வெகுநாட்களுக்கு முன்பு பாடிய பாட்டின் ஒரு வரியை மெதுவான குரலில் மெய்ம்மறந்து பாடிக்கொண்டிருந்தார் :

"ஜானிஹே யபே ப்ரபாத ஹபே
தோமார் க்ருபா தரணீ
லயிபோ மோர் பவஸாகர கினாரே"1

அன்று இந்தப் பாட்டை எதற்காகப் பாடினாரென்பதை நான் அறிந்து கொள்ளவே இல்லை. இன்றும் புரியவில்லை அவர் பாடியதன் கருத்து. அவருக்குமட்டும் அதன் மர்மம் விளங்கியிருக்கலாம்!

அச்சிறு நேரத்தில், இருள் பரவிய அவ்வறையின் தனிமையில், மெல்ல ஒலிக்கும் அவரது இசையில் என் மனம் லயித்தது; தொடர்பற்ற ஒரு மாயப்பிரபஞ்சத்தில் திரிந்தது. அதன் நினைவு அழியாது என் உள்ளத்தில் என்றும் நிலவும்.

அவருடைய அந்திய தினத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு என் உரையை முடித்துவிடுகிறேன். தேதி ஞாபகமில்லை. ஜூலை முதல் தேதியோ இரண்டாந்தேதியோ. முன் நான் பார்த்ததைவிடக் கவியின் தேகஸ்திதி கெட்டிருப்பதாகச் சாந்திநிகேதனத்திலிருந்து ஸ்ரீ ஸுதாகாந்த பாபு எனக்கு எழுதியிருந்தார். அவரது 'பரந்த வாழ்வு' இவ்வளவு துரிதத்தில் சுருங்கிவிடுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஜூலை 25-ல் சஸ்திர சிகித்ஸை செய்துகொள்வதற்காகக் கவி கல்கத்தாவுக்கு வந்தார். 29-ஆம் தேதி ஸாயங்காலம் அவரைத் தரிசிக்கச் சென்றிருந்தேன். வணங்கிவிட்டு, "எப்படி இருக்கிறது உடம்பு?" என்று விசாரித்தேன் அவரையே. வாடியிருக்கும் இருவிழிகளைத் தூக்கி என்னைப் பார்த்துப் புன்முறுவலுடன், "குணமென்றால் பொய் சொல்வதாகும். இருக்கிறேன், ஒரு மாதிரியாக" என்றார் ஆயாசத்துடன். பிறகு ஜூலை 30-ஆம் தேதி பகல் சுமார் 10-30 மணிக்குக் கல்கத்தாவிலுள்ள வைத்திய நிபுணர்கள் கவியரசருக்குச் சஸ்திர சிகித்ஸை செய்தார்கள். அன்று மாலை அவர் இருந்த நிலையைக் கவனித்தபோது பிணி நீங்கிவிட்டது, கதிரவன் தோன்றுவானென்றே நினைத்தோம். ஆனால் நமக்குத் தெரியவில்லை, மறைவில் புயல் கடுகிவருவது. 31-ஆம் தேதியிலிருந்து ஆகஸ்டு 1-ஆம் தேதி வரையில் யாதொரு கவலைக்கும் காரணமே ஏற்படவில்லை. ஆனால் மறுநாளே மாறி

1. விடியுமொரு காலம்வரும் வியனருளாம் பெரும்புணையில்
கடலனைய பிறவியின்அக் கரைவிடுப்பா யென அறிவேன்.

விட்டது அவருடைய உடல் நிலை. மூச்சுக் கண்டுவிட்டது. நடுநடுவே விக்கலும் அவரை மிகவும் வருத்தியது. ஆகாரம் ஏற்றுக்கொள்ள வில்லை. வைத்தியர் 'க்ளூகோஸ் இஞ்செக்ஷன்' செய்தார். பயன் அளிக்க வில்லை. அதற்குமேல் ஆரம்பித்துவிட்டது வாழ்விற்கும் சாவிற்கும் இடையே பெரும்போர். கவியரசரின் பக்கத்திலேயே சற்றும் சலிப்பில் லாமல், அவருக்குச் சுச்ருஷை புரிந்தவர்கள் அவருடைய பெண்வயிற்றுப் பேத்தி ஸ்ரீமதி நந்திதாவும், ஸ்ரீமதி ராணி சந்த், ஸ்ரீ ஸுரேந்த்ரநாத் கர், ஸ்ரீ அநில் சந்த், காரியதரிசி ஸ்ரீ ஸுதாகாந்த சௌதுரி ஆகியவர்க ளுமே. அந்தமாதிரி ஒருவித உண்மைத் தொண்டை முதல் தடவையாக அன்றுதான் பார்த்தேன். கவியின் விசாலமான விழிகள் உணர்வற்று ஒரே நிலையில் பதிந்து சூன்யத்தைப் பார்த்துக்கொண்டிருந்தன. அதைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. எவரையும் தலைவணங்கச்செய்யும் கண் இக்கதிக்கா வந்தது! திங்கட்கிழமையன்று ஸ்மரணை தப்பிவிட்டது. செவ்வாய் நெருக்கடி. மரணாவஸ்தை அதன் எல்லையைத் தொட்டது. இரவு வெளியே கோரமான புயலின் தாண்டவம்; இங்கே உட்புறம் மஹத்தான ஜீவனின் சுடர் மங்கும் தறுவாய். இவ்விரண்டும் சேர்ந்து பின்னால் வரும் பெருங்கேட்டை எனக்கு அறிவுறுத்தின. எப்படியோ அந்தப் பயங்கர இரவும் கழிந்தது. கவியின் தேகநிலையை விசாரிக்க டெலிபோனில் பத்திரிகை உலகு கூப்பிட்டவண்ணம் இருந்தது.

கவியின் நிலைமை பின்னும் மோசமாகிவிட்டது. மூச்சின் ஸ்வரம் அடங்கிக்கொண்டே வந்தது. 10-மணிக்கு டாக்டர் லலித் பானர்ஜி அவருடைய நாடியைப் பரிசோதிக்க வந்தார். என்ன செய்தி வருமோ வென்று தொங்கிய முகத்துடன் வெளிப்பக்கம் திரளாக ஜனங்கள் கூடி யிருந்தனர். டாக்டர் வெளியே வந்தார். அவரைக் கேட்டபோது, "We are not happy (எங்களுக்குத் திருப்தியாயில்லை). இப்படி நேரிடு மென்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான்" என்றார். அவர் பிழைப்பா ரென்ற சிறு நம்பிக்கையையும் இழந்தோம். ஒவ்வொருவரும் பெருமூச் செறிந்தனர். டெலிபோனின் மணி அலறிக்கொண்டே இருந்தது. அன்றைப் பகல் ஒருவாறு சென்றது. மாலை ஆயிற்றோ இல்லையோ வீட் டின் வெளிமுற்றத்தில் கடலென மாந்தர் கூட்டம். அறையினுள்ளும் அவ்வாறே இருந்தும் மரணத்தின் சாயையும், நிச்சப்தமும் எங்கும் பரவி யிருந்தன. இரவு நெருங்கிற்று. பூர்ண சந்திரன் ஒளிரும் இரவு. என் மனத்தை விட்டு என்றும் அகலாத இரவு. சுமார் 11-மணிக்குக் கவிக்குச் சங்கடமான நிலை. அதுவும் விலகியது. நாம் டாக்டர் அல்ல; ஆனால் உள்ளுக்குள் ஒரு நம்பிக்கைமட்டும், 'இந்த ராத்திரி கழிந்துவிட்டால்..?' என்றது. அதற்குமேல் என்ன நடக்குமோ அது யாருக்குத் தெரியும்? மூச்சுப்பேச்சிராமல் நாங்கள் சிலர் அவர் பக்கத்திலேயே இருந்தோம். எப்போது இரவு போய் உதயமாகுமென்று காத்திருந்தோம். மணி மூன்று அடித்தது. மரணவேதனையும் அதிகரித்துவிட்டது. நாங்கள்

Retail Branch:

285, China Bazar Road.

கலைமகள் வருட
சந்தா
(தபால் செலவுடன்)
இந்தியா, ஸிலோன்
ரூ. 4-0-0.
பர்மா ரூ. 4-8-0.
பினங்கு சிங்கப்பூர்
நேடால் ரூ. 6-0-0.
தனி ஸஞ்சிகை அணா 6
அல்லது 36 சதம்

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோட், மதராஸ்

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்

அதிகார மூலதனம்	60,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	19,18,060

செக்ரடரி: N. கோபால அய்யர்.

சிறுவர்கதைப் பரிசு

நாங்கள் வெளியிட்ட அறிக்கையைக் கண்டு பல நண்பர்கள் சிறுவர் கதைகள் அனுப்பி வருகிறார்கள். வேறு பலர் அக்டோபர் மாத முடிவு வரையில் வரும் கதைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அக்டோபர் மீ 31-ஆம் தேதி வரையில் வரும் கதைகளை இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறோம்.

கார்த்திகை மாதக் கலைமகள் இதழில் பரிசுபெற்ற கதை வெளி வரும்.

ஆசிரியர்—கலைமகள்

திற்கு அடங்கிச் செல்லும்படியே என்னைத் தயாரித்துவிட்டார்கள். அப்படிச் சுயமாக வரனைத் தேடும் கன்னிகை யாராவது இருந்தால் எனக்குள்ள இந்தச் சிறந்த லக்ஷணத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ளட்டும்.

பெரிய இடங்களிலிருந்து ஸம்பந்தத்திற்குப் பெண்கள் வந்தனர். ஆனால் மாமா இருக்கிறாரே, இந்த உலகத்தில் என்னுடைய பாக்கியதசைக்கு அவர் பிரதான ஏஜெண்டானபடியால், விவாகஸம்பந்தத்தைப்பற்றி அலாதியான அபிப்பிராயங்கள் உடையவர். பணக்காரவீட்டுப் பெண்ணென்றால் அவருக்குப் பிடிக்காது. அகத்துக்கு வருகிற நாட்டுப்பெண் வணங்கிய தலையுடன் வரவேண்டும் என்பார். ஆனால் பெண்ணின் ரூபத்தைப்பற்றி அவருக்குள்ள ஆசை அவர் எலும்புவரை ஊறியிருந்தது. ஏமாந்தவரையில் பணத்தைக் கறந்துகொள்ளவேண்டும்; அதைக் கொடுக்கும் பெண்ணைப் பெற்றவன்மட்டும் முகத்தைச் சுளித்துக்கொள்ளக்கூடாது.

என்னுடைய நண்பன் ஹரீசனுக்குக் கான்பூரில் வேலை. லீவுக்காக அவன் கல்கத்தாவுக்கு வந்திருந்தபோது என் மனத்தைக் கிளறிவிட்டான். "அடே! பெண் என்றால் அந்தமாதிரி குட்டி கிடைக்கவேணும்" என்றான்.

நான் எம். ஏ., பரீட்சையில் தேர்ச்சிபெற்றுக் கொஞ்சநாட்களே ஆயின. எனக்கு ஓய்வு நேரமோ யதேஷ்டமாக இருந்தது. பரீக்ஷையின் கவலை இல்லை. எதையாவது சாதிக்கவேண்டுமென்ற ஊக்கம் இல்லை; வேலை இல்லை; சொத்தைக் கவனிக்க வேண்டுமென்ற தொல்லை இல்லை; விசனம் இல்லை; படிப்பு இல்லை; எதன்மேலும் இச்சை இல்லை. எனக்கு இருந்தவர்களெல்லாம் உள்ளே ஓர் அம்மாவும் வெளியே ஒரு மாமாவுந்தான்.

அளவற்ற அவகாசமென்னும் பாலையின் மத்தியில் என் உள்ளம் பெண்களின் உருவம் என்னும் கானல் நீரையே பார்த்து மயங்கி நின்றது. ஆகாயத்தில் அவர்களுடைய கருவிழிகள் தோன்றின; காற்றில் அவர்கள் விடும் மூச்சை உணர்ந்தேன்; இலைகளின் ஓசையில் அவர்களுடைய ரகசியப் பேச்சைக் கேட்டேன்.

இந்த நிலையில் ஹரீசன் வந்து, "பெண்ணென்றால் அப்படி இருக்கவேண்டும்" என்று சொல்லும்போது என் மனம், வஸந்தமாருதம் அணைந்த மகிழந்தளிரைப் போல் துடிதுடித்தது. ஒளியும் நிழலும் புனைந்து இன்பக்கனவு கண்டது மனம். ஹரீசன் ரஸிகன்; எதையும் சுவையோடு வர்ணிக்கும் சக்தி அவனுக்கு உண்டு. அவன் அந்தப் பெண்ணைப்பற்றிப் பேசப் பேச எனக்கு அதிக வேட்கை மூண்டது. "இதை மாமாவிடம் மெள்ள விட்டுப் பாரேன்" என்றேன் ஹரீசனோடு. வளையக் கட்டுவதில் ஹரீசனுக்கு யாரும் இணையே இல்லை. அவனுக்கு எங்கேயும் நல்ல பேர். அவன் அகப்பட்டுவிட்டால் அவனை விடவேமாட்டார் மாமா. என்னுடைய விவாகத்தைப்பற்றி வார்த்தை வந்தது. பெண்ணைக்காட்டிலும் பெண்ணின் தகப்பனாரே அவருக்கு முக்கியம். ஒரு காலத்தில் அவர்கள் வீட்டில் லக்ஷ்மி தாண்டவமாடினாளாம்; இப்பொழுது அவ்வளவு இல்லையாம். தம் ஊரில் பழைய வம்ச கௌரவத்துடன் வாழமுடியாதெனக் கண்டு அவர் மேற்குப்பிரதேசத்தில் வீடு வாசல் அமைத்துக்கொண்டு எளிய வாழ்க்கையையே நடத்துகிறாராம். ஒரே பெண்ணைத்தவிர வேறே பிள்ளைகுட்டி இல்லையாம். அதனால் மீதியுள்ள ஆஸ்தி சட்டெனக் கரைவதற்கு ஹேது இல்லை.

எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. பெண்ணுக்குப் பதினைந்தாவது பிராயமென்று கேட்டவுடன் மாமாவுக்குச் சப்பிட்டுவிட்டது. வம்சத்தில் ஏதாவது

தோஷம் இருக்குமோ? அதுவும் இல்லை. தேடிப் பார்த்தும் தகுந்த வரன் கிடைக்க வில்லையாம். இப்போது கல்யாணச்சந்தையில் பிள்ளைகள் கிடைப்பதே குதிரைக் கொம்பாய் இருக்கிறது. அதற்குமேல் வரதக்ஷிணை. இவற்றையெல்லாம் உத்தேசித் துப் பெண்ணின் தகப்பனார் கல்யாணத்தை ஆறப்போட்டுவிட்டார். ஆனால் பெண்ணின் வயது நில்லென்றால் நிற்குமா?

எதுவானால் என்ன? ஹரீசன் பேசிக் காரியத்தைச் சாதிப்பதில் கெட்டிக்காரன். மாமாவை வழிக்குக் கொண்டுவந்துவிட்டான். விவாகத்தின் பூர்வாங்கங்கள் யாவும் தடையின்றி நடந்தேறின. கல்கத்தாவைத் தவிர உலகத்திலுள்ள மற்ற எல்லா இடமும் அந்தமான் தீவைச் சேர்ந்தவையென்பது மாமாவின் எண்ணம். வாழ்வில் ஒரு தடவை ஏதோ காரியமாகக் கோன்நகர்வரை அவர் போயிருந்தார். மாமாமட்டும் மனுவாய் இருக்கும்பக்ஷத்தில் ஹாவ்டா பாலத்தைக் கடப்பதே சாஸ்திரத்துக்கு விரோதமென்று எழுதிவிட்டிருப்பார். என் கண்ணாலேயே பெண்ணைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று எனக்கு ஆவல். அதை வெளியிட எனக்குத் தைரியமில்லை. பெண்ணைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற சம்பிரதாயத்துக்காகப் பினு அண்ணாவை அனுப்பினார்கள். அவனுடைய திறமையிலும், அவன் சொல்வதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. பினு அண்ணா திரும்பிவந்ததும், "சுமாராக இருக்கு மென்று நினைத்தேன். பத்தரைமாற்றுத் தங்கந்தான்" என்றான். பினு அண்ணா எதை யும் மிகைப்படுத்திக் கூறவேமாட்டான். ஒன்றை நாம், "முதல்தரம்" என்றால் அவன், "என்னவோ இருக்கிறது ஒரு மாதிரியாக" என்பான். அவனே இப்படிச் சொல்லும் போது முடிபோடும் பிரும்மாவுக்கும், மயலை எழுப்பும் மாரவேளுக்கும் இடையே முரண் ஒன்றும் இராமல் காரியம் முடிவது என் அதிருஷ்டமென்றே கருதினேன்.

* * *

விவாக சுபமுஹூர்த்தத்திற்குப் பெண்வீட்டாரே கல்கத்தாவுக்கு வந்தார்க ளென்று கூறவேண்டியதில்லை. பெண்ணின் தகப்பனாரான சம்புநாத பாபு ஹரீசனின் வார்த்தையை நம்பினாரென்பதற்கு அத்தாட்சியாக, அவர் விவாகத்திற்குச் சில தினங்களுக்குமுன்பு என்னை நேரே வந்து பார்த்துவிட்டுத் திருப்தியுடன் சென்றார். கிட்டத்தட்ட அவருக்கு வயது நாற்பது இருக்கும். தலைமயிர் நரைக்கவில்லை. மீசையில் மட்டும் நரை தென்பட்டது. கண்ணுக்கு நன்றாக இருந்தார். ஒரு கூட்டத் தின் மத்தியில் பார்த்தால் அவருடைய கம்பீரமான தோற்றம் தனியே எடுப்பாகத் தெரியும். அவருக்கு என்னைப் பிடித்திருக்குமென்று நம்புகிறேன். ஆயினும் அதை அறிவதுதான் சற்றுக் கடினம். ஏனென்றால் அவர் வாயே திறவாத மனுஷ்யர். அவர் சொல்லும் இரண்டொரு வார்த்தையைக்கூட அழுத்திச்சொல்வதில்லை. ஆனால் மாமா வின் வாயில் வளவளவென்று பேச்சுப் பொரிந்துகொண்டிருந்தது. பணத்திலாகட்டும், கௌரவத்திலாகட்டும், இந்தப் பெரிய நகரில் தமக்கு நிகரானவர் எவரும் இல்லை என் பதை ஸம்பந்திவீட்டாருக்கு நினைவுறுத்திக்கொண்டேயிருந்தார். சம்புநாத்பாபு அந்தச் சம்பாஷணையில் கலந்துகொள்ளவே இல்லை. "உம்" என்றுகூட எப்போதாவது மறந்து போய்ச் சொல்லவில்லை. மாமா பேசச் சளைக்கவே இல்லை. சம்புநாத் பாபு கப்சிப்பென்று இருப்பதைக் கவனித்து, உணர்ச்சி இல்லாத ஆசாமியாக இருக் கிறானே என்று மாமா எண்ணினார். பெண்ணைக் கொடுப்பவர்களிடத்தில் எந்தக் குறை இருந்தாலும் பாதகமில்லை, உணர்ச்சியோடு இருப்பதுதான் பெருங்குற்றமாகும். அது இராதுபோகவே மாமாவுக்கு மனத்துள் ஸந்தோஷமே. சம்புநாத்பாபு எழுந்து போகும்போது, மாமா சுருக்கமாய் மாடியில் இருந்தபடியே அவருக்கு விடைகொடுத்தாரே தவிர வாசல்வரை வந்து வழியனுப்பவே இல்லை.

வரதக்ஷிணை விஷயம் இருதரத்தாருக்கும் மனஸ்தாபம் இல்லாமல் இனிது நிறை வேறியது. இந்தமாதிரி விஷயங்களில் மாமா தம் சாமர்த்தியத்தைத் தாமே மெச்சிக் கொள்வது வழக்கம். அவர் பேசினால் எதிரில் பேசுபவன் முன்னுக்கேறக் கொஞ்சங் கூட இடம் இராது. பணம் எவ்வளவென்று ஸ்திரமாகிவிட்டது. அதற்குமேல் பெண்ணுக்கு என்ன என்ன நகைகள் போடுவார்கள், எத்தனை சவரனில் வளையல்

கள், வெள்ளிப்பாத்திரங்கள் எவ்வளவு ரூபாய் எடையில், இந்தக் கணக்கு வழக்கெல்லாம் தீர்ந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது. இவை விவாகத்தின் முக்கிய அம்சங்கள் என்பதைமட்டும் அறிவேன். மாமா ஒன்றையும் விடமாட்டார்; அவர் மிகவும் பக்காப் பேர்வழி என்று எங்கள் குடும்பத்தார் சிலாகித்தனர். எங்களுக்கு அளவற்ற பொருள் இருந்தாலும், சம்பந்திக்கு மேலும் செய்வதற்குச் சக்தியில்லை யென்று தெரிந்தும் கடைசிவரையில் வாட்டி எடுத்துவிடுவார். பிடித்தால் குரங்குப் பிடிதான்.

எனக்குப் 'பச்சை பூசுதல்'* தடபுடலாய் நடத்தினர். அவர் எடுத்த சீரை மதிப்பிட முடியாது. வரிசையைத் தூக்கிய ஆட்களைக் கணக்கிடவே ஓர் ஆளைப் போட வேண்டும். "சம்பந்தி வீட்டார் இதையெல்லாம் பார்த்து வெட்கிப் போகவேண்டியே செய்தோம்" என்று சொல்லும்போது அம்மாவும் மாமாவுடன் கலந்துகொண்டு நகைத்தாள்.

பாண்டு வாத்தியம், மேளம், இவற்றின் ஆரவாரமும் ஜனசந்தடியும் சேர்ந்து மதம்பிடித்த யானைக் கூட்டம் தாமரைப் பூ நிரம்பிய தடாகத்தை அலைத்துக் குழப்புவது போல் இருந்தது. இந்தத் தடபுடல்கள் புடைசூழ விவாக விடுதிக்கு விஜயம் செய்தேன். மோதிரங்கள், ஹாரங்கள், ஜரிகை ஜாலர்கள் இவற்றால் என் சரீரம் நடந்து செல்லும் ஒரு நகைக் கடையாகவே காட்சி அளித்திருக்கும். மாப்பிள்ளையாக வரப்போகிறவன் எவ்வளவு தாளுவான் என்பதை ஸம்பந்திகளுக்கு நிரூபிக்கவா இந்தக் கூத்து?

கல்யாண வீட்டில் நுழைந்தவுடன் மாமாவின் முகம் வாட்டமுற்றது. பிள்ளை வீட்டார் எல்லோரும் அமரப் போதுமான வசதி இல்லை. அதற்குமேல், ஏற்பாடெல்லாம் நடுத்தரமாகத்தான் இருந்தன. சம்புநாத்பாபு ஸம்பந்திகளை நன்றாக வரவேற்கவில்லையாம். அவர் வாயைத் திறக்கவே இல்லை. கச்சை இழுத்துக் கட்டிக்கொண்டு, கத்திக் கத்திக் குரல் கம்மியவரும் நடுத்தலை வழுக்கையாகி, கரியைவிடக் கறுப்பாய்ப் பிரம்மாண்டமான தேகமுடையவருமாகிய அவருடைய நண்பர் கை குவித்து வணங்கிச் சிரித்த முகத்துடன், விநயமாக மேளகாரன் முதல் ஸம்பந்தி வரை எல்லாருக்கும் மரியாதை செய்து உபசரிக்காமல் இருந்திருந்தால், ஆரம்பத்திலேயே எல்லாம் விரஸமாக முடிந்திருக்கும்.

மணப்பந்தலில் நான் உட்கார்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் மாமா சம்புநாத் பாபுவைத் தனியாக அழைத்து என்னவோ பேசினர். சம்புநாத்பாபு என்னிடம் வந்து, "அப்பா, இந்தப் பக்கம் வரமுடியுமா?" என்றார்.

விஷயம் இதுதான்: உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஏதாவது லக்ஷியம் இராமற் போகாது. மாமாவின் ஒரே லக்ஷ்யம் எந்த விஷயத்திலும் ஏமாந்து போகாமல் இருப்பது. ஸம்பந்தி பொன்னால்ஆன நகை என்று சொல்லிக் கில்டு நகையைப் போட்டிருந்தால் என்ன பண்ணுவது? விவாக முடிச்சு ஏறிவிட்டால், அப்புறம் சண்டை போடுவதில் சுகமில்லை. இதற்காகவே எங்களுக்குத் தெரிந்த நகை வியாபாரி ஒருவரை அழைத்து வந்திருந்தார். அடுத்த அறையில் மாமாவும் அந்த நகை வியாபாரியும், தராசு, உரை கல் யாவற்றையும் சித்தமாக வைத்துக்கொண்டிருப்பதைக் கவனித்தேன்.

சம்புநாத்பாபு என்னை நோக்கி, "உன் மாமா சொல்லுகிறார்: விவாகக் கோலம் ஆரம்பிக்குமுன்பே நகைகளையெல்லாம் காட்ட வேண்டுமாம். நீ என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

நான் என்ன சொல்லுவது? தலை குனிந்துகொண்டேன்.

"அவனைக் கேட்பானேன்? நான் சொல்லுகிறேன்" என்றார் மாமா.

சம்புநாத் பாபு என் பக்கமாகத் திரும்பி, "அவர் சொல்படியே நடக்க வேண்டுமோ? நீ சொல்லவேண்டியது ஒன்றும் இல்லையா?" என்றார்.

---

* காயே ஹாலுத்; அம்மான் பொங்கல் போன்றது.

எனக்கு இந்த விஷயத்தில் ஓர் அதிகாரமும் இல்லை யென்பதைக் காட்டத் தலையை அசைத்தேன்.

"சரி, சற்று இருங்கள். குழந்தையின் உடம்பிலிருந்து நகை நட்டுக்களைக் கழற்றிக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு அவர் உள்ளே சென்றார்.

மாமா என்னைப் பார்த்து, "அனுபா! இங்கே நீ இருக்க வேண்டியதில்லை. பந்தலில் போய் உட்கார்" என்றார்.

அப்போது சம்புநாத், "வேண்டாம், இங்கேயே இரு அப்பா" என்றார்.

பெரிய துவாலை முடிச்சிலிருந்து நகைகளை ஜமக்காளத்தின்மீது ஒவ்வொன்றாக எடுத்து வைத்தார். எல்லாம் பழைய மோஸ்தர் நகைகள்; தற்கால நாகரிக வேலைப்பாடு உள்ளவை அல்ல. எவ்வளவு தடிமனோ அவ்வளவு பளுவாக இருந்தன.

நகைப் பரீக்ஷகர் ஒவ்வொன்றையும் எடுத்து எடை போட்டு மதிப்பிட்டார். "அரக்குப்பொடி, மட்டப்பொன் இவற்றின் கலப்பே இல்லை. அசல் தங்கமென்பதில் கொஞ்சங்கூட ஸந்தேகமே இல்லை" என்று சொல்லிக்கொண்டு மகரமுகம் வைத்த ஒரு கெட்டிக்கொலுசை மாதிரிக்கு நசுக்கிக் காண்பித்தார்.

மாமா தம் நோட்டுப் புஸ்தகங்களில் நகையின் வகையறுக்களையும் அவற்றின் எடையையும் குறித்துக் கொண்டார். பின்னால் ஏதாவது கோளாறு நடந்தால் சரி பார்க்க இது மிகவும் உதவியா யிருக்குமல்லவா? கணக்குப் போட்டதில், பெண் வீட்டார் சொன்னதற்கு அதிகப்படியாக நகைகளைப் போட்டிருந்தார்கள்.

மாமா வைரக்கடுக்கனை எடுத்து நகை வியாபாரியிடம் கொடுத்து, "இதையும் பார். 'இமிடேஷன்' ஏதாவது........" என்று இழுத்தார்.

பூதக்கண்ணாடியின் மூலம் பார்த்துவிட்டுப் பரீக்ஷகர், "ஸ்வாமி, இதற்கென்ன சொட்டை! சீமைச்சரக்கு அல்லவா?" என்றார்.

மாமாவுக்கு எல்லாம் திருப்தியாகிவிட்டது. என்னைப் பார்த்து, "போயேண்டா பந்தலுக்கு" என்றதும், "முஹூர்த்தத்தை ஆரம்பிக்கலாமே ஸம்பந்திவாள்" என்றார் சம்புநாத் பாபுவை நோக்கி.

"வேண்டாம். முதலில் சாப்பாடு ஆகட்டும். இலை போட்டிருக்கிறது" என்றார் சம்புநாத்.

"சாப்பாட்டிற்கு இப்போது என்ன அவசரம்? முஹூர்த்தம் நடக்க வேண்டாமோ?" என்றார் மாமா.

"அதற்கென்ன அவசரம்? வாருங்கள் போகலாம்" என்றார் சம்புநாத்.

வெளிக்கு ஒன்றும் அறியாதவரைப்போல் தோன்றினாலும், அவர் உள்ளழுத்தம் உடையவரென்பது அப்போதுதான் புரிந்தது. எழுந்திருக்காது வேறு என்ன செய்வது? பிள்ளை வீட்டாருக்கெல்லாம் ஸகல உபசாரத்துடனும் போஜனமாயிற்று. எல்லோரும் சாப்பிட்ட பிறகு சம்புநாத்பாபு என்னையும் ஓர் இலையில் உட்கார வைத்தார். மாமா அதைப் பார்த்து, "என்ன, முஹூர்த்தம் இன்னும் நடக்க வில்லையே? விரதத்தோடு இருப்பவனாயிற்றே. அவன் எப்படிச் சாப்பிடுவான்?" என்றார்.

மாமாவின் சொல்லுக்குக் குறுக்கே நடப்பதென்னவோ என்னால் முடியாத காரியம். நான் சாப்பிடவில்லை.

அப்போது சம்புநாத்பாபு மாமாவிடம், "ஸ்வாமி, உங்களுக்கு மிகவும் தொந்தரவு கொடுத்து விட்டேன். நாங்கள் பணம் படைத்தவர்கள் அல்ல. உங்களுக்கு ஏற்றபடி மரியாதை செய்யச் சக்தி அற்றவன் நான். மன்னிக்க வேண்டும். நாழியாகி விட்டது. இன்னும் உங்களுக்கெல்லாம் கஷ்டம் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. நமஸ்காரம். இப்போது—" என்றார் நிதானமாகவே.

"நாங்களெல்லாம் தயாராகத்தானே இருக்கிறோம்?............ஆரம்பிக்கலாமே" என்றார் மாமா.

"—ஆனால் போய் வண்டி ஏற்பாடு பண்ணிவிட்டு வருகிறேன்" என்றார் சம்புநாத்.

"தமாஷ் பண்ணுகிறீர்களா என்ன?" என்றார் மாமா; அவருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கோபம் ஏறியது.

"இதுவரை தாங்களே தமாஷ் பண்ணினீர்கள்" என்றார் சம்புபாபு.

மாமாவின் முகம் பெரிதாகிவிட்டது; வாயடைத்து நின்றார்.

"சொந்தப் பெண்ணுக்குப் போட்ட நகையில் சூது இருக்குமோ வென்று சந்தேகிக்கும் ஒரு குடும்பத்தாருக்கு என் ஒரே குழந்தையைப் பறிகொடுக்க நான் தயாராக இல்லை, ஸ்வாமி" என்றார் சம்புபாபு.

அதற்குமேல் அங்கே என்ன நடந்ததென்பதை உரைக்க எனக்குப் பிடிக்க வில்லை. லஸ்தர் குளோப்கள், வாழைமரம், பந்தற்கால்கள் யாவும் எகிறின. தக்ஷ யக் ஞத்தில் மூண்ட அமர்க்களத்தைப் பிள்ளை வீட்டார் அங்கே நடத்திவிட்டு வெளியே வந்தனர். நான் தனியாக வீடு திரும்பும்போது மேளதாளம் ஒன்றுமே கோஷிக்க வில்லை. தீவட்டி விளக்கெல்லாம் ஆகாயத்தில் மினுமினுக்கும் நக்ஷத்திரங்களை ஏளனம் செய்துவிட்டு இருக்கிற இடம் தெரியாமல் அணைந்து இருளில் மறைந்தன.

* * *

வீட்டில் எல்லோரும் கொதித்துக் கொண்டிருந்தார்கள். "பெண்ணைப் பெற்ற வனுக்கா இவ்வளவு திமிர்? கலிகாலம் அல்லவா? பார்க்கலாம்: அவன் பெண்ணை வேறு இடத்தில் எப்படிக் கட்டிக் கொடுக்கிறான்?" என்றனர் யாவரும். பெண் ணுக்குக் கல்யாணமாகாது போனால், சனி விட்டதென்று இருக்கும் மனுஷ்யனுக்கு இந்த மிரட்டல் எம்மாத்திரம்?

இந்த வங்காளதேச முழுவதும் நான் ஒருவனே விவாக தினத்தன்று பெண் ணைப் பெற்றவரால் தள்ளப்பட்டவன். மேளங்கள் கொட்டி மணக்கோலம் பூண்டும் எனக்கு நேர்ந்த இந்த அவமானத்திற்குக் காரணம் ஏதாவது கெட்ட கிரஹத்தின் சேஷ்டையாகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்தார்கள்.

மானநஷ்டத்திற்குப் போவதாக மாமா எகிறிக் குதிக்கத் தொடங்கினார். ஆனால் அவர் மீசையை முறுக்கி விட்டுக்கொண்டதுதான் மிச்சம்.

என் மனத்துள் ஏமாற்றமும் அவமானமும் உண்டாயின. கலங்கிய இச்சிந்தனை யின் ஓட்டத்திற்குப் பக்கத்தில் மற்றொன்று தெளிந்து சென்று கொண்டிருந்தது. என் அந்தக்கரணம் நான் கண்ணால் பார்த்தறியாத அவளையே நாடியது. இன் றளவும் என்னால் அவளை என்னிடம் அழைத்துக்கொள்ள முடியவில்லை.

தூணின் மறைவில் நின்றுகொண்டிருப்பாள் அவள். பிரகாசமான நெற்றியில் அழகான குங்குமப்பொட்டு. உடலில் அருணவர்ணமான கூரைப் புடைவை. நாணத்தினால் சிவந்த முகம். அவள் இதயத்தில் என்ன வேதனை உண்டாயிற்றோ யார் அறிவார்? என் மானஸலோகத்தில் உலவும் அந்தக் கற்பகக்கொடி தன் பூவின் ஐசுவரியத்தை எனக்கு அளித்துவிட்டுத் தரையில் புரண்டுகிடந்தது. அதன் மணம் இன்னும் வீசுகிறது; அதன் தளிரின் மெல்லொலி இன்னும் என் செவியில் படுகிறது. இந்த இன்பக் கனவிலிருந்து ஓர் அடிவைத்தால் உண்மை எதிரே நிற்கிறது. அந்த ஆனந்தவல்லி என்னிடமிருந்து எவ்வளவோ தொலைவில் போய் விட்டாள்.

ஒவ்வொரு நாளும் சாயங்காலம், பினுஅண்ணாவிடம் சென்று அவனை முடுக்கிக் கொண்டே இருந்தேன். பினுஅண்ணாவின் வர்ணனைகள் யாவும் அளவுக்குமேல் போகாததால் அவை நெருப்புப் பொறிகளைப்போல் என் உள்ளத்தைப் பற்றவைத்து விட்டன. பெண் ஆச்சரியமான அழகுடையவளென்று சொல்லக் கேட்டிருந்தேனே

தவிர, அவளை நேரிலாவது, படமூலமாகவாவது நான் கண்டதே இல்லை. எனக்கு எல்லாம் மங்கலாக இருந்தது. புறத்தில் அவளைக் காண்பது அரிது; அகத்துள் அவளைப்போல் பாவித்துக்கொள்ள முடியவில்லை. இந்தத் திண்டாட்டத்தில் சிக்கி என் மனம் எந்த நிலைக்கும் வாராமல் பேய்போல் அலையத் தொடங்கியது.

என்னுடைய போட்டோவை அந்தப்பெண் பார்த்தாளென்ற சமாசாரம் ஹரீசன் மூலமாகத் தெரியவந்தது. அவளுக்கு என்னைப் பிடித்துத்தான் இருக்கவேண்டும். என்னுடைய படத்தை அவள் மறைவாகத் தன் பெட்டியில் வைத்திருப்பாளென்று என் அசட்டுப் புத்திக்குத் தோன்றும். யாரும் இராத சமயமாகப் பார்த்துத் தனிமையில் அவள் அதை எடுத்துப் பார்ப்பாள். அவள் குனியும்போது அவளுடைய அலைகூந்தல் கொத்தாக அதன்மேல் படியும். யாரோ வரும் சப்தம் கேட்கவே பரபரவென்று சுகந்தம் கமழும் தன் மேலாடையில் அதை மூடிக்கொள்வாள்.

என் எண்ணங்களுக்கு ஒரு வரம்பில்லை. நாட்கள் சென்றன. ஒரு வருஷம் ஆயிற்று. மீண்டும் என்னிடம் விவாகப்பேச்சை எடுக்க மாமாவுக்கு மூஞ்சியே இல்லை. அம்மா மட்டும், ஊர் வம்பளப்பு ஓய்ந்ததும் இதைப்பற்றி எடுக்கலாம் என்றிருந்தாள்.

இந்தப்பக்கம் எனக்குக் கேள்வி என்னவென்றால், நல்ல இடம் ஒன்று வந்த போது, பெண் தனக்கு விவாகமே வேண்டியதில்லை என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டாளாம். இந்தச் செய்தியைக் கேட்டதும் என் மனம் துள்ளிக் குதித்தது. மனக்கண்முன் பார்த்தேன்: அவள் உணவை வெறுத்துவிட்டாள். கூந்தலை வாரிப் பின்னிக்கொள்வதில்லை. 'என் இப்படி இவள் நாளுக்குநாள் இளைத்துப் போகிறாள்?' என்று அவளுடைய தகப்பனார் விசாரப்படுகிறார். அவர் பார்க்கும்போதெல்லாம் அவள் கண்களில் நீர் தளும்புகிறது. 'உன் மனவில் என்ன வேதனை அம்மா?' என்று அவர் வினவும்போது, அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'ஒன்றுமில்லையே' என்கிறாள். பாவம்! ஒரே பெண் அவருக்கு. மிகவும் செல்வமாக வளர்த்தார். மழைத்துளி காணாது வதங்கும் பூவின் அரும்புபோல அவள் இவ்வாறு உருக்குலைவதைப் பார்த்தால் அவர் மனம் தாளுமா? அவர் மானத்தையும் லக்ஷியம் செய்யாமல் எங்களிடம் ஓடி வருகிறார். அதற்குமேல்—? அதற்குமேல் கலங்கி ஓடும் சித்தத்தில் ஒரு கருநாகம் சீறுகிறது. அவர் வருகிறார். அவர் வந்து என்னைப் பார்த்து, 'இது அழகா? மங்களகரமாக வந்து இப்படி மணவறையை அலங்கோலம் செய்துவிட்டுப் போவது தர்மமா?' என்கிறார். இது என் கற்பனையின் வெண்மையான ஓட்டம். இப்போது அது அன்னத்தின் உருவுகொண்டு என்னிடம் வந்து, 'ஒருசமயம் தமயந்தியைப் பூங்காவில் சந்தித்தேன். அவ்வாறே என்னைத் தூது அனுப்பு; பிரிவாற்றாது சாம்பும் அப்பெண்ணரசியிடம் நற்செய்தியை விடுக்கிறேன்' என்றது. அதற்குப் பின்? துயர் இருள் விலகியது; புது மழைபெய்தது; வாடிய அம்பெண்மலர் முகம் தூக்கியது. அவளுடைய இதயத்தைக் கொள்ளை கொண்டவன் ஒருவனே............பின்னர் என்ன?—என் மனோ சித்திரங்கள் மறைகின்றன.

ஆனால் நான் சொல்லவேண்டியது இதோடு முடிந்துவிடவில்லை. எவ்விடத்தில் அது முடிவுறாமல் நிற்கிறதோ, அவ்விடத்தில் நிகழ்ந்ததைக் கூறியதும் இந்தக் கதைக்கு முற்றுப்புள்ளி போட்டுவிடுகிறேன்.

* * *

தீர்த்த யாத்திரை செய்ய அம்மா கிளம்பினாள். அவளுக்கு நான் துணையாகச் செல்ல வேண்டியிருந்தது. ரெயில் வண்டியில் தூங்கிக்கொண்டிருந்தேன். வண்டி குலுங்கிக் குலுங்கிச் செல்லுகையில் தலைகால் இராத விசித்திரமான கனவுகள் வந்து போயின. திடீரென்று ஒரு ஸ்டேஷனில் தூக்கி வாரிப்போட்டுக்கொண்டு எழுந்தேன். தூக்கமயக்கத்தில் எல்லாம் குழம்பி உலகமே ஒளியும் நிழலும் கலந்த ஸ்வப்னம்போல் தோற்றியது. வானத்தில் சிரிக்கும் மீன்களே எனக்கு நித்திய அறிமுகமாயிருந்தன. ஸ்டேஷனில் எரியும் விளக்குகள், பிளாட்பாரத்தில் செல்வோர் எல்லாம் சேர்ந்து

வெகுதூரத்தில் நான் கண்டிராத ஓர் உலகில் ஸஞ்சரிப்பவைபோல் பிரமை ஏற்பட்டது. அம்மா தூங்கிக்கொண்டிருந்தாள். வண்டியில் எரியும் விளக்குப் பச்சைநிறத் திரையிடப்பட்டது போலவும் சாமான், படுக்கை, பெட்டிகள் யாவும் தலைகீழாக இருப்பதுபோலவும் தோற்றின. தூக்கம் தெளியும் சமயம் என்முன் தோன்றிய ஓர் அற்புத உலகின் தோற்றங்களாகும் இவை யாவும்.

அந்த ஆச்சரியமான உலகில், ஓர் அதிசயமான இரவிலே இனிமையான குரல் ஒன்று, "சீக்கிரம் வாயேன். அந்த வண்டியில் இடம் இருக்கிறது" என்று சொல்வதுபோல் கேட்டது.

மனுஷ்யகண்டமா அல்லது தேவகண்டமாவென்று சந்தேகம் பிறந்தது. வங்கதேசத்துப் பெண்ணின் குரலில் வங்க மொழியானது அவ்வளவு மதுரமாகத் தொனித்ததை, எனக்கு ஏற்பட்டதுபோன்ற இடம், பொருள், ஏவலில் கேட்டிருப்பீர்களானால் நீங்களுந்தான் திகைத்துப்போயிருப்பீர்கள்.

வெகுகாலம்வரை குரலோசை ஒன்றுதான் அழியாமல் மனத்துள் பதிந்துவிடுகிறது. ஆனால் மனிதனிடத்தில் அந்தரங்கமானதும், வர்ணிக்கமுடியாததுமான ஒரு தன்மையை எதிரொலிப்பது இக்கண்டஸ்வரமே. விரைவாக ஜன்னலைத் திறந்து வெளியே முகத்தை நீட்டிப் பார்த்தபோது யாரையுமே காணவில்லை. பிளாட்பாரத்தின் இருட்டில் நிற்கும் 'கார்டு' பச்சைவிளக்கைக் காட்டினான். வண்டியும் நகர்ந்தது. ஜன்னலண்டையே கிடந்தேன். என் கண் எந்த உருவத்தையும் காணவில்லை. ஆனால் உள்ளத்துள்மட்டும் வேறோர் இதயத்தின் உருவைக் கண்டேன். தாரகைகள் சிதறிய கங்குலைப்போல் என் உள்ளத்தில் ஓர் உருவம் எழுந்தது; ஆனால் அதைப் பற்ற என்னால் முடியவில்லை.—இன்னிசைக்குரலே! நான் கேட்டறியாத கண்டத்துவனியே, ஒரே நிமிஷத்தில் என் அந்தரங்கத்தில் குடிகொண்டுவிட்டாயே! பரிபூர்ணமாய் என்னைக் கவர்ந்த விந்தை என்னே! நில்லாது ஓடும் காலப்பெருக்கில் முளைத்து அழகுற்ற மலரே! காலத்தின் அலை உன் இதழை அசைக்கவில்லையா? உன் மென்மை சற்றும் அதனால் நலிவுறவில்லையா?

ரெயில்வண்டி பல்வேறு ஜதிகளில் தாளங்களைப் போட்டுக்கொண்டே சென்றது. என் மனம் அதற்குத் தகுந்தாற்போல் பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தது. அதன் பல்லவிதான் "இடம் இருக்கிறது" என்பது. அவள் யாரோ? 'அவள் யாரோ' என்பது வெறும் பனித்திரை. அது ஒரு மாயை. அது விலகினால், யாரென்பது அறிமுகமாகிவிடும்.—அமிர்தமயமான குரலே! என் இதயத்தில் திகழும் உருவற்ற அழகே! என்றென்றும் எனக்கு அறிமுகமாகாது இருப்பாயா? "இடம் இருக்கிறது, இடம் இருக்கிறது. விரைந்து வா" என்று அழைக்கிறாயா? வந்துவிட்டேனே, இதோ தாமதம் செய்யாமல்.

அன்றிரவு எனக்குத் தூக்கம் வரவே இல்லை. ஒவ்வொரு ஸ்டேஷன் வரும்போதெல்லாம் தலையை வெளியே விட்டுக் கவனித்தேன். ராத்திரியே ஏதாவது ஸ்டேஷனில் அவள் இறங்குவதாக இருந்தால் என்ன செய்வதென்று கதிகலங்கினேன்.

மறுநாள் ஒரு பெரிய ஜங்ஷனில் வண்டி மாறவேண்டியிருந்தது. எங்களுக்கு முதல்வகுப்பு டிக்கட்டு இருந்தது. வேறு வண்டியில் இடம் சுலபமாகக் கிடைக்குமென்றே நம்பியிருந்தோம். இறங்கிப் பார்த்தபோது, பிளாட்பாரத்தில் மலையளவு 'ஸூட்கேஸ்'களை வைத்துக்கொண்டு வெள்ளைத்துரையின் பரிவாரமொன்று தயாராய்க் காத்திருந்தது. ஆஸாமி யாரோ ராணுவ உத்தியோகஸ்தனாம். யாத்திரை செய்ய அந்த வண்டியில்தான் ஏறப்போகிறானென்று தெரிந்தது. இரண்டு மூன்று நிமிஷங்கள் கழித்து நாங்கள் செல்லவேண்டிய வண்டித்தொடர் பிளாட்பாரத்திற்கு வந்தது. அம்மாவை அழைத்துக்கொண்டு எந்த இடத்தில் ஏறிக்கொள்வதென்று இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் அலைந்தேன். முதல் வகுப்பைத் தன்னுடைய தாக்கிக்கொண்டான் அந்தச் சீமைத்துரை. எல்லாவண்டியிலும் கூட்டம் தாங்கமுடியவில்லை. எதிலாவது ஏறித்தானே தொலையவேண்டுமென்று திரும்புகையில்

இரண்டாம் வகுப்பிலிருந்து ஒரு பெண்மணி அம்மாவைப் பார்த்து, "இப்படி வந்து ஏறிக்கொள்ளுங்களேன். இங்கே இடம் இருக்கிறது" என்று கூப்பிட்டாள்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. கொஞ்சும் அதே இன்னிசைக்குரல். "இடம் இருக்கிறது" என்னும் அதே பாட்டின் அடி! தாமதம் செய்யாமல் அம்மாவுடன் அந்த வண்டியிலேயே ஏறிக்கொண்டேன். சாமான்களை எடுத்து வரக்கூட எனக்கு அவகாசம் இல்லை. என்னைப்போன்ற கையாலாகாதவன் உலகத்திலேயே அகப்படமாட்டான். வண்டி புறப்பட்டுவிட்டது. அந்தப் பெண்மணி பரபர வென்று கூலியாளைக் கொண்டு என்னுடைய சாமான்களை உள்ளே இழுத்துப் போட்டாள். இந்த அவசரத்தில் என்னுடைய 'காமிரா'வை ஸ்டேஷனில் விட்டுவிட்டேன். அதைக்கூட நான் லக்ஷ்யம் செய்யவில்லை.

அதற்குமேல் என்ன செய்வதென்று தெரியவில்லை. என் மனத்துள் திகழும் ஓர் இன்பக்காட்சியை எங்கே ஆரம்பித்து எங்கே முடிப்பது? அதைச் சொற்களால் விவரிக்க எனக்கு இப்போது இஷ்டமில்லை. கடைசியில் அவ்வினிய குரலை நேரில் கேட்டேன்; கண்டேன். அப்போதும் அவளை ஒரு குரலோசையாகவே பாவித்தேன். அம்மாவை உற்றுநோக்கினேன். அவளுடைய கண்கள் இமைக்கவே இல்லை. பெண்மணிக்கு வயசு பதினாறு அல்லது பதினேழுதான் இருக்கும். ஆனால் இளமை அவளது மேனியில் அதிகமாகத் தன் ஆதிக்கியத்தைச் செலுத்தவில்லை. சகஜமான நடை, நிர்மலமான ஸ்வபாவம், பரிசுத்தமான அழகு. ஓர் இடத்திலாவது குறை தென்படவேண்டுமே; சிறிதளவும் இல்லை. நானே பார்த்தேன். விஸ்தரித்துச் சொல்ல ஆகாது. அவள் அணிந்திருந்த புடைவையின் நிறம் இன்னதென்று சொல்ல அவ்வளவு ஆராய்ச்சி செய்யவில்லை நான். அவளைவிட உடையில் கண்ணை கவரக்கூடியதொன்றும் எனக்குப் புலப்படவில்லை. தன்னைச்சுற்றி உள்ள வற்றைக்காட்டிலும் அவள் ஒரு படி அதிகமே. துல்லிய நீலச் சண்பக மலர் நீண்ட காம்பில் தனி எழிலுடன் நிற்பதுபோல், அவளும் தன் இனத்தைக் கடந்து தனி அழகுடன் விளங்கினாள். அவளுடன் இரண்டு மூன்று சிறுமிகள் இருந்தனர். அவர்களுடன் அவள் உல்லாஸமாகச் சிரித்து விளையாடியது இவ்வளவு அவ்வளவல்ல. குழந்தைகளுடன் பழகும்போது அவளுடைய உள்ளம் சிசுவினுடையதுபோல் மாறி விடுகிறது. படங்கள் அடங்கிய கதைப்புத்தகம் ஒன்று பக்கத்தில் இருந்தது. அதினின்று கதை சொல்லும்படி அச்சிறுமிகள் அவளைப் பிய்த்து எடுத்தனர். அவர்கள் நூறு தடவைக்குமேல் கேட்டிருந்த கதையாகத்தான் இருக்கவேண்டும். ஆயினும் குழந்தைகளுக்கு என் இவ்வளவு ஆவலென்பதைப் புரிந்துகொண்டேன். அந்த அமிர்தம்போன்ற குரலில் வரும் சொற்கள் யாவும் அமுதமாகவே மாறின. அப் பெண்மணியின் சரீரத்திலும், சொற்களிலும், பாவனைகளிலும் ஜீவன் ததும்பியது. அவள் வாயினின்று வரும் கதை அச்சிறுமிகளுக்கு வெறும் கதையாக இல்லை; அவர்கள் இதயத்துள் பாயும் உணர்ச்சியின் அருவியாகவே இருந்தது. இந்தக் கண்டரவமே அன்றொரு நாள் என்னுள் மகிழ்விரித்த கதிரொளியை மீண்டும் உயிர்ப்பித்தது. அடுத்த ஸ்டேஷனில் சிற்றுண்டி விற்பவனிடமிருந்து பலவிதப் பக்ஷணங்களை வாங்கிக் கூடவந்த குழந்தைகளுக்குக் கொடுத்துத் தானும் வேடிக்கையாகத் தின்றாள். என் ஸங்கோசம் என்னைத் தடுத்தது. இல்லாவிட்டால், நானும் கை நீட்டி மகிழ்ச்சியின் வடிவமான அவளிடமிருந்து தின்பண்டத்தை யாசித்திருப்பேன்.

பிடித்தும் பிடிக்காததுமாக, இருவிதமாகச் செல்லும் மனத்தினளாய் அம்மா உட்கார்ந்து இவற்றையெல்லாம் கவனித்தாள். அந்த வண்டியில் நான் ஒருவனே புருஷன். அவள் சற்றும் கூச்சங்கொள்ளாது பக்ஷணங்களை ஆவலுடன் தின்பதைப் பார்த்து அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. இவ்வளவு பெரிய பெண்ணுக்குப் புருஷர்கள் எதிரே மட்டுமரியாதை இல்லையே என்று நினைத்தாள்போலும். அம்மா யாருடனும் சட்டெனப் பழகமாட்டாள். ஒதுங்கி இருக்கவே விரும்புவாள். ஆனால் அந்தப் பெண்ணின் வசீகரம் அவளைத் தன்னையும் மீறிப் பேசத்தூண்டியது.

குடும்பத்தின் அபிவிருத்தி?

உங்கள் பிற்காலத்திற்கும், குடும்பத்தின் க்ஷேமத்திற்கும் வேண்டிய பாதுகாப்பைத்தேட இப்போதே இன்ஷியூர் செய்துகொள்ளுங்கள்.

அதற்குத் தகுந்த ஸ்தாபனம்:

தி இண்டஸ்டிரியல் அண்டு புரூடென்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

பிராஞ்சு: 167, மவுண்ட் ரோட், மதராஸ்.

கலைமகள் சித்திரப் படங்கள்

ஒவ்வொன்றும் அளவு 30×24 அங்குலம்.

1. காக்கா காக்கா எங்கே போனாய்? (கதை, சம்பாஷணை)
2. பானையின் கதை
3. ஈயின் கதை
4. வாகனங்கள் (தரை வழி)
5. வாகனங்கள் (ஜல, ஆகாய வழி)
6. அரிசியின் கதை.
7. கதை கதையாம்.
8. தபால் கார்டின் கதை.
9. என்ன காக்கா?
10. வாலறுந்த குரங்கு.

ஒரு செட் 0-6-0: தபாற் செலவு 0-3-0

வெளிவந்துவிட்டது!
கொனஷ்டையின் கதைகள்

ஹாஸ்யரஸம் ததும்பும்

14

கதைகள் கொண்ட புஸ்தகம்

1. ஜோஸ்யம்
2. மௌனி
3. அறுபத்து மூவர்
4. யாகபங்கம்
5. எலெக்ஷன் சீர்திருத்தம்
6. கமிஷனரின் குறை
7. ஆர்கைப் பதக்கம்
8. அரபிச்சுவடி
9. ஸங்கீதம்
10. உத்தியோகம்
11. சுயேச்சை
12. ரேடியோ
13. உபகாரம்
14. கதை எழுதும் விதம்

விலை ரூ. 1—8—0

அடுத்த வெளியீடு:

ஜவாஹர்லாலின் கடிதங்கள்

(படங்களுடன்)

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

தேசமெங்கும்
அழகிய
பெண்மணிகள்
அழகை வளர்க்க
விரும்பி
உபயோகிப்பது
எது ?

மைசூர் சந்தன சோப்பே

Mysore SANDAL SOAP

ஆதலால்
எப்பொழுதும்

மைசூர் சந்தன சோப்பையே
உபயோகியுங்கள்

டிஸ்டிரிப்யூடர்கள்: பெஸ்டு அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை.

அதேசமயம், வண்டியும் பெரிய ஸ்டேஷன் ஒன்றில் வந்து நின்றது. அந்தச் சீமைத்துரையின் கூட்டாளியான மற்ருெரு துரை வண்டியில் ஏறப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தான். எந்த வண்டியிலும் இடமே இல்லை. அவன் அடிக்கடி எங்கள் அறை எதிரேயே சுற்றிக்கொண்டிருந்தான். அம்மாவுக்குத் திகிலா யிருந்தது. எனக்கோ ஆத்திரம்.

வண்டி நகருவதற்குக் கொஞ்ச நேரத்திற்குமுன் ரெயில்வே உத்தியோகஸ்தஞன நம்நாட்டைச் சேர்ந்த ஒருவன், பெயர் எழுதிய இரண்டு சீட்டுக்களை எங்கள் வண்டியில் இரண்டிடத்தில் மாட்டிவிட்டு, "இந்தப் பெட்டியில் உட்காருவதற்கு இரண்டு இடம் முன்னதாகவே துரைமார் இருவர் 'ரிஸர்வ்' பண்ணியிருக்கிருர்கள். நீங்கள் வேறு வண்டியில் இடம் தேடிக்கொள்ளுங்கள்" என்ருன். நான் வேரென்றும் கூறமுடியாமல் இடத்தைவிட்டு எழுந்திருந்தேன். அப்போது அப்பெண்மணி ஹிந்தியில், "இவர்களை வண்டியைவிட்டு அப்புறப்படுத்தக்கூடாது" என்ருள்.

அவன் ஒரே பிடிவாதமாக, "போய்த்தான் ஆகவேண்டும்" என்ருன்.

ஆனல் யாரும் நகராதிருப்பதைப் பார்த்து, அவன் ஆங்கிலேயஞன ஸ்டேஷன் மாஸ்டரை அழைத்துவந்தான். ஸ்டேஷன் மாஸ்டர் என்னைப் பார்த்து, "தயை செய்து தாங்கள்—" என்று ஆரம்பித்தான். நான், "கூலி கூலி" என்று கூவினேன், சாமான்களை எடுத்துக்கொண்டு போவதற்காக. அப்போது அந்தப் பெண்மணி கண்களில் தீப்பொறி பறக்க, "நீங்கள் இதைவிட்டுப் போகவேண்டியது அனுவசியம். உட்காருங்கள். என்ன நடக்கிறதோ பார்க்கலாம்" என்ருள்.

இதைக் கூறியதும் அவள் வண்டியின் வாயிலை மறைத்துக்கொண்டு ஆங்கிலத்தில், "இந்த வண்டி முன்பே 'ரிஸர்வ்' பண்ணப்பட்டிருக்கும் பேச்சுச் சுத்தப் பொய்" என்ருள். உடனே இரு வெள்ளையரின் பெயர்கள் உள்ள சீட்டுக்களையும் பிய்த்துப் பிளாட்பாரத்தில் வீசி எறிந்தாள்.

இதற்குள் டவாலியுடன் ராணுவ உடை பூண்ட துரையும் வண்டியண்டை வந்தான். உள்ளே நுழையப்போகும்போது பெண்மணியின் ரௌத்திராகாரத்தைப் பார்த்து ஒதுங்கிப் போய் ஸ்டேஷன் மாஸ்டருடன் என்னவோ பேசினன். வண்டி புறப்படும் வேளை அதிக்கிரமித்தும், எங்களுடைய வண்டித்தொடரோடு வேருெரு பெட்டியை இணைத்தபிறகே வண்டி கூவென்று நகர்ந்தது. அந்தப் பெண்சிங்கம் பழைய கலகலப்புடன் பேச ஆரம்பித்துவிட்டாள். வெட்கத்தால் நான் என் மூஞ்சியை ஜன்னலுக்கு வெளியிலேயே நீட்டிக்கொண்டிருந்தேன்.

கான்பூரில் வண்டி வந்து நின்றது. அப்பெண்மணி தன் சாமான்களைச் சரிவர எடுத்து வைத்துக்கொண்டாள். ஸ்டேஷனிலிருந்து ஒரு ஹிந்துஸ்தானிக்காரன் ஓடிவந்து சாமான்களைக் கீழே இறக்கிவைத்தான். அந்தப் பெண்ணுேடு பேச அம்மா ஆவல் கொண்டாள்; "உன் பெயர் என்ன அம்மா?" என்று கேட்டாள்.

"என் பெயர் கல்யாணி" என்ருள் அந்த ரமணி. இதைச் செவியுற்றதும் அம்மாவும் நானும் திடுக்குற்ருேம்.

"உன் அப்பா யார்?"

"இந்த ஊரில் ஒரு டாக்டர். அவர் பெயர் சம்புநாத் ஸேன்."

அப்புறம் நாங்கள் வெவ்வேறு திசையாகப் பிரிந்தோம்.

பின்னுரை

மாமா கீறிய கோட்டை மீறி, அம்மாவின் ஆக்ஞையை மீறி நான் கான்பூருக்கு வந்தேன். கல்யாணியின் தகப்பஞரையும் சந்தித்தேன்; கல்யாணியையும் நேரில் கண்டேன். சம்புநாத் பாபுவைக் கைகூப்பித் தலைவணங்கினேன். அவர்

மனம் இளகியது. ஆனால் கல்யாணி, "விவாகம் வேண்டாம்" என்று சொல்லி விட்டாள்.

"ஏன் அப்படி?" என்று வினவினேன்.

"மாதாவின் கட்டளை" என்றாள்.

இதென்ன ஸங்கடம்? அவளுக்குக்கூட என் மாமாவைப்போல் தடையாக யாராவது இருக்கிறார்களா என்ன?

'மாதா' என்பது 'மாத்ருபூமி' என்று அப்புறம் தெரிந்துகொண்டேன். விவாகப் பேச்சு முறிந்தது முதல் கல்யாணி பெண்பாலரிடையே கல்வியைப் பரப்பும் மகத்தான தொண்டில் இறங்கிவிட்டாள்.

ஆனால் நான்மட்டும் நம்பிக்கையை விடவில்லை. அந்த இனிய குரல் இன்றளவும் என் இதயத்தில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. என்னை வீட்டினின்று வெளியேற்றி உலக அரங்கிற்கு அழைத்தது அக்குரலின் இசையே! அன்றிரவு இருளினின்றெழுந்து என் செவியில் புகுந்த, "இடம் இருக்கிறது" என்னும் சொல் எனக்குச் சலிப்பைத் தராத ஒரு பாட்டின் பல்லவியாக நீடூழி நிலவும். அப்போது வயசு எனக்கு இருபத்துமூன்று; இப்போதோ இருபத்தேழாகிவிட்டது. ஆயினும் நான் நம்பிக்கையை இழக்கவில்லை. ஆனால் மாமாவை விட்டொழித்தேன். ஒரே பிள்ளையானபடியால் என்னைத் துறக்க அம்மாவினால் முடியவில்லை.

கல்யாணம் செய்துகொள்ள எனக்கு ஆசை இருக்கிறதென்று நினைக்கிறீர்களா? அது ஒருகாலும் நடவாது. அன்றோர் இரவு முன்பின் அறியாததோர் மதுரமான குரலோசையைக் கேட்டதே போதுமென்று என் மனம் சொல்லுகிறது. எனக்கு 'இடம் இருக்கிறது'. இல்லாமற்போனால்—? இவ்வாறு ஒவ்வொரு வருஷமும் சென்று மறைகிறது. அவளை எப்போதாவது கண்ணுறக் காண்கிறேன். அவளது இன்குரல் என் செவிக்கு இன்பத்தேனை ஊற்றுகிறது. சமயம் வாய்க்கும்போது அவள் இடும் வேலைச் செய்து வருகிறேன். என்னுள் ஒன்று, "உனக்கு இடம் கிடைத்துவிட்டதே" என்று எப்போதும் சொல்லிக்கொண்டே இருக்கிறது. 'நீ யாரோ? உன் பரிசயம் எனக்கு இன்னும் பூர்ணமாகவில்லை. ஆகவும் ஆகாது. உன்னிடம் வருவதற்கு இடமாவது கிடைத்ததே; அதுவே என் அதிருஷ்டம்!' என்று மனம் எண்ணுகிறது.

பட்டத்து ராணி

ரவீந்த்ரநாத் டாகுர்

[வங்காளியிலிருந்து 'ஸேனு' மொழிபெயர்த்தது]

விஜயபட்டணம் என்ற ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை. ராஜகுமாரிகளைப் பார்த்து வருவதற்காக ராஜாவினுடைய தூதர்கள் அங்கம், வங்கம், கலிங்கம், மகதம், கோசலம், காஞ்சி முதலிய இடங்களுக்குப் போனார்கள். திரும்பி வந்ததும் அவர்கள், "மகாராஜா! என்னவென்று சொல்வோம், அந்த அற்புதத்தை! ஒரு ராஜகுமாரியின் கண்ணிலிருந்து அவள் சிரிக்கும்போது ஆனந்தக் கண்ணீர் வருவதற்குப் பதிலாக முத்தே உதிர்கிறது. மற்றொருத்தி சிரித்தால் மாணிக்கம் பலபலவென்று சிந்துகிறது. இன்னும் ஒருத்தியின் தேகம் அப்படியே நிலா வெளிச்சமாக இருக்கிறது. ஆஹா!" என்று ராஜகுமாரிகளின் அழகைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்தார்கள்.

தூதர்கள் தனக்குப் பிரீதி உண்டாவதற்குச் சொன்ன வார்த்தை இது என்று ராஜாவுக்கு நன்றாகத் தெரிந்தது.

ராஜா: நானே போய்ப் பெண்ணைப் பார்த்து வருகிறேன்.

சேனாபதி: ஆனால் சைனியத்தை அழைக்கலாமா?

ராஜா: இப்போது யாரும் சண்டைக்குப் போகவில்லை.

மந்திரி: ஆனால் பந்துமித்திரர்களுக்கு ஓலை அனுப்பட்டுமா?

ராஜா: அந்தமாதிரி முன்னால் தெரிவித்துக்கொண்டு பெண்பார்க்கப் போவது எனக்குப் பிடிக்காது.

மந்திரி: பட்டயானையைக் கொண்டுவரச் சொல்கிறேனே?

ராஜா: நடக்க எனக்கு இரண்டு கால்கள் இருக்கின்றன.

மந்திரி: காவலாக எத்தனைபேர் அனுப்பவேண்டும்?

ராஜா: என்னுடைய நிழல் என்னோடு வந்தால் போதும்.

மந்திரி: தங்கள் சித்தம். ராஜ உடைகளும், கெம்பு ஆரமும், மாணிக்கக் கிரீடமும், வைரக்காப்பும் பெரிய நல்முத்துக் கடுக்கனும் கொண்டுவரச் சொல்லட்டுமா?

ராஜா: எப்போதும்போல் ராஜாவேஷத்துடன் தானே இப்போதும் இருக்கிறேன்? இனிமேல் சந்நியாசி வேஷம் போட்டுக் கொள்ளப் போகிறேன்.

இப்படிச் சொல்லிவிட்டு அவன் பொய் ஜடையும் மீசை தாடியும் தரித்தான். அரையில் கோவணம் உடுத்து உடம்பு முழுதும் விபூதி பூசி, நெற்றியில் திலகம் இட்டுக் கொண்டான். கையில் வில்வமரத் தண்டத்தையும் கமண்டலுவையும் எடுத்துக்கொண்டான். “பம்பம் மஹாதேவ” என்று கோஷித்துக்கொண்டே புறப்பட்டு விட்டான்.

ஒவ்வொரு தேசமாகச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தான். பிஞகீசுவரஸ்வாமி என்னும் துறவி இமய மலையிலுள்ள ஒரு குகையிலிருந்து நூற்றைம்பது வருஷ காலம் தவம் பண்ணிவிட்டு உலகத்துக்கு வந்திருக்கிறார் என்று எங்கும் அவனைப்பற்றி வதந்தி இருந்தது. முதலில் அந்தச் சந்நியாசி அங்க தேசத்துக்கு வந்தான்.

அந்தத் தேசத்து ராஜாவின் பெண் அவனை அரண்மனைக்கு அழைத்து வரும்படி ஆளை அனுப்பினாள். அவள் நல்ல மாநிறமுள்ள அழகி. அவள் தலைமயிர் மயிலின் தோகைபோல் இருந்தது. அவள் இரண்டு விழிகளும் மானுடையவைப் போல் இருந்தன. ஒருத்தி தங்கமும் சந்தனமும் கலந்து ஒரு கிண்ணத்தில் கொண்டுவந்தாள் அவளிடம்; அதைப் பூசினால் ராஜகுமாரியின் முகம் சண்பகப் பூவைப் போல் ஆகிவிடுமாம். பிருங்கலாஞ்ஜனம் என்ற தைலத்தை வேறு ஒருத்தி கொண்டுவந்தாள். அதனால் பம்பா ஏரியின் அலைகளைப் போலப் படிப்படியாக ஆகிவிடுமாம் தலைமயிர். பின்னும் ஒருத்தி சிலந்திவலை போன்ற மெல்லிய ஆடை ஒன்றைக் கொண்டுவந்தாள். மற்றொருத்தி மந்தமாருதம்போல் லேசாக இருக்கும் துண்டு ஒன்றைக் கொண்டுவந்தாள். இந்தமாதிரியே பகல்முழுதும் கழிந்தது.

ராஜகுமாரிக்குத் தன் அலங்காரத்தில் இன்னும் திருப்தி உண்டாகவில்லை. சந்நியாசியைப் பார்த்தவுடன் அவனை அழைத்து அவள், “ஸ்வாமி, எப்படி அலங்காரம் பண்ணிக்கொண்டால் கண் கவரும்படி அழகாக முடியும்? அதைச் சொல்லுங்கள்? ராஜாதிராஜர்கள் எல்லாம் தங்கள் காரியத்தை மறந்து என்னையே இரவும் பகலும் பார்த்துக்

கொண்டு இருக்கவேண்டும். அந்தமாதிரி அழகுக்கு என்ன பண்ணுவது, ஸ்வாமி?'' என்றாள்.

"வேறு ஒன்றும் வேண்டாமா?''

"வேறு ஒன்றுமே வேண்டாம்.

"சரி, நான் போய் வருகிறேன். அதற்குத் தகுந்த உபாயம் தெரிந்தவுடன் உன்னை வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லி அவன் வங்கதேசம் போனான். அந்தத் தேச ராஜகுமாரி சந்நியாசியின் மகிமையைக் கேள்விப்பட்டிருந்தாள். அவனை அழைத்து, "ஸ்வாமி, எனக்கு ராஜாதி ராஜர்கள் கேட்டால் அப்படியே மயங்கி விழும்படியான இனிய குரல் இருக்கவேண்டும். என் குரலைத் தவிர வேறு யார் குரலும் அவர்கள் காதில் விழக்கூடாது. நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். அப்புறம் தங்கள் சித்தம், ஸ்வாமி'' என்றாள்.

"அந்தவித்தையை அறிந்துவரவே இதோ புறப்பட்டுப் போகிறேன். அறிந்தவுடன் உன்னை வந்து பார்க்கிறேன்.''

பிறகு அவன் கலிங்கத்திற்குப் போனான். அரண்மனை அந்தப்புரத்தில் உள்ள நிலா முற்றத்தில் அந்தத் தேச ராஜகுமாரி தோழிகளுடன் ஆலோசனை செய்துகொண்டிருந்தாள். 'எப்படிக் காஞ்சியை ஜயிப்பது? நம் ஸேனாபதி அங்கேயுள்ள பட்டராணியின் தலையை எப்படி வணங்கச் செய்வான்?' —இந்த யோசனை தான். கோசல ராஜ்யத்தைக் கண்டும் அவளுக்குச் சகிக்கவில்லை. அங்கேயுள்ள ராணியை அடிமையாக்கித் தன் காலைப் பிடிக்கப் பண்ண வேண்டும் என்றும் எண்ணினாள். சந்நியாசியைப்பற்றிக் கேள்விப்பட்டு அவனை அழைத்து,

"ஸ்வாமி, வெள்ளைத் தீவு என்கிற இடத்தில் சகஸ்ராக்கினி என்னும் அஸ்திரம் உண்டாமே. அதன் உதவியால் நகரம் கிராமம் எல்லாவற்றையும் கொளுத்திவிட முடியுமாம். நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிற ராஜாவின் காலின் கீழ்ப் பல ராஜாக்கள் அடிமைகளாகிக் கை கட்டிக்கொண்டு நிற்கவேண்டும். அவர்களைச் சேர்ந்த பெண்டுகள் எனக்குச் சாமரம் வீசவும் குடை பிடிக்கவும் வெற்றிலை மடித்துத் தரவும் வேண்டும்" என்றாள்.

"வேறு ஒன்றும் வேண்டாமா?"

"இதைத் தவிர ஒன்றும் வேண்டாம், ஸ்வாமி."

"அந்த அஸ்திரத்தைத் தேட இதோ புறப்படுகிறேன்."

ராஜா புறப்பட்டான். "சீச்சீ" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். கால்போன வழியே நடந்து போனான். கடைசியில் ஒரு காட்டிற்கு வந்து சேர்ந்தான். தாடி மீசை ஜடை இவற்றைக் கழற்றி எறிந்தான். அங்கே இருந்த அருவியில் உடம்பிலுள்ள விபூதி போக நன்றாகக் குளித்தான். அப்போது பகல் மூன்று ஜாமம் ஆகிவிட்டது. வெயில் கொளுத்தியது. அவனுக்குப் பசி. உடலில் சோர்வு ஏற்பட்டது. எங்கேயாகிலும் தங்க இடம் அகப்படுமா என்று பார்த்தான். அங்கே ஓடும் ஒரு நதிக் கரையில் ஒரு சின்னக் கொட்டகை தெரிந்தது.

அதற்கு அருகில் ஒரு சிறுமி அடுப்பு ஒன்றை வைத்துச் சமைப்பதற்காகப் பச்சிலை, கீரை முதலியவற்றைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவள் தேன் சேகரித்து அரண்மனைக்குக் கொண்டுதருவாள். இந்த வேலையிலேயே பொழுது கழிந்து விட்டது. இப்போதுதான் உலர்ந்த சுள்ளிகளைக்கொண்டு அவள் சமையல் செய்ய ஆரம்பித்தாள். அவளுடைய ஆடை அழுக்கடைந்து கிழிந்திருந்தது. அவள் இரண்டு கைகளிலும் இரண்டு சங்கு வளையல்கள். இரண்டு காதிலும் தானியக்கதிர் தொங்கிக் கொண்டிருந்தன. அவள் கண்கள் இரண்டும் வண்டு போல் இருந்தன. குளித்துவிட்டுத் தன் ஈரத் தலைமயிரைப் பின்னால் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள்.

"எனக்கு அதிக பசியாயிருக்கிறது" என்றான் ராஜா.

"கொஞ்சம் பொறுத்துக் கொள்ளவேண்டும். இதோ சமையல் தயாராகிவிடும் உங்களுக்கு" என்றாள் அவள்.

"அப்படியானால் நீ என்ன பண்ணுவாய்?" என்றான் ராஜா.

"நான் காட்டில் வளர்ந்தவள். பழம், கிழங்கு ஏதாவது சாப்பிடுவேன். சற்று நாழிகையாகும். அதிதியாகிய உங்களுக்குச் சாதம் பரிமாறினால் புண்ணியம் உண்டு. இந்தமாதிரி பாக்கியம் எங்களுக்குக் கிடைப்பதே அரிது" என்றாள் அவள்.

"உனக்கு வேண்டியவர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?" என்றான் ராஜா.

"என் கிழத்தகப்பனார் இருக்கிறார். காட்டிற்குள்ளே சின்னக் குடிசை வாயிலில் அவர் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார். என்னைத் தவிர யாருமே அவருக்கு இல்லை. வேலையை முடித்துக்கொண்டு அவருக்கு ஏதாவது தின்பண்டம் எடுத்துப் போவேன்" என்றாள் அவள்.

"நீ இந்தச் சாதத்தை அவரிடம் எடுத்துக்கொண்டு போ! எனக்கு நீ தேடிக் குவித்துத் தின்னும் பழம், கிழங்கு இருக்கும் இடத்தைக் காட்டினால் போதும்" என்றான் ராஜா.

"அது பெரிய அபசாரமாயிற்றே?" என்றாள் அவள்.

"அப்படிச் செய்தால் பகவான் உனக்கு அருள் புரிவார். பயப்படாதே; எனக்கு வழிகாட்டு" என்றான் ராஜா.

தகப்பனுக்காக ஆக்கிய சோற்றைப் பானையுடன் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு அவனுடன் புறப்பட்டாள் அந்தப் பெண். பழம், கிழங்கு முதலியவற்றைச் சேகரித்து அவ்விருவரும் உண்டார்கள்.

காட்டினுள் ஒரு சின்னக் குடிசை வாயிலில் அவளுடைய கிழத் தகப்பன் உட்கார்ந்திருப்பதை ராஜா பார்த்தார்.

கிழவன்: அம்மா, ஏன் இன்று அதிக நாழியாகி விட்டது?

பெண்: அப்பா, அதிதி ஒருவர் நம்மைத் தேடி வந்திருக்கிறார்.

கிழவன், "நாம் ஏழைகளாயிற்றே! எதைக் கொடுத்து இவரை உபசரிப்போம்?" என்று கவலையுடன் சொன்னான்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம், ஐயா! உம்முடைய பெண்ணின் அன்பான பணிவிடையே பெரிதாகும். நான்

போய் வருகிறேன். வேறு ஒருநாள் வருகிறேன்" என்றான் ராஜா.

ஏழு பகல் ஏழு இரவு கழிந்தன. ராஜா தன் சுயரூபத்துடன் மறுபடியும் அங்கே வந்தான். அவனுடைய குதிரை, தேர் எல்லாம் காட்டிற்கு வெளியில் இருந்தன. அவன் கிழவனை வணங்கி, "ஐயா, நான் விஜயபட்டணத்து ராஜா. நல்ல ராணி கிடைப்பாளா என்று தேசமெல்லாம் தேடி அலைந்தேன். இப்போது தான் அவள் கிடைத்தாள். உம்முடைய பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்தால் மிகவும் ஸந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வேன்" என்றான்.

கிழவன் கண்களில் ஜலம் நிரம்பியது. பட்டயானை வந்தது. காட்டில் கிடைத்த பெண்ணைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு ராஜா அதில் எல்லோருடனும் தலைநகருக்குத் திரும்பினான்.

அங்க வங்க கலிங்க தேசத்து ராஜகுமாரிகள்மட்டும் இதைக் கேட்டு அருவருப்படைந்து "சீச்சீ" என்றனர்.

தமிழ் நாட்டுச் சிறு கதைகள்—7

தோட்டியை மணந்த அரசகுமாரி

பல நூல்களின் ஆசிரியர்

கி. நா. சுப்பிரமணியன்

எழுதியவை

— காலிகோ பயிண்ட் ரூ. 1—6—0 —

(1) தோட்டியை மணந்த அரசகுமாரி

(2) எச்சிற் பாண்டம்
(3) முற்பகல் செய்யின்—
(4) மகாபத் கான்
(5) வெகுமதி
(6) நைவேத்தியம்
(7) அடிமைப் பெண்
(8) வெற்றி யாருக்கு?
(9) அனுதைப் பிணம்
(10) அசோகன் துறவு
(11) பறையறைந்த பெண்
(12) கலையின் பலி
(13) கடைத் தேங்காய்
(14) அந்தச் சனியன்
(15) நடன ஸரஸ்வதி

(கவி ரவீந்திரநாத் டாகுர் — ரூ. 1)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.



S. Fazuluddin,

INDIAN MUSICAL INSTRUMENTS MANUFACTURER,

571, Triplicane High Road,

(Near Shadi Mahal),

TRIPLICANE : : : MADRAS.

கலைமகள் காரியாலய வெளியீடுகள்

		ரூ.	அ.
1.	முருகன் ஓர் உழவன்—ஸ்ரீமான் வேங்கட ரமணி அவர்கள் எழுதிய அரிய நாவல் ...	1	8
2.	குமுதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதிய நாவல் - வங்காளியிலிருந்து ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்த்தது ...	1	8
3.	மாயாவிநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் எழுதியது - ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது	1	8
4.	பைரவி—சரத்சந்த்ர சட்டர்ஜி எழுதியது-ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்த்தது...	1	8
5.	விதியின் செயல் முதலிய கதைகள்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், ஐ.ஸி.எஸ். எழுதியது ...	0	6
6.	ரிஷப விஜயம்—ஓர் இனிய நாடகம் - ஸ்ரீ கே. வி. பஞ்சநதையர் எழுதியது ...	0	12
7.	மண்ணாசை—ஸ்ரீ சங்கரராம் எழுதிய நாவல்.	1	8
8.	ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள்—50 உபந்யாஸங்கள் கொண்ட புஸ்தகம் ...	1	8
9.	ஸ்ரீ சங்கர விஜயம்— ஸ்ரீ காமகோடி பீடாதிபதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியது ...	0	10
10.	சியாமளா தண்டகம்—வடமொழி மூலமும் தமிழுரையும் - ஸ்ரீ அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், எம்.ஏ., எல்.டி., மொழிபெயர்த்தது ...	0	1
11.	கலைமகள் சித்திரப் படங்கள்—10 படங்கள் அடங்கிய ஸெட் ஒன்றுக்கு ...	0	6
12.	த்வாதசோபநிஷத்—தமிழில் ஸ்ரீ என்.எஸ். ராஜாராமையர் மொழிபெயர்த்தது ...	2	0
13.	முப்பெரு வீரர்—ஸ்ரீ ஏ. எஸ். பஞ்சாபகேசையர் எழுதிய அரிய நவீனம் ...	2	0
14.	நிர்மலா—ஸ்ரீ பிரேம்சந்த் (ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்த நாவல்) ...	1	8
15.	கொனஷ்டையின் கதைகள் ...	1	8

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

பாலிஸிதாரர்களுக்கே சொந்தமானது

இந்தியன் ம்யூச்சுவல்

லைப் அஸ்ஸோஸியேஷன், லிமிடெட்

1926-ல் ஸ்தாபிக்கப்பட்டது

சேர்மன்: ஸர் வி. ராமேசம், Kt.,

பாதுகாப்பு * ஊழியம் * திருப்தி

இவற்றிற்கு

உத்தரவாதம்

உங்கள் ஆயுள் அஷ்யூரன்ஸுக்கு

மூன்றும் வால்யு வேஷன் போனஸ்	ஆயுள்பூரா: 1000-க்கு ரூ 18 ஒரு வருஷத்திற்கு	
	எண்டோமெண்ட் ,, ரூ 15 ,,	

இதுவரையில் பாலிஸிதாரராகச் சேர்ந்திராதபட்சத்தில் இப்போதாவது சேர்ந்து முக்கியப் பிரதிநிதியாக விளங்குங்கள்.

விவரங்களுக்கு:

இந்தியன் ம்யூச்சுவல் பில்டிங்க்ஸ்,

10, மௌண்ட் ரோடு, சென்னை.

கண்ணோட்டம்

1940 வரை பலன்கள்

பிரீமிய வருமானம்	39.96	லட்சம்
வட்டியும் இதர வருமானங்களும்	6.38	,,
மொத்த வருமானம்	43.34	,,
ஆயுள் நிதியுடன் சேர்ந்த தொகை	21.61	,,
ஆயுள் நிதி	155.22	,,
இன்வெஸ்ட்டுமெண்ட் சேமநிதி	4.87	,,
பொதுச் சேமநிதி	1.76	,,

* 1940-ல் ஆயுள் நிதியுடன் சேர்க்கப்பட்ட தொகை ரூ. 21½ லட்சத்துக்கு மேலாகும்.

* சேமநிதிக்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கியபின் இத்தொகை சேர்க்கப்பட்டது.

* 1940-ல் செலவு விகிதம் 25.77 சதம். 1939-ல் 31.54 சதமும் 1938-ல் 36.35 சதமும் ஆகும்.

* இன்வெஸ்டுமெண்டு கொள்கையின் முக்கிய நோக்கம் (1) முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு, (2) விபத்து மிதப்படுத்துவது, (3) சொத்து வருமானத்தைச் சராசரி மதிப்பிடுவது.

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:—லாகூர்.

கிளை:—பம்பாய், கராச்சி, புதுடெல்லி, சென்னை, கல்கத்தா, ஹைதராபாத், மம்பாசா.

சென்னை ஆபீஸ்:—

334, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

பக்ஷி ராஜா பில்ம்ஸ்
(PROPS: நாராயணன் கம்பெனி)
ஆர்யமாலா
காத்தவராயன் கதை
P.U.சின்னப்பா
M.R.ஸந்தானலக்ஷ்மி
T.S.பாலையா
M.S.ஸரோஜினி
N.S.கிருஷ்ணன்
T.A.மதுரம்
டைரக்ஷன்:-
பெளமன் இரானி
G.H.RAO
கோவை ஸெண்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரித்தது



இந்தியாவில் கோஹினூர்போன்ற மருந்து

டிராபிகல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்: டில்லி.

ஸ்தாபக டைரெக்டர்கள்.
- பண்டிட் மோதிலால் நேரு.
- ஹக்கீம் அஜ்மல் கான்.
- டாக்டர் எம். ஏ. அன்ஸாரி.
- ஸ்ரீ. எஸ். ஸ்ரீநிவாசையங்கார்,

தலைமை வகிக்கும் இந்தத் தேசீய ஸ்தாபனம்.

(1) தேசத்தின் மாபெரும் தலைவர்களால் ஸ்தாபிக்கப் பட்டது.

(2) சுமார் 3 கோடி ரூபாய்க்குப் பாலிஸிகள் வழங்கி யிருக்கிறது.

(3) ஆயுள், தீ விபத்து, கப்பல், இதர விபத்துக்கள் முதலியவற்றில் இன்ஷூர் செய்கிறது.

(4) ஆரம்பம் முதலே பாலிஸிதார்களுக்குப் போனஸ் வழங்கி வருகிறது.

பிரதிநிதிகளாக விரும்புவோர் பின்வரும் விலாசத்துக்கு மனுச் செய்க:

T. S. PANCHU,

பிராஞ்ச் காரியதரிசி

1-29, மவுண்ட் ரோட், : : மதராஸ்.

சமீபத்தில் காலஞ்சென்ற

உலக மகாகவி ரவீந்திரர்

எழுதிய இரண்டு அரிய நவீனங்கள்

மாயாவிநோதினி

(ஸ்ரீமதி தங்கம் மொழிபெயர்ப்பு)

'தமிழ்நேசன்': 'கதையைப்படிக்கும்போது அது ஒரு மொழி பெயர்ப்பென்றே கூறுவதற்கு இயலாதபடி அவ்வளவு பொருத்தமாய் மூதனூல்போன்றே மொழிபெயர்க்கப்பட்டிருப்பது பெரிதும் பாராட்டத் தக்கதாகும். சந்தர்ப்பங்களுக்கேற்றபடி அநேக ஆப்டோன் படங்களும் சேர்க்கப்பட்டிருப்பதானது படிப்போர் மனக்கண்முன் கதையைத் தத்ரூபமாகச் சித்திரிப்பதுபோல் தோன்றுகிறது."



குமுதினி

(ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்ப்பு)

'தினகரன்': 'மானிடவாழ்க்கையில் ஏற்படும் பல துன்பங்களை உணர்ச்சி ததும்பும் முறையில் நாவலாசிரியர் சித்திரித்துக் காட்டியிருப்பது போற்றத்தக்கது'.

'செட்டிநாடு': 'தத்துவங்களைக் கொண்ட இக்கதையை அம்மையார் மொழிபெயர்க்கத் துணிந்தது அவர்களது மனோ தைரியத்தைக் காட்டுகிறது.'

விலை (ஒவ்வொன்றும் தனித் தனியே) ரூ. 1—8—0

தபால், வி. பி. செலவு தனி

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

மயிலாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு,
கா. நாராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது.